# சேர்ந்து படிப்போம்

## வேதாகமக் கையேடு

மாக் ஃபின்லே

**It is Written**

INTERNATIONAL TELEVISION MINISTRY

Thousand Oaks, California

தமிழாக்கம்:

மார்சல் ஐசக்

தென்கிழக்கு இந்திய ஒன்றியம்

செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபை

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர்,

சென்னை – 600 048

© Copyright 2024, Hart Research Center
All Rights Reserved

ISBN 1-878046-03-9

Sponsored By

Department of Sabbath School and Personal Ministries

General Conference of Seventh-day Adventists

For Sidewalk Evangelism towards Total Member Involvement

## நீங்கள் கற்பிக்கக்கூடிய வேதபாடங்கள்

வேதாகமம் .......... 14
வேதாகமம் பற்றிய சில உண்மைகள் .......... 15
தேவன் (அன்பானவர்) .......... 16
தீமையின் துவக்கம் .......... 17
மேசியா பற்றிய தீர்க்கதரிசனங்கள் .......... 19
கிறிஸ்துவினுடைய தெய்வீகம் .......... 20
கிறிஸ்துவின் தெய்வீகம் பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி .......... 21
இரட்சிப்பு .......... 22
இரட்சிப்பு பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி .......... 23
அறிக்கையிடுதலும் மன்னிப்பும் .......... 24
ஐரோப்பாவினுடைய எதிர்காலம் வெளியாக்கப்பட்டது .......... 25
இரண்டாம் வருகை (வரும் விதம்). .......... 27
இயேசுவின் இரண்டாம் வருகை பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி .......... 29
இரண்டாம் வருகை (அடையாளங்கள்) .......... 31
நியாயத்தீர்ப்பு .......... 32
தேவனுடைய பிரமாணம் .......... 34
தேவனுடைய பிரமாணம் பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி .......... 36
ஓய்வுநாள் .......... 38
ஓய்வுநாள் பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள் .......... 40
முதல்நாள் வசனங்கள் .......... 44
தேவனுடைய பிரமாணத்தை மாற்ற முயற்சி .......... 46
ஓய்வுநாளை ஆசரித்தல் .......... 47
விசுவாசம் .......... 49
ஆரோக்கியம் .......... 50
உடல்நலம் பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள் .......... 52
மரித்தோரின் நிலை .......... 57

மரணம் பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள் ..................59
ஆயிரவருட அரசாட்சி : அமைதியான ஆயிரம் வருடங்கள் .........65
ஆயிர வருட அரசாட்சி பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி ..... 67
பரலோகம் ........................................................................68
துன்மார்க்கரின் அழிவு ......................................................... 70
துன்மார்க்கரின் அழிவு பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள் .... 72
மிருகத்தினுடைய முத்திரை.. ................................................. 74
கத்தோலிக்கம் பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள் .......... 77
மெய்யான சபை .................................................................80
ஆவிக்குரிய பாபிலோன்/வெளிப்படுத்தல் ..................................82
தீர்க்கதரிசன வரம் ...............................................................84
ஞானஸ்தானம் ...................................................................86
தசமபாகமும் கிறிஸ்தவ உக்கிராணத்துவமும் ...............................88
கிறிஸ்தவத் தரங்கள் ...........................................................89
பரிசுத்த ஆவியானவர் ..........................................................91
பரிசுத்த ஆவியானவர் பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள்......93

## அன்றாட வாழ்க்கைக்கான கிறிஸ்தவம்

சத்தியத்தைக் கண்டறிதல்: .....................................................96
ஜெப நியதிகள் உண்மையாகவே பதிலைப் பெறுவது எப்படி?.. ......97
நான் எவ்வாறு கிறிஸ்தவனாக ஆகமுடியும்?...............................98
தீர்மானம் செய்கையில் தேவ வழிநடத்துதல் ..............................99
உங்கள் விசுவாசத்தைப் பெருக்கும் விதம் ............................. 100
கோபம், மனக்கசப்பு போன்றவற்றைக் கட்டுப்படுத்துதல் ............ 102
சோதனைகளைச் சந்தித்தல் ................................................ 103
தாழ்வுமனப்பான்மை உள்ளவர்களுக்கு உதவுதல் .................... 104
பயத்தை எதிர்கொள்ளல் .................................................. 105
தனிமையைக் கையாளுதல் ................................................ 106
மனச்சோர்வை மேற்கொள்ளுதல்........................................... 107

சிறு வயது வேதனைகளை நீக்குகுதல்....... ............................ 109

புகைபிடிக்கும் பழக்கத்திலிருந்து விடுதலைபெற உதவும் ஏழு படிகள் ................................ 110

ஓய்வுநாள் வேலைப்பிரச்சனைகள்................................ 112

ஓய்வுநாள் மாற்றம் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் ..................... 113

**சபைகள் சபை அமைப்புகள் மற்ற மதங்கள்பற்றி அறிந்துகொள்ளுதல்**

பாப்திஸ்து சபை .............................................. 116

வேதாகமச்சபைகள், (அமைப்பு சாராதவை) ....................... 120

பௌத்தர்கள் ................................................... 123

கத்தோலிக்கர்கள் .............................................. 125

கிறிஸ்டியன் சைன்டிஸ்ட்ஸ் ..................................... 130

கிறிஸ்துவின் சபைகள் ........................................ 133

எபிஸ்கோப்பல்சபை ............................................ 136

இந்துக்கள்... ................................................. 139

இஸ்லாம் (முஸ்லிம்கள்) ........................................ 142

யெகோவாவின் சாட்சிகள். ...................................... 145

யூதர்கள் ..................................................... 151

லூதரன்சபை .................................................. 155

மெதடிஸ்ட் சபை ............................................... 158

மார்மன் சபை. ................................................ 161

நசரேன்சபை .................................................. 165

பெந்தெகொஸ்தே சபை .......................................... 168

ப்ரிஸ்பிட்டேரியன்சபை........................................173

ரேடியோ சர்ச் ஆஃப்காட் ..................................... 177

மதச்சார்பற்றவர்கள் ............................................ 180

முன்னாள் செவந்த்-டே அட்வென்டிஸ்ட்கள்........................ 183

செவந்த்-டேபாப்திஸ்ட்........................................ 187

பரிந்துபேசும் ஜெபத்தின்வல்லமை ................................ 190

# பதிப்புரை

*நீங்கள் உங்கள் கையில் வைத்திருப்பது அறிவுச் சுரங்கம் ஆகும். இந்தப் புத்தகம் முதலில் அச்சிடப்பட்டபொழுதில், அப்போதுதான் மாக் ஃபின்லேயை இட்ஸ் ரிட்ன் எனும் ஆங்கிலத் தொலைக்காட்சிக்குப் பேச்சாளராகத் தேர்ந்தெடுத் திருந்தார்கள். ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயம் செய்வதே அவருடைய மூச்சு, பேச்சு எல்லாம். உலகளாவிய ஊழியத்தில் அது தெள்ளத்தெளிவாகக் காணப்படுகிறது. வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் மத்திய கிழக்கிலும் ஆசியாவிலும் உள்ள பெரிய நகரங்களில் உள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க அவர் பயன்படுத்திய வசனங்களையும் கருத்துகளையும் இந்தப் புத்தகத்தில் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.*

*ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இதில் உள்ள தகவல் எல்லாம் வெறும் தகவல்களாக மாத்திரம் பயன்படுத்தப்பட்டால், அது மிகுந்த ஆபத்தைக் கொண்டுவரும். வாதாடும் சிந்தையுடன் இந்தத் தகவல்கள் பயன்படுத்தப்படுவது தேவதிட்டத்துக்கு இடைஞ்சலையே கொண்டுவரும். ஆனால், இயேசு கிறிஸ்துவுக்கு முற்றிலுமாய் ஒப்படைக்கப்பட்ட வாழ்க்கையோடு இந்தத் தகவல்கள் ஒன்றரக் கலக்கவேண்டும். பின்மாரியின் வல்லமையோடு ஆவியான வர் நம்மை ஆட்கொள்ளுமாறு கருத்தோடும் அக்கறையோடும் ஜெபிக்கவேண்டும். அவ்வாறு சத்தியம் பரவும்போது, பெந்தெகொஸ்தேயின் தாக்கத்தைவிட இந்தப் புத்தகத்தின் தாக்கம் உலகத்தின்மேல் பெரியதாக இருக்கும். நம் கர்த்தரும் வருவார்.*

*ஆத்துமாக்களைக் கிறிஸ்துவுக்காக ஆதாயம்பண்ணும் ஆர்வம் உங்கள் வாழ்க்கையிலும் உந்துசக்தியாக விளங்கட்டும்.*

***டேனியல் ஒஃப் ஹாஃப்டன்***
நிர்வாக இயக்குநர்
ஹாட் ரிசச் சென்டர்

# முன்னுரை

**இந்தப் புத்தகத்தை சிறப்பான முறையில் பயன்படுத்தும் விதம்.**

கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வேத சத்தியங்களை உங்கள் நண்பர்களோடும் அயலகத்தாரோடும் நீங்கள் பகிர்ந்துகொள்வதற்கு உதவியாக இந்த வேதாகமக் கையேடு எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் மூன்று முக்கிய பிரிவுகள் உண்டு.

1. முதல் பகுதியில் வேத உபதேசங்களைப் பற்றிய பாடங்கள் பல உள்ளன. ஒவ்வொரு பாடத்திற்கும் பின்னால் அக்கருத்துகளைப் பற்றி பலர் கேட்கும் முக்கியக் கேள்விகளும் அவற்றுக்கான பதில் களும் தரப்பட்டுள்ளன.
2. இரண்டாம் பகுதியில் நம் வாழ்வின் அன்றாடப் பிரச்சனைகளைச் சந்திப்பதற்காக நடைமுறை வேதாகமப் பாடங்கள் பல தரப்பட்டுள்ளன.
3. மூன்றாம் பகுதியில் பல்வேறு சமயங்கள், சமயப் பிரிவுகளைப் பற்றிய சுருக்கமான குறிப்புகளும், அவர்களைக் கிறிஸ்துவின் சிந்தையோடு அணுகுவதற்கான ஆலோசனைகளும் தரப்பட்டுள்ளன.

நீங்கள் கற்றுத் தரப்போகிற வேதபாடங்களுக்கு அடிப்படை ஆதாரமாக இப் புத்தகத்தை நீங்கள் பயன்படுத்தலாம். அல்லது, ஏற்கனவே நீங்கள் பயன்படுத்தி வருகிற பாடங்களுக்குத் துணைப்பாடமாக இதைப் பயன்படுத்தலாம். நூற்றுக்கணக்கான வேத வசனங்கள் இதில் உள்ளன. வேதாகமத்திலிருந்து நேரடிப் பதில்கள் தரப்பட்டுள்ளதால், மற்றவர்களோடு சேர்ந்து படிப்பதற்கு அவை உதவியாக இருக்கும். வாழ்க்கையை மாற்றும் வல்லமை தேவனுடைய வார்த்தைகளுக்கு உண்டு. வேதாகமத்தை எழுதத்தூண்டிய அதே பரிசுத்த ஆவியானவர் உங்களோடு இருந்து இந்த விலையேறப்பெற்ற சத்தியங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள உங்களுக்கு உதவிசெய்வார். உங்கள் மூலமாக மற்றவர்கள் வாழ்க்கையில் வேத சத்தியங்களை ஆவியானவர் செயல்படுத்துவார். நீங்கள் அறியாமை உள்ளவர்களாக இருக்கலாம்; ஆவியானவர் உங்களுக்கு ஞானமாக இருப்பார். நீங்கள் பெலவீனராக இருக்கலாம்; ஆவியானவர் உங்களுக்குப் பெலனாக இருப்பார். ‘சுயத்தைத் தூரே ஒதுக்கிவிட்டு, பரிசுத்த ஆவியானவர் தன்னில் செயல்பட இடங்கொடுக்கிற ஒருவருடைய உபயோகத்திற்கு எல்லையே இல்லை’ (DA, p. 250). மற்ற வர்களோடு வேதாகமத்தைப் படித்தல் என்பது அருமையான தொரு வேலையாகும். அதை நீங்கள் செய்யும்போது தேவ ஆவியானவர் உங்களுக்கு மிகுந்த பலனைத் தருவார். உங்கள் ஊழியத்தின் நேரடி விளைவாக தேவனுடைய ராஜ்யத்தில் பல ஆத்துமாக்கள் காணப்படுவார்கள். சேர்ந்து படித்தல் எனும் புத்தகம் ஒரு கருவி மட்டுமே. ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு ஆண்டவர் உங்களையே சார்ந்திருக்கிறார். அதைச்செய்வதற்குத் தேவையான பலனை ஆவியானவரே தருவார்.

## பிரிவு 1

### நீங்கள் கற்பிக்கக் கூடிய வேதபாடங்கள்

**பலரும் கேட்கிற சில கேள்விகளுக்கான பதில்கள்**

இந்தப் பிரிவில் 32 வேத உபதேசப் பாடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாடத்திலும் வேதசத்தியத்தின் ஒரு பகுதியைப் பார்க்கிறோம். வசனங்கள் ஒன்றோடொன்று பொருந்தக்கூடியதாக வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தந்த வசனத்தின் கருத்துச் சுருக்கம் அந்தந்த வசனத்துக்கு அருகிலேயே கொடுக்கப் பட்டுள்ளது.

இவற்றைச் சரியாக விளங்கிக்கொண்டால், வேத உபதேசம் தெளிவாகத் தெரியும். தெளிவாகச் சொல்லப்பட்டுள்ள கருத்து களின் அடிப்படையில்தான் விளங்குவதற்குக் கடினமான வசனங்களின் அர்த்தத்தை விளங்கிக்கொள்ள வேண்டும். எந்த வேத உபதேசமும் ஒரு வசனத்தை மாத்திரம் ஆதாரமாகக் கொண்டதாக இருக்கக் கூடாது. முழு வேதாகமத்தை அடிப்படையாக வைத்தே ஒவ்வொரு சத்தியத்தையும் விளங்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு உபதேசத்தையும் தொடர்ந்து, கடினமான சில கேள்விகளுக்கான நேரடிப் பதில்கள் தரப்பட்டுள்ளன.

## பிரிவு 2

### அன்றாட வாழ்க்கைக்கான கிறிஸ்தவம்

**உள்ளத்தின் தேவைகளைச் சந்திக்கும் பதில்கள்**

அன்றாடம் நாம் சந்திக்கும் வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கான பதில்கள் வேதாகமத்தில் உள்ளன. அவற்றை இப்பகுதியில் பார்க்கலாம். கிறிஸ்து வெகு தூரத்தில் அல்ல, நம் அருகிலேயே இருக்கிறார் என்பதை உணர்ந்துகொள்ளலாம். அவருக்கு நம் வாழ்வில் அக்கறை உண்டு; பிரச்சனைகளைத் தீர்க்க அவருக்குப் பெலனும் உண்டு.

## பிரிவு 3

### சபைகள், சபை அமைப்புகள், மற்ற மதங்கள்பற்றி அறிந்துகொள்ளுதல்

இவற்றின் ஆரம்பம், சில முக்கிய உபதேசங்கள், செவந்த் டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள், இவற்றின் தவறான உபதேசங்கள், இவர்களை அணுகும் முறைகள் ஆகியவற்றை இப்பகுதியில் பார்க்கலாம். இது ஒரு கையேடுதான்; உலக மதங்களின் கருத்துக் களஞ்சியம் அல்ல. எனவே, சுருக்கமான தகவல்கள்தான் இப்பகுதியில் தரப்பட்டுள்ளன. இயேசுவையும் அவர் தரும் சத்தியத்தையும் உங்கள் நண்பர்களோடு பகிர்ந்துகொள்ளும்போது, உபயோகப்படுத்துவதற்காகவே இந்தத் தகவல்களைத் தந்திருக்கிறேன். ஒவ்வொரு சமயப் பிரிவினரும் என்ன நம்புகிறார்கள் என்பதை அறிந்துகொண்டு, அதற்கேற்றவாறு அவர்களை அணுகி, அவர்களை இயேசுவிடம் வழிநடத்த இப்புத்தகம் உதவ ஜெபிக்கிறேன்.

# நீங்கள் கற்பிக்கக்கூடிய வேதபாடங்கள்

## பலரும் கேட்கிற சில கேள்விகளுக்கான பதில்கள்

தேவன், தம்முடைய ஒரேபேறான
குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ
அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை
அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி,
இவ்வளவாய் உலகத்தில்
அன்புகூர்ந்தார். உலகத்தை
ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன்
தம்முடைய குமாரனை உலகத்தில்
அனுப்பாமல், அவராலே உலகம்
இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை
அனுப்பினார். யோவான் 3:16,17.

# 1. வேதாகமம்

| | |
|---|---|
| 2பேதுரு 1:21 | தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டுப் பேசினார்கள். |
| 2தீமோ 3:16 | வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டிருக்கின்றன. |
| சங் 119:160 | தேவனுடைய வார்த்தை ஆதியிலிருந்தே உண்மையாய் இருக்கிறது. |
| மத் 24:35 | தேவனுடைய வார்த்தை நித்தியமானது. |
| ரோமர் 15:4 | வேதாகமம் நமக்கு நம்பிக்கை தருகிறது. |
| 2தீமோ 3:15 | வேதவாக்கியங்கள் நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞான முள்ளவர்களாக மாற்றுகிறது. |
| யோவான் 5:39 | வேதவாக்கியங்கள் இயேசுவை இரட்சகர் என்று வெளிப் படுத்துகின்றன. |
| 2தீமோ 2:15 | படிக்கும்போது, சரியாகப் பகுத்துப் படிக்க வேண்டும். |
| யோவான் 16:13 | நம்மைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவதற்கு இயேசு தமது பரிசுத்த ஆவியை அனுப்பியிருக்கிறார். |
| 1கொரி 2:13 | ஆவியானவருடைய வழிநடத்துதலுக்கு நாம் நம் முடைய மனதைத் திறக்கிறபோது, ஆவிக்குரியவைகளை ஆவிக் குரியவைகளுடன் சம்பந்தப்படுத்திப் பார்க்க நமக்குத் தேவன் உதவிசெய்வார். |
| ஏசா 28-9, 10 | வேதவாக்கியங்களை மற்ற வேதவாக்கியங்களுடன் ஒப் பிட்டுப் பார்க்கும்போது நாம் சத்தியத்தைக் கண்டுகொள்ளு வோம். |
| யோவா 17:17 | வேதவசனத்தில் சத்தியம் அடங்கியிருக்கிறது. |
| யோவா 7:17 | நாம் தேவனுடைய வார்த்தையைப் படிக்கும்போது திறந்த மனதுடன் படிக்கவேண்டும். அப்போது அவர் நம்மை நடத்துவார். (வெளி 22:18,20 ஐ பார்க்கவும்) |

## வேதாகமம்பற்றிய சில உண்மைகள்

44 எழுத்தாளர்களால் எழுதப்பட்ட 66 புத்தகங்கள் வேதாகமத்தில் உள்ளன. 1500 ஆண்டு காலம் எழுதப்பட்டது.

வேதாகமம் ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்டதற்கு ஆதாரங்கள்:

தீர்க்கதரிசனங்கள்:

**1.** பாபிலோன் (ஏசா **13:19–22**) **2.** தீரு (எசேக் **26:3–5**)

**3.** சீதோன் (எசேக் **28:21–23**) 4.கோரேஸ் (ஏசா 44:28, 45:1)

5. மேதிய பெர்சியாவும் கிரேக்கமும் (தானி 8:20, 21)

6. இயேசுவின் பிறப்பிடம் (மீகா 5:2).

**தொல்பொருள் ஆராய்ச்சி:**

யோர்தானிலுள்ள தபோனில் 1868 ஆம் ஆண்டில் மோவாபிய கல் எடுக்கப்பட்டது. 2இரா 1, 3 அதிகாரங்களில் உள்ள சம்பவங்களை அது உறுதிப்படுத்துகிறது.

1932-38 ஆண்டுகளில் லாகீஸ் கடிதங்கள் எடுக்கப்பட்டன. கி.மு.586 இல் எருச் லேமின்மேல் நேபுகாத்நேச்சார் தொடுத்த படையெடுப்பை அது உறுதிப்படுத்துகிறது.

1848 இல் சாக்கடல் தோற்சுருள் எடுக்கப்பட்டது. அது கி.மு. 150-170 இல் எழுதப்பட்டது. எஸ்தர் புத்தகம் தவிர பழைய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்கள் அதில் உள்ளன. வேதத்தில் மாற்றம் செய்யப்படவில்லை என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

பாபிலோனியரைத் தோற்கடித்து யூதர்களை விடுவித்த நிகழ்ச்சியைக் கோரேசின் உருளை தெளிவுபடுத்துகிறது.

1799 இல் ரொசெட்டா கல் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதில் உள்ள இரகசியக் குறியீடுகளின் உதவியால் மற்ற இரகசியக் குறியீடுகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. அதன்மூலம் வேதாகமத்தின் உண்மை இன்னமும் தெளிவாயிற்று.

**ஒற்றுமை:**

வேதாகமக் கருத்துகளில் ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லை. வேதாகமம் ஆவி யினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்று வேதாகமமே 3000 இடங்களில் குறிப்பிடு கிறது. எனவே, இது தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டிருக்கவேண்டும். அல்லது மிகப்பெரிய ஏமாற்று வேலையாக இது இருக்க வேண்டும்.

**பிழையின்மை:**

வேதாகமத்தில் பிழைகாண முடியவில்லை. இது ஒரு முக்கிய ஆதாரம்.
கிறிஸ்துவின் வெளிப்பாடு:

வேதாகமத்தில் கிறிஸ்துவைக் காணலாம். அதை வாசிக்கிறவர்களின் வாழ்வில் மாற் றம் ஏற்படுகிறது. இது மிகப்பெரிய ஆதாரம் ஆகும். (யோவான் 5:39; அப்4:12; மத் 11:26-28)

**வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. யோவான் 5:39.**

# 2. தேவன் (அன்பானவர்)

| | |
|---|---|
| சங் 90:2 | தேவன் அநாதியாய் என்றென்றைக்கும் இருக்கிறார். |
| தானி 2:20 | தேவன் சர்வஞானமும் சர்வ வல்லமையுமுள்ளவர். |
| தானி 2:21 | தேவன் ராஜாக்களைத்தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர். |
| ஏசா 46:10 | அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டு சொல்லி வருபவர். |
| ஏசா 45:21 | எதிர்காலத்தை வெளிப்படுத்தக்கூடிய வல்லமை உள்ளவர் தேவன் ஒருவரே. |
| சங் 33:6, 9 | சர்வவல்லமையுள்ள சிருஷ்டிகர் அவர். (ஆதி 1:1) |
| யாத் 34:6, 7 | நீடிய சாந்தமும், கிருபையும் இரக்கமுமுள்ளவர். |
| எரே 31:3 | காருண்யத்தால் நம்மை இழுத்துக்கொள்கிறார். |
| சங் 24:1 | உலகமனைத்திற்கும் உரிமையாளர். |
| சங் 19:1 | வானங்கள்தேவனுடையமகிமையைவெளிப்படுத்துகின்றது. |
| சங் 34:1-4 | நாம் அவரைத் துதிக்கும்படி அவர் நம்மை அழைக்கிறார். நம்முடைய பயங்களிலிருந்து அவர் நம்மை விடுவிக்கிறார். |
| ஏசா 41:10 | நம்முடைய எல்லாத் துன்பங்களிலும் நமக்குச் சகாயம் பண்ணுவார். |
| ஏசா 43:1-3 | வாழ்க்கையின் ஆழ்ந்த வெள்ளம், எரியும் அக்கினிபோன்ற கடுந்துன்பமான வேளைகளிலே தேவன் நம்முடனே இருப்பார். |
| எபி 13:5 | நம்மை ஒருபோதும் கைவிடமாட்டார்; நம்மை விட்டு விலகவும் மாட்டார். |

**அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன். எரேமியா 31:3.**

**நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. எபிரெயர் 13:5.**

**என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார். சங்கீதம் 34:4.**

# 3. தீமையின் துவக்கம்

| | |
|---|---|
| 1யோவா 4:8 | தேவன் அன்பாகவே இருக்கிறார். |
| மத் 13:24-28 | தேவனுக்கும் மனிதனுக்குமுள்ள பொதுப்பகைவன் ஒருவன் நம் உலகம் எனும் நிலத்தில் தீமையெனும் களையை விதைக்கிறான். |
| எசேக் 28:12-17 | தேவனால் படைக்கப்பட்ட லூசிபர், முன்பு மிகவும் அழகான ஒரு தூதனாக இருந்தான். தேர்ந்தெடுக்கும் உரிமையை உடையவனாயிருந்தான். பெருமையால் அவன் கலகம் செய்தான். |
| ஏசா 14:12-14 | தேவனுடைய சிங்காசனத்திற்கு மேலாகத் தன்னுடைய சிங்காசனத்தை உயர்த்துவதற்கு லூசிபர் ஆசைப்பட்டான். கட்டளை பிறப்பிக்க ஆசைவந்தது; இருக்கிற கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய ஆசை இல்லை. |
| வெளி 12:7-9 | பரலோகில் யுத்தம் துவங்கியது. சாத்தானும் அவனுடைய தூதர்களும் இயேசுவுக்கும் அவருடைய தூதர்களுக்கும் விரோதமாகச் சண்டையிட்டார்கள். |
| லூக் 10:18 | சாத்தான் பரலோகிலிருந்து வெளியே தள்ளப்பட்டான். |
| ஆதி 1:27-31 | தேவன் தம்முடைய சாயலில் மனிதனைப் படைத்து, நேர்த்தியான தோட்ட வீட்டில் வைத்தார். |
| ஆதி 3:1-7 | தேவனைச் சந்தேகித்து, அவருடைய கட்டளைக்கு முரணாய் நடக்கும்படி ஆதாம்-ஏவாளைச் சாத்தான் வழிநடத்தினான். |
| ஏசா 59:1,2 | பாவம் நம்மைத் தேவனிடமிருந்து பிரிக்கிறது. |
| ரோமர் 6:23 | கீழ்ப்படியாமையின் கடைசி விளைவு மரணம். |
| எரே 17:9 | மனித இனத்தினுடைய கீழ்ப்படியாமையினாலே மனிதனின் தன்மையானது பாவம் நிறைந்ததாக மாறியது. |
| ரோ 5:12; 6:16 | குற்றஉணர்வு, கீழ்ப்படியாமை, பாவம் ஆகியவற்றுக்குள் மனிதஇனம் முழுவதும் மூழ்கிக்கிடக்கிறது. |
| எபி 2:14-17 | இயேசு மனிதத் தன்மையில் மனிதனுடைய சோதனைகளையெல்லாம் சந்தித்து, வெற்றி பெற்றார். (எபி 4:15) |
| ரோமர் 5:17-19 | ஆதாமுடைய தோல்வியால் இழந்ததை, இயேசு தமது வெற்றியால் மீட்டார். |
| ரோமர் 3:24,25 | இயேசுவின் மூலம் இரட்சிப்பு அன்பளிப்பாய்க் கிடைக்கிறது. |
| ஏசா 41:13 | இன்றைக்கு நம்முடைய எல்லாத் துன்பங்களிலும் இயேசு நம்முடன் இருக்கிறார். நமது எல்லா மன வேதனைகளிலும் அவர் நம்மைத் தேற்றுகிறார். |

| | |
|---|---|
| எசேக் 28:17, 18 | முடிவில் முற்றிலுமாய் சாத்தான் அழிக்கப்படுவான். |
| வெளி 21:1-6 | நம்முடைய தேவன் புதிய வானங்களையும் புதிய பூமியையும் நிறுவுவார். |
| நாகூம் 1:9 | இனிமேல் ஒருபோதும் பாவம் தனது அருவருப்பான தலையைத் தூக்காது. |

**வானத்திலே யுத்தமுண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வெளிப்படுத்தல் 12:7.**

**ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார். எபிரெயர் 2:14-15.**

**ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். ரோமர் 5:19.**

**இடுக்கம் மறுபடியும் உண்டாகாது. நாகூம் 1:9.**

# 4. மேசியாபற்றிய தீர்க்கதரிசனங்கள்

| | |
|---|---|
| மீகா 5:2 | பிறப்பிடம் - பெத்லகேம் (லூக் 2:1-7) |
| ஏசா 7:14 | கன்னிப் பிறப்பு (மத் 1:23) |
| ஆதி 49:8-10 | யூத வம்சத்தில் இயேசு பிறப்பார். (லூக் 1:30-32) |
| எண் 24:17 | யூதாவில் ஒரு நட்சத்திரம் உதிக்கும். (மத் 2:1, 2) |
| ஏசா 61:1-3 | மேசியாவுடைய ஊழியம் முன்கூட்டியே முன்னறிவிக்கப் பட்டது. (லூக் 4:16-21) |
| சங் 55:12, 13 | நண்பனால் காட்டிக் கொடுக்கப்பட்டார். (மத்தேயு 26: 47-50) |
| சக 11:12, 13 | முப்பது வெள்ளிக் காசுகளுக்காகக் காட்டிக் கொடுக்கப் பட்டார். அந்தப் பணம் குயவனுடைய நிலத்தை வாங் குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. (மத் 27:3-9) |
| ஏசா 53:4-7 | அடிக்கப்படுவதற்குக் கொண்டுசெல்லப்படும் ஆட்டைப் போல நடத்தப்பட்டார். (யோ 1:29; அப் 8:32-35) |
| சங் 22:16 | இயேசுவுடைய கைகளும், பாதங்களும் குத்தி ஊடுரு வப்பட்டன. (லூக் 23:33; 24:39) |
| சங் 22:18 | வீரர்கள் மேசியாவுடைய அங்கிக்காகச் சீட்டுப்போட்டார் கள். மற்ற ஆடைகள் பங்கிடப்பட்டன. |
| சங் 22:1 | சிலுவையில் இயேசு ‘என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?’ (மத் 27:46) என்று கதறினார். |
| சங் 34:20 | எலும்பு ஒன்றும் முறிக்கப்படவில்லை. (யோ 19:36) |
| ஏசா 53:9 | பணக்காரனுடைய கல்லறையில் இயேசுவை அடக்கம் செய்தனர். (மத் 27:57-60) |
| சங் 16:10 | மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். (மத் 28:2-7) |

**சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார். ஏசாயா 61:1**

**துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், அவர் என்னை அனுப்பினார். ஏசாயா 61:2,3.**

# 5. கிறிஸ்துவினுடைய தெய்வீகம்

| | |
|---|---|
| மத் 1:23 | இம்மானுவேல் தேவன் நம்மோடிருக்கிறார். |
| யோவான் 1:1 | வார்த்தை தேவனாயிருந்தது. (வச 14) அந்த வார்த்தை (இயேசு) மாம்சமாயிற்று. |
| யோவா 17:5,24 | இந்த உலகிற்கு அஸ்திபாரம் போடும் முன்னரே பிதாவுடன் இயேசு ஒன்றாயிருந்தார். |
| யோவா 8:58 | ஆபிரகாமுக்கு முன்னமே 'நான் இருக்கிறேன்' என்று இயேசு தெரிவித்தார். |
| யாத் 3:14 | 'இருக்கிறவராக இருக்கிறேன்' என்பது தேவனுடைய பெயராக இருக்கிறது. |
| லூக் 5:20-24 | இயேசு பர்வங்களை மன்னித்தார். தேவன் ஒருவரே அதைச் செய்யமுடியும் |
| யோவா 20:28 | அவர் கர்த்தரும், தேவனுமாயிருந்தாரென்று தோமா சாட்சி கூறினார். |
| எபி 1:5-9 | குமாரனைத் 'தேவனே' என்று பிதா அழைத்தார். |
| ஏசா 9:6 | இயேசு நித்திய நித்தியமானவர். |
| மீகா 5:2 | கிறிஸ்துவுடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது. |
| 1தீமோ 6:15, 16 | இயேசுவுக்கு அழியாமை உண்டு. |
| வெளி 1:18 | இயேசுவே முதலும் முடிவுமானவர். அவரிடம் கல்லறைகளின் திறவுகோல் இருக்கிறது. |
| பிலி 2:5-12 | நம்முடைய இரட்சகராக ஆவதற்கு இயேசு தானாக தனது தெய்வீகத் தன்மையை விட்டுவிட்டு மனிதரானார். |

## கிறிஸ்துவின் தெய்வீகம்பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி

**இயேசுவை 'முந்தின பேறுமானவர்' என்று வேதாகமம் அழைக்கிறது அல்லவா? அப்படியானால், அவர் பிதாவோடு ஆதிமுதல் இருக்கவில்லை என்றும் அவர் சிருஷ்டிக்கப்பட்டவர் என்றும் சொல்லலாமா?**

'சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்' என்று கொலோ 1:15 இல் இயேசு அழைக்கப்படுகிறார். அதில் வரும் வார்த்தை 'ப்ரோட்டோடோக்கோஸ்' என்பது ஆகும். தேவனுக்குரிய எல்லா முன்னுரிமைகளும் சிலாக்கியங்களும் இயேசுவுக்கு உரியவை என்பதே அந்த வார்த்தையின் பொருள் ஆகும். இவர் காலத்தில் அல்ல, முக்கியத்துவத்தில் முதல்வர்.

ஈசாயின் எட்டாவது மகன் தாவீது. ஆனாலும், அவர் 'முதற்பிறந்தவர்' என்று அழைக்கப்படுகிறார்.

இருக்கிறேன். எனப்படுபவர் 'தானே' என்று இயேசு குறிப்பிட்டார். (யோவான் 8:58). 'இருக்கிறேன்' என்ற பெயரின் பொருள் 'தன்னில்தானே ஜீவனுள்ளவர்' என்பது ஆகும்.

ஏசாயா இவரை நித்திய பிதா என்று அழைக்கிறார். (ஏசாயா 9:6).

இவருடைய புறப்படுதல் 'அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது' என்று மீகா கூறுகிறார். (மீகா 5:2).

'ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது; அந்த வார்த்தை தேவனாயிருந்தது' என்று யோவான் கூறுகிறார். (யோவான் 1:1).

தேவனுக்குரிய எல்லா சிலாக்கியங்களும் முன்னுரிமைகளும் இயேசுவுக்கு இருந்தன. அந்தச் சமத்துவத்தை நமக்காக விட்டுவிட்டு இந்த பூமிக்கு மனிதனாக வந்தார். மனிதத் தன்மையோடு, நாம் போராடுவதுபோல சோதனைகளோடு போராடி, நமக்காக அவற்றை வென்றார். (பிலி 2:5-11; எபி 2:14,17).

**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. யோவான் 1:1.**

**அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். ஏசாயா 9:6.**

**மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன். வெளிப்படுத்தல் 1:18.**

**அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். பிலிப்பியர் 5:8.**

# 6. இரட்சிப்பு

| | |
|---|---|
| 1 யோவா 4:8,9 | தேவன் அன்பாக இருக்கிறார். நம்மை இரட்சிக்கும்படி அவருடைய அன்பு அவரைத் தூண்டுகிறது. |
| ஆதி 1:27-31 | மனிதரைத் தேவன் தமது சாயலாகவே சிருஷ்டித்தார். |
| ஆதி 3:8 | தேவனுடன் உள்ள நமது ஐக்கியத்தைப் பாவம் அழிக்கிறது. ஆகையால் நாம் அவருடைய சமூகத்திலிருந்து விலகி ஓடுகிறோம். |
| ரோம 6:23 | தேவனிடமிருந்து பிரிந்ததால், நாம் நித்தியமாக வாழ வழியில்லாமல் போய்விட்டது. |
| ரோம 3:23 | எல்லாரும் பாவஞ்செய்து மரணதண்டனையைப் பெற்றிருக்கிறோம். |
| ரோம 5:18, 19 | ஆதாம் மரணத்தைக் கொண்டுவந்தார். இயேசு வாழ்வைக் கொடுக்கிறார். |
| கலா 3:13 | இயேசு நமக்குரிய சாபங்களைச் சுமந்தார். |
| எபி 2:8,9 | இயேசு நமக்காக மரணத்தை அனுபவித்தார். |
| 2கொரி 5:21 | பாவத்தின் தண்டனையை இயேசு ஏற்றுக்கொண்டார். |
| அப் 3:19 | நாம் மனந்திரும்பினால், நம்மை அவர் மன்னிக்கிறார். |
| 1யோவா 1:9 | நாம் அறிக்கையிடும்போது நம்மை மன்னிக்கிறார். |
| ரோமர் 8:1 | இயேசுவை ஏற்பவர்களுக்குத் தண்டனை இல்லை. |
| எபே 2:8 | விசுவாசத்தினால் கிருபையின் மூலமாக நாம் இரட்சிக்கப்படுகிறோம். |
| யோவா 1:12 | விசுவாசத்தினால் நாம் இயேசுவை ஏற்றுக்கொள்ளும் போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். |
| 1யோவா 5:11-13 | அவரை விசுவாசிப்பதினால் நித்திய வாழ்வாகிய ஈவைப் பெற்றுக்கொள்ளுகிறோம். |
| யோவா 3:16 | இரட்சிப்பை இப்போதே அனுபவிக்கலாம். அவரை நம்புகிற யாவருக்கும் தேவனுடைய ஈவாக அது இருக்கிறது. |

## இரட்சிப்பு பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி

**'நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் எப்படி ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வது மில்லை' (யோவான் 10:28). இவ்வசனத்தின்படி இயேசுவிடம் வந்து சேர்ந்துவிட்டால், நம் இரட்சிப்பை நாம் இழக்கவேமாட்டோம் என்று சொல்லலாம் அல்லவா?**

இயேசுவிடம் வந்து விசுவாசத்தால் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும் போது, நித்தியஜீவன் எனும் ஈவைப் பெறுகிறோம். (எபே 2:8; ரோமர் 3:22-

25). இரட்சிப்பு இலவசமான ஓர் ஈவு. நம் கீழ்ப்படிதலினால் நாம் சம்பாதிக்கிற ஒன்று அல்ல. 'இரட் சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்?' என்று பிலிப்பிய சிறைச்சாலை அதிகாரி கேட்டபோது, 'கர்த்தராகிய இயேசு கிறிஸ் துவை விசுவாசி' என்று பவுல் பதில் கூறினார். (அப் 16:30,31).

விசுவாசித்தல் என்பது நம் மனது செய்கிற ஒரு வேலை. அதே மனது விசு வாசிக்காது இருக்கவும் தீர்மானம் செய்யலாம். அவிசுவாசமானது ஆன்மிக மரணத்துக்கு வழிநடத்தும். (எபி 3:12-14). தேவன்மேல் கடைசிவரை நாம் நம்பிக்கை வைத்திராவிட்டால், அவிசுவாசம் நம்மில் உருவாகிவிடும். 'முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்' (மத் 24:13).

பிரசங்கிக்கப்பட்டதை மனதில் இருத்தி விசுவாசவாழ்க்கை வாழ்ந்தால் நாம் இரட்சிப்பைப் பெறுவோம். (1கொரி 15:1,2). நம் பழைய பாவவாழ்க்கைக் குத்திரும்புவதால், ஜீவபுத்தகத்திலிருந்து நம் பெயர் நீக்கப்படுவதற்கான வாய்ப்பு எப்போதுமே இருக்கிறது. (2பேதுரு 2:19-22; வெளி 3:5; 1கொரி 9:27). 1கொரி 9:27 இல் 'ஆகாதவன்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையும் எரே 6:30 இல் 'தள்ளுபடி' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையும் கிரேக்க மொழியில் ஒன்றே.

நம் இருதயத்தில் விசுவாசம் உண்டாகும்போது, நமக்கு நித்திய வாழ்வு கிடைக்கிறது; அவிசுவாசம் உண்டாகும்போது, ஆன்மிக மரணம் கிடைக்கிறது. எனவே, நாம் அனுமதித்தாலொழிய, யாரும் நம்மைத் தேவனிடமிருந்து பிரிக்கமுடியாது என்பதே யோவான் 10:28 கூறும் கருத்து ஆகும்.

**கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். கலாத்தியர் 3:13.**

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீ தியும் உள்ளவராயிருக்கிறார். 1யோவான் 1:9.**

**கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சி க்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. எபேசியர் 2:8.**

# 7. அறிக்கையிடுதலும் மன்னிப்பும்

| | |
|---|---|
| மீகா 7:18,19 | விருப்பத்தோடு தேவன் மன்னிக்கிறார். |
| எபி 8:12 | தேவன் நம்முடைய பாவங்களை இனிமேல் நினைப்பது இல்லை. |
| அப் 3:19 | நம்முடைய மீறுதல்களை அவர் நிவர்த்தியாக்குகிறார். |
| 1 யோவா 1:9 | அவர் இலவசமாய் மன்னிக்கிறார். |
| ஏசா 44:22 | கார்மேகத்தைப் போல உள்ள நம்முடைய பாவங்களை அவர் அகற்றுகிறார். |
| ஏசா 43:25 | தேவன் நம்முடைய பாவங்களை நினைப்பதில்லை. |
| சங் 32:1 | மன்னிப்பால் மகிழ்ச்சி கிடைக்கிறது. |
| ஏசா 55:7 | தேவன் அளவில்லாமல் மன்னிக்கிறார். |
| நெகே 9:17 | நாம் கலகம் செய்தபோதிலும் நம்மை மன்னிக்க அவர் ஆயத்தமாக உள்ளார். |
| கொலோ 1:14 | மன்னிப்பு என்பது தேவனுடைய குணமாய் இருக்கிறது. |
| சங் 103:3 | தேவனுடைய மன்னிப்பு முழுமையானதாயிருக்கிறது. நம்முடைய எல்லா அக்கிரமங்களையும் அவர் மன்னிக்கிறார். |
| லூக் 7:47 | நம்முடைய அநேக பாவங்களை அவர் மன்னிக்கிறார். |
| எபே 4:32 | அவர் நம்மை மன்னித்திருப்பதால், நாம் ஒருவரையொருவர் மன்னிக்கிறோம். |
| 2கொரி 2:7,9 | கிறிஸ்துவைப் போலிருந்தால் மன்னிப்பவர்களாக இருக்கவேண்டும். |

**நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எபிரெயர் 8:12.**

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1யோவான் 1:9.**

# 8. ஐரோப்பாவினுடைய எதிர்காலம் வெளியாக்கப்பட்டது

| | |
|---|---|
| தானி 2:1 | நினைவுக்கு வராத ஒரு கனவை நேபுகாத்நேச்சார் காண்கிறார், |
| தானி 2:2-11 | சொப்பனத்தைச் சொல்லவோ, விளக்கவோ முடியா தவர்களாய் அரசனுடைய ஞானிகள் இருந்தார்கள். |
| தானி 2:16 | தானியேல் ஜெபித்துப் பதில் தருவதற்காகக் கால அவகாசம் கேட்டார். |
| தானி 2:21-23 | தானியேலுக்குத் தேவன் சொப்பனத்தை வெளிப்படுத்தினார். |
| தானி 2:28 | இரகசியங்களை வெளிப்படுத்துகிற தேவன் பரலோகத்தில் இருக்கிறார். |
| தானி 2:29,30 | இனிமேல் நடக்க இருக்கும் காரியங்களை அந்தச் சொப்பனம்வெளிப்படுத்துகிறது. |

## சொப்பனம் வெளிப்படுத்தப்பட்டது

| | |
|---|---|
| தானி 2:31 | பெரிய சிலை ஒன்று. |
| தானி 2:32-36 | பொன்னான தலை, வெள்ளியான மார்பும் புயங்களும், வெண்கலமான வயிறும் தொடையும், இரும்பான கால்கள், இரும்பும் களிமண்ணுமான பாதங்கள். சிலையைத் தூள்தூளாகத் தரையில் கல்லொன்று நொறுக்குகிறது. |

## சொப்பனம் வெளிப்பட்டது

| | |
|---|---|
| தானி 2:36 | (தேவனும் தானியேலும்) 'நாம் சொப்பனத்தை விளக்கிச் சொல்லுவோம்' என்று தானியேல் சொன்னார். |
| தானி 2:38 | நேபுகாத்நேச்சாராகிய, 'நீரே அந்தப் பொன்னானத் தலை'. பாபிலோனியப் பேரரசு உலகை கி.மு.605 முதல் கி.மு. 539 வரை ஆட்சிசெய்தது. |
| தானி 2:39 | உமக்குப் பிறகு, வேறொரு கீழ்த்தரமான ராஜ்யம் தோன்றும். |
| தானி 5:28, 30-31 | மேதிய-பெர்சியர் பாபிலோனியரைத் தோற்கடித்தனர். |
| ஏசா 44:27,28; 45:1 | கோரேஸ் பற்றிய அற்புதமான முன்னறிவிப்பு. பாபிலோனியரைத் தாக்குதலும் வீழ்த்துதலும், தேவனுடைய பிள்ளைகளுக்கு சுதந்தரம் வழங்குதல். (இந்தத் தீர்க்கதரிசனம் நூறு ஆண்டுகளுக்கு முன்னராகவே முன்னறிவிக்கப்பட்டது.) |
| தானி 2:39 | (கடைசிப்பகுதி) மூன்றாவதான வேறொரு வெண்கல ராஜ்யம் தோன்றும். |

| | |
|---|---|
| தானி 8:20,21 | மேதிய பெர்சியரைக் கிரேக்கம் வென்றது. (இந்தத் தீர்க்க தரிசனம் 200 ஆண்டுகளுக்கு முன்னர் சொல்லப்பட்டது). மேதிய பெர்சியர்கள் கி.மு.539 முதல் கி.மு. 331 வரைக்கும் ஆண்டார்கள். கிரேக்கர்கள் கி.மு.331 முதல் கி.மு. 168 வரை ஆண்டார்கள். |
| தானி 2:40 | இரும்பின் உறுதியைக் கொண்ட நான்காவது ராஜ்யம் ரோமைக் குறிக்கிறது. ரோம் கி.மு. 168 லிருந்து கி.பி. 351 வரை ஆட்சி செய்தது. |
| தானி 2:41 | பேரரசு பிரிக்கப்படும். ரோம் பிரிக்கப்பட்டது. அந்தப் பிரிவுகளில் சில உறுதியாகவும் சில உறுதியற்றும் இருந்தன. |
| தானி 2:43 | ஐரோப்பிய அரசர்களும், அரசிகளும் திருமணம், அரசியல் சதி, சண்டை போன்றவைமூலம் பேரரசை ஒன்றாக்க முயற்சித்தார்கள். |
| தானி 2:44 | முடிவில்லாத ராஜ்யத்தைத் தேவன் நிறுவுவார். |
| தானி 2:45 | கைகளால் பெயர்க்கப்படாத கல் என்பது இயேசுவினுடைய ராஜ்யம். |
| சங் 2:8,9 | புறஜாதிகள் நொறுங்குண்டு போவார்கள். |
| தீத்து 2:11-13 | ஆனந்த பாக்கியமும் மகிமையின் பிரசன்னமாகுதலும். |

**ராஜாவே, உம்முடைய படுக்கையின்மேல் நீர் படுத்திருக்கையில், இனிமேல் சம்பவிக்கப்போகிறதென்ன என்கிற நினைவுகள் உமக்குள் எழும்பிற்று; அப்பொழுது மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர் சம்பவிக்கப்போகிறதை உமக்குத் தெரிவித்தார். தானியேல் 2:29.**

**எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. தீத்து 2:11,13.**

# 9. இரண்டாம் வருகை (வரும் விதம்)

| | |
|---|---|
| யோவா 14:1-3 | தாம் திரும்பி வருவதாக இயேசு வாக்குப்பண்ணியுள்ளார். |
| அப் 1:9-11 | அவருடைய வாக்குறுதி உண்மையானதென்று தூதர்கள் உறுதிப்படுத்தினார்கள். |
| யூதா 14 | ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையான ஏனோக்கு நம்முடைய கர்த்தருடைய வருகையை தீர்க்கதரிசனமாகச் சொன்னார். |
| சங் 50:3 | 'நம்முடைய கர்த்தர் வருவார்' என தாவீது தெரிவித்தார். இயேசுவினுடைய இரண்டாம் வருகையைக் குறித்து 1500 தீர்க்கதரிசனங்கள் வேதாகமத்தில் உள்ளன. பழைய ஏற்பாட்டில் அவருடைய முதல் வரு கையைக் குறித்து அநேக தீர்க்கதரிசனங்கள் உள்ளன. அவற்றைப் போல எட்டு மடங்கு தீர்க்கதரிசனங்கள் அவருடைய இரண்டாம் வருகையைக் குறித்து முன்னறி விக்கின்றன. புதிய ஏற்பாட்டில் சராசரியாக ஐந்து வசனங்களுக்கு ஒருமுறை நம் கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. |
| வெளி 1:7 | இயேசு மீண்டும் வரும்போது எல்லோருடைய கண்களும் அவரைப் பார்க்கும். |
| மத் 24:27 | வானத்தில் மின்னல் தோன்றி பிரகாசிப்பதைப் போன்று அவருடைய வருகை இருக்கும். |
| 1தெச 4:16,17 | (அது) கர்த்தருடைய வருகை கேட்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியாய் இருக்கும். மரித்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுவார்கள். அவர்கள் பரமேறும்போது உயிரோடு இருக்கும் பரிசுத்தவான்களும் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப் படுவார்கள். |
| 1கொரி 15:51-54 | தேவன் தம்முடைய மக்களுக்கு அப்போது அழியாமையைத் தருவார். |
| மத் 16:27 | அவருடைய வ வருகை மகிமையான ஒரு சம்பவமாக இருக்கும். அப்போது அவரவருக்கு அவரவருடைய பலன்களை அவர் தருவார். |
| வெளி 6:14-17 | துன்மார்க்கராகிய கெட்டவர்கள் அவருடைய வருகையின்போது பயந்து, பர்வதங்களைப் பார்த்து, 'நீங்கள் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்' என்று கதறுவார்கள். |
| மத் 13:37-43 | அவருடைய ராஜ்யத்திலிருந்து தீயவர்கள் அகற்றப்பட்டு அக்கினியால் அழிவார்கள். நித்தியகாலம் வாழ்வார்கள். |
| ஏசா 25:9 | அவருடைய வருகையில் அவரைப் பார்க்க நீதிமான்கள் ஆசைப்படுவார்கள். 'இதோ, இவரே நம்முடைய கர்த்தர்' |

|  |  |
|---|---|
|  | என்று அவர்கள் மகிழ்ச்சியோடு உரத்துக் கூறுவார்கள். |
| தீத்து 2:13 | தொலைந்து போன மனித இனத்திற்கு அவருடைய வருகை 'ஆனந்த நம்பிக்கை'. |
| வெளி 22:11, 12, 17-20 | 'என்னுடைய சீக்கிர வருகைக்கு ஆயத்தப்படுங்கள்' என்பதே இயேசுவின் கடைசி அழைப்பு. |

## இயேசுவின் இரண்டாம் வருகை பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி

**இயேசு இரகசியமாகத்தானே வருகிறார். 'இரண்டுபேர் வயலில் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருவள் கைவிடப்படுவான்' என்று வேதம் சொல்கிறதே. மத் 24:40.**

இயேசுவின் வருகை இரகசியமானது அல்ல என்று வேதாகமம் அநேக இடங்களில் சொல்கிறது. (வெளி 1:7; சங் 50:3; 1தெச 4:16,17; மத் 24:27). ஒருவன் கைவிடப்படுவான் என்று வேதாகமம் சொல்லும்போது, கைவிடப்பட்டவன் பூமியில் உயிரோடிருப்பான் என்று அது சொல்லவில்லை. லூக்கா 17:26-37 இல் இதை விளக்கமாகப் புரிந்துகொள்ளமுடிகிறது. நோவாவுடைய காலத்தில் இரண்டு விதமான மக்கள் இருந்தார்கள். ஒரு பிரிவு ஏற்றுக்கொள்ளப்பட்டது; அவர்கள் பேழைக்குள் பத்திரமாக இருந்தார்கள். பேழைக்கு வெளியே இருந்த பிரிவு கைவிடப்பட்டது. கைவிடப்பட்டவர்கள் அழிக்கப்பட்டார்கள் என்பதைப் பார்க்கிறோம். லோத்துவின் காலத்திலும் அப்படியே நடந்தது. ஏற்றுக்கொள்ளப் பட்டவர்கள் நகரத்தைவிட்டு வெளியேறினார்கள். கைவிடப்பட்டவர்கள் நகரத்தோடு சேர்ந்து எரிந்து அழிந்துபோனார்கள். அதுபோலவே இயேசு வரும் போதும், ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் பரலோகம் செல்வார்கள். கைவிடப் பட்டவர்கள் அழிந்துபோவார்கள். லூக்கா 17:37 இல், 'எங்கே ஆண்டவரே?' என்று சீடர்கள் கேட்டார்கள். அதாவது, 'எங்கே கைவிடப்படுவார்கள்?' என் பது கேள்வி. இயேசுவின் பதில் தெளிவாக இருக்கிறது. 'பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்' என்பது இயேசுவின் பதில். வெளி 19:11-18 இல் கழுகுகள் கூடுவதின் காரணத்தை அறியலாம். (2தெச 1:7-10; 2:8) ஐயும் வாசியுங்கள்.

**இயேசு திருடனைப்போல் வருவார் என்று வேதாகமம் சொல்லவில்லையா? (1தெச 5:2).**

'இயேசு திருடனைப்போல் வருவார்' என்று சொல்லும் இடத்திலெல்லாம், நாம் அறியாத நேரத்தில் அவர் வருவார் எனும் அர்த்தத்தையே காட்டுகிறது. அவர் வரும் விதம் தெரியாது என்று எங்கும் சொல்லப்படவில்லை. எதிர்பாராத நேரத்தில் அவர் திருடனைப்போல் வருவார். ஆனால், அவர் வரும்போது அவ ருடைய மகிமையின் பிரகாசம் எங்கும் ஜொலிக்கும். (மத் 24:42-44; 1தெச 5:1-5; மத் 24:27).

**வரப்போகும் உபத்திரவமானது தேவனுடைய மக்களைப் பாதிக்குமா? அல்லது, உபத்திர வத்திற்கு முன்பு அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்களா?**

முடிவு காலத்தில் வாழ்கிற மக்களுக்கு ஆதி இஸ்ரவேலருடைய அனுப வங்கள் முன்மாதிரியாகத் தரப்பட்டுள்ளன. வாதைகளிலிருந்து காக்கப்பட்டு, அதன்பிறகு எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர்கள் விடுவிக்கப் பட்டதுபோல, தேவனுடைய சபையும் ஏழு வாதைகளிலிருந்து காக்கப்பட்டு, அதன்பிறகு விடுவிக்கப்படுவார்கள். (1கொரி 10:11; சங் 91: 46). பாபிலோன்

அரசனின் மரணச்சட்டத்திற்குக் கீழ்ப்படிய மறுத்து, சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ ஆகிய மூவரும் சூளைக்குள் போனார்கள். அங்கே, தேவன் அவர்களை அற்புதமாகக் காத்தார். மரணத்தையும் எதிர்க்கும் விசுவாசத்துடன் அக்கினியைச் சந்தித்தார்கள். (தானி 3:16-28). 'இதோ, திருடனைப்போல் வருகிறேன்' (வெளி 16:15) என்று இயேசு சொன்னபோது, ஏற்கனவே ஆறு வாதைகள் முடிந்திருந்தன. வாதைகளுக்குப் பிறகுதான் இயேசு வருகிறார் என்பது தெரிகிறது அல்லவா? 'ஏழு தூதர்களுடைய ஏழு வாதைகளும் முடியும்வரைக்கும் ஒருவரும் தேவால யத்திற்குள் பிரவேசிக்கக்கூடாதிருந்தது' என்று வெளி 15:8 தெளிவாகக் கூறு கிறது. 2தெச 2:1-3 இன்படி இயேசுவுடைய வருகைக்கு முன்னராகவே அந்திக் கிறிஸ்து வெளிப்படுவான் என்பது தெரிகிறது. அவர் வருகையில் அவன் அழிக் கப்பட்டுப்போவான் என்பதை 2தெச 2:8 காட்டுகிறது.

**ஒரு ஏழாண்டுக் காலத்தின் துவக்கத்தில் நீதிமான்கள் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், அந்தக் காலத்தின் இறுதியில் அநீதிமான்கள் அழிக்கப்படுவார்கள் என்றும் வேதா கமம் கூறுகிறதா?**

இயேசுவின் உவமைகளைப் பார்க்கும்போது, இரண்டாம் வருகையில் மக்கள் மறுரூபமாவார்கள் அல்லது அழிந்துபோவார்கள் என்பது தெளிவாகவே தெரிகிறது. இந்த இரண்டிற்கும் இடையில் ஏழாண்டுக் காலம் இருப்பதாக எங் கும் சொல்லப்படவில்லை. இன்றே இரட்சண்ய நாள். (2கொரி 6:2). கோதுமை யும் களைகளும் (நீதிமான்களும் துன்மார்க்கரும்) அறுப்புவரை ஒன்றாக வளர் கின்றன. (மத் 13:30). உண்மையில்லாத ஊழியக்காரனின் உவமையின்படி அவ னுக்கு இரண்டாம் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. வீட்டுக்கு எஜமான் எதிர் பாராத விதமாக வரும்போது, அவன் வேலையைவிட்டு நீக்கப்படுகிறான். (மத் 24:44-51). செம்மறியாடு-வெள்ளாடு உவமையின்படி இயேசு வரும்போது, மனிதர் இரட்சிக்கப்படுவார்கள் அல்லது அழிந்துபோவார்கள். (மத் 25:31-46).

**இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும். வெளிப்படுததல் 1:7.**

**மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். மத்தேயு 24:27.**

**மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார். மத்தேயு 16:27.**

# 10. இரண்டாம் வருகை (அடையாளங்கள்)

| | |
|---|---|
| மத் 24:3 | ‘உலகத்தின் முடிவிற்கும் உம்முடைய வருகைக்கும் அடையாளம் என்னவாயிருக்கும்?’ என்று இயேசுவினுடைய சீடர்கள் கேட்டார்கள். |
| மத் 24:4,5,11, 24 | கள்ளப்போதகர்கள். |
| மத் 24:6,7 | யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும். |
| வெளி 11:18 | சண்டையினால் பூமியைக் கெடுத்தவர்களைத் தேவன் முற்றிலுமாய் அழிப்பார். |
| லூக் 21:26 | மனிதருடைய இதயங்கள் பயத்தினால் சோர்ந்து போகும். |
| 1தெச 5:2,3 | சமாதானப் பேச்சுகள் நடக்கும். |
| மத் 24:7 | இயற்கை அழிவுகள் (பூமியதிர்ச்சிகள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள்) |
| மத் 24:12 | குற்றமும், வன்செயலும், கொடுமையும் அதிகமாகும். |
| 2தீமோ 3:1-4 | கொடிய காலங்களும் ஒழுக்கச் சீர்கேடுகளும். |
| மத் 24:37-39 | இச்சையடக்கமும் நல்லொழுக்கமும் இல்லாதவர்கள். |
| யாக்கோபு 5:1-5 | பொருளாதார நெருக்கடிகள். |
| லூக் 21:34 | உலகக் கவலைகளில் மூழ்குபவர்கள். |
| மத் 24:14 | உலகம் முழுவதற்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும். (பார்க்கவும் வெளி 14:6,7). |
| 2பேதுரு 3:8-10 | தேவன் எல்லாரையும் இரட்சிக்க விரும்புகிறார். |
| மத் 24:48 | ‘என்னுடைய எஜமான் வர நாள் செல்லும்’ என்று பொல்லாத ஊழியன் சொல்லுகிறான். |
| மத் 24:42-44 | ‘ஆயத்தமாயிருங்கள்’ என்பதே தேவனுடைய ஆலோசனை. |

**தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். 2பேதுரு 3:10.**

# 11. நியாயத்தீர்ப்பு

| | |
|---|---|
| வெளி 14:6,7 | மனிதருக்குத் தேவன் தரும் கடைசிச் செய்தியில் நியாயத் தீர்ப்பு குறிப்பிடப்பட்டு உள்ளது. |
| வெளி 22:12 | அவரவருக்குரிய பலனை அளிக்க இயேசு வருவதால், அதற்கு முன்பே நியாயவிசாரணை நடந்திருக்கவேண் டும். அவர் வருகைக்கு முன்னரே அவர் வரும்பொழுது, யார் யார் எந்தெந்த பலனைப் பெறுபவர்கள் என்பது முடிவு செய்யப்பட்டிருக்கவேண்டும். |
| மத் 12:36 | இயேசு வாழ்ந்த காலத்திற்குப் பிறகே விசாரணை நடக்க இருந்தது. |
| அப் 24:25 | ‘இனிவரும்’ நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பேலிக்ஸிடம் பவுல் சொன்னார். |
| தானி 7:9,10 | பிரபஞ்சத்தினுடைய ஒப்புயவர்வற்ற (நியாயசங்சம்) உச்ச நீதிமன்றம் உட்கார்ந்திருப்பதையும் விசாரணை துவங்கியதையும் தானியேல் தரிசனத்தில் கண்டார். |
| பிர 12:13,14 | அந்தரங்கமான யாவற்றையும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார். |
| எபி 4:13 | தேவனுக்குமுன்பாக எல்லாம் வெளியரங்கமாயிருக்கின்றது. |
| 2கொரி 5:10 | கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாம் எல்லாரும் நிற்கவேண்டும். |
| ரோமர் 14:12 | நாம் ஒவ்வொரும் தன்னைக் குறித்த கணக்கைத் தேவ னுக்குக் கொடுக்கவேண்டும். |
| சங் 87:6 | ‘நாம் எங்கே பிறந்தோம்?’ என்பதை நியாயத்தீர்ப்பின் போது கர்த்தர் கணக்கில் வைக்கிறார். |
| எரே 2:22 | நம்முடைய எல்லா அக்கிரமங்களும் தேவனுக்குமுன்பாக குறித்துவைக்கப்பட்டிருக்கின்றன. |
| மல் 3:16 | தேவகிருபையால் சுயநலமின்றி செய்யப்பட்ட நம் நற் செயல்கள் தேவனுக்கு முன்பாகப் பதிவாகின்றன. |
| வெளி 20:12 | பரலோகத்திலுள்ள புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள நம் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டே நியாயத் தீர்ப்புச் செய்யப்படும். |
| அப் 3: 19 | நம்முடைய பாவங்களைவிட்டு நாம் மனந்திரும்பினால், கடைசி நியாயத்தீர்ப்பிலே பரலோகப் புத்தகங்களிலிருந்து நம்முடைய பாவங்கள் அகற்றப்படும். |
| வெளி 3:5 | பாவங்களை மேற்கொள்ளாமல், நாம் நம்முடைய பாவங்களிலேயே நிலைத்திருந்து துணிகரமாக தேவனுக்கு |

|  |  |
|---|---|
|  | விரோதமாகச் செயல்பட்டால், நம்முடைய பெயர் தேவனுடைய புத்தகத்திலிருந்து அகற்றப்படும். |
| ரோம 8:1 | நியாயத்தீர்ப்பின் தண்டனையிலிருந்து நாம் இயேசு மூலமாகமட்டுமே தப்ப முடியும். |
| எபி 7:24,25 | நம் பரலோகப் பிரதான ஆசாரியர் தம் மூலமாகத் தேவனிடம் வரும் எல்லாரையும் இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார். |
| யோவா 14:26 | பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தேவன் தந்துள்ள ஆசிரியர். |
| மத் 12:31,32 | பரிசுத்த ஆவியானவரின் போதனையைத் தொடர்ந்து அலட்சியம்செய்துவந்தால், அந்தப் பாவம் மன்னிக்கப் படுவதில்லை. |

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. வெளிப்படுத்தல் 22:12.**

**அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக்கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. மல்கியா 3:16.**

**ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களா யிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. ரோமர் 8:1.**

**தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். எபிரெயர் 7:25.**

# 12. தேவனுடைய பிரமாணம்

| | |
|---|---|
| சங் 111:7,8 | தேவனுடைய கட்டளைகள் எல்லாம் பரலோகத்தின் நித்திய நன்னடத்தை விதிகள் ஆகும். அவை என்றும் நிலைத்திருக்கும். |
| ரோமர் 3:20 | நாம் நம்முடைய குற்றங்களைப் பார்க்கவும் இயேசுவிடம் நம்மை நடத்தவும் தேவனுடைய பிரமாணம் உதவிசெய்கிறது. |
| சங் 19:7 | தேவனுடைய பிரமாணம் நம்மை மனமாற்றத்துக்கு வழிநடத்துகிறது. |
| சங் 19:11 | தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர் களுக்கு மிகுந்த பலன் உண்டு. |
| ரோமர் 6:14 | இரட்சிக்கப்படுவதற்கு நாம் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்லர். இரட்சிப்பு முழுவதுமாக எப்போதும் கிருபையினாலேயே வருகிறது. (எபி 2:8) |
| ரோமர் 6:15 | நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் இல்லை. அதற்காக நாம் தேவ பிரமாணத்தை மீறக்கூடாது. |
| 1 யோவா 3:4 | தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறதே பாவம். |
| ஏசா 59:1,2 | பாவம் அல்லது தேவனுடைய பிரமாணத்தை மீறுதல் நம்மைத் தேவனிடமிருந்து பிரித்து, நித்திய மரணைத்துக்கு வழிநடத்துகிறது. (ரோமர் 6:23) |
| ரோமர் 3:28-31 | விசுவாசத்தால் நாம் இரட்சிக்கப்படும்பொழுது, தேவனு டைய பிரமாணங்களைக் கைக்கொள்ள ஆசைப்படு வோம். (எபி 10:7; யோவா 8:29) |
| யோவா 14:15 | அன்பு எப்போதும் கீழ்ப்படிதலுக்கு வழிநடத்துகிறது. 'நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என்னுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்' என்றார் இயேசு. |
| 1யோவா 2:4,5 | அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை. |
| எபி 8:10 | புது உடன்படிக்கை செய்யும்போது, இயேசு தம்முடைய பிரமாணத்தை நமது இதயத்தில் எழுதுகிறார். |
| சங் 40:8 | தமக்குப் பிரியமானதைச் செய்யும் ஆசையைத் தேவன் நமது இதயத்தில் வைக்கிறார். |
| வெளி 14:12 | கடைசி நாட்களில் வாழும் தேவனுடைய பிள்ளைகள் விசு வாசத்தின் மூலமாகத் தேவனுடைய கற்பனைகளைக் கடைப்பிடிப்பவர்கள். |

வெளி 12:17 அவருடைய மீதமானவர்களும் மற்ற காலங்களைச் சேர்ந்த விசுவாசிகளைப்போல தேவனுடைய கற்பனைகளைக் கடைப்பிடிப்பார்கள்.

## தேவனுடைய பிரணம் பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள்

**பத்துக்கற்பனைகளை ஒழித்துவிட்டு, அன்பின் புதிய கற்பனையை நிறுவுவதற்கு அல்லவா இயேசு வந்தார்? 'தேவனிடத்தில் அன்புகூருவாயாக; பிறனிடத்தில் அன்புகூருவாயாக' என்று இயேசு சொன்னாரே. (மத் 22:37-40). இந்தப் புதிய கற்பனையின்படி தேவனிடமும் பிறனிடமும் அன்புகூர்ந்தால் போதும் அல்லவா?**

பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள பிரமாணத்தின் சுருக்கமாகத்தான் அதைச் சொன்னார் என்பதை நீங்கள் அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். தேவனிடமும் பிறனிடமும் அன்புகூரும்படி பழைய ஏற்பாட்டிலேயே தேவன் சொல்லியிருக்கிறார். 'நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப்பலத்தோடும் அன்புகூருவாயாக'. (உபா 6:5). 'உன்னில் அன்பு கூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக'. (லேவி19:18). மத்22:40இல், 'இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது' என்றார் இயேசு. முதல் நான்கு கற்பனைகளும் தேவனிடத்தில் அன்புகூருவதைப் பற்றியும், கடைசி ஆறு கற்பனைகளும் மனிதனிடத்தில் அன்புகூருவதைப் பற்றியும் கூறுகின்றன. மத் 5:17 இல், 'பிரமாணத்தை அழிப்பதற்கு அல்ல,நிறைவேற்றுவதற்கே வந்தேன்' என்று இயேசு கூறியுள்ளார். அன்புடன் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதை வெளிப்படுத்தவே இயேசு வந்தார். நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக அன்பு உள்ளது என்பதை இயேசு வெளிப்படுத்துகிறார். (வெளி 13:10). 'நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்' என்றும் சொன்னார். (யோவான் 14:15).

**கிறிஸ்தவர்கள் விசுவாசத்தால் இரட்சிக்கப்படுவதால், அவர்கள் பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டியதில்லை என்று பவுல் போதித்தாரா?**

விசுவாசத்தால் கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்படுவதாகப் பவுல் சொல்லவில்லை. கிருபையினாலேயே அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். ஆனால், விசுவாசத்தின் மூலமாக இரட்சிக்கப்படுகிறார்கள். இலவசமாய் இயேசு தரும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் கையே விசுவாசம். விசுவாசமானது கீழ்ப்படியாமைக்கு அல்ல, கீழ்ப்படிதலுக்கே வழிநடத்தும். பவுல் சொல்வதைப் பாருங்கள். 'விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல,நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே' (ரோமர் 3:31). 'கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே (பிரமாணத்தை மீறுவதிலே) நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே' (ரோமர் 6:1,14,15).

**பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நியாயப்பிரமாணத்தாலும், புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிருபையாலும் இரட்சிக்கப்படுகிறோம் என்பது உண்மையா?**

இரண்டு காலங்களிலுமே இரட்சிப்பு நமக்குக் கிருபையினாலே விசுவாசத்தின் மூலமாகவே கிடைக்கிறது. இரட்சிப்புக்கு ஆண்டவர் இரண்டு வழிகளை வைத்திருக்கவில்லை. தீத்து 2:11 இன்படி, 'எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி உள்ளது'. பலியிடப்பட இருந்த கிறிஸ்துவினாலே பழைய ஏற்பாட்டு மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள்.

அவர்கள் பலியிட்ட ஆடானது அச்சமயத்தில் இனி பலியிடப்பட இருந்த இயேசுவைச் சுட்டிக்காட்டியது. பலியிடப்பட்ட கிறிஸ்துவினாலே புதிய ஏற்பாட்டு மக்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். (ஆதி 3:21; 22:9-13). இரண்டு காலங்களிலும் இயேசுவே இரட்சிப்பாக இருக்கிறார். (அப்4:12).

**நாம் புதிய உடன்படிக்கைக்குக் கீழானவர்களாதலால், தேவனுடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறதா?**

உண்மையைச் சொல்லவேண்டுமானால், பழைய உடன்படிக்கையைவிட புதிய உடன்படிக்கைதான் பழையது. அதாவது, மனித இனத்தின்மேல் சாத்தானுக்கு உள்ள கொடிய செல்வாக்கை உடைத்து எறிவதற்காக மேசியா வருவார் என்று ஏதேனில் தேவன் சொன்னபோது, புதிய உடன்படிக்கை கொடுக்கப்பட்டாயிற்று. பாவத்திலிருந்து இயேசு கிறிஸ்துவினால் மீட்கப்படுவோம் எனும் வாக்குறுதி புதிய உடன்படிக்கையில் உள்ளது. அவர் நம்மை இரட்சிக்கிறார். பிரமாணத்தை நம் உள்ளத்தில் அவர் எழுதிவைக்கிறார். அன்பே கீழ்ப்படிதலுக்கான தூண்டுதல் ஆகிறது. வாழ்க்கையில் புது வல்லமை கிடைக்கிறது. (எபி 8:10; எசேக் 36:26; சங் 40:8). பழைய உடன்படிக்கையில் இஸ்ரவேலர் தங்கள் சொந்தப்பலத்தால் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படிவதாகச் சொன்னார்கள். 'தேவன் சொல்வதை எல்லாம் செய்வோம்' என்று வாக்குக்கொடுத்தார்கள். (யாத் 19:8; 24:3,7). வெளிப்பிரகாரமாக மட்டும் தேவனுடைய கட்டளைக்கு இசைந்த வாழ்வை வாழ முயற்சித்தால், தோல்வியே கிடைக்கும். நம் சொந்தப் பலத்தால் கீழ்ப்படிய முடியாத பிரமாணமானது நம்மைக் குற்றப்படுத்தும். (ரோமர் 3:23; 6:23). புதிய உடன்படிக்கையில் நமக்கு ஒரு புதிய எஜமான் இருக்கிறார். அவர் இயேசு கிறிஸ்து. நமக்குப் புது உள்ளமும் தேவனுக்கு முன்பாக ஒரு புதிய நிலையும் கிடைக்கிறது.

**பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். 1யோவான் 3:4.**

**நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். யோவான் 14:15.**

**அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. 1யோவான் 2:4,5.**

# 13. ஓய்வுநாள்

| | |
|---|---|
| வெளி 14:6, 7 | சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளுமாறு அழைப்பதே மனித இனத்துக்குத் தேவன் தரும் கடைசிச் செய்தியாயிருக்கிறது. |
| வெளி 4:11 | 'தேவனே நமது சிருஷ்டிகர்' என்னும் உண்மையை அடிப் படையாகக் கொண்டதே தொழுகை. |
| எபி 3:9 | சிருஷ்டிப்பில் இயேசு முனைப்புடன் செயல்பட்டவர். எனவே, சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளும்படி வெளிப் படுத்துதல் தரும் கடைசி அழைப்பின்படி, இயேசுவுக்கும் கனத்தைத் தருதல் வேண்டும். |
| யாத் 20:8-11 | ஓய்வுநாளை ஆசரிக்கும்போது, இயேசுவைச் சிருஷ்டி கராகத் தொழுகிறோம். |
| ஆதி 2:1-3 | சிருஷ்டிப்பில் ஓய்வுநாள் பிரித்து வைக்கப்பட்டது. தேவன் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து, அதை ஆசீர்வதித்து, பரிசுத்தப்படுத்தினார். |
| மாற்கு 2:27,28 | யூதர்கள் தோன்றுவதற்கு 2300 முன்னரேயே மனித இனத்துக்கு ஓய்வுநாள் கொடுக்கப்பட்டது. மனுக்குலம் முழுவதுக்கும் நினைவுச் சின்னமாக ஓய்வுநாள் கொடுக்கப்பட்டுள்ளது. |
| எசேக் 20:12,20 | மனுக்குலம் அனைத்திற்குமாக ஓய்வுநாள் கொடுக்கப் பட்டது. தேவனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கு மிடையே ஓர் அடையாளமாக ஓய்வுநாள் இருக்கிறது. |
| லூக் 4:16 | இயேசு ஓய்வுநாளை உண்மையாக ஆசரித்தார். |
| மத் 24:20 | எருசலேம் அழிக்கப்படும் காலத்தில் தேவனுடைய பிள்ளைகள் ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டுமென்று இயேசு கூறினார். இயேசுவின் மரணத்துக்கு 39 ஆண்டு களுக்குப் பிறகு, கி.பி. 70 இல் எருசலேம் அழிக்கப்பட இருந்தது. |
| அப் 13:42-44 | யூதர்களோடும் புறஜாதிகளோடும் சேர்ந்து ஓய்வுநாளை ஆசரித்தார் பவுல். |
| அப் 16:13 | கிறிஸ்தவ சபை என ஒன்று அங்கே நிறுவப்படாமலி ருந்ததால், பிலிப்பி பட்டணத்திலே விசுவாச கூட்டத்தா ரோடு சேர்ந்து ஆற்றங்கரையில் ஓய்வுநாளை ஆசரித்தார் பவுல். |
| வெளி 1:10 | கர்த்தர் முதல் நூற்றாண்டின் முடிவிலும்கூட ஓய்வுநாளை விசேஷித்த நாளாகவே வைத்திருக்கிறார். வெளி 1:10 இல் கர்த்தருடைய நாள் எந்த நாள் என்பது குறிப்பிடப்பட வில்லை. ஆனால், மத் 12:8; மாற்கு 2:27,28; லூக்கா 6:5 இல் |

கர்த்தருடைய நாள் எது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத் 12:8 — மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்றால் ஓய்வுநாள்தான் கர்த்தருடைய நாளாக இருந்திருக்கும்.

லூக் 23:54-56; 24:1 — இந்தப் பகுதியில் மூன்று நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாய் குறிப்பிடப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கிறிஸ்து மரித்த நாள் | - ஆயத்த நாள்<br>அது வெள்ளிக்கிழமை. |
| கல்லறையில் இயேசு ஓய்ந்திருந்த நாள் | - ஓய்வுநாள்<br>அது சனிக்கிழமை |
| இயேசு உயிர்த்தெழுந்தநாள் | - முதல்நாள்<br>அது ஞாயிற்றுக்கிழமை |

வாரத்தின் ஏழாம் நாளாகிய சனிக்கிழமைதான் ஓய்வுநாள் என்பது தெளிவாக இருக்கிறது.

எபி 13:8 — இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார்.

ஏசா 66:22,23 — புதியவானத்திலும் புதியபூமியிலும் ஒவ்வொரு வாரமும் நாம் ஓய்வுநாளை ஆசரிப்போம்.

## ஓய்வுநாள்பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள்

***கொலோ 2:16,17 இல், 'ஓய்வுநாட்களைக் குறித்து ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக' என்று கூறப்பட் டுள்ளதே. ஓய்வுநாள் ஆசரிப்பு அவசியம்தானா?***

வேதாகமத்தில் தவறாக மக்கள் புரிந்துகொண்ட வசனங்களில் இதுவும் ஒன்று. ஒரு வசனத்திற்குச் சரியான விளக்கம் தெரியாவிட்டால், அதை வைத்து ஒரு சித்தாந்தத்தைத் தீர்மானம் செய்யக்கூடாது என்பது வேத ஆராய்ச்சியில் ஒரு முக்கிய நியதி. ஓய்வுநாளைப் பற்றி வேதாகமம் தெளிவாகப் பேசுகிறது. அது படைப்பில் கொடுக்கப்பட்டது. (ஆதி 2:1-3). இயேசு அதை ஆசரித்தார். (லூக்கா 4:16). பவுல் அதை ஆசரித்தார். (அப் 13:42-44). பரலோகத்தில் நாம் அதை ஆசரிப்போம். (ஏசாயா 66:22,23). இருவித ஓய்வுநாட்களைக் குறித்து வேதாகமம் பேசுகிறது. ஒன்று ஏழாம் நாள் ஓய்வுநாள். அடுத்தது, வருடாந்தர ஓய்வுநாட்கள். ஏழாம் நாள் ஓய்வுநாளானது படைப்பில் ஏற்படுத்தப்பட்டது. அது பத்துக்கற்பனையில் உள்ளது. அன்பும் வல்லமையுமுள்ள சிருஷ்டிகரை அது ஒவ்வொரு வாரமும் நமக்கு நினைவுபடுத்துகிறது. வருடாந்தர ஓய்வு நாளானது இஸ்ரவேலரின் வரலாற்றோடு இணைந்த ஒன்று. கொலோ 2:14,17 இல், 'ஓய்வுநாட்களைக் குறித்து ஒருவனும் உங்களைக் குற்றப் படுத்தாதிருப்பானாக. அவை வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது' என்று கூறப்பட்டுள்ளது. ஏழாம்நாள் ஓய்வுநாளானது வருங்காரியங்களுக்கு நிழல் அல்ல; நடந்து முடிந்த ஒரு காரியத்திற்கு நினைவுச்சின்னம். நிழல்களின் பிரமாணம் எனப்படுவது மிருகபலி சம்பந்தமானது என்று எபி 10:1 கூறுகிறது. கொலோ 2:16,17 இல் சொல்லப்பட்டுள்ள காரியங்கள் அனைத்தும் அதே வரிசையில் எசேக் 45:17 இல் வருகின்றன. அவற்றோடு பலிகள் இணைக்கப்பட்டுக் கூறப்படுவதைக் காணலாம். இஸ்ரவேல் வம்சத்தாருக்காகப் பாவ நிவாரணம் பண்

ணும்படிக்கு இந்தப் பலிகள் இடப்பட்டன. லேவியராகமம் 23ஆம் அதிகாரத்தில் 3 ஆம் வசனமானது ஏழாம்நாள் ஓய்வுநாளைக் கூறுகிறது. மற்ற வசனங்களில் சடங்காச்சார ஓய்வுநாட்கள் பல சொல்லப்படுகின்றன. (வச 5 இல் பஸ்கா ஓய்வு நாள், வச 6 புளிப்பில்லா அப்ப ஓய்வுநாள், வச 10 இல் அசைவாட்டும் கதிர் ஓய்வுநாள், வச 17 இல் முதற்பலன்களின் ஓய்வுநாள், வச 24 இல் எக்காளப் பண்டிகை ஓய்வுநாள், வச 27-32 இல் பாவநிவாரண நாள் ஓய்வுநாள், வச 34-36 இல் கூடாரப்பண்டிகை ஓய்வுநாள்.) இந்த வருடாந்தர ஓய்வுநாட்கள் அனைத்தும் கிறிஸ்துவின் மரணத்தை நிழலாகச் சுட்டிக்காட்டுகின்றன. வரப்போகும் மேசியாவைச் சுட்டிக்காட்டும் நிழலாக அவை ஏற்படுத்தப் பட்டன. கொலோ 2:16,17 இல் உள்ள அதே மொழிநடையை லேவி 23:27 இலும் காணலாம். இந்த வசனம் சடங்காச்சார ஓய்வுநாட்களைச் சுட்டிக்காட்டுகிறது. மேலும், லேவி 23:38 இல், ‘நீங்கள் கர்த்தருடைய ஓய்வுநாட்களிலும் செலுத்துவது தவிர’ என்ற சொற்றொடர் மூலம் ஏழாம் நாள் ஓய்வுநாளுக்கும் மற்ற ஓய்வுநாட்களுக்கும் உள்ள வித்தியாசம் காட்டப்படுகிறது. இயேசு கிறிஸ்து வந்துவிட்டதால், சடங்காச்சாரப் பிரமாணத்தில் உள்ள ஓய்வுநாட்கள் இன்று அவசியமில்லை. ஏழாம் நாள் ஓய்வுநாளோ நம்மைப் படைத்த தேவனைச் சுட்டிக் காட்டுகின்றது. தேவனுக்கும் தங்களுக்கும் உள்ள உறவிற்கு அடையாளமாக விசுவாசிகள் அதைக் கடைப்பிடிப்பார்கள். (வெளி 14:12; எசேக் 20:12,20).

***‘ஒருவன் ஒருநாளை மற்றொருநாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான்; அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன்’ என்று ரோமர் 14:5 கூறுகிறதே. ஒருநாள் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்திவிடப்போகிறது?***

ஒரு வசனம் என்ன சொல்கிறது என்பதைக் கவனிப்பதுபோல, அது என்ன சொல்லவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும். வச 5,6 களில் தொழுகை பற்றியோ, ஓய்வுநாள் பற்றியோ ஒன்றும் சொல்லப்படவில்லை. வெறுமனே ஒருநாளை விசேஷமாக எண்ணுவது பற்றி அவை கூறுகின்றன. அந்த ஒருநாள் என்பது ஓய்வுநாள் என்று கூறுவது சரியல்ல. இப்பகுதியில் வரக்கூடிய காரியங்கள் ஒரு மனிதனின் ‘மன ஐயங்கள்’ என்று அவ்வசனம் கூறுகிறது. படைப்பின் போது தேவன் உண்டாக்கிய ஓய்வுநாள் ஒரு சந்தேகமான காரியமா? நிச்சயமாக இல்லை. இவ்வசனம் எதைப் பற்றி கூறுகிறது என்பதை வச 6 இல் பார்க்கலாம். ‘நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்கிறான்; நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறான். புசிக்கிறவன் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறபடியால், கர்த்தருக்கென்று புசிக்கிறான்; புசியாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று புசியாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான்’. இவ்வசனத்தின்படி, இப்பகுதி கூறுகிற விசேஷித்த நாளுக்கும் புசிப்புக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. அதாவது, இந்த நாள் உபவாசநாளாகும். (லூக்கா 18:12). இது தேவனுடைய கட்டளை அல்ல. மனிதனுடைய தீர்மானத்திற்குரியது என்று பவுல் கூறுகிறார்.

***அப் 20:7 இன்படி சீடர்கள் வாரத்தின் முதல்நாளில் கூடினார்கள் அல்லவா?***

இந்தக் கூட்டத்திற்கான காரணம் அப்பகுதியிலே கூறப்பட்டுள்ளது. அடுத்த நாளில் பவுல் அங்கிருந்து புறப்படுவதாக இருந்ததால் இக்கூட்டம் நடந்தது. அந்த இரவு வாரத்தின் முதல் நாள் இரவு. வேதாகமக் கணக்கில் ஒருநாளில் இரவு முதலிலும் பகல் அதன் பின்னரும் வரும். அதாவது, வாரத்தின் முதல்நாள்

இரவு என்று வேதம் கூறுவது நம் கணக்கின்படி சனிக்கிழமை இரவு ஆகும். வெள்ளி சூரிய மறைவிலிருந்து சனி சூரியமறைவு வரைக்கும் ஓய்வுநாளை ஆசரித்தார்கள். (லேவி 23:32; மாற்கு 1:32; லூக்கா 23:53, 54). எனவே, அது சனிக் கிழமை இரவுக்கூட்டமாகும். அடுத்த பகலில் பவுல் தனது பயணத்தைத் துவக் கினார். அதாவது, ஞாயிற்றுக்கிழமை காலையில் அவர் பயணம் செய்யலானார். ஆசோ வரைக்கும் கால்நடையாகச் சென்று, மித்திலேனே பட்டணத்திற்குக் கப்ப லிலே சென்றார். ஓய்வுநாள் முழுவதும் விசுவாசிகளோடு செலவழித்துவிட்டு, அடுத்த இரவும் அவர்களோடு இருந்துவிட்டு, ஞாயிற்றுக்கிழமை காலையில் பயணம் செய்தார். ஞாயிற்றுக்கிழமையைப் பரிசுத்தநாளாக பவுல் நினைத்திருந் தால் இவ்வாறு செய்திருப்பாரா? பவுல் ஓய்வுநாளை ஆசரிக்கிறவர் என்பதை வசனங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. (அப் 13:42-44; 17:2; 16:12,13; 18:4).

***ஏழாவது நாள் எது என்பதை உறுதியாக நாம் சொல்லமுடியுமா?***

சனிக்கிழமையே ஏழாம்நாள் என்பதை உறுதிப்படுத்த நான்கு வழிகள் உண்டு.

**1. வேதாகமம்**

இயேசு ஆயத்தநாளில் சிலுவையில் அறையப்பட்டார். (லூக்கா 23:54). அடுத்த நாளை ஓய்வுநாளாகச் சீடர்கள் ஆசரித்தார்கள். (லூக்கா 23:55, 56). முதல்நாளில் அவர் உயிர்த்தெழுந்தார். (லூக்கா 24:1: மாற்கு 16:9). இயேசு வெள்ளிக்கிழமை மரித்து, ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தார். அந்த இரண்டு நாட்களுக்கும் இடைப்பட்ட நாள்தான் ஓய்வுநாள் என்று வேதா கமம் கூறுகிறது. அதாவது, சனிக்கிழமையே ஓய்வுநாள்.

**2. மொழி**

உலகமொழிகளில் 140க்கும் மேற்பட்டவற்றில் நாம் இப்போது சனிக்கிழமை என்று அழைக்கிற நாளைச் சுட்டிக்காட்டுகிற வார்த்தையின் பொருள் ஓய்வுநாள் என்பதே.

**3. வானவியல்**

வாராந்தர சுழற்சியானது மாற்றப்படவே இல்லை என்பதை வானியல் நிபுணர்கள் வலியுறுத்துகிறார்கள். காலண்டர்களில் மாற்றம் ஏற்பட்ட போதிலும் வாரநாட்களின் வரிசையில் எந்தவித மாற்றமும் செய்யப்பட வில்லை என்பது அவர்களால் தெளிவுபடுத்தப்படுகிறது.

**4.வரலாறு**

யூதர்கள் யுகநெடுகிலும் ஓய்வுநாளை ஆசரித்து வருகிறார்கள். 4000 ஆண்டுகளாக அவர்கள் சனிக்கிழமையையே ஓய்வுநாளாக ஆசரித்து வருகிறார்கள்.

***உயிர்த்தெழுதலுக்கு மதிப்பு தரும் விதத்தில் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கிறேன். அதில் என்ன தவறு இருக்கிறது? இயேசு ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தார் அல்லவா?***

இயேசு ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்தது உண்மைதான். ஆனால், அதற்காக ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கவேண்டும் என்று அவர் எங்கும் சொல்லவில்லை. திருவிருந்து ஆராதனை அவர் மரணத்தையும், ஞானஸ்நானம் அவரது உயிர்த்தெழுதலையும் சுட்டிக்காட்டுகின்றன. (1கொரி 11:24,26; ரோமர் 6:1-6). ரோமர்களுடைய சூரியவணக்கத்தை முக்கியப்படுத்திக் காட்டுவதற்

காகச் செய்யப்பட்ட பண்டிகையிலிருந்து கிறிஸ்தவ சபைக்குள் நுழைந்த ஞாயிறு ஆசரிப்பு அல்ல, ஆவியானவரால் நாம் பாவத்திலிருந்து புதிய வாழ்வுக்கு உயிருடன் எழும்புவதைச் சுட்டிக்காட்டும் ஞானஸ்நானமே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைச் சுட்டிக்காட்டுகிற சரியான அடையாளம் ஆகும். இறந்துபோன பழைய மனிதனைத் தண்ணீராகிய கல்லறையில் அடக்கம்செய்தபின், அவன் புதிய மனிதனாக வெளிவருவதே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைச் சுட்டிக்காட்டுகிற அடையாளமாகும்.

**ஏழு நாளில் ஒரு நாளை ஆசரித்தால் போதாதா? ஓய்வுநாளை ஏன் அதிகமாக முக்கியப்படுத்துகிறீர்கள்?**

பிரச்சனை வெறும் நாட்களைப் பற்றியது மட்டுமல்ல. யார் சொல்வதற்கு தாம் கீழ்ப்படியப்போகிறோம் என்பதே பிரச்சனை. சாத்தான் வஞ்சகமாக தேவனுடைய பிரமாணத்தை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டான். (தானி 7:25). அவன் சத்தியத்தைத் தரையிலே தள்ளிவிட்டான். (தானி 8:12). தேவனுடைய சத்தியமாகிய மதிலில் ஒரு திறப்பை உண்டாக்கிவிட்டான். ஓய்வுநாளை ஆசரிப்பதன் மூலமாக இந்தத் திறப்பை அடைக்குமாறு தேவன் நம்மை அழைக்கிறார். (ஏசாயா 58:12,13). மனிதருக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது. (அப் 5:29). ஏழாம்நாளை ஆசரிக்கிறோம் என்றால், அதைச் செய்யும்படி சொன்ன தேவனுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்று அர்த்தம். (யாத் 20:8-11). வேறு ஒரு நாளை ஆசரிக்கிறோம் என்றால், அந்த நாளை ஆசரிக்கச் சொன்னவனுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்கிறோம் என்று பொருள். எனவே, நாம் யாருக்கு அடிமைகள்-தேவனுக்கா, மனிதனுக்கா? இதில்தான் பிரச்சனை. (ரோமர் 6:16). என்னுடைய பிறந்த நாளுக்கு முந்தின நாளிலோ அடுத்த நாளிலோ பிறந்தநாள் கொண்டாட்டங்களை நான் வைத்துக்கொள்வதினால் அந்த நாள் என்னுடைய பிறந்தநாளாக ஆகிவிடாது. ஏழாம்நாளிலே உலகத்தின் பிறந்தநாளைக் கொண்டாடச் சொன்னார் ஆண்டவர். நமது அன்பின் தேவனுடைய கட்டளை அது. அவர் சொன்னபடிதான் செய்யமுடியும்.

**கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். யாத்திராகமம் 20:11.**

**மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 66:23.**

# 14. முதல்நாள் வசனங்கள்

| | |
|---|---|
| யாத் 31:17,18 | தேவனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் ஓய்வுநாள் என்றென்றைக்கும் அடையாளமாக இருக்கிறது. |
| எசேக் 20:12 | பரிசுத்தமாகுதலின் அடையாளமாக ஓய்வுநாள் இருக்கிறது. |
| எபி 4:4-6,9 | தங்கள் இரட்சிப்பிற்கு இயேசுவின்மேல் நம்பிக்கை வைப்பவர்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். அந்த இளைப்பாறுதலுக்கு ஓய்வுநாள் அடையாளம். |
| லூக் 23:56 | இயேசுவுக்கு நெருக்கமான சீடர்கள் அவரது சரீரத் துக்கு நறுமணமூட்டும் வேலையை ஓய்வுநாளில் செய்யவில்லை. அதாவது, ஓய்வுநாள் நிச்சயமாகவே சிலுவையோடு முடிந்துபோகவில்லை. சிலுவைக்குப் பிறகும் சீடர்களால் ஓய்வுநாள் ஆசரிக்கப்பட்டது. |
| லூக் 24:1 | இயேசுவின் சரீரத்திற்கு நறுமணம் தோய்விக்க, சீடர்கள் முதல்நாளில் கல்லறைக்குச் சென்றார்கள். |
| மத் 28:1 | பெண்கள் முதல்நாளில் கல்லறைக்கு வந்தார்கள். |
| மாற்கு 16:2 | பெண்கள் முதல்நாளில் கல்லறைக்கு வந்தார்கள். |
| மாற்கு 16:9 | முதல்நாளில் இயேசு உயிர்த்தெழுந்தார். |
| யோவா 20:1 | அதிக இருட்டோடே, மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்தாள். |

குறிப்பு: மேற்கூறிய வசனங்கள் மூலம் ஞாயிறு பரிசுத்தமானது என்று சொல்லமுடியாது. ஏனெனில், இயேசு உயிர்த்தெழுந்து விட்டாரென்பதுகூட அவர்களுக்குத் தெரியாது.

| | |
|---|---|
| ரோமர் 6:3-5 | முழுக்கு ஞானஸ்நானமே உயிர்த்தெழுதலுக்கான அடையாளமாகும். ஞாயிறு ஆசரிப்பு அன்று. |
| அப் 20:7 | சனிக்கிழமை இரவுதான் வாரத்தில் முதல்நாளின் இரவு ஆகும். அதில் நடுஇரவுவரை பவுல் பிரசங்கித்தார். அடுத்த காலையில், அதாவது ஞாயிறுகாலையில் அவர் புறப் பட்டு, கால்நடையாக நடந்து துரோவா சென்றார். ஞாயிற்றுக்கிழமையைப் பவுல் ஆசரித்திருந்தால், அவர் அவ்வாறு செய்திருப்பாரா? |
| யோவா 20:19 | வாரத்தின் முதல் நாளிலே சீஷர்கள் கூடியிருந்தது ஆரா தனைக்காக அன்று. யூதர்களுக்குப் பயந்ததினாலேயே அவ்வாறு கூடியிருந்தார்கள். |
| 1கொரி 16:2 | கணக்குகளைச் சரிபார்த்தல் மூலமொழியில் சுட்டிக்காட்டப் படுகிறது. ஓய்வுநாள் முடிந்துவிட்டது. அது முதல்நாள். வீட்டிலிருந்து கணக்கு வழக்குகளைச் சரிபார்ப்பதற்குச் சரியான நேரம். அப்போது, தர்ம காரியத்திற்காக கொஞ்சம் |

| | |
|---|---|
| | பணத்தை வீட்டில் ஒதுக்கி வைக்கும்படி பவுல் கூறுகிறார். ஆலயத்தில் அல்ல, வீட் டில் ஒதுக்கிவைத்தல். |
| ஆதி 2:1-3 | சிருஷ்டிப்பின்போது தேவன் ஏழாம் நாளாகிய ஓய்வுநாளை ஆசீர்வதித்தார். |
| ரோமர் 13:10 | தேவன் மேலுள்ள நம் அன்பினால் நாம் அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களாக இருக்கிறோம். |
| மத் 5:17 | கற்பனைகளை அழிக்க அல்ல; நிறைவேற்றவே இயேசு வந்தார். |
| ரோமர் 8:4 | நாம் அவரிடத்தில் வரும்போது, கற்பனைகளைக் கைக் கொள்ளும் பெலத்தை ஆவியானவர் மூலமாக அவர் நமக்குத் தருகிறார். |

**ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார். யாத்திராகமம் 31:17.**

**நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன். எசேக்கியேல் 20:12.**

**தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். ஆதியாகமம் 1:3.**

**அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. ரோமர் 13:10.**

# 15. தேவனுடைய பிரமாணத்தை மாற்ற முயற்சி

| | |
|---|---|
| யோவா 17:17 | உம்முடைய வசனம் சத்தியமாயிருக்கிறது. |
| நீதி 23:23 | சத்தியத்தை வாங்கு; அதை விற்காதே. |
| எபி 13:8 | இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். |
| சங் 89:34 | என் உடன்படிக்கையை (பிரமாணம்) மீறமாட்டேன். |
| யாத் 31:18 | கற்பனைகள் தேவ விரலினால் எழுதப்பட்டவைகள். |
| மத் 5:17, 18 | இயேசு தேவனுடைய பிரமாணத்தை மாற்றுவதற்கு அல்ல; நிறைவேற்றுகிறதற்கே வந்தார். |
| ஆதி 2:1-3 | ஏதேனில் ஓய்வுநாள் பிரித்தெடுக்கப்பட்டு, பரிசுத்தமாக் கப்பட்டது, ஆசீர்வதிக்கப்பட்டது. |
| லூக் 4:16 | இயேசு ஓய்வுநாளை ஆசரித்தார். |
| அப் 13:42-44 | பவுல் ஓய்வுநாளை ஆசரித்தார். |
| அப் 20:28-31 | கிறிஸ்தவர்களில் சிலர் எழும்பி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று முன்னறிவிக்கப்பட்டது. |
| தானி 8:12 | சத்தியம் தரையிலே தள்ளப்பட்டது. |
| தானி 7:25 | தேவனுடைய பிரமாணத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்தார்கள். |
| ஏசாயா 8:16 | தேவனுடைய பிரமாணத்தை முத்திரையிடு. |
| எசேக் 20:8-11 | ஒரு முத்திரையில் அந்த முத்திரைக்கு உரியவரின் பெயர், பதவி, ஆளுகைக்குட்பட்ட பகுதி ஆகிய மூன்றும் இருக் கும். ஓய்வுநாள் கற்பனையில் தேவனுடைய நாமம், அவருடைய பதவி, அவருடைய எல்கை ஆகிய மூன்றும் உள்ளன. |
| வெளி 7:1-3 | உலக முடிவுக்கு முன்பாக், தேவனுடைய பிள்ளைகள் ஓய்வுநாள் முத்திரையைப் பெற்றுக்கொள்ளுவார்கள். |
| வெளி 14:7, 12 | சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளும்படியும் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்படியும் தேவனுடைய கடைசிச் செய்தி நம்மை அழைக்கிறது. |

# 16. ஓய்வுநாளை ஆசரித்தல்

| | |
|---|---|
| ஏசா 56:2 | ஓய்வுநாளை ஆசரிப்பவர்களுக்குத் தேவன் சிறப்பு ஆசீர்வாதத்தைத் தருகிறார். |
| உபா 28:1,2,15 | தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தேவன் ஆசீர்வாதத்தை அளிக்கிறார். |
| யாத் 20:8-11 | ஓய்வுநாள் மற்ற எல்லாவற்றினின்றும் பிரித்து எடுக்கப் பட்ட நாளாக இருக்கிறது. |
| லேவி 23:3 | ஓய்வுநாள் 'பரிசுத்த சபை கூடுவதற்கான' நாள் என்று அழைக்கப்படுகிறது. அதாவது, அது ஆராதனைக்கான ஒரு சிறப்பான நாள். |
| லூக் 4:16 | பவுல் செய்ததுபோன்றே இயேசுவும் ஒவ்வொரு ஓய்வு நாளிலும் ஆராதனை செய்தார். (அப் 18:4). |
| லேவி 23:32 | வெள்ளிக்கிழமை சூரியன் மறையும்போது ஓய்வுநாள் துவங்குகிறது. சனிக்கிழமை சூரியன் மறையும்போது ஓய்வுநாள் முடிவடைகிறது. |
| யாத் 20:8-10 | ஓய்வுநாள் உலகசம்பந்தமான வேலைகளுக்குரிய நாள் அன்று. |
| ஏசா 58:13,14 | ஓய்வுநாள் கர்த்தருக்குள் நாம் களிகூரும் நாளாயிருக் கிறது. நம் சொந்த அலுவல்களில் நாம் மகிழ்ச்சியடையும் நாள் அல்ல அது. பந்தய விளையாட்டுகள், வேறே உலக விளையாட்டுகள், பொழுதுபோக்குகள் போன் றவை பரி சுத்த ஓய்வுநாளில் செய்யப்படக்கூடாது. |
| நெகே 13:15-22 | வாங்குதல், விற்குதல் போன்றவைகளை ஓய்வுநாளில் செய்வதால் ஓய்வுநாள் கறைப்படுத்தப்படுகிறது. வழக் கமான உலகக் காரியங்களை ஓய்வுநாளில் செய்வதால் ஓய்வுநாள் அற்பமாக்கப்படுகிறது. |
| மத் 12:11-13 | ஓய்வுநாளில் நன்மைசெய்தால் மகிழ்ச்சி ஏற்படும். இதைத் தனது வாழ்க்கையின் வாயிலாக இயேசு தெளிவாக்கினார். |
| மாற்கு 2:23-28 | தம் சீடர்களுடைய சரீரப்பிரகாரமான தேவைகளை இயேசு ஓய்வுநாளிலும் நிறைவேற்றினார். நம்முடைய தேவை களை முன்னேற்பாடு செய்கிறவர் தேவனே என்பதற்கு ஓய்வுநாள் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கிறது. |
| யாத் 16:28-30 | ஆயத்தநாளான வெள்ளிக்கிழமையன்று மன்னாவைச் சேகரிக்க ஏற்பாடு செய்யாமல், அலட்சியமாயிருந்த இஸ்ரவேலரில் சிலர் ஓய்வுநாளில் வேலைசெய்ய முயற் சித்தபோது தேவன் அவர்களைப் பகிரங்கமாகக் கண்டித்தார். |
| மத் 11:28-30 | இயேசுவில் இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ள வருமாறு |

தெய்வீக அழைப்பு நம்மைக் கூப்பிடுகிறது. நமது ஒப்படைத்தலைத் தேவனுடன் புதுப்பித்துக் கொள்ள ஒரு வாய்ப்பு. ஒவ்வொரு ஓய்வுநாளிலும் நமக்கு இது கிடைக்கிறது.

**ஓய்வுநாளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடி ஆசரித்து, ஒரு பொல்லாப்பையும் செய்யாதபடி தன் கையைக் காத்துக்கொண்டிருக்கிற மனுபுத்திரனும் பாக்கியவான். ஏசாயா 56:2.**

**என் பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப்பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால்,**
**அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய், பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று. ஏசாயா 58:13,14.**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் ... என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். மத்தேயு 11:28-30.**

# 17. விசுவாசம்

| | |
|---|---|
| எபி 11:6 | விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். |
| ரோமர் 12:3 | ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனுக்குரிய விசுவாச அளவைத் தேவன் பகிர்ந்து கொடுக்கிறார். |
| மாற்கு 11:22-24 | நாம் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால், மலை போன்ற துன்பமும் நீங்கிப்போம். |
| ரோமர் 10:17 | தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கும்போது நம் விசு வாசம் பெருகும். |
| எபி 11:1 | நம்முடைய முழு கிறிஸ்தவ அனுபவத்தையும் தாங்கிப் பிடிப்பது விசுவாசமே. |
| எபி 4:2 | நம்முடைய வாழ்வில் நாம் தேவனுடைய வார்த்தைகளைக் கடைப்பிடிக்கும்போது நாம் பயனடைகிறோம். |
| 1 யோவா 5:14 | தேவனை நம்பி, அவருடைய சித்தப்படி செய்ய நம்மை வழிநடத்துவது நம் விசுவாசமே. |
| லூக் 5:20 | விசுவாசமானது, செயல்கள் மூலமாக தெளிவாய் வெளிப் படுகிறது. |
| மத் 17:20 | சிறிய விசுவாசமும் கடுகைப் போல வளரக்கூடும். |
| எபே 2:8 | நாம் கிருபையினாலே விசுவாசத்தின் மூலமாக இரட்சிக் கப்பட்டிருக்கிறோம். |
| ரோமர் 1:7 | விசுவாசமுள்ள கீழ்ப்படிதலுக்குக் கிருபை வழிநடத்தும். |
| கலா 2:20 | கிறிஸ்தவர்கள் விசுவாசத்தால் வாழுகிறார்கள். |
| எபி 6:12 | விசுவாசத்தின் மூலமாக நாம் தேவனுடைய வாக்குத்தத் தங்களைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறோம். |
| யாக் 2:17 | கிரியைகள் இல்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது. |
| 1 யோவா 5:4 | விசுவாசத்தின் மூலமாக நாம் உலகத்தை ஜெயிக்கிறோம். |

**தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். 1யோவான் 5:4.**

**விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. எபி 11:1.**

# 18. ஆரோக்கியம்

| | |
|---|---|
| 3 யோவா 1:2 | நாம் வளம்பெற வாழ்ந்து ஆரோக்யமாக இருப்பதையே தேவன் விரும்புகிறார். |
| 1தெச 5:23 | ஆன்மிகக் காரியங்களைப் போன்றே நம் உடலும் உள்ளமும் உணர்வுகளும் பரிசுத்தமாக்கப்பட வேண்டும். |
| ரோமர் 12:1,2 | உங்கள் சரீரங்களைத் தேவனுக்குப் பிரியமான ஜீவபலி யாக ஒப்புக்கொடுங்கள். |
| 1கொரி 6:19,20 | உங்கள் சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது. |
| 1கொரி 10:31 | நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் அதைத் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யுங்கள். |
| நீதி 20:1 | திராட்சரசம் பரியாசம் செய்யும்; மதுபானம் அமளிபண்ணும். |
| நீதி 23:29-32 | புளித்த மதுபானத்தைக் குடிக்காதே. அது துக்கத்தையும் துயரத்தையும் சச்சரவையும் வரப்பண்ணும். அது நம்மை வஞ்சிக்கும். தீர்மானம் செய்வதில் சிரமத்தை உண்டாக்கும். |
| ஏசா 5:11 | மதுவினால் தங்களை மயங்கச் செய்பவர்களுக்கு வேத னைகள் உண்டு. |
| நீதி 4:17 | மிதமிஞ்சிய குடியானது வன்முறைக்கு வழிநடத்தும். |
| நீதி 31:4,5 | நாம் மதுபானம் குடித்தால் தீர்மானம் செய்வதில் குழப்பம் ஏற்படும். எனவே, இராஜாக்களுக்கும் பிரபுக்களுக்கும் மதுபானம் ஏற்றதல்ல. |
| வெளி 5:10 | தேவனுக்கு முன்பாக நாம் ராஜாக்களும் ஆசாரியர்களு மாக இருக்கிறோம். எனவே, நாம் தெளிவான சிந்தை யுடையவர்களாயிருக்க வேண்டும். |
| ஆதி 1:29 | காய்கறி உணவு வகைகளையே தேவன் ஆதியில் ஆகார மாகத் தந்தார். |
| ஆதி 7:2 | சுத்தமான, சுத்தமற்ற மிருகங்களுக்கான வேறுபாட்டை நோவா அறிந்திருந்தார். ஜலப்பிரளயத்திற்குப் பின்னர் தேவன் சுத்தமான மிருகங்களைச் சாப்பிட அனுமதி கொடுக்க இருந்ததால், சுத்தமான மிருகங்களில் ஏழு ஜோடிகளும், சுத்தமற்ற மிருகங்களில் இரண்டு ஜோடி களுமாக பேழைக்குள் ஏற்றச்சொன்னார். |
| லேவி 11:1-12 | விரிகுளம்புள்ளதாயிருந்து அசைபோடுகிற மிருகங்கள் சுத்த மானவை. பன்றி போன்ற சுத்தமற்ற மிருகங்கள் மேலே குறிப்பிட்டுள்ள பண்புகளைப் பெற்றிராது. சுத்தமான நீர்வாழ் பிராணிகளுக்குச் சிறகுகளும் செதில்களும் உள்ளவைகளா யிருக்க வேண்டும். |

| | |
|---|---|
| ஏசா 66:15-17 | தேவனுடைய உணவுத் திட்டத்திற்கு விரோதமாகக் கலகம் செய்பவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க மாட்டார்கள். |
| ஏசா 65:1-5 | அசுத்த உணவுகளை உண்ணுவதும் விக்கிரகாராதனையும் தொடர்புடையவை. |
| அப் 10:9-16 | பேதுருவின் துப்பட்டியில் எலிகளும் முதலைகளும் வேறு அசுத்த மிருகங்களும் நிறைந்து இருந்தன. 'பேதுருவே, எழுந்து புசி' என தேவன் சொன்னார். தேவன் என்ன சொன்னார்? பேதுருவுக்கு உடனே ஒன்றும் புரியவில்லை என்பதை வசனம் 17 காட்டுகிறது. |
| அப் 10:28 | தரிசனமானது உணவு பற்றியதன்று; சுத்தமற்றவர்கள் என்று யூதர்கள் நினைத்துக்கொண்ட புறஜாதிகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதைப் பற்றியது.. இந்தத் தரிசனத்தில் தேவன் இனசம்பந்தமான தடைகளை முறித்துப்போட்டார். புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு இடையூறாக இருந்த எல்லாத் தடைகளும் சிலுவை மூலமாக அகற்றப்பட்டுவிட்டன என்பதே இத்தரிசனத்தில் காட்டப்படும் உண்மைப்பொருளாகும். |
| பிலி 4:13 | சரீரப்பிரகாரமானப் பழக்கவழக்கங்களை வெற்றிபெறத் தேவையான ஆவிக்குரிய பெலனை இயேசு அளிக்கிறார். |
| எபி 4: 15, 16 | இயேசு நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார். அவர் நாற்பது நாட்கள் உபவாசமிருந்து சோதனையை மேற்கொண்டார். ஆகையால், நாமும் அவருடைய வல்லமையினால் சோதனையை மேற்கொள்ளமுடியும். |

## உடல்நலம்பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள்

**'புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாது' என்று இயேசு சொன்னாரே. ஏன் உடல்நலத்தை அதிகம் வலியுறுத்துகிறீர்கள்? அது அவசியம்தானா?**

மாற்கு 7:18-20 இல் பேசப்படும் பிரச்சினைகள் என்ன என்பதை யோசியுங்கள். அதற்கு முன் வேறு சில வசனங்களைப் பார்த்துவிட்டு, இந்தப் பகுதிக்கு வருவோம். 'உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல என்றும் அறியீர்களா? உங்கள் சரீரத்தினால் தேவனை மகிமைப்படுத்துங்கள்' (1கொரி 6:19,20). 'ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்' (1கொரி 3:17). 'நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்' (1கொரி 10:31). வேத வசனங்கள் ஒன்றோடொன்று முரண்படா. 'நாம் என்ன சாப்பிடுகிறோம்?' என்று அக்கறையோடு இருக்கவேண்டுமென்று ஓரிடத்திலும், அதைப்பற்றி அக்கறைகாட்ட வேண்டியதில்லை என்று இன்னொரு இடத்திலும் வேதாகமம் சொல்லாது. இப்போது மாற்கு 7 ஐப் பார்ப்

போம். சடங்காச்சாரச் சுத்தத்தைப்பற்றிய கண்டிப்பான விதிகளைப் பரிசேயர் போதித்தார்கள். பிற இனத்தான் ஒருவனைச் சந்தையில் தொட்டுவிட்டால்கூட தீட்டு என்றார்கள். சமையல் பாத்திரங்களை பிற இனத்தவர்கள் யாராவது தொட்டிருப்பார்கள் என்பதற்காக அவற்றைச் சுத்தமாகக் கழுவவேண்டும் என்பது அவர்கள் கட்டளை. (மாற்கு 7:1-5). மாற்கு 7 இல் சொல்லப்பட்டிருப்பது லேவியராகம உடல்நல விதிகள் அல்ல, யூத மூப்பர்களின் தீட்டுபற்றிய பாரம்பரியமாகும். (மாற்கு 7:5). பிற இனத்தவரைத் தொட்ட கையைக் கழுவாமல் சாப்பிட்டால் அவர்களுடைய தீட்டு இவர்களுக்குள்ளும் போய்விடும் என்பது பரிசேயரின் நம்பிக்கை. என்ன சாப்பிடுகிறோம் என்பது இங்கே பிரச்சனையில்லை; எப்படிச் சாப்பிடுகிறோம் என்பதுதான் பிரச்சனை. தேவன்தாமே ஏற்படுத்திய உடல்நல விதிகளை இயேசு இங்கே ஒதுக்கவில்லை. பிறஇனத்தவரைத் தொடுவதால் தாங்கள் தீட்டுப்படுகிறோம் எனும் யூதருடைய நினைப்பைத்தான் இயேசு தவறு என்று கூறினார். 'புறம்பேயிருந்து மனுஷனுக் குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாதென்று நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா? மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்' என்று இயேசு கூறினார். நாங்கள் தனித்தன்மை உள்ளவர்கள் எனும் தங்கள் பாரம்பரியத்தை நிலைநாட்டுவதற்காக தேவ கற்பனையை யூதர்கள் அசட்டை செய்தார்கள். (மாற்கு 7:9). எந்த உணவும் தீட்டானது அல்ல. அதாவது, எந்த உணவிலும் பாவம் இல்லை. வெளியே இருந்து அல்ல, உள்ளே இருந்தே பாவம் புறப்படுகிறது. இங்கே அசுத்த உணவுகளைப்பற்றி இயேசு பேசவில்லை. மாற்கு 7 ஆம் அதிகாரத்தில் அசுத்த உணவைச் சாப்பிடுவதுபற்றி அல்ல, பிற இனத்தவர் தொட்ட உணவைச் சாப்பிடுவது குறித்துப் பேசப்பட்டுள்ளது.

***'போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது; என்னத்தினாலெனில், புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை' என்று பவுல் சொல்லியிருக்கிறார். 1கொரி 8:8. 'கடையில் விற்கப்படுகிற எதையும் வாங்கிப்புசியுங்கள்; மனச்சாட்சியினிமித்தம் நீங்கள் ஒன்றையும் விசாரிக்கவேண்டியதில்லை' என்றும் சொல்லியிருக்கிறாரே. 1கொரி 10:25.***

1கொரி 8:1 இல் 'விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக் குறித்த விஷயம்' என்று துவங்குகிறார். மீண்டும் வசனம் 4 இல், 'விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிற விஷயம்' என்கிறார். இதைக் குறித்த விவாதத்தின் முடிவிலும் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது. என்று இதைப் பற்றிக் கூறுகிறார். 1கொரி 10:28. அக்காலத்தில் அஞ்ஞானக் கோவில்களில் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட இறைச்சியின் ஒரு பகுதியைக் கடைகளிலே விற்பனை செய்தார்கள். அதனால், கட்டுப்பாடான யூதர்கள் பலர் சைவ உணவிற்கு மாறிவிட்டார்கள். (ரோமர் 14:2-4). எனவே, 'விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட இறைச்சியைப் புசிக்கலாமா?' என்பதே இங்கே பேசப்படும் பிரச்சனை. இதைச் சாப்பிடுகிறவர் விக்கிரகாராதனை செய்பவராக எண்ணப்படுவாரா? பவுலின் பதில் இதுதான். 'விக்கிரகமானது ஒன்றுமில்லை' 1கொரி 8:4. 'புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை' 8:8. ஆனால், நீங்கள் புசிப்பது பெலவீனமான விசுவாசமுள்ள ஒரு விசுவாசிக்கு இடையூறாக இருக்குமானால், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட இறைச்சியைப் புசிக்காதீர்கள். 8:11-13. இங்கே அசுத்த உணவு அல்ல, விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைப் பற்றி பேசுகிறார். பன்றிகளை அல்ல, பாவிகளைப் பரிசுத்தப்படுத்தவே இயேசு வந்தார். பழைய ஏற்பாட்டுக்

காலத்தில் உடலைக் கெடுக்கக் கூடியதாக இருந்த எல்லா வகை இறைச்சிகளும் இப்போதும் உடலைக் கெடுக்கக்கூடியவையே. நன்மையானது எதையும் தேவன் நமக்குத் தராதிரார். சங் 84:11. அசுத்த மிருகங்கள் நன்மையானவை அல்ல.

**பழைய ஏற்பாட்டின் உடல்நல விதிகள் எல்லாம் சடங்காச்சாரங்கள்தானே? அவற்றை இயேசு சிலுவையிலே நீக்கிவிட்டாரே.**

மனுக்குலத்தை மீட்பதற்காக இயேசு தம் உயிரை விட்டார். உடலுக்கு நலம் தரும் உணவிலோ, கெடுக்கும் உணவிலோ எந்த மாற்றத்தையும் அவர் மரணம் ஏற்படுத்தவில்லை. சிலுவைக்குமுன் மலம் தின்ற பன்றி, சிலுவைக்குப்பிறகும் மலம் தின்றுகொண்டுதான் இருக்கிறது. அநேகர் நினைப்பதுபோல, வேதாகமத்தின் உடல்நல விதிகள் அனைத்தும் யூதருக்கு மாத்திரம் சொந்தமானவை அல்ல. பேழைக்குள் நோவா பிரவேசித்தபோது, சுத்தமிருகங்களில் ஏழு ஜோடிகளும் அசுத்தமிருகங்களில் ஒரு ஜோடியும் அழைத்துச் செல்லும்படி தேவன் கட்டளையிட்டிருந்தார். வெள்ளத்திற்குப் பிறகு சைவ உணவில் தட்டுப்பாடு இருக்குமாதலால், சுத்த மிருகங்களைச் சாப்பிடவேண்டியதிருக்கும். சுத்தமிருகங்களையும் அசுத்தமிருகங்களையும் கண்டுபிடிக்கும்விதத்தை மனிதர் அனைவருக்கும் ஆண்டவர் லேவி 11 இல் கூறியிருக்கிறார். விக்கிரகத்தை வணங்குவது, பன்றி இறைச்சி சாப்பிடுவது போன்றவற்றின் மூலமாகத் தேவனை எதிர்த்து நின்ற மக்களைக் குறித்து ஏசா 65:2-5 விவரிக்கிறது. அவர்கள் அழிக்கப்படுவார்கள் என்று ஏசாயா கூறுகிறார். எது நல்லது என்று தேவனுக்குத் தெரியும். நாம் நலமாக வாழவேண்டுமென்று ஆசைப்படுகிறார். எனவே, நம் உடலைக் கெடுக்கும் உணவுகளைத் தவிர்க்கும்படி தேவன் நம்மை அழைக்கிறார்.

**'நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; பசும் பூண்டுகளை உங்களுக்குத் தந்ததுபோல, அவைகள் எல்லாவற்றையும் உங் களுக்குத் தந்தேன்' என்று நோவாவிடம் தேவன் சொன்னதால், நாம் விரும்பும் எதையும் சாப்பிடலாம் அல்லவா? ஆதி 9:3.**

'பாம்புகளையும் எலிகளையும் முதலைகளையும் பல்லிகளையும் புழுக்களையும் கரப்பான்களையும் சாப்பிடுங்கள்' என்று தேவன் இங்கே சொல்லியிருக்கிறாரா? நிச்சயமாக இல்லை. சுத்த உணவிற்கும் அசுத்த உணவிற்கும் உள்ள வேறுபாட்டை நோவா ஏற்கனவே அறிந்திருந்தார். ஆதி 7:2. 'நோவா, நீ இப்போது மாமிச உணவு சாப்பிடலாம்' என்று தேவன் இங்கே அனுமதிக்கிறார் அவ்வளவுதான். அசுத்த மாமிசத்தைச் சாப்பிடக்கூடாதென்று பின்னர் லேவி 11 இலும் உபா 16 இலும் சொல்லியிருப்பதன் மூலம் இது தெளிவாகிறது. தேவன் தம் ஒழுக்கநியதிகளை மாற்றுவது இல்லை. அவர் மாறாதவர். சங் 89:34; மல்கியா 3:6. மோசேயிடம், 'செய்யாதே' என்று சொன்ன காரியத்தை நோவாவிடம் 'செய்' என்று சொல்லியிருப்பாரா? உடல்நல விதிகளைப் போன்ற எல்லாப் பிரமாணங்களையும் நம்முடைய நன்மைக்காகவே தேவன் தந்தார். உடல்நல விதிகளால் வியாதி குறையும்; மகிழ்ச்சி நிறையும். யாத் 15:26. வேதாகமத்தின் உடல் நல விதிகளைக் கடைப்பிடித்தால், இதய வியாதியையும் புற்றுநோயையும் குறைக்கலாம் என்று அறிவியல் அறிஞர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். தேவனுடைய வழிகளே நலமானவை.

**போஜனபதார்த்தங்களில் சிலவற்றை விலக்கவேண்டுமென்று சொல்பவர்கள் பொய்யர்கள் என்று 1தீமோ 4:3 கூறுகிறது.**

கடைசி நாட்களில் வேதாகம விசுவாசத்திலிருந்து விலகும் ஒரு கூட்டத்

தைப்பற்றி இப்பகுதி பேசுகிறது. இவர்கள் இரண்டு தவறுகளைச் செய்கிறார்கள். ஒன்று, இவர்கள் திருமணம் செய்யக்கூடாது என்பார்கள். இரண்டு, ஸ்தோத்திரத்தோடே சாப்பிடுவதற்காக தேவன் படைத்த போஜனபதார்த்தங்களில் சிலவற்றை விலக்கும்படி கூறுவார்கள். இதில் உள்ள வார்த்தையானது கிரேக்கப் பழைய ஏற்பாட்டின் ஆதி 1:29 இல் வருகிறது. தேவன், 'இதோ, பூமியின்மேல் எங்கும் விதைதரும் சகலவிதப் பூண்டுகளையும், விதைதரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது' என்றார். எல்லாக் காலங்களிலும் சாமியார்களில் சிலர், 'உலகம் தீமையானது' என்று கூறிவருகிறார்கள். திருமணமும் உணவும் தேவனால் உண்டாக்கப்பட்டவை. மனித இனத்திற்காக தேவன் உண்டாக்கிய நல்ல திட்டங்கள் இவை. தேவன் நம்முடைய நன்மைக்காக உண்டாக்கியவற்றை நாம் ஒதுக்கக்கூடாது. 1தீமோ 4:4,5. அவற்றை ஸ்தோத்திரத்தோடே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். 'சரீர இன்பங்கள் அனைத்தும் தீமையானவை என்று கூறும் வெறித்தனமான கொள்கை தவறானது' என்று பவுல் இங்கே கூறுகிறார். தேவனுடைய படைப்பு நல்லதே. அவர் உணவுக்காகப் படைத்தவை நல்லவையே. சுத்தஉணவு-அசுத்த உணவு பற்றியது அல்ல, இங்கே உள்ள பிரச்சனை, தேவன் உண்டாக்கிய சரீர இன்பங்களை நாம் அனுபவிக்கலாமா, கூடாதா என்பதே பிரச்சனை.

**தேவன் நமது ஆவிக்குரிய வாழ்க்கையில் அக்கறை உடையவராய் இருக்கிறார். நாம் எதைச் சாப்பிடுகிறோம், குடிக்கிறோம் என்பது முக்கியமானதா?**

நம் சரீரத்தைப் பாதிக்கிற காரியங்கள் நம் மனதையும் ஆன்மிகத்தையும் பாதிக்கின்றன. நம் மூளைக்குள் செல்கிற இரத்தமானது நம் சரீர பழக்கவழக்கங்களால் பாதிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட தரக்குறைவான இரத்தம் நம் மூளைக்குள் சென்றால் ஆன்மிகச் சத்தியங்களை விளங்கிக்கொள்ளும் தன்மை பாதிக்கப்படுகிறது. பவுல் சொல்வதைப் பாருங்கள். 'உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக' 1தெச 5:23. 'நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும்' ரோமர் 12:1. யோவானும், 'உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்' என்கிறார். 3யோவான் 2. நாம் எதைச் சாப்பிடுகிறோம் என்பதில் நாம் அக்கறை உடையவர்களாய் இருக்கவேண்டும் என்றே தேவனுடைய வார்த்தை கூறுகிறது.

**'உன் வயிற்றிற்காகக் கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்' என்று 1தீமோ 5:23 இல் பவுல் எதைப்பற்றிக் கூறுகிறார்?**

'தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்' என்கிறார் பவுல். 'புளித்த திராட்சரசத்தைக் குடிக்கச் சொன்னாரா? அல்லது, புளிக்காத திராட்சரசத்தைக் குடிக்கச் சொன்னாரா?' என்பது இங்கே முக்கியம் இல்லை. 'எதற்காகக் குடிக்கும்படி சொன்னார்?' என்பதையே நாம் கவனிக்க வேண்டும். தீமோத்தேயுவுக்கு இருந்த உடல்நலக் கோளாறுகளுக்காகவே திராட்சரசம் குடிக்கும்படி சொன்னார். கொஞ்சம் மதுபானம் சேர்த்துக்கொள்ளலாம் என்று இங்கே பவுல் சொல்கிறாரா? மதுபானத்தைப்பற்றி வேதாகமம் சொல்வதைக் கவனிக்கவேண்டும். நீதி 23:31 பின்வருமாறு கூறுகிறது: 'மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது,

நீ அதைப் பாராதே’ நீதி 23:29 இல், ‘மதுபானத்தால் வேதனையும் துக்கமும் சண்டைகளும் புலம்பலும் காரணமில்லாத காயங்களும் இரத்தங்கலங்கின கண்களும் உண்டாகும்’ என்று பார்க்கிறோம். நீதி 20:1 இன்படி, ‘திராட்சரசம் பரியாசஞ்செய்யக்கூடியது’ நீதி 23: 32,33 இன்படி, ‘மதுபானமானது நமக்குக் கேடு விளைவிக்கக்கூடியது. மதுகுடித்தால் மூளை தவறி, கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்’. வேதாகமத்தில் திராட்சரசம் எனும் வார்த்தையானது மதுபானத்தையும் குறிக்கும்; திராட்சப்பழச் சாற்றையும் குறிக்கும். ஏசா 65:8 இன்படி, ‘திராட்சக்குலையில் இருக்கும் இரசத்தில் ஆசீர்வாதம் உண்டு’. இது புளிக்காத திராட்சரசமாகும். அதாவது, திராட்சப் பழத்திலிருந்து புதிதாகப் பிழிந்தெடுக்கப்பட்ட சாறு ஆகும். கர்த்தருடைய திரு விருந்தில் பரிமாறப்பட்ட திராட்சரசத்தைக் குறித்து இயேசு இவ்வாறு சொன்னார்: ‘இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடேகூட என் பிதாவின் ராஜ்யத்தில் நான் பானம்பண்ணுவேன்’. கர்த்தருடைய திருவிருந்தில் பரிமாறப்படும் திராட்சரசமானது இயேசுவின் இரத்தத்தைச் சுட்டிக்காட்டுகிறது. எனவே அது புளிப்பில்லாததாக இருக்கவேண்டும். ஏனெனில், புளிப்பானது பாவத்திற்கு அடையாளமாக இருக்கிறது. புளிக்காத திராட்சரசத்தில் உடல்நலனுக்கு ஏதுவான காரியங்கள் உண்டு. அதில் ஆசீர்வாதம் உண்டு என்று ஏற்கனவே நாம் பார்த்தோமே. அதனால், அதைக் குடிக்கும்படி தீமோத்தேயுவுக்குப் பவுல் ஆலோசனை கூறினார்.

**பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். 1யோவான் 1:2.**

**அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர் 12:1,2.**

# 19. மரித்தோரின் நிலை

| | |
|---|---|
| யோவா 11:11-14 | இயேசு மரணத்தை நித்திரைக்கு ஒப்பிடுகிறார். ஐம்பதுக்கும் அதிகமான இடங்களில் வேதாகமம் மரணத்தை நித்திரைக்கு ஒப்பிட்டுப் பேசுகிறது. |
| 1தெச 4:15, 16 | இயேசுவில் நித்திரை செய்கிறவர்கள் அவருடைய இரண்டாம் வருகையில் எழும்புவார்கள். |
| யோவா 5:28, 29 | இரண்டு உயிர்த்தெழுதல் இருக்கிறது. (ஜீவனுக்கும் மரணத்திற்கும்) |
| ஆதி 2:7 | தேவன் மனிதனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; மனுஷன் ஜீவாத்துமாவானான். மனிதனுக்குள் ஆத்துமா என்று ஒன்றைத் தேவன் வைக்கவில்லை. |
| பிர 12:7 | சரீரம் மீண்டும் மண்ணுக்குத் திரும்புகின்றது. ஆவி தேவனிடத்திற்குத் திரும்புகிறது. 'ஆத்துமா தேவனிடத்திற்குத் திரும்புகிறது' என்று வேதாகமம் சொல்லவில்லை. |
| யோபு 27:3 | தேவனுடைய வல்லமை அல்லது ஜீவனுக்கான தேவனுடைய சுவாசமே 'ஆவி' எனப்படுகிறது. |
| சங் 146:3,4 | சுவாசம் அல்லது ஆவி தேவனிடத்துக்குத் திரும்பும்போது நினைவுகள் அழிந்துபோகும். |
| 1தீமோ 6:16 | மனித இனத்திற்கு அழியாமை கிடையாது. தேவனுக்கு மட்டுமே அழியாமை உண்டு. |
| ரோம 2:7 | நாம் அழியாமையைத் தேடுகிறோம். (1600) ஆயிரத்து அறுநூறு முறைகள் வேதாகமத்தில் 'ஆத்துமா' எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், ஒருபோதும் 'அழியாத ஆத்துமா' என்று சொல்லப்படவில்லை. |
| 1கொரி 15:51-54 | இயேசு மீண்டும் வரும்போது நாம் அழியாமையைப் பெற்றுக்கொள்ளுகிறோம். |
| சங் 115:17 | மரித்தவர்கள் தேவனைத் துதியார்கள். |
| அப் 2:34 | மரித்த தாவீது பரலோகத்துக்கு ஏறிச் செல்லவில்லை; இயேவுடைய இரண்டாம் வருகையில் நடக்கப்போகிற முதல் உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருக்கிறார். |
| சங் 6:5 | கல்லறையில் தேவனை நினைவுகூருவதில்லை. |
| பிர 9:5 | மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள். |
| யோபு 19:25,26 | கடைசிநாளில் தேவனைப் பார்ப்பதற்கு நீதிமான்கள் உயிர்த்தெழுவார்கள். |

| | |
|---|---|
| எசேக் 18:4 | பாவம் செய்கிற ஆத்துமா (மனிதன்) சாகும். |
| ரோம 6:23 | பாவத்தின் சம்பளம் மரணம். வாழ்வின்மையே மரணமாகும். தேவனுடைய கிருபையால் நித்தியவாழ்வு கிடைக்கும். |
| 2தீமோ 4:7,8 | தன்னுடைய இறுதிப்பலனைப் பெறுவதற்காக இயேசுவின் வருகைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் காத்திருக்கிறார். |
| வெளி 22:12 | இயேசு வரும்பொழுது அவர் அளிக்கும் பலனாகிய நித்திய வாழ்வு அவருடன்கூட வரும். |

## மரணம் பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள்

**2கொரி 5:7,8 இல் தேகத்தில் குடியிராதிருப்பதைப்பற்றியும் தேகத்தில் குடியிருப்பதைப் பற்றியும் பவுல் சொல்வது என்ன?**

2கொரி 5:1-11 இல், இருவிதமான சரீரங்களைக் குறித்து பவுல் பேசுகிறார். ஒன்று: நோய்வாய்ப்பட்டு, மரித்து, அழிந்துபோகக்கூடிய பூலோகச்சரீரம். அடுத்தது: மகிமையான, நித்திய, அழியாத பரலோகச்சரீரம். தேகத்தில் குடியிருப்பது என்று கூறும்போது, அழிவுள்ள இந்தச் சரீரத்துடன் நாம் இருப்பதைக் குறித்துப் பேசுகிறார். தேகத்தில் குடியிராதிருப்பது என்று கூறும்போது, மகிமையானதும் அழியாமை உள்ளதுமான சரீரத்தை நாம் பெறுவதைப் பற்றிப் பேசுகிறார். இதைக்குறித்து 2கொரி 5:4 இல், 'மரணமானது ஜீவனாலே விழுங்கப்படும்' என்கிறார் பவுல். இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது நாம் அந்தச் சரீரத்தைப் பெறுவோம். 1கொரி 15:51-54 இல் பவுல் சொல்வதைப் பாருங்கள். 'அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்'. இயேசு வரும்போது, அவர் தரும் அழியாமையைச் சுதந்தரித்துக்கொள்ளும் ஆசையைப் பவுல் 2கொரி 5 இலும் 1கொரி 15 இலும் வெளிப்படுத்துகிறார். 2தீமோ 4:6-8 ஐயும் வாசியுங்கள்.

**மரித்தோர் தூங்குகிறார்கள் என்பது உண்மையானால், எந்தோரில் இருந்த அஞ்சனம் பார்க்கிற ஸ்திரி எவ்வாறு தீர்க்கதரிசியாகிய சாமுவேலை மரித்தோரிலிருந்து எழும்பப் பண்ணினாள்? 1சாமு 28:15.**

*இந்தச் சம்பவத்தின் மூன்று முக்கியமான காரியங்களைக் கவனிக்கவேண்டும்.*

1. அஞ்சனம் பார்க்கிறவர்களை இஸ்ரவேலிலிருந்து துரத்திவிட வேண்டும் என்பது தேவனுடைய தெளிவான கட்டளை. இதுபோன்ற மந்திரவாதங்கள் பிசாசினிடமிருந்து வருபவை என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. உபா 18:10-15; ஏசா 47:13,14.

2. சாமுவேலுடைய ஆலோசனையைச் சவுல் ஏற்கனவே நிராகரித்துவிட்டார். சவுல் தேவனிடத்தில் விசாரித்தபோது, எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. 1சாமு 28:6. கர்த்தரிடமிருந்து பதில் கிடைக்காததால்தான், எந்தோரில் இருந்த அஞ்சனக்காரியைச் சவுல் நாடினார். சாமுவேலைச் சவுல் பார்த்தார் என்று வேதாகமம் சொல்லவில்லை. 'தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறிவருகிறதைக் காண்கிறேன்' என்று அந்த ஸ்திரீசொன்னபோது, 'வந்தது சாமுவேல்' என்று சவுல் நினைத்துக்கொண்டதாக 1சாமு 28:13,14 இல் பார்க்கிறோம். 'மரித்தோர் ஒன்றும் அறியார்கள்' பிர 9:5. எனவே, இறந்தோருடைய தோற்றத்தில் சாத்தான் மக்களை ஏமாற்றுகிறான். வெளி 16:14.

3. எந்தோரின் அஞ்சனம் பார்க்கிறவளிடத்தில் சவுல் சென்றதால், சவுலுக்கு மனந்திரும்புதலோ பாவமன்னிப்போ கிடைக்கவில்லை. சோர்வும் அதைரியமும் மரணமுமே கிட்டியது. சாத்தானால் ஏமாற்றப்பட்ட அவன் தன் ஆத்துமாவைப் பிசாசுகளுக்கு ஒப்படைத்தான். 1சாமு 28:16,20,21: 31:3, 4,9,10.

**'சாவு எனக்கு ஆதாயம்' என்றும், 'தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசை' என்றும் பிலி 1:21,23 இல் பவுல் சொல்வதால், மரித்தவர் உடனே பரலோகம் செல்வதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறதே?**

ஓரிடத்தில் ஒன்றையும் இன்னோரிடத்தில் வேறொன்றையும் பவுல் சொல்வது இல்லை. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் இயேசுவின் இரண்டாம் வருகையில் உயிர்த்து, நித்தியவாழ்வைப் பெறுவார்கள் என்று பவுல் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். 1தெச 4:16,17; 1கொரி 15:51-54. மேலும் பவுல், பிலி 3:20, 21 இல், 'நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறோம். அவர் நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்' என்று கூறுகிறார். தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, 'நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்' என்று கூறியிருக்கிறார். 2தீமோ 4:7,8. கிறிஸ்துவை நேருக்குநேர் பார்த்து, நித்தியத்தைப் பெறும் வாய்ப்பு அவர் வருகையில் இருப்பதால், அந்த வருகைக்காக பவுல் ஆவலோடு காத்திருந்தார். ஆனாலும், மரணம் ஆதாயம்தான். ஏனெனில், ரோமச் சிறையிலிருந்து விடுதலை கிடைக்கும்; சாத்தானின் சோதனையிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கும். மரணம் ஒரு தூக்கம் என்பதால், மரணத்திற்குப்பின் சுயநினைவுடன் அவர் அநுபவிக்கப்போகிற காரியம் அவர் தேவனோடு இருப்பதுதான். அதற்கிடையில், அவர் ஒன்றும் அறியாத நிலையில்தான் இருப்பார்.

**ஐசுவரியவான்-லாசரு உவமையில் மரணத்தின்போது ஐசுவரியவான் நரகத்திற்குச் செல்வதாகவும், லாசரு பரலோகத்திற்குச் செல்வதாகவும் பார்க்கிறோமே. மரித்தவர்கள் தூங்குகிறார்கள் என்றால் இது எப்படி சாத்தியம்? லூக்கா 16:19-31.**

இது ஓர் உவமை என்பதை மறக்கக்கூடாது. காணாமற்போன ஆடு, காணாமற்போன காசு, காணாமற்போன மகன் (லூக்கா 15), அநீதியுள்ள உக்கிராணக்காரன் (லூக்கா 16:1-11) ஐத் தொடர்ந்து ஐந்தாவது உவமைதான் ஐசுவரியவான்-லாசரு உவமை. உவமைகளில் பெரிய ஒழுக்கநியதிகள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. உவமையின் ஒவ்வொரு வார்த்தையையும் முக்கியப்படுத்தக் கூடாது. எடுத்துக்காட்டாக, காணாமற்போன ஆடு நம்மைச் சுட்டிக்காட்டுவதால், நமக்கு நான்கு கால்களும் இரண்டு கொம்புகளும் இருப்பதாகச் சொல்ல முடியாது. உவமையின் மூலமாக, இயேசு சொல்லவந்த கருத்தை மட்டுமே எடுத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு வார்த்தைக்கும் அர்த்தம் சொல்லப்போனால் குழப்பம்தான் மிஞ்சும். ஐசுவரியவான்-லாசரு உவமையானது உண்மைச் சம்பவம் என்று எடுத்துக்கொண்டால், பரலோகவாசிகளும் நரகவாசிகளும் ஒருவரோடு ஒருவர் உரையாடுவார்களா? நரகவாசிகள் அக்கினியில் எரிவதைப் பர

லோகவாசிகள் பார்த்துக்கொண்டே இருக்கப்போகிறார்களா? அவர்களுடைய புலம்பலை இவர்கள் கேட்டுக்கொண்டே இருக்கப்போகிறார்களா? இப்படிப் பட்ட நிலையில் பரலோகவாசிகள் மகிழ்ச்சியாக இருக்கமுடியுமா? ஆத்துமாக் களுக்கு விரல்களும் நாக்குகளும் உண்டா? பரலோகம் செல்வோர் அனைவரை யும் உட்காரவைக்கத் தகுந்தவிதத்தில் ஆபிரகாமின் மடி எவ்வளவு பெரியதாக இருக்கும்? இந்தக் கதையின் மூலம் இயேசு சொல்ல விரும்பியது என்ன? மூன்று பாடங்களை இயேசு கற்றுக்கொடுக்க விரும்பினார்.

1. தேவதயவைப் பெற்றதாலேயே பணக்காரர்களிடம் பணம் இருக்கிறது என்று யூதர்கள் நினைத்தார்கள். ஆனால், பேராசையாலும் வஞ்சகத்தா லும் ஏழைகளை ஒடுக்குவதாலும் சம்பாதிக்கிற பணம் தேவ தயவுக்கு அடையாளம் என்று எண்ணக்கூடாது என்று இயேசு கற்றுக்கொடுக்கிறார்.
2. மரணத்திற்குப் பிறகு மனந்திரும்புவதற்கு இன்னொரு வாய்ப்பு இல்லை என்பதையும் இயேசு வலியுறுத்துகிறார். நாம் இவ்வுலகத்தில் செய்யும் தீர்மானமே நமது நித்தியத்தைத் தீர்மானிக்கிறது.
3. இரட்சிப்பைப்பற்றி வேதாகமம் சொல்லும் தெளிவான உபதேசத்தைப் பரிசேயர் ஏற்றுக்கொள்ளாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவர் எழுப் பப்பட்டாலும் அதை நம்பமாட்டார்கள் என்பதையும் இயேசு கூறுகிறார்.

இயேசுவிடம் யூதர்கள் எப்போதும் அடையாளம் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். இயேசு பெரிய அடையாளம் ஒன்றைத் தந்தார். மரித்தோரிலிருந்து தனது நண்பனாகிய லாசருவை எழுப்பினார். யோவான் 11:11-14, 43,44. அதி னிமித்தம் லாசருவைக் கொல்ல யூதர்கள் திட்டமிட்டார்கள். யோவான் 12: 10. இயேசுவையும் கொல்ல தீர்மானித்தார்கள். தங்கள் கண்களுக்கு முன்னால் ஒரு திரையைத் தொங்கவிட்ட நிலையில் அவர்கள் வேதாகமத்தை வாசித்தார்கள். 2கொரி 3:14-16. வேதாகமம் முழுவதும் இயேசுவைப்பற்றியே சாட்சியளிக்கின் றன என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. யோவான் 5: 39. லாசரு உயிருடன் வந்தபிறகும் யூதர்கள் நம்பவில்லை. எனவே, லூக்கா 16:31 ஒரு தீர்க்கதரிசனமாக விளங்குகிறது. 'அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்ப மாட்டார்கள்'. யூதர்கள் மத்தியில் பிரபலமாக இருந்த ஒரு கதையைச் சொல்லி தனது கருத்தை இயேசு வலியுறுத்தினார்.

**வெளி 6:9-11 இன் அர்த்தம் என்ன? பலிபீடத்திற்கு அடியில் ஆத்துமாக்கள் இருப்பதா கவும், அவை, எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத் தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?' என்று கேட்டதாகவும் கூறுகிறதே.**

பேசாத காரியங்கள் பேசுவதாகச் சொல்லப்படுவதை வேதப்பகுதிகளில் பார்க்கிறோம். 'உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது' என்று ஆதி 4:10 இல் கூறப்பட்டள்ளது. ஆபே லின் இரத்தம் பேசியதா? ஆபேலின்மேல் ஆண்டவருக்கு இருந்த அக்கறையை இந்தப் பேச்சின் மூலமாக தேவன் வெளிப்படுத்தினார். எபி 12:24 இன்படி, 'ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து' சேர்ந் திருக் கிறோம். அதாவது, மன்னிப்பு-இரக்கம்-மீட்பு ஆகியவை பற்றி இயேசு வின் இரத்தம் பேசுகிறது. உண்மையிலேயே இயேசுவின் இரத்தம் பேசுகிறதா? இல்லையே. தேவன் தம்முடைய பிள்ளைகளை மறந்துவிடவில்லை என்பதை

வெளி 6 இல் நாம் பார்த்த அடையாளத்தின் மூலமாக விளக்குகிறார். தங்களை உபத்திரவப்படுத்தினவர்களுக்கு நியாயம் செலுத்தவேண்டுமென்று இரத்தச் சாட்சிகளின் இரத்தம் பேசுவதாக அங்கே பார்க்கிறோம். வேதாகமத்தில் ஆத் துமா எனும் வார்த்தை ஒரு மனிதனைக் குறிக்கிற வார்த்தை. ரோமர் 13:1; எசேக் 18:4; அப் 27:37. அந்த வார்த்தைக்கு உயிர் எனும் அர்த்தமும் உண்டு. எபி 13:17; 1பேதுரு 4:19; மத் 10:28. எனவே, வெளி 6:9 ஐப் பின்வருமாறு வாசிக்கலாம். 'இயேசுவுக்காய்க் கொல்லப்பட்டவர்களின் இரத்தமானது ஆபேலின் இரத்தத் தைப்போல நியாயம்வேண்டி கூப்பிட்டது'. இறுதி நியாயத்தீர்ப்பு உண்டு. இயேசுவே எல்லாவற்றையும் சரிபண்ணுவார்.

## ஆத்துமா அழியாததா?

வேதாகமத்தில் 1600 இடங்களில் ஆத்துமா எனும் வார்த்தை வருகிறது. ஆனால், எந்த இடத்திலும் அழியாத ஆத்துமா என்று சொல்லப்படவே இல்லை. 'பாவம் செய்கிற ஆத்துமா சாகும்' என்று எசேக் 18:4 கூறுகிறது. சரீரமும் ஆத்து மாவும் நரகத்தில் அழிந்துபோகும் என்று இயேசு சொன்னார். மத் 10:28. தேவ னுக்கு மாத்திரமே அழியாமை உண்டு. 1தீமோ 6:15,16. ஏதேன் தோட்டத்தில் பிசாசு சொன்ன முதல் பொய்யானது மரணத்தைப் பற்றியதே. 'நீங்கள் சாகவே சாவதில்லை' என்று சொன்னான். ஆதி 3:4. ஆனால், வேதாகமமோ, 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்று கூறுகிறது. ரோமர் 6:23. உயிர் இல்லாமல் இருப்பதே மரணம். பாவமானது நரகத்தில் நித்தியமாய் வாழும் நித்தியவாழ்வைத் தரப் போவது இல்லை. தேவனுடைய சமூகத்திலிருந்து முற்றிலுமாய் நீக்கப்பட்டு அழிக்கப்பட்டுப் போவார்கள். மனிதன் அழியக்கூடியவன். யோபு 4:17. நாம் அழியாமையைத் தேடுகிறோம். ரோமர் 2:7. இரண்டாம் வருகையில் அழியா மையை ஒரு ஈவாகப் பெற்றுக்கொள்வோம். 1கொரி 15: 51-54. 'பாவம் பூரண மாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்'. யாக் 1:15. நித்திய வாழ்வா? நித்திய மரணமா? எது வேண்டும்?

### காவலில் உள்ள ஆவிகளுக்கு இயேசு பிரசங்கித்ததாக 1பேதுரு 3:19 இல் கூறப்படுவது என்ன?

1பேதுரு 3:18-22 முழுவதையும் வாசித்தால், 19 ஆம் வசனத்தை விளங்கிக் கொள்ளவது எளிதாக இருக்கும். நம்முடைய பாவங்களுக்காக கொல்லப்பட்ட இயேசுவானவர் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் உயிர்ப்பிக்கப்பட்டார். வசனம் 19 இல் கவனம் வேறு சம்பவத்திற்குத் திரும்புகிறது. அதே பரிசுத்த ஆவியினால் காவலிலுள்ள ஆவிகளுக்குக் கிறிஸ்து பிரசங்கித்தார். இது எப் போது நடந்தது? காவலிலுள்ள ஆவிகள் யார்? வசனம் 20 இல் பதில் தருகிறது. நோவாவின் நாட்களில் மனிதர்களுடைய எண்ணங்கள் தொடர்ந்து பொல்லா தவைகளாகவே இருந்தன. தீய ஆவிகளுக்கு அவர்கள் அடிமைப்பட்டுக் கிடந் தார்கள். மரணத்திலிருந்து இயேசுவை உயிர்ப்பித்த அதே ஆவியானவர் நோவா வின் காலத்தில் ஆன்மிக மரணத்திலிருந்த மக்களை அந்த ஆன்மிக மரணத்தி லிருந்து உயிர்ப்பிப்பதற்காக போராடிவந்தார். ஆவிக்குரிய சிறையில் அகப்பட் டுக் கிடந்த மக்களை விடுவிப்பதற்காக தீர்க்கதரிசியின் மூலம் கிறிஸ்துவின் ஆவியானவர் நற்செய்தியை அறிவித்தார். 1பேதுரு 1:10-12. பாவச் சிறையின் கதவுகளை வல்லமையுள்ள ஆவியானவர் திறந்து, கைதிகளை விடுவிக்கிறார். ஏசா 61:1. இதை 1பேதுரு 3:21 இன்னமும் தெளிவாக்குகிறது. ஜலப்பிரளயத்தின் அனுபவமானது ஞானஸ்நானத்திற்கு ஒப்பிடப்படுகிறது. இயேசுவை மரணத்தி

லிருந்து ஆவியானவர் உயிர்ப்பித்ததுபோல நோவாவின் குடும்பத்தை மரணத்தி லிருந்து காப்பாற்றி பேழைக்குள் அழைத்துச் சென்றார். மனிதர்களுடைய பாவங் களை அவர்களுக்கு உணர்த்தி, வாழ்க்கையை மாற்ற வல்லமை தந்து, ஞானஸ் நான தண்ணீர் மூலமாக நடத்தி, ஆவிக்குரிய உயிர்த்தெழுதலுக்கு ஆவியானவர் நடத்துகிறார். நோவா காலத்திலாயினும், இந்த காலத்திலாயினும் ஆவிக்குரிய காவலிலிருந்து மக்களை ஆவியானவர் விடுவிக்கிறார். இதற்குக் காரணம் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமையே.

**மறுபிறவி பற்றி வேதாகமம் கூறுவது என்ன?**

இரண்டு யூகங்களின் அடிப்படையில் மறுபிறவியைப் பற்றிப் பேசு கிறார்கள்.

முதலாவது, 'மனிதர்கள் தங்கள் சொந்த நற்கிரியைகளினால் தங்களைச் சுத்தமாக்கிக் கொள்ளுகிறார்கள்' எனும் யூகம்.

இரண்டாவது, 'மனிதனுடைய சரீரம் மரணமடைந்த பிறகு அவனுடைய ஆத்துமா அழியாததாய் நிலைத்திருக்கிறது' எனும் யூகம்.

இந்த இரண்டுமே தவறானவை. கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத் தினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம். எபே 2:8; ரோமர் 3:24-31. உயிர்த் தெழுதல் நடக்கும்வரை தூங்குவதே மரணம். 1தெச 4:15,16; 1கொரி 15:51,54. மனிதனின் மரணத்திற்குப் பிறகு இரட்சிக்கப்பட இன்னொரு வாய்ப்பு கிடையாது. எபி 9:27. இன்றே இரட்சண்ய நாள். 2கொரி 6:2.

**எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். 1கொரிந்தியர் 15:52-54.**

# 20. ஆயிரவருட அரசாட்சி: அமைதியான ஆயிரம் வருடங்கள்

| | |
|---|---|
| யோவா 14:1-3 | மீண்டும் வருவதாக இயேசு சொன்னார். |
| அப் 1:9-11 | சீடர்கள் பார்த்துக் கொண்டிருக்கத்தக்கதாகப் பரலோகத்திற்குப்போன அதே இயேசு அவ்வண்ணமே திரும்பி வருவார். |
| 1தெச 4:16,17 | இறந்துபோன பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுவார்கள். உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் உயிர்த்தவர்களோடே இயேசுவைச் சந்திக்க ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். |
| யோவா 5:28,29 | வாழ்விற்கான உயிர்த்தெழுதல், அழிவிற்கான உயிர்த்தெழுதல் என இரண்டு உயிர்த்தெழுதல்கள் உண்டு. |
| 2தெச 1:8 | இயேசு வரும்போது பாவிகள் அழிக்கப்படுவார்கள். |
| வெளி 19:11-21 | வெற்றிபெற்ற ஓர் அரசனைப் போன்று, பரலோகத்தின் சேனைகளால் இயேசு தமது மக்களை மீட்பார். அவருடைய மகிமையால் துன்மார்க்கர் அழிக்கப்படுவர். |
| வெளி 20:1,2 | ஆயிரம் வருடங்கள் சாத்தான் கட்டப்பட்டு இருப்பான். |
| 2பேதுரு 2:4 | அந்தகாரச் சங்கிலிகளினாலே சாத்தான் கட்டப்படுவான். அவனால் சோதிக்கப்படுவதற்கு ஒருவருமின்றி, பூமியிலே அவன் தனித்து விடப்படுவான். |
| வெளி 20:1 | 'பாதாளம்' என்பதற்கான கிரேக்கப் பதமானது, 'ஒழுங்கின்மையும் வெறுமையுமான பூமியைச் சுட்டிக் காட்டுகிறது. (ஆதி 1:2 இல் ஆழம் = வெளி 20:1 இல் பாதாளம்). |
| எரே 4:23-27 | ஒருவரும் வசிக்க இயலாதபடி பாழாகி, ஒழுங்கின்மையும்வெறுமையுமானநிலைக்குப்பூமி மீண்டும்வரப்போகிறது. |
| எரே 25:33 | கர்த்தரால் கொல்லப்பட்டவர்கள் அடக்கம்பண்ணப்படாமல் கிடப்பார்கள். |
| வெளி 20:4 | நீதிமான்கள் ஆயிரம் வருடங்களாகத் தேவனுடன் பரலோகில் இருப்பார்கள். சிங்காசனங்களில் அமர்ந்து நியாயவிசாரணையில் பங்கெடுத்துக் கொள்வார்கள். |
| 1கொரி 6:2 | பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள். |
| வெளி 20:5 | தங்கள் பலனைப் பெறுவதற்காக ஆயிரம் வருட அரசாட்சிக்குப் பின்னரே துன்மார்க்கர் உயிர்த்தெழுவார்கள். (வசனத்தின் முதற்பகுதி) |
| வெளி 20:7 | சாத்தான் தன்னுடைய காவலிலிருந்து விடுதலையாகி, உயிர்த்த துன்மார்க்கரை அழைத்துக்கொண்டு, தேவ |

| | |
|---|---|
| | னுக்கு எதிரான இறுதித் தாக்குதலை நடத்துவான். |
| வெளி 20:9 | சாத்தானும் அவனுடைய தீயசேனையும் இறுதியில் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள். |
| வெளி 21:1-3 | தேவன் அழகிய புதுப்பூமியைப் படைப்பார். |

## ஆயிர வருட அரசாட்சி பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி

**'இயேசு மறுபடியும் வரும்போது, பூமியில் அவர் தமது ராஜ்யத்தை நிறுவுவார்; அந்த ராஜ்யத்தில் சமாதானம் நிலவும். ஆயிரம் வருடங்கள் இந்த ராஜ்யம் நிலைத்திருக்கும்' என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இது உண்மையா?**

நமக்காக ஓரிடத்தை ஆயத்தம்பண்ணுவதாகவும், ஆயத்தமான பின்பு, அவர் வந்து, தான் இருக்கும் இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்லுவதாகவும் யோவான் 14:1-3 இல் இயேசு சொல்லியிருக்கிறார். அவர் வரும்போது, அவரைச் சந்திக்க ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம் என்று 1தெச 4:16,17 கூறுகிறது. தமது நித்திய பலன்களைக் கொடுப்பதற்கு இயேசு தம் தூதர்களின் மகிமையோடு வருவார் என்று மத்தேயு 16:27 கூறுகிறது. அப்போது, துன்மார்க்கர் அழிக்கப்படுவார்கள் என்று 2தெச 8:7,8 கூறுகிறது. அவ்வாறு கர்த்தரால் கொலையுண்டவர்கள் பூமியின் ஒருமுனை துவக்கி மறுமுனை மட்டும் அடக்கம் பண்ணப்படாமல் எருவாவார்கள் என்று எரே 25:33 கூறுகிறது. பாழாய்ப்போன இந்தப் பூமியில் அதன்பிறகு மனிதர் எவரும் இருக்கமாட்டார்கள் என்று எரே 4:23-27 கூறுகிறது. வெளி 20:1,2 இன்படி சாத்தான் கட்டப்பட்டவனாய் ஆயிரம் ஆண்டுகள் பாதாளத்தில் கிடப்பான். பாதாளம் என்பதற்கு இந்த இடத்தில் வரும் கிரேக்க வார்த்தை 'அபுசோஸ்' என்பது ஆகும். இதே வார்த்தைதான் கிரேக்கப் பழைய ஏற்பாட்டில் ஆதி 1:2 இல் பூமியை குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்போது பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. அதேபோன்ற நிலைக்கு பூமி மீண்டும் வரும். இதுவே பாதாளம். இங்கு சாத்தான் ஆயிரம் ஆண்டுகள் இருப்பான். அதன்பிறகு பாவம் அழிக்கப்படும்: பூமி புதுப்பிக்கப்படும்; புது உலகம் உருவாகும். 2பேதுரு 3:13; வெளி 21:1-5.

**ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். 1தெசலோ 4:16,17.**

# 21. பரலோகம்

| | |
|---|---|
| யோவா 14:1-3 | பரலோகம் என்பது நிஜமான ஓர் இடம். |
| 2பேதுரு 3:10-13 | நம்முடைய கர்த்தர் புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். |
| மத் 5:5 | சாந்தகுணமுள்ளவர்பூமியைச்சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். |
| வெளி 21:1-5 | பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேம் பரலோகத்தை விட்டு தேவனிடமிருந்து இறங்கிவரும். |
| ஏசா 45:18 | குடியிருப்புக்காகத் தேவன் இந்த உலகத்தைப் படைத்தார். |
| மீகா 4:8 | ஆதியிலிருந்த ஆளுகை மனித இனத்திடம் மீண்டும் கொடுக்கப்படும். |
| பிலி 3:21 | தேவன் நமக்கு அழியாமைக்குரிய சரீரங்களைத் தருவார். (1கொரி 15:51-54). |
| ஏசா 35:3-6 | சரீரப்பிரகாரமான எல்லா அங்கவீனங்களும் சரியாக்கப்படும். (குருடரின் கண்கள் திறக்கப்படும். செவிடரின் செவிகள் திறக்கப்படும். முடவர்கள் நடப்பார்கள்.) |
| ஏசா 65:17 | தேவன் புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைப்பார். |
| ஏசா 65:21-23 | அவர்கள் வீடுகளைக் கட்டி அவைகளில் குடியிருப்பார்கள். அவர்கள் திராட்சத் தோட்டங்களை நாட்டி அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். |
| ஏசா 65:25 | ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒருமித்து மேயும். தேவனுடைய புதிய ராஜ்யம் அமைதியான ஓரிடமாக இருக்கும். |
| மத் 8:11 | ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்று பெரியவர்களுடனேகூட நாம் நித்தியகாலம் வாழுவோம். |
| வெளி 21:3 | தேவன்தாமே நம்முடனே இருந்து நம்முடைய தேவனாயிருப்பார். |
| வெளி 22:3,4 | நாம் அன்புடனே நம்முடைய தேவனை என்றென்றைக்கும் சேவிப்போம். அவருடனான நெருங்கிய உறவில் களிகூருவோம். |
| வெளி 21:16,17 | தேவனுடைய புதிய நகரம் 12,000 பர்லாங் அல்லது 1500 மைல் சதுரமும், அதினுடைய மதில் 144 முழம் அல்லது 216 அடி உயரமுமாய் இருக்கும். |
| வெளி 21:18-21 | நேர்த்தியான இந்த நகரத்தின் மதிலின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன; வீதிகள் பொன்னாகவும், வாசல்கள் முத்தாகவும் இருந்தன. |
| வெளி 21:7,8 | நகரத்தில் நுழைவதற்கான தகுதியை இந்த வசனம் கூறுகிறது. |
| வெளி 22:17 | ஆவியும் மணவாட்டியும் ‘வா’ என்கிறார்கள். |

# 22. துன்மார்க்கரின் அழிவு

| | |
|---|---|
| எரே 31:3 | தேவனுடைய குணம் அன்பானது. |
| 2பேதுரு 3:9 | எவருடைய அழிவையும் தேவன் விரும்பவில்லை. |
| எபி 12:29 | நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார். பாவம் எங்கிருந்தாலும் அதைப் பட்சிக்கும் அக்கினியாகத் தேவன் இருக்கிறார். |
| மல் 4:1-3 | பாவிகள் முற்றிலுமாகச் சாம்பலாக்கப்படுவார்கள். |
| சங் 37:10 | துன்மார்க்கர் இல்லாமற் போவார்கள். |
| சங் 37:20 | துன்மார்க்கர் அழிந்துபோவார்கள். துன்மார்க்கர் சுட்டெரிக் கப்பட்டு இல்லாமற்போவார்கள். |
| சங் 37:36 | துன்மார்க்கர் காணப்படமாட்டார்கள். |
| மத் 25:46 | தண்டிக்கப்படுதல் அல்ல, தண்டனை நித்தியமானது. அதாவது, இந்தத் தண்டனையால் அழிக்கப்பட்டவர்கள், இனி நித்தியகாலமும் அழிந்துபோனவர்களாகவே இருப்பார்கள். |
| யூதா 7 | நித்திய அக்கினியால் நித்திய அழிவுக்குள்ளான சோதோமும் கொமோராவும் எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. இன்றைக்கும் அவை சவக்கடலின் அடியில் அழிந்து கிடக்கின்றன. |
| 2பேதுரு 2:6 | சோதோமும் கொமோராவும் சாம்பலாயின. |
| மத் 3:11,12 | பிரபஞ்சத்திலிருக்கும் மொத்தப் பாவத்தையும் நிர்மூலமாக்கி, அதனுடைய கிரியைகளை முற்றிலும் அழிக்கும் வரை அந்த அக்கினியை யாராலும் அணைக்க முடியாது. |
| எரே 17:19-27 | மனித கரங்களால் அணைக்கப்பட முடியாத அக்கினியால் எருசலேம் அழிக்கப்பட்டது. எருசலேமுடைய பாவக்கிரியைகள் முற்றிலும் அழிக்கப்படும் வரைக்கும் எரிந்துகொண்டிருந்தது. எனினும், எருசலேம் இன்றைக்கு எரிந்துகொண்டிருக்கவில்லை. |
| வெளி 20:10 | துன்மார்க்கர் சதாகாலமும் அழிந்துபோவார்கள். 'சதாகாலம்' என்றால் 'எப்போதும் தொடர்ந்து கொண்டிருப்பது' என்று பொருளல்ல. மூலவார்த்தையை 'காலத்தின் முடிவு வரைக்கும்' என்று மொழிபெயர்க்கலாம். |
| யாத் 21:6 | ஓர் அடிமை அவனது எஜமானனுக்குச் சதாகாலமும் அதாவது தான் உயிரோடிருக்கும்வரை சேவை செய்ய வேண்டும். |
| 1சாமு 1:22,28 | சாமுவேலை அன்னாள் கர்த்தருக்கென்றே சகலநாளும் ஒப்புக்கொடுத்தாள். அதாவது, அவன் வாழும் காலம் வரை கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தாள். |

| | |
|---|---|
| 2பேதுரு 2:4 | கெட்ட தூதர்களும் அனைத்துக் கெட்டவர்களும் நியாயத் தீர்ப்புக்கென்று குறிக்கப்பட்டிருக்கிறார்கள். நரகம் இப்போது எரிந்துகொண்டிருக்கவில்லை. |
| வெளி 20:9 | பரலோகத்தில் தேவனிடமிருந்து அக்கினி இறங்கி கெட்டவர் களைஅழிக்கிறது.அவர்கள்முற்றிலுமாகஅழிக்கப்படுவார்கள். |
| எசேக் 28:17,18 | சாத்தான் சாம்பலாக்கப்படுவான். |
| ஏசா 47:14 | நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்கும். அது குளிர்காயத் தக்க தழலுமல்ல. |
| ஒபதியா 16 | துன்மார்க்கர் இராதவர்களைப்போல் இருப்பார்கள். |
| 2பேதுரு 3:12, 13 | தேவன் புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைப்பார். |

## துன்மார்க்கரின் அழிவுபற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள்

**நரகம் இப்போது பூமியின் மத்தியில் எரிந்துகொண்டிருக்கும் நிலையில் இருக்கிறதா?**

வேதாகமத்தின்படி, முடிவு காலத்தில்தான் துன்மார்க்கரின் அழிவு நிகழும். அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்புநாளுக்கு வைத்திருக்கிறார். 2பேதுரு 2:4. நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார். எபி 12:29. முடிவு காலத்தில் வானத்திலிருந்து வந்து, துன்மார்க்கரை அழிக்கும் அக்கினியே நரக அக்கினி. இப்போது அது பூமியில் இல்லை. வெளி 20:9. துன்மார்க்கர் முற்றிலுமாய் எரிந்துபோவார்கள். நீதி 10:25; சங் 37:10,11, 20,34,38. அவர்கள் சாம்பலாய்ப் போவார்கள். மல்கியா 4:1,3. ஆயிர வருட அரசாட்சியின் முடிவில் துன்மார்க்கர் உயிரோடு எழுப்பப்பட்ட பிறகு இந்த அழிவு ஏற்படும். வெளி 20:5: யோவான் 5:28,29.

**துன்மார்க்கர் சதாகாலங்களிலும் (என்றென்றும், என்றும்) எரிவார்கள் என்று வேதாகமம் சொல்லுகிறதே. அதின் அர்த்தம் என்ன?**

இந்த வார்த்தைகளை 'காலத்தின் முடிவுவரை' என்று எழுத்தின் பிரகாரம் மொழிபெயர்க்கலாம். அதாவது, அவன் உயிரோடிருக்கும்வரை என்று கூறலாம். துன்மார்க்கர் எரிக்கப்பட்டு, சாம்பலாய்ப் போவார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. மல்கியா 4:1,3. அதன்பின் புது யுகம் தோன்றும். வெளி 21:1-4. ஓர் அடிமை தன் எஜமானிடம் என்றென்றைக்கும் வேலை செய்ய வேண்டும் என்று யாத் 21:6 கூறுகிறது. 'சாமுவேல் கர்த்தரின் சந்நிதியிலே எப்பொழுதும் இருக்க, நான் அவனைக் கொண்டுபோய் விடுவேன்' என்று அன்னாள் சொன்னாள். 1சாமு 1:22. இந்த இரண்டு இடங்களிலுமே அவர்கள் உயிரோடிருக்கும்வரை என்றுதான் பொருள். 1சாமு 1:28, 'அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள்' என்று தெளிவாகக் கூறுகிறது. மீனின் வயிற்றில், தான் இருந்த அனுபவத்தை விவரிக்கும்போது, 'என்றென்றும்' எனும் வார்த்தையை யோனா பயன்படுத்துகிறார். யோனா 2:6. வேதாகமத்தின்படி, 'என்றென்றும்' என்று குறிக்கப்படும் காலத்திற்கு முடிவு உண்டு. 'அவன் உயிரோடிருக்கும்வரை' என்றுதான் அர்த்தம் பார்க்கவேண்டும். துன்மார்க்கரின் தண்டனை நித்தியமானது. மத்தேயு 5:46. அவர்கள் சாம்பலாய்ப் போவார்கள். அதாவது, அவர்கள் என்றென்றைக்கும் இல்லாமல் போய் விடுவார்கள். நரகத்தில் முடிவில்லாமல் அக்கினி எரிந்துகொண்டேயிருக்கும் எனும் கொள்கையானது தேவனைக் கொடூரமானவராக காட்டுகிறது; மனிதரை

வேதனைப்படுத்திப் பார்க்கும் ஆசையுடையவராய் காட்டுகிறது. தேவன் அன்புள்ளவராய் இருந்தால், பிரபஞ்சத்தை அழித்துவருகிற பாவத்தை முற்றிலும் அழித்துவிடவேண்டும். புற்றுநோய்க் கட்டியை வெட்டி எடுக்கும் மருத்துவரைப்போல, பாவத்தைப் பிரபஞ்சத்திலிருந்து அகற்ற வேண்டும்.

***நித்திய அக்கினி என்றால் என்ன?***

பாவத்தால் நிறைந்த சோதோமும் கொமோராவும் வானத்திலிருந்து வந்த அக்கினியால் அழிக்கப்பட்டன. இந்த அக்கினியானது நித்திய அக்கினி என்று யூதா 7 கூறுகிறது. இப்போது அங்கே அக்கினி எரிந்துகொண்டிருக்கவில்லை. சாக்கடலுக்குக் கீழே அவை இப்போது இருக்கின்றன. 2பேதுரு 2:6 இன்படி அவை சாம்பலாய் போயின. நித்திய அக்கினி என்றால், அந்த அக்கினியின் விளைவு நித்தியமானது என்று பொருள்.

***அவியாத அக்கினி என்றால் என்ன பொருள்? மாற்கு 9:43,48.***

அவியாத அக்கினி என்றால், மனிதனுடைய கைகளால் அதை அணைக்க முடியாது என்று அர்த்தம். யூதருடைய கீழ்ப்படியாமையினால் எருசலேம் அழிக்கப்பட்டது. இதைப் பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது, 'நான் அதின் வாசல்களில் தீக்கொளுத்துவேன்; அது எருசலேமின் அரமனைகளைப் பட்சித்தும், அவிந்துபோகாதிருக்கும்' என்று கர்த்தர் சொன்னதாக எரேமியா 17:27 கூறுகிறது. ஆனால், எருசலேமில் இப்போது அக்கினி எரிந்துகொண்டிருக்கவில்லை.

**தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். 2பேதுரு 3:9.**

**துன்மார்க்கரோ அழிந்துபோவார்கள், கர்த்தருடைய சத்துருக்கள் ஆட்டுக்குட்டிகளின் நிணத்தைப்போல் புகைந்துபோவார்கள், அவர்கள் புகையாய்ப் புகைந்துபோவார்கள். சங்கீதம் 37:20.**

**அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். 2பேதுரு 3:13.**

# 23. மிருகத்தினுடைய முத்திரை

| | |
|---|---|
| வெளி 13: 1,2 | சமுத்திரத்திலிருந்து சிங்கம், கரடி, சிறுத்தை, வலுசர்ப்பத்தின் கலப்புத் தன்மைகளோடு ஒரு மிருகம் எழும்பியது. |
| தானி 7:17 | மதசம்பந்தப்பட்ட அல்லது அரசு சம்பந்தப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துகிற ராஜா அல்லது ராஜ்யத்தை ‘மிருகம்’ சுட்டிக்காட்டுகிறது. |
| வெளி 17:15 | ஜனங்கள், கூட்டங்கள், ஜாதிகள், பாஷைக்காரர்களைத் ‘தண்ணீர்’ சுட்டிக்காட்டுகிறது. |
| தானி 7:1-9 | சிங்கம் என்பது பாபிலோனையும், கரடி என்பது மேதிய பெர்சியாவையும், சிறுத்தை என்பது கிரேக்கதேசத்தையும், வலுசர்ப்பம் என்பது ரோமதேசத்தையும் குறிக்கின்றன. |
| வெளி 13:2 | இந்தப் புது அரசுக்கு வலுசர்ப்பம் அல்லது அஞ்ஞான ரோம் தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் கொடுத்தது. போப்புரோம் தன்னுடைய அதிகாரத்தை அஞ்ஞானரோமிடமிருந்து பெற்றுக்கொண்டது. |
| வெளி 13:5 | மிருகமானது தேவ தூஷணம் பேசினது. |
| லூக் 5:21 | பாவங்களை மன்னிப்பதற்குத் தனக்கு அதிகாரம். இருப்பதாக மனிதன் உரிமைகொண்டாடினால், அது தேவ தூஷணம் பேசியதாகக் கருதப்படும். |
| யோவா 10:33 | தேவனுக்குச் சமமாகத் தன்னைக் குறிப்பிடுபவன் தேவ தூஷணம் செய்கிறான் என வேதாகமம் சொல்லுகிறது. தானே இந்த உலகத்திற்கு தேவன் என்று போப் உரிமை கொண்டாடுகிறார். |
| வெளி 13:5 | 42 மாதம் ஆளுகைசெலுத்த மிருகத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. |
| வெளி 12:6,14 | ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் என்பது 1260 நாட்கள் அல்லது 42 மாதங்களாகும். இந்தக் காலக்கட்டத்தில் தேவனுடைய பிள்ளைகள் வனாந்தரங்களில் ஒளிந்து இருந்தார்கள். |
| எசே 4:6 | ஒவ்வொரு வருஷத்துக்குப் பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன். |
| எண் 14:34 | ஒரு வருடம் ஒரு நாளாகக் குறிக்கப்படுகிறது. |
| தானி 7:25 | தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டபடியே தேவனுடைய பிரமாணத்தை மாற்றிய போப்புரோம் 1260 வருடங்கள் ஆட்சி செய்தது. கி.பி. 538 இல் அஞ்ஞான ரோமுடைய பேரரசன் ரோமிலுள்ள போப்புக்கு அரச அதிகாரத்தையும் மத அதிகாரத்தையும் வழங்கினான். சரியாக 1260 வருடங் |

கள் கழித்து, கி.பி. 1798 இல் பிரெஞ்சு படைத்தளபதி பெர்தியர் என்பவரால் போப் கைது செய்யப்பட்டார்.

வெளி 13:18 மிருகத்தினுடைய இலக்கம் மனிதனுடைய இலக்கமாயிருக்கிறது. அவனுடைய இலக்கம் 666. வேதாகமத் தீர்க்கதரிசனத்தின்படி 6 என்பது குறைவைக் குறிக்கும் எண் ஆகும். 7 என்னும் எண்ணே முழுமையைக் குறிக்கும். ஓர் இலக்கமாகும் மும்மடங்கான ஆறு பெரிய தவறான திரித்துவமாகிய வலுசர்ப்பம், மிருகம், கள்ளத் தீர்க்கதரிசிக்கு ஒப்பாயிருக்கிறது. இது சாத்தானுடைய பொய்யான திரித்துவம். அறுநூற்று அறுபத்தாறு என்னும் இலக்கம் போப்பினுடைய பதவியைக் குறிக்கும் பட்டப்பெயருக்குத் தொடர்புடையதாக உள்ளது.

| | | |
|---|---|---|
| V - 5 | F - 0 | D - 500 |
| I - 1 | I - 1 | E - 0 |
| C - 100 | L - 50 | I - 1 |
| A - 0 | I - 1 | 501 |
| R - 0 | I - 1 | |
| I - 1 | 53 | |
| U - 5 | | |
| S - 0 | | |
| 112 | 112 +53 +501 = 666 | |

தானி 3:1 நேபுகாத்நேச்சார் அறுபது முழ உயரமும் ஆறு முழ அகலமுமான போலியான சிலை ஒன்றை நிறுவினார்.

தானி 3:3,4 இந்தப் போலித் தொழுகையைச் செய்வதற்காக ராஜ்யம் முழுவதும் வரவழைக்கப்பட்டது.

தானி 3: 14 'மெய்த்தொழுகையா, பொய்த்தொழுகையா?' என்பது தான் அன்றையப் பிரச்சனை.

வெளி 13:13-17 அதேபோன்ற ஒரு போலியான சிலை மீண்டும் நிறுவப்படும். பொய்யைச் சத்தியம் என்பார்கள். தேவனுக்குக் கீழ்ப்படிந்து மெய்வணக்கம் செய்வதா? அல்லது, மனிதருக்குக் கீழ்ப்படிந்து பொய்வணக்கம் செய்வதா? என்பதே பிரச்சனை. பொருளாதாரத் தடையும் மரண தண்டனையும் விதிக்கப்படும்.

வெளி 14:7 ஓய்வுநாளில் சிருஷ்டிகரை உண்மையாய்த் தொழுது கொள்ளுமாறு இச்சத்தியம் நம்மை அழைக்கிறது.

வெளி 14:9-11 போலியான ஞாயிறு ஓய்வுநாளைத் தவிர்க்குமாறு நம்மிடம் இந்தச் சத்தியம் கேட்டுக்கொள்கிறது.

வெளி 14:12 அவரிடம் விசுவாசமாயிருப்பவர்களுக்கான அடையாளமான தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவதற்கு நம்மைத் தேவன் அழைக்கிறார்.

ரோமர் 6:16 பிரச்சனையானது வெறுமனே நாட்களைப் பற்றியது

| | |
|---|---|
| | மட்டுமல்ல: 'யாருக்குக் கீழ்ப்படியப் போகிறோம்?' என்பதுதான் பிரச்சனை. |
| மாற்கு 7:9 | மனிதருடைய பாரம்பரியத்தைக் கைக்கொள்ளுவதற் காக தேவனுடைய கற்பனைகளை வியர்த்தமாக்கினார்கள். |
| யோவா 14:15 | அன்புடன் தமக்குக் கீழ்ப்படியுமாறு இயேசு நம்மை அழைக்கிறார். |
| சங் 91 | துன்ப நேரத்தில் நம்மைத் தேவன் பாதுகாத்துக் கொள்வார். |

## கத்தோலிக்கம் பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள்

**பேதுருதான் முதல் போப்பாண்டவரா? பேதுருவிடம், 'இந்தக் கல்லின்மேல் என் சபை யைக் கட்டுவேன்' (மத் 16:13-19) என்று இயேசு சொன்னதின் அர்த்தம் என்ன?**

பிலிப்புச் செசரியாவில் கிரேக்கத் தத்துவமும் ரோமத் தர்க்கமும் யூதப் பாரம்பரியமும் நிறைந்திருந்தன. இவ்வாறு பலவித இயக்கங்கள் சேர்ந்திருந்த அப்படிப்பட்ட பகுதியில் இருக்கும்போது, 'ஜனங்கள் என்னை யாரென்று சொல் லுகிறார்கள்?' என்று இயேசு கேட்டார். 'யோவான் ஸ்நானகன், எலியா, எரே மியா' என்று அவர்கள் பதில்சொன்ன பிறகு, 'நான் யாரென்று நீங்கள் நினைக் கிறீர்கள்?' என்று கேட்டார். அவர்கள் விசுவாசத்தை ஆழப்படுத்த இயேசு விரும்பினார். அவர்கள் தங்கள் வாயால் தன்னை மேசியா என்று அறிக்கையிட வேண்டுமென்று அவர் விரும்பினார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக, 'நீர் ஜீவ னுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து' என்றான். இந்த எண்ணத்தை ஆவியானவர் மாத்திரமே தந்திருக்க முடியும். பேதுருவின் விசுவாசத்தை இயேசு உறுதிப்படுத்தினார். 'நீ பேதுருவாய் (கூழாங்கல்) இருக்கிறாய். இந்தக் கல்லின் மேல் (பாறை=இயேசுவே கிறிஸ்து எனும் அறிக்கை) என் சபையைக் கட்டு வேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வது இல்லை' என்றார் இயேசு. சபையானது இயேசு கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டுள்ளது. வீடு கட்டுகிறவர் களால் ஆகாது என்று தள்ளப்பட்ட மூலைக்கல் இயேசுவே. 1பேதுரு 2:4-8. அந்தக் கல் இயேசுவே என்பதை வேதாகமம் தெளிவுப்படுத்துகிறது. 'தேவ னையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது: அவரால் என் இரட்சிப்பு வரும். அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கல மானவர்; நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை' சங் 62:1,2. இயேசுவை யன்றி வேறு அஸ்திபாரம் இல்லை. 1கொரி 3:11. பாதாளத்தின் வாசல்களால் சபையை மேற்கொள்ளமுடியாது. பேதுருவோ சாத்தானால் மேற்கொள்ளப் பட்டார். மூன்றுமுறை தனது கர்த்தரை மறுதலித்தார். இயேசுவின் ஊழியத்தை உணராதவராக, எருசலேமுக்கு இயேசு செல்வதைத் தடுக்க முயன்றார். அப் போது இயேசு, 'எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே' என்று பேதுருவிடம் சொன்னார். பேதுருவின் பெலவீனங்கள்மேல் அல்ல, இயேசுவின் பெலங் கள்மேலேயே சபை கட்டப்பட்டது. இந்த உண்மையைப் பேதுருவும் உணர்ந்து கொண்டார். இயேசுவே பேதுருவுக்குப் பெலனாக விளங்கினார்.

**'பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களைப்' பேதுருவிடமும் மற்ற சீடர்களிடமும் இயேசு கொடுத்ததாக மத் 16:19 இல் பார்க்கிறோமே. அவை என்ன?**

கதவுகளைத் திறப்பதற்கும் மூடுவதற்கும் திறவுகோல்களைப் பயன் படுத்துவோம். இயேசுவே வாசல், அவராலேயல்லாமல் ஒருவனும் பிதாவி

னிடத்தில் வரான். யோவான் 14:6. 'நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்பட வில்லை' அப் 4:12. வேதவாக்கியங்களெல்லாம் இயேசுவைக் குறித்து சாட்சி கொடுக்கின்றன. யோவா 5:39. மேசியாவைப்பற்றிய 'அறிவாகிய திறவுகோலைப்' பரிசேயர்களும் வேதபாரகர்களும் எடுத்துக்கொண்டார்கள். லூக்கா 11:52. இதன்மூலம் பரலோகத்தை அடைத்துப்போட்டார்கள். பாவமன்னிப்பு, ஆக்கினையிலிருந்து விடுதலை, கல்வாரியில் சிந்திய இரத்தத்தால் சமாதானம் ஆகியவற்றை அடையும் விதம் பற்றிய இயேசுவின் சொந்த வார்த்தைகளும் அவருடைய போதகங்களுமே பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள் ஆகும். மேசியாவாகிய இயேசுவைப் பற்றிய அறிவு பரலோகத்தைத் திறக்கிறது. ஏசாயா 22:22.

**சாத்தானால் அற்புதங்களைச் செய்யமுடியுமா?**

ஆம், முடியும். பிசாசுகளின் ஆவிகள் அற்புதங்களைச் செய்யும் என்று யோவானுக்குக் காட்டப்பட்டது. வெளி 16:14. ஆயிரக்கணக்கானோர் அந்த அற்புதங்களை ஏற்றுக்கொண்டு, அதனால் மிருகத்தின் முத்திரையைப் பெறுவார்கள் என்று வெளி 19:20 இலும் 13:14 இலும் பார்க்கிறோம். சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் சாத்தான் மக்களை ஏமாற்றுவான் என்று 2தெச 2:9-11 இல் பார்க்கிறோம். அவர்கள் மோசம் போவதற்கான காரணத்தை வசனம் 10 இல் பார்க்கிறோம். 'சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியினால் அப்படி நடக்கும்' 2தெச 2:10. சத்தியமாகிய இயேசுவை அறிந்துகொண்டால் மாத்திரமே மோசம் போகாமல் தப்பிக்கலாம். 'வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்க வேண்டும். அந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சம் இல்லை' ஏசா 8:20. 'இயேசுவின் நாமத்தால் நாங்கள் அற்புதத்தைச் செய்தோம்' என்று சொல்கிற அநேகரிடம், 'நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்' என்று இயேசு சொல்லுவார். மத் 7:23. இங்கே அக்கிரமம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே வார்த்தைதான் 1யோவான் 3:4 இல் 'மீறுதல்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'பாவம் செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்' 1யோவான் 3:4. பத்துக்கற்பனையை மீறும்படியும், நம்முடைய ஒவ்வொரு நரம்பிலும் சதையிலும் இயேசு எழுதி வைத்துள்ள உடல்நல விதிகளை மீறும்படியும் அற்புதங்கள் வழிநடத்துமானால், அந்த அற்புதங்கள் தேவனிடமிருந்து வந்தவை அல்ல.

**கன்னிமரியாளைப் பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது?**

தேவகுமாரன் ஒரு கன்னியிடத்தில் பிறந்தார் என்பது வேதாகமச் சத்தியங்களில் முக்கியமானது. அதைப் பற்றி 700 ஆண்டுகளுக்கு முன்னராகவே ஏசாயா தீர்க்கதரிசி முன்னுரைத்திருக்கிறார். ஏசாயா 7:14. மரியாள் கர்ப்பமானபோது, அதன் முக்கியத்துவத்தைக் காபிரியேல் தூதன் யோசேப்புக்கு விளக்கினார். 'அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில், அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்' என்றார். மத் 1:21. 'அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது' என்றும் காபிரியேல் சொன்னார். மத் 1:20. 'தேவபக்திக்குரிய இரகசியமானது மகா மேன்மையுள்ளதே. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்' என்று பவுல் சொன்னது சரிதான். 1தீமோ 3:16. ஆனால், 'மரியாளிடம் பாவமில்லை' என்று வேதாகமம் சொல்லவில்லை. ரோமர் 3:23. மரியாள் பக்தியும் நீதியுமுள்ள

ஒரு பெண்மணி. ஆனால், அவரைத் தொழவேண்டுமென்று வேதாகமம் போதிக்க வில்லை. தொழுகை தேவனுக்கு மட்டுமே உரியது. வெளி 14:7. தொழுவதற்காக தூதனின் பாதத்தில் யோவான் விழுந்தபோது, 'அப்படிச் செய்யாதே, தேவனைத் தொழுதுகொள்' என்று தூதன் சொன்னார். வெளி 19:10. மரியாளைக் கனப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறவர்கள் கானாவூர் கல்யாணத்தில் அவர் சொன்ன படி நடக்கவேண்டும். அவருடைய தாய் (மரியாள்) வேலைக்காரரை நோக்கி, 'அவர் உங்களுக்கு என்ன சொல்கிறாரோ, அதன்படி செய்யுங்கள்' என்றார். யோவான் 2:5. இயேசுவுக்குக் கீழ்ப்படிவதன்மூலம் மரியாளைக் கனப்படுத்தலாம்.

**தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும். வெளிப்படுத்தல் 14:12.**

**மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? ரோமர் 6:16.**

**நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். யோவான் 14:15.**

**தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்களென்று கூறினான். வெளிப்படுத்தல் 14:7.**

# 24. மெய்யான சபை

| | |
|---|---|
| வெளி 14:6-12 | உலகத்தின் இறுதி நேரத்தில் தேவனுடைய மெய்யான சபை தரும் செய்தி. |
| வெளி 14:6 | (கடைசிப் பகுதி) தேவனுடைய மெய்யான சபை சுவி சேஷத்தைப் பிரசங்கிக்கிறது. (பார்க்கவும் எபே 2:8; 1யோவா 1:7; யோவா 1:12). |
| வெளி 14:6 | தேவனுடைய மெய்யான சபையானது உலக அளவில் ஊழியம் செய்யும். (மத் 28:19,20; மாற்கு 16:15). |
| வெளி 14:7 | (முதற்பாகம்) தங்களுடைய வாழ்க்கை மூலம் தேவனை மகிமைப்படுத்துமாறு அனைவரையும் தேவனுடைய மெய் யான சபை அழைக்கிறது. (பார்க்கவும்: 1கொரி 6:19,20; 10:31). |
| வெளி 14:7 | (நடுப்பாகம்) தேவனுடைய நியாயத்தீர்ப்பின் வேளை வந்துவிட்டதென தேவனுடைய மெய்யான சபை அறிவிக் கிறது. (பார்க்கவும்: மத் 12:33,37; அப் 24:25; தானி 7:9,14). |
| வெளி 14:7 | (கடைசிப் பகுதி) சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளுமாறு மனிதஇனம் முழுவதையும் தேவனுடைய மெய்யான சபை அழைக்கிறது. |
| வெளி 4:11 | 'தேவன் நம்மை உண்டாக்கினார்' என்பதே தொழுகையின் அடிப்படை உண்மை. |
| யாத் 20:8-11 | ஓய்வுநாளே சிருஷ்டிப்பின் அடையாளம். |
| அதி 2:1-3 | தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற ஏதேனின் வாழ்க்கைக்குத் தேவனுடைய மெய்யான சபை நம்மை மீண்டும் வழிநடத்துகிறது. |
| வெளி 14:12 | இயேசுவில் விசுவாசமாயிருக்குமாறும், அவருடைய கற் பனைக்குக் கீழ்ப்படியுமாறும் மக்களைத் தேவனுடைய மெய்யான சபை வேண்டுகிறது. |
| வெளி 14:8 | ஆவிக்குரிய பாபிலோனுடைய தவறான கோட்பாடுகளை யும் தவறுகளையும் குறித்து தேவனுடைய மெய்யான சபை எச்சரிக்கிறது. |
| வெளி 14:9-11 | மரணத்தைப் பற்றிய உண்மையைத் தேவனுடைய மெய்யான சபை கற்பிக்கிறது. (மேலும் பார்க்க யோவா 11:11-14; பிர 9:5; சங் 146:3,4). |
| யோவா 10:16 | தமக்குக் கீழ்ப்படிவதற்கும், தம்முடைய உண்மையான இயக்கத்தில் பங்குபெறுவதற்கும் தமது மக்களை மெய் மேய்ப்பனாம் இயேசு அழைக்கிறார். |
| வெளி 22:17 | ஆவியும், மணவாட்டியும் 'வா' என்கிறார்கள். தம்முடைய சர்வவல்லமைமிக்க ஆவியானவர் மூலமாக வும், கிறிஸ் |

துவை மையமாகக் கொண்டு சத்தியத்தைப் போதிக்கிற சபையின் மூலமாகவும் தம்முடைய பிள்ளைகளாகும்படி இயேசு நம்மை மனப்பூர்வமாக வேண்டுகிறார்.

**தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்களென்று கூறினான். வெளிப்படுத்தல் 14:7.**

**இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். யோவான் 10:16.**

**ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன். வெளிப்படுத்தல் 22:17.**

**கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவை களுமாயிருக்கிறது என்றார்கள். வெளி 4:11.**

# 25. ஆவிக்குரிய பாபிலோன் வெளிப்படுத்தல் 17

| | |
|---|---|
| வெளி 17:1-5 | சத்தியத்தை விட்டுக்கொடுத்து உருவான பொய்ச் சபையைப் பற்றித் தேவன் தரும் விவரங்கள். |
| தானி 8:12 | சத்தியம் தரையில் தள்ளப்பட்டது. |
| எபே 5:31-33 | இயேசுவுடைய மணவாட்டியாக அவருடைய சபை காட்டப்படுகிறது. |
| எரே 6:2 | சீயோன் குமாரத்தி என்று சபை அழைக்கப்படுகிறது. |
| ஏசா 51:16 | சீயோன் என்னுடைய ஜனம். |
| வெளி 12:1-3 | ‘வானத்தில் தோன்றும் அழகிய பெண்’ என்று கிறிஸ்தவ சபையைப் புதிய ஏற்பாடு சுட்டிக்காட்டுகிறது. |
| வெளி 17:1,2 | வெளி 17 இல் வரும் வேசி விழுந்துபோன சபையைக் குறிக்கிறது. |
| வெளி 17:4 | வேசி அணிந்திருப்பதாகக் கூறப்படும் உடையின் நிறம் இரத்தாம்பரமும் சிவப்பும் ஆகும். ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை பயன்படுத்தும் நிறங்களும் இவைகளே. இதன் தலைமை அலுவலகம் ஏழு குன்றுகள் மேல் அமைந்துள்ள நகரமாகிய ரோமில் இருக்கிறது. (வசனம் 9). |
| வெளி 17:5 | தேவனைவிட்டு விலகிப்போன இந்த அமைப்பானது பழைய ஏற்பாட்டுப் பாபிலோனுடைய புதுத்தோற்றமாயிருக்கிறது. |
| ஆதி 11:9 | ‘பாபிலோன்’ என்றால், ‘குழப்பம்’ என்று பொருள். தேவன் மொழியில் குழப்பத்தை உண்டாக்கினார். ஆவிக்குரிய பாபிலோனோ கொள்கைக் குழப்பத்தில் இருக்கிறது. |
| தானி 4:30 | மனிதபாரம்பரியங்களையும், செயல்களையும் அடிப்படையாகக் கொண்டு மனித அமைப்புகளால் உருவானது இந்தப் பாபிலோன். (ஏசா 45:22). |
| எரே 51:47 | பழங்காலப் பாபிலோன் தனது கோயில்களில் விக்கிரகங்களை நிறைத்தது. அதுபோலவே ஆவிக்குரிய பாபிலோனும் இருக்கும். |
| யாத் 20:4,5 | யாதொரு சிலையையும் உண்டாக்கவேண்டாம். |
| எசேக் 8:14 | தாவரங்களின் கடவுளாகிய தம்மூசுக்காகப் பெண்கள் அழுதுகொண்டிருந்தார்கள். முன்னோர்கள் அல்லது பரிசுத்தவான்களைத் தொழுவது பாபிலோனில் சாதாரணமான வழக்கமாயிருந்தது. |

| | |
|---|---|
| பிர 9:5 | மரித்தோர் ஒன்றும் அறியார்கள். |
| சங் 115:17 | மரித்தவர்கள் கர்த்தரைத் துதியார்கள். |
| எசேக் 8:16 | சூரிய வணக்கம் தேவனுடைய ஆலயத்தில் நுழைகிறது. |
| எசேக் 20:12,20 | ஓய்வுநாள் தேவனுடைய அடையாளமாயிருக்கிறது. |
| வெளி 17:12-14 | ‘தேவனுடைய ராஜ்யம் பூமியிலே நிறுவப்பட்டுள்ளது. அதற்குப் பொதுவான தொழுகையை ஏற்படுத்த வேண்டும். அதற்குப் பொதுவான தொழுகைநாள் வேண்டும். இதன் மூலம் மனித இனம் ஒன்றுபடும்’ என்று அதை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்கும். |
| வெளி 18:1 | ஆன்மிக நெருக்கடி நிறைந்த நிலையில் தேவனுடைய மகிமையினால் பூமி பிரகாசமாகும். |
| வெளி 18:2-4 | பாபிலோனைவிட்டு வெளியே வருமாறு தேவனுடைய கடைசி அழைப்புச் சொல்லுகிறது. |
| யோவா 3:4 | தேவனுடைய பிரமாணத்தை மீறுவதே பாவம். இன்னும் தேவனுடைய கற்பனையை மீறிக்கொண்டிருக்கும் சபைகளில் உள்ள அவருடைய மக்கள் அவருடைய ஓய்வுநாளைக் கைக்கொள்ளும் மக்களுடன் பங்குபெறுபவர்களாக மாறவேண்டுமென்பதே தேவனுடைய கடைசி அழைப்பாயிருக்கிறது. |
| வெளி 14:12 | இவர்கள் தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளுகிறவர்கள். இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுகிறவர்கள். |

**மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்;**

**5. நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக்குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். யாத்திராகமம் 20:4,5.**

# 26. தீர்க்கதரிசன வரம்

| | |
|---|---|
| ஆமோஸ் 3:7 | தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாகத் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார். |
| எண் 12:6 | தரிசனங்கள், சொப்பனங்கள் மூலமாகத் தேவன் தமது சித்தத்தை மக்களுக்குத் தெரியப்படுத்துகிறார். |
| வெளி 12:17 | தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சி உடையவர்களுமாகிய தேவமக்களுடன் வலுசர்ப்பம் யுத்தம்செய்தது. |
| வெளி 19:10 | இயேசுவின் சாட்சி தீர்க்கதரிசன வரமாயிருக்கிறது. |
| வெளி 22:6, 9 | யோவானுக்குக் காட்சியளித்த தூதன் தீர்க்கதரிசன தூதனாயிருந்தான். அதே தூதனே கடைசி நாட்களிலும் காட்சியளிக்கிறார். |
| எபே 4:8, 11- 15 | தீர்க்கதரிசன வரம் இயேசுவினுடைய வரங்களில் ஒன்றாயிருக்கிறது. கடைசி வரையிலும் தேவனுடைய சபையில் இந்த வரம் நீடித்திருக்கும். |
| 1கொரி 1:4-7 | யாதொரு வரத்திலும் குறையில்லாதவர்களாய் இயேசுவின் வருகைக்குச் சபை காத்துக்கொண்டிருக்கிறது. |
| 1 யோவா 4:1 | 'ஆவிகளைச் சோதித்தறியும்படி' வேதாகமம் கூறுகிறது. வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் வேதாகம வசனங்களுக்கு ஒத்ததாக இருக்கவேண்டும். (மத் 24:5,11,24) அவரே உண்மையான தீர்க்கதரிசி. |

## உண்மை தீர்க்கதரிசிக்கான சோதனை

| | |
|---|---|
| உபா 13:1-4 | தேவனுடைய சித்தத்துக்குக் கீழ்ப்படியும்படி உண்மையான தீர்க்கதரிசிகள் எப்போதும் வற்புறுத்துவார்கள். |
| எரே 28:8,9 | உண்மையான தீர்க்கதரிசிகளுடைய தீர்க்கதரிசனமானது நிபந்தனைத் தீர்க்கதரிசனமாக இல்லாவிட்டால், அது நிச்சயம் நிறைவேறும். |
| ஏசா 8:19,20 | வேதத்தின்படியும், சாட்சியாகமத்தின்படியும் சொல்லாவிட்டால் அவர்களிடத்தில் விடியற்காலத்து வெளிச்சம் இல்லை. |
| ஏசேக் 7:26 | பிரமாணத்துக்கு அவர்கள் கீழ்ப்படியாவிட்டால், தேவன் தரிசனத்தை நீக்கிவிடுவார். |
| 1யோவா 4:1-3 | இயேசுவே மையம் என்பதை உண்மையான தீர்க்கதரிசிகள் வற்புறுத்துவார்கள். |
| தானி 10:17 | தரிசனத்தின்போது உண்மையான தீர்க்கதரிசி சுவாசிக்க மாட்டார். |

| | |
|---|---|
| மத் 7:15-16 | தீர்க்கதரிசிகளின் வாழ்க்கையினுடைய கனிகளாலே அவர்களுடைய தெய்வீக நற்சான்றுகள் வெளியாகும். |
| 2நாளா 20:20 | அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள். அப்போது நீங்கள் செழித்தோங்குவீர்கள். |
| 1கொரி 12:27,28 | முதல் வருகைக்குத் தம்முடைய மக்களை ஆயத்தப் படுத்துவதற்காக யோவான் ஸ்நானகனை அனுப்பினார். அதுபோன்று நெருக்கடியான கட்டத்தின் மூலமாக அவருடைய சபையில் கற்பனைகளைக் கைக் கொண்டு அதை நடத்துவதற்கு உண்மையான தீர்க்கதரிசிகளைத் தேவன் அமர்த்துகிறார். இயேசுவினுடைய கற்பனைகளைக் கைக் கொள்ளும் சபைக்குக் கடைசி நாட்களில் தீர்க்கதரிசன ஆவியின் வரத்தைத் தந்து ஆசீர்வதிப்பதாகத் தேவன் வாக்குப்பண்ணியுள்ளார். |

எலன் ஜி. ஒயிட் அவர்களுடைய எழுத்துக்களின் மூலமாக மெய்யான தீர்க்கதரிசன வரம் சபையில் வெளிப்படுத்தப்பட்டிருப்பதாக செவந்த்-டே அட்வென்டிஸ்ட்டுகள் நம்புகிறார்கள். இவருடைய எழுத்துக்கள் எந்த வழியிலும் வேதாகமத்தின் இடத்தை எடுத்துக்கொள்வதில்லை. கடைசி நாட்களில் தேவனுடைய சபையில் தீர்க்கதரிசன வரம் வெளிப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப் படுகிற வெளி 12:17 இன் நிறைவேறுதலாக அவை இருக்கிறது.

**அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும் போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டியதல்லவோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ?**

**வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை. ஏசாயா 8:19,20.**

# 27. ஞானஸ்நானம்

| | |
|---|---|
| மத் 28:19,20 | ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளை யும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத் திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள். |
| மாற்கு 16:16 | விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட் சிக்கப்படுவான். |
| யோவா 3:5 | ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான். |
| எபே 4:5 | ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம். |
| மத் 3:13-17 | வயது வந்தபோது இயேசு யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றார். |
| யோவா 3:23 | வேதாகமத் திருமுழுக்கின்படி ஞானஸ்நானத்திற்கு அதிக தண்ணீர் தேவை. |
| மாற்கு 1:9,10 | இயேசு தண்ணீருக்குள் போய் பின்னர் தண்ணீரிலிருந்து வெளியே வந்தார். அவர் முழுவதும் நீரில் மூழ்கியிருந்தார். |
| அப் 8:38 | பிலிப்பும் மந்திரியும் தண்ணீருக்குள் சென்றார்கள். தண்ணீரில் மூழ்க்கி மந்திரிக்குப் பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்தார். |
| கொலோ 2:12 | ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவுடன் அடக்கம்பண்ணப் படுகிறோம். |
| ரோம 6:3-6 | ஞானஸ்நானம் உயிர்த்தெழுதலின் அடையாளமாயிருக்கிறது. பழைய வாழ்க்கைக்கு மரித்து அடக்கம்பண்ணப்பட்டு இயேசுவில்புதியவாழ்க்கைக்குவெளிப்படுதலைக்குறிக்கிறது. |
| அப் 2:38 | மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள். |
| மாற்கு 16:16 | எவனெல்லாம் விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுகிறானோ அவனெல்லாம் இரட்சிக்கப்படுவான். |
| அப் 2:41,42 | அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்ட வர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்கள் அப்போஸ் தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந் தார்கள். (பார்க்கவும் மத் 28:19,20). |
| 1கொரி 12:13 | ஒரே சரீரத்திற்குள்ளாக (சபை) ஞானஸ்நானம்பண்ணப் பட்டோம். (பார்க்கவும் அப் 2:46, 47). |
| மத் 28:19,20 | ஞானஸ்நானம் கொடுக்கும் உரிமையை இயேசு தம்முடைய சீடர்களுக்கு மட்டும் கொடுத்தார். சத்தியத்தைப் போதிக்கு மாறு அவர் கட்டளையிட்டார். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு அவருடைய எல்லா கட்டளைகளையும் கற்பிக்குமாறு |

அதிகாரமளித்தார், ஞானஸ்நானம் பெறுவதற்கு ஆவியான வர் உங்களைத் தூண்டு வாராயின், இயேசு கட்டளையிட்ட எல்லாவற்றையும் போதிக்கிற ஒய்வுநாளைக் கைக்கொள் ளுகிற சபையைத் தேடுங்கள்.

அப் 22:16 எழுந்து ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு.

**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**
**20. நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். மத்தேயு 28:19,20.**

**ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். யோவான் 3:5.**

**நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். 1கொரிந்தியர் 12:13.**

# 28. தசமபாகமும் கிறிஸ்தவ உக்கிராணத்துவமும்

| | |
|---|---|
| உபா 8:18 | தேவன் ஒவ்வொருவருக்கும் ஐசுவரியத்தைச் சம்பாதிப்பதற்கான பெலனைத் தருகிறார். |
| சங் 24:1 | பூமி கர்த்தருடையது. |
| ஆகாய் 2:8 | வெள்ளியும் பொன்னும் கர்த்தருடையது. |
| மல்கி 2:8-11 | தசமபாகங்களையெல்லாம் என் பண்டகசாலையிலே கொண்டு வந்து என்னைச் சோதித்துப் பாருங்கள் என்கிறார் தேவன். |
| நீதி 3: 9, 10 | நாம் தேவனை முதலாவதாக கனப்படுத்தினால் அவர் பரலோக ஆசீர்வாதங்களைப் பொழிவார். |
| மத் 6:33 | தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினால், அனைத்தும் கொடுக்கப்படும். |
| ஆதி 14:20 | இயேசுவின் மாதிரியான மெல்கிசேதேக்குக்கு ஆபிரகாம் தசமபாகம் கொடுத்தான். |
| லேவி 27:32 | தசமபாகம் என்பது பத்தில் ஒரு பங்காகும். |
| மத் 23:32 | நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் செய்ய வேண்டும்; தசமபாகமும் கொடுக்கவேண்டும். |
| 2கொரி 9:7 | உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். |
| 1கொரி 9:13,14 | சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டும். |
| 1தீமோ 5:18 | வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான். |
| நீதி 11:24,25 | உதாரகுணமுள்ளவனைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார். |
| உபா 14:22 | தசமபாகத்தை உண்மையாய்க் கொடுக்கும்படி இஸ்ரவேலருக்குச் சொன்னது இன்றைக்குப் பொருத்தமானதே. |
| யோவா 13:17 | நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால் இவை களைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். |

**அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். 2கொரிந்தியர் 9:7.**

# 29. கிறிஸ்தவத் தரங்கள்

| | |
|---|---|
| 2 கொரி 5:20 | கிறிஸ்துவுக்கு ஸ்தானாபதிகள். |
| ஏசா 62:10 | ஜனத்துக்கு வழியைச் செவ்வைப்படுத்துங்கள். |
| 1 யோவா 2:15-17 | உலகத்திலும்உலகத்திலுள்ளவைகளிலும்அன்புகூராதிருங்கள். |
| ரோமர் 12:1,2 | உலகத்துக்கு ஒத்த மாற்றம் வேண்டா. உங்கள் மனதைப் புதிதாக்குவதால் ஏற்படும் நல்ல மாற்றமே அவசியமானது. |
| பிலி 4:7,8 | நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவை களோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ள வைகளெவைகளோ அவைகளையே சிந்தித்துக்கொண் டிருங்கள். |
| 2கொரி 3:18 | இதோ நாம் மறுரூபப்படுகிறோம். |
| சங் 11:5 | கொடுமையில் பிரியமுள்ளவன் கர்த்தரை வெறுக்கிறான். |
| சங் 119:37 | மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கும். |
| பிலி 2:5 | கிறிஸ்துவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. |
| 1தீமோ 2:9,10 | பொன்னினாலாவது முத்துக்களினாலாவது, விலையேறப் பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல் தகுதியான வஸ்திரத்தினாலும் நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்கவேண்டும். |
| 1பேதுரு 3:2-5 | உண்மையான அலங்காரம் என்பது வெளிப்படையான அலங்கரிப்பு அன்று; இதயத்தை அழகுபடுத்துவதே உண்மை யான அலங்காரம். |
| ஆதி 35:2-4 | தேவனைப் பெத்தேலில் யாக்கோபு சந்தித்தான். தன் வீட்டாரை அந்நிய தெய்வங்களையும், நகைகளையும் அகற்றுமாறும், அழிக்குமாறும் கட்டளையிட்டான். |
| யாத் 33:3-6 | இஸ்ரவேலர் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் நுழையும் போது தங்களது ஆபரணங்களைக் கழற்றிப்போட்டார்கள். |
| ஏசா 3:16-24 | தம்முடைய பிள்ளைகள் செயற்கையாகத் தங்களை அலங் கரித்து, தங்களுடைய குணஅழகில் குறைவுள்ளவர்களாக இருக்கும்போது தேவன் தம் அதிருப்தியை வெளிப்படுத்து கிறார். |
| ஓசி 2:13 | அணிகலன்கள் விக்கிரகங்களுக்கும் தேவனை மறந்து போவதற்கும் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது. |
| வெளி 17:1-5 | பொய்யான சபை தன்னை அலங்கரித்து அழகுபடுத்திக் கொண்டுள்ளதாக தேவனால் சித்திரிக்கப்படுகிறது. அச்சபை உண்மையான அன்பராகிய இயேசு கிறிஸ்துவைவிட்டு விட்டது. |

| | |
|---|---|
| ஏசா 61:1-3 | இயேசு நமக்கு உண்மையான அழகை அளித்துள்ளார். இரட்சிப்பென்னும் ஆடையை அவர் நமக்கு உடுத்துவிக்கிறார். சமாதானம், சந்தோஷம், மன்னிப்பு, குற்றஞ்சாட்டுதலிலிருந்து விடுதலை, மகிழ்ச்சி ஆகியவற்றை நமக்கு அளிக்கிறார். (பார்க்கவும்: ஏசா 61:10). |
| யோவா 8:29 | நான் எப்போதும் அவருக்குப் பிரியமானவைகளையே செய்கிறேன். |
| யோவா 13:17 | தேவனுடைய சித்தத்தை அறிவதினாலும், அதன்படி செய்வதினாலும் மகிழ்ச்சி வருகிறது. |
| சங் 40:8 | என் தேவனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன். |

**அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.**
**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**
**ரோமர் 12:1,2.**

**கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள். பிலிப்பியர் 4:8.**

# 30. பரிசுத்த ஆவியானவர்

| | |
|---|---|
| யோவா 16:7 | தெய்வீக நபரான பரிசுத்த ஆவியானவரை இயேசு அறிவிக்கும்போது அவரை 'ஆவியானவர்' என்றே அழைத்தார்; ஆவி என்றல்ல. |
| யோவா 16:8 | பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக் கண்டிக்கிறார். |
| மத் 28:19,20 | பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தின் ஒரு பகுதியாயிருக்கிறார். |
| எபே 4:30 | பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்த முடியும். |
| ஆதி 6:3 | நாம் சரியானதைச் செய்யுமாறு ஆவியானவர் நம்முடன் கடுமையாகப் போராடுகிறார். |
| ரோமர் 8:26 | பரிசுத்த ஆவியானவர் நமக்காகப் பரிந்துபேசுகிறார். |
| ரோமர் 8:27 | ஆவியானவருக்குச் சிந்தையுண்டு. |
| ரோமர் 8:16 | நாம் தேவனுடைய பிள்ளைகளென ஆவியானவர் சாட்சியிடுகிறார். |
| கலா 5:22-26 | நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் அவருடைய கனிகளை உருவாக்குகிறார். |
| எசேக் 36:26,27 | பரிசுத்த ஆவியானவர் நம்முடைய குணத்தில் மறுமலர்ச்சிகளை, மாறுதல்களைச் செய்து நமக்குப் புது இதயத்தைத் தருகிறார். |
| ஆதி 1:2 | சிருஷ்டிப்பில் பிதாவுடனும் குமாரனுடனும் பரிசுத்த ஆவியானவர் பங்கு பெற்றார். புதிய சிருஷ்டிப்பிலும் அவர் பங்கு கொள்கிறார். |
| ரோமர் 8:11 | நாம் மரணத்தைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வல்லமையினால் அவருடைய விசுவாசமுள்ள மக்களை உயிர்ப்பிப்பார். |
| யோவா 16:13,14 | பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துவார். |
| யோவா 14:26 | பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆசிரியராக இருக்கிறார். |
| மத் 12:31-32 | பரிசுத்த ஆவியானவருடைய கண்டித்தலையும் கடிந்துகொள்ளுதலையும் அறிவுரைகளையும் முழுவதுமாகப் புறக்கணித்து, தொடர்ச்சியாக அவரை விரோதித்துச் செயல்பட்டால்அந்தப்பாவம்ஒருபோதும்மன்னிக்கப்படாது. |
| ரோமர் 8:14 | ஆவியானவர் நம்மை வழிநடத்த நாம் அனுமதிக்கும்போது நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். |

## பரிசுத்த ஆவியானவர்பற்றிப் பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள்

**அந்நிய பாஷையைக் குறித்து வேதாகமம் கற்பிப்பது என்ன?**

அந்நிய பாஷை வரத்தைக் கருத்தாய் ஆராயும்பொழுது பின்வரும் முக்கியக் குறிப்புகள் தெரிகின்றன.

1. மொழித்தடையைத் தளர்த்தவும் உண்மையான சத்தியத்தையும் சுவிசேஷத்தையும் தெரிவிக்கவும் அப்போஸ்தலர் 2 இல் அந்நியபாஷை வரம் கொடுக்கப்பட்டது. அது ஓர் உண்மையான மொழி. (அப் 2:4,8).

2. 'குளோஸலாலிய' என்னும் வார்த்தையின் பொருள் 'மொழிகள்' என்பதாகும். (பார்க்கவும் வெளி 14:6).

3. அப்போஸ்தலரில் அந்நியபாஷைகள் மூன்று இடங்களில் மட்டுமே குறிப்பிடப்பட்டு உள்ளன. ஒவ்வொரு இடத்திலும், வேறு மொழி பேசுகிறவர்கள் இருந்தார்கள்.

   அ. அப்போஸ்தலர் 2 இல் அந்நியபாஷை உண்மையான ஒரு மொழி ஆகும். (வசனங்கள் 8,11).

   ஆ. அப்போஸ்தலர் 10 இல், கொர்நேலியுவும் அவனுடைய வீட்டாரும் இயேசுவை ஏற்றுக்கொண்டபின் அந்நிய பாஷைகளைப் பேசினார்கள். பேதுரு ஒரு யூதன். கொர்நேலியு ஒரு கிரேக்கன். பேதுரு புரிந்துகொள்ளும்படியாக இயல்பான மொழியைக் கொர்நேலியு பேசினார். இது கொர்நேலியுவினுடைய உண்மையான மனமாற்றத்தைப் பேதுருவுக்கு உறுதிப்படுத்தியது. (சீஷர்கள் பெற்றுக்கொண்ட அதே ஆவி என்று கூறுகிறது.)

   இ. தேச அளவிலான அப்போஸ்தலனாகிய பவுல் எபேசுவில் அந்நிய பாஷையைச் சான்று பகர்ந்தார். (அப் 19).

அப்போஸ்தல நடபடிகளில் அந்நியபாஷையைப் பற்றி கூறும் இடங்களிலெல்லாம் பல பாஷைக்காரர்கள் இருந்ததைப் பார்க்க முடிகிறது.

4. கொரிந்து சபையானது பவுலுக்குப் பிரச்சனையாக இருந்த சபை ஆகும். அங்கே பலவிதமான போராட்டங்கள் இருந்தன. உண்மையான ஒரு வரத்தைத் தவறான முறையில் அங்கு பயன்படுத்தினார்கள். அதைச் சரிசெய்வதற்கு சில வழிகாட்டுதல்களை அவர் ஏற்படுத்தினார்.

   அ. ஒரு சமயத்தில் ஒரு நபர் மட்டுமே பேசவேண்டும். 1கொரி 14:27.

   ஆ. அதற்கு அர்த்தம் சொல்லுகிறவர் ஒருவர் எப்போதும் இருக்கவேண்டும். 1கொரி 14:28.

   இ. ஓர் ஆராதனையில் இரண்டு அல்லது மூன்று பேர் மாத்திரமே பேசவேண்டும். 1கொரி 14:27.

   ஈ. பேசுகிற காரியம் என்ன என்பது பேசுபவருக்குத் தெரியும். பேசுகிற பேச்சு அவருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். 1கொரி 14:32.

   உ. தேவன் குழப்பத்திற்குக் காரணர் அல்லர். 1கொரி 14:33.

5. அர்த்தத்தோடு தகவல் பரிமாற்றம் இருக்கவேண்டும் என்பதுதான் பவுலுடைய ஆசை. 1கொரி 14:9,19.

6. நம்முடைய ஜெபங்களைப் பரலோகத்தின் மொழியில் மாற்றிக் கொடுப்பது ஆவியானவரின் வேலை. எனவே, நாம் அறியாத மொழியில் நாம் பேசு

வது நமக்குத் தேவையில்லாத ஒன்று. ரோமர் 8:26.

7. தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறவைகளில் உயர்வானது நம்முடைய சிந்தை. அந்தச் சிந்தையை வேறே வல்லமை கட்டுப்படுத்த அனுமதிப்பது நமக்கு ஆபத்தானது. சிந்தையில்தான் புத்தி வாசம்பண்ணுகிறது. சிந்தை மூலமாகவே நாம் தேவனைத் தொழுதுகொள்கிறோம். சிந்தையை ஒதுக்கி விட்டு செய்யப்படும் ஆராதனையானது தவறானது ஆகிவிடும். பிலி 2: 5.
8. ஆவிக்குரிய வரங்கள் பலவற்றில் அந்நியபாஷை என்பதும் ஒன்று. பரி சுத்த ஆவியானவரைப் பெற்றவர் என்பதற்கு இது மட்டுமே அடையாளம் என்று சொல்லமுடியாது. சாட்சியாய் இருத்தலே ஆவியானவரைப் பெற்ற தற்கு அடையாளம். அப் 1:6-8. எல்லோருக்கும் அந்நியபாஷை வரம் இருக்காது. தேவனுடைய ஊழியம் வளருவதற்கு அது தேவையாக இருக் குமானால் ஆண்டவர் அந்த வரத்தைத் தருவார். 1கொரி 12:6-11,18,29,30.

**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ளவேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ரோமர் 8:26.**

**ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும் இருக்கக்கடவோம். கலாத்தியர் 5:22-26.**

# அன்றாட வாழ்க்கைக்கான கிறிஸ்தவம்

## உள்ளத்தின் தேவைகளைச் சந்திக்கும் பதில்கள்

அதற்கு இயேசு: நானே வழியும்
சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்;
என்னாலேயல்லாமல் ஒருவனும்
பிதாவினிடத்தில் வரான்.
என்னை அறிந்தீர்களானால் என்
பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல்
நீங்கள் அவரை அறிந்தும் அவரைக்
கண்டும் இருக்கிறீர்கள் என்றார்.
யோவான் 14:6,7.

# I. சத்தியத்தைக் கண்டறிதல்

1. திறந்த மனதுடன் வேதாகமத்தைப் படிக்கவேண்டும். (மத் 11:25)
2. முழு இதயத்தோடு தேவனுடைய வார்த்தையைத் தேடும்போது, தேவன் சத்தியத்தை வெளிப்படுத்துவார் என்று நம்புங்கள். (யோ 8:32; எரே 29:13)
3. பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்தலுக்காகத் தொடர்ந்து ஜெபியுங்கள். ஆவியானவர் நம்மைச் சத்தியத்திற்குள் வழிநடத்துவார் என்று தேவன் வாக்குப்பண்ணியுள்ளார். (யோ 16:13)
4. இயன்றவரையில் கொடுக்கப்பட்டுள்ள ஆய்வுப்பொருளின் வேதாகமப் பகுதிகள் அனைத்தையும் வாசிக்க முயற்சிசெய்யுங்கள். (ஏசா 28:9,10; 1கொரி 1:13)
5. தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம் உங்களுக்கு வெளிப்படுத்து கின்ற சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். (2பேதுரு 1:2; யோ 17:17)
6. கடந்தகாலச்சிந்தனை முறைகளில் எந்த மாற்றமும் செய்வதற்கு ஆயத்தமா யிருக்கவேண்டும். சத்தியத்திற்காக நீங்கள் வாழ்வதற்கு ஆயத்தமாக இல்லாவிடில், நீங்கள் ஒருபோதும் சத்தியத்தை அறிந்துகொள்ளமாட் டீர்கள். (யோ 7:17)
7. தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்திற்கு உங்களுடைய சொந்தக் கருத் துக்களை ஒப்படைக்க ஆயத்தமாயிருங்கள். (வெளி 14:12; யோ 17:17)
8. வேதாகமம் தெளிவாகக் கற்பிப்பதிலிருந்து உங்களது மனதை மாற்ற முயற் சிக்கும் எந்த ஒரு ஆலோசகரது கருத்தையும் நீங்கள் கேட்கவேண்டாம். (நீதி 19:27)
9. வழியும் சத்தியமும் ஜீவனுமுமாயிருக்கிற இயேசுவை நாம் நெருங்கிச் சேருவதற்கே எல்லாச் சத்தியங்களும் நம்மை வழிநடத்துகின்றன. நீங்கள் படித்துக்கொண்டிருக்கின்ற ஒவ்வொரு ஆய்வுப்பொருளிலும் இயேசுவைத் தேடுங்கள். 'இப்பகுதி இயேசுவண்டை நான் இன்னும் நெருங்கிச்சேர எவ் வாறு வழி நடத்துகிறது?' என்று கேட்டுப்பாருங்கள். (யோவான் 14:6) .

**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். யோவான் 8:32.**

**அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். யோவான் 14:6.**

## 2. ஜெப நியதிகள்:

### உண்மையாகவே பதிலைப் பெறுவது எப்படி?

1. நம்முடைய அன்பான கர்த்தர் தம்மைத் தேடுமாறு நம்மை அழைக்கிறார். (லூக் 11:13; மத் 7:11; சங் 65:2; மாற்கு 11:23,24)
2. அவருடைய சித்தத்திற்கு உங்களது வாழ்க்கை ஒப்படைக்கப்பட்டிருக்கிறதென்று நிச்சயமாயிருங்கள். அவருடைய சித்தமில்லாத எதையும் விட்டு விடுவதற்கு ஆயத்தமாக இருங்கள். (1யோ 5:14,15; மத் 26:39)
3. உங்களைக் குழப்புகிற அல்லது துன்புறுத்துகிற ஒவ்வொரு காரியத்தையும் அவரிடம் சொல்லுங்கள். (1பேதுரு 5:7, சங் 55:22)
4. உங்களுடைய எல்லா ஜெபங்களோடும் துதியையும், நன்றியையும், ஸ்தோத்திரத்தையும் சேர்த்துச்செலுத்துங்கள் (பிலி 1:4, கொலோ 3:15-17; 1தெச 5:18).
5. நாம் தேவனுடைய சிந்தையை உடையவர்களாகவும் அவருடன் மனமார்ந்த ஐக்கியத்தை உடையவர்களாகவும் நம்மை மாற்றுவதே ஜெபத்தின் நோக்கம் ஆகும். (வெளி 3:20; எபே 3:16-19)
6. உங்கள் முழு இதயத்துடன் ஒவ்வொரு நாளும் அவரைத் தேடவும் அவரிடம் ஜெபிக்கவும் அமைதியான இடத்திற்குத் தேவன் உங்களை அழைக்கிறார். (மாற்கு 1:35; எரே 29;13)
7. தேவனுக்குமட்டும் கேட்கும்படிக்குச் சத்தமாக ஜெபிக்கக்கற்றுக் கொள்ளுங்கள். (மத் 26:39; லூக்கா 11:1)
8. தேவனுடைய பதில்களை குறித்துவைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய ஆசீர்வாதங்களை எண்ணிப்பாருங்கள். (உபா 8:2; 1நாளா 16:12) .

**நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். 1யோவான் 5:14,15.**

# ૩. நான் எவ்வாறு கிறிஸ்தவனாக ஆகமுடியும்?

1. எல்லையில்லா அன்புடன் தேவன் உங்களை நேசிக்கிறாரென்பதையும், உங்களை இரட்சிப்பதற்கு அவர் ஆசையாயிருக்கிறார் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். (பேதுரு 3:9; 1தீமோ 2:3-5)
2. இயேசுகிறிஸ்து இல்லாவிட்டால் நீங்கள் பாவியாகவே அழிந்துபோக வேண்டியிருக்கும் என்பதை ஒப்புக்கொள்ளுங்கள். (எரே 17:9; ரோமர் 3:23; 6:23).
3. இயேசுவின் மூலம் இரட்சிப்பு இலவசமாக அளிக்கப்படுகிறது. இது உண்மையென்று ஒப்புக்கொள்ளுங்கள். நற்செயல்களினாலோ, நல்ல கிரியைகளினாலோ இரட்சிப்பைச் 'சம்பாதிக்க' முடியாது. (எபே 2:8; ரோமர் 3:24-27)
4. தெரிந்த பாவங்களை இயேசுவிடம் அறிக்கையிட்டு, மனந்திரும்பவேண்டும். (அப் 3:19; 1யோ 1:9)
5. நீங்கள் உங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கும்போது நீங்கள் மன்னிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகிறீர்கள். (விசுவாசத்தினால் நித்தியவாழ்வாகிய ஈவு உங்களுடையதாகிறது. (எபே 1:4-7; யோவான் 5:11-13)
6. நீங்கள் இப்போது கிறிஸ்துவின் பிள்ளையாக இருக்கிறீர்கள். நீங்களே அவருடைய விலையேறப்பெற்ற சொந்த சம்பத்து. அவர் அற்புதமான மாற்றங்களைத் தம்முடைய பரிசுத்த ஆவியானவரின் மூலமாக உங்கள் வாழ்வில் செய்வார். (யோவான் 1:12, 2கொரி 5:17)
7. நம்முடைய நேச இரட்சகர் பூமியிலிருந்து நம்மைப் பரலோகத்திற்கு வழி நடத்துவதாகவாக்குறுதியளித்துள்ளார். நீங்கள் விழுந்துபோகலாம். ஆனால், அவர் உங்களைத் தூக்கியெடுத்து, சரியானபாதையிலே நடத்தி, பரலோகத்துக்கு அழைத்துச் செல்வார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1யோவான் 1:9.**

**அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. எபேசியர் 1:7.**

# 4. தீர்மானம் செய்கையில் தேவ வழிநடத்துதல்

1. 'நீங்கள் கேட்டால் ஞானத்தைத் தருவேன்' என்று தேவன் வாக்குப்பண்ணி யுள்ளார். (யாக் 1:5)
2. தெரிந்த பாவமோ, அக்கிரமச் சிந்தையோ, ஏதேனும் உங்கள் உள்ளத்தில் மறைந்திருக்கிறதா? என்று ஆராய்ந்து பாருங்கள். அப்படியிருந்தால், தேவன் உங்கள் ஜெபத்திற்குப் பதிலளிக்க முடியாதபடிக்கு அது தடைசெய்து விடும். (சங் 66:18 )
3. தேவ நாமம் மகிமைப்பட நீங்கள் ஆசைப்படுகிறீர்களா? என்று கண்டு கொள்வதற்கு உங்களது நோக்கத்தை ஆராய்ந்து பாருங்கள். (யாக் 4:3)
4. தேவன் உங்களை வழிநடத்துவதற்கு ஆசைப்படுகிறார் என்று மட்டும் நம் பாமல், அவர் உங்களை வழிநடத்துகிறார் என்று நம்புங்கள். (சங் 32:8; ஏசா 58:11)
5. உங்களுடைய தீர்மானங்களில் வேதாகம நியதிகள் ஏதேனும் உள்ளடங்கி யுள்ளதா என்று கண்டறியுங்கள். வழிநடத்துதலுக்கான மிகச்சிறந்த ஆதாரமே வேதாகமம்தான். தேவன் அடிக்கடி அவருடைய வார்த்தையின் மூலமாகவே நம்மை வழி நடத்துகிறார். (சங் 119:10, 11; 105:133)
6. தேவனுடைய வார்த்தையை நம்பும் பக்தியுள்ள ஆலோசகர்களிடம் ஆலோ சனை கேளுங்கள். (நீதி 11:14;15:22)
7. நீங்கள் போகவேண்டிய வழியைச் சுட்டிக்காட்டுவதற்குச் சூழ்நிலைகளைத் தேவன் பயன்படுத்துகிறார். வேதாகமத்தையும் யோசிப்பதையும் ஒதுக்கி விட்டு, சூழ்நிலைகளை முக்கியப் படுத்தக்கூடாது. அவை நாம் தீர்மானம் செய்ய துணைபுரிகின்றன; அவ்வளவுதான். (நீதி 23:26; பிரசங்கி 8:5; ரோமர் 8:28
8. ஒரு தீர்மானத்தைக் குறித்து நீங்கள் ஊக்கமாக ஜெபிக்கிறீர்கள்; தேவனு டைய வார்த்தையை வைத்து ஆலோசிக்கிறீர்கள்; கவனமாக அதைக்குறித்து சிந்திக்கிறீர்கள்; வழி நடத்துதலுக்காக கவனித்தும், ஆலோசித்தும் பார்க் கிறீர்கள்; இவ்வாறு செய்யும்போது தேவனே உங்களை நடத்திக்கொண் டிருக்கிறார் என்பதை நம்புவதே நீங்கள் செய்யக்கூடிய ஞானமுள்ள தீர்மானமாகும். (சங் 90:12).

**உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். யாக்கோபு 1:5.**

# 5. உங்கள் விசுவாசத்தைப் பெருக்கும்விதம்

தேவனில் நம்பிக்கையாயிருப்பதே விசுவாசமாகும். அவருடன் நன்கு பழகிய நண்பன் எனும் உணர்வை நம்மில் விசுவாசம் ஏற்படுத்துகிறது. அவருடன் நெருங்கிய உறவுமுறையை அது வளர்க்கிறது. என்னைப் பாதுகாப்பதும் எனக்கு நல்லதைச் செய்வதுமே அவருடைய ஆசை என்பதை நாம் அறிந்து கொள்வோம். அவரை எவ்வளவுக்கு அறிகிறோமோ, அவ்வளவுக்கு அவர் மேல் விசுவாசம் பெருகும்.

1. விசுவாசமே நம்முடைய மத அனுபவத்தின் அடித்தளம் ஆகும். (எபி 11:1)
2. நமது அன்பான பரலோகத் தந்தையுடன் நம்பிக்கையுடைய உறவுக்குள் நுழையுமாறு இயேசு நம்மை அழைக்கிறார். (மாற்கு 11:22-24)
3. விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். (எபி 11:6)
4. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஒரு விசுவாச அளவைத் தேவன் கொடுத்திருக்கிறார். (ரோமர் 12:3)
5. சிறிதளவு விசுவாசம்கூட தேவவல்லமையுடன் நம்மை இணைக்கிறது. (லூக்கா 7:5,6)
6. வேதாகமத்திலுள்ள விசுவாச வீரர்களைப் பற்றிப் படிப்பதினால் நம்முடைய விசுவாசம் பெருகுகிறது. (ரோமர் 10:17)
7. வேதாகம ஆராய்ச்சியிலிருந்து பயன் பெறவேண்டுமா? ஒவ்வொரு சம்பவத்திலும் வரும் நபருடைய இடத்தில் உங்களை வைத்து யோசியுங்கள். வேதாகமத்தில் நீங்கள் வாசிப்பது போன்ற அற்புதமான மாற்றங்களை உங்கள் வாழ்க்கையிலும் தேவன் நிறைவேற்றுவார் என விசுவாசியுங்கள். நாம் அனுபவிக்கிறதினால் விசுவாசம் வளருகிறது. (எபி 4:2)
8. வேதாகமத்தைப் படிப்பதன் மூலம் உங்கள் விசுவாசம் வளரும் என்று எதிர்பாருங்கள். (2பேதுரு 1:3,4)
9. இயேசுவண்டை நாம் இழுக்கப்படும்போது அவருடைய விசுவாசத்தைப் பெறுகிறோம். (எபி 10:22).
10. தினமும் இயேசுவுடன் நிலையான நம்பிக்கை உறவை உடையவராய் இருப்பதே விசுவாசத்தினால் வாழ்வது ஆகும். (ரோமர் 11:17).
11. இயேசுவைப் பார்த்து, இயேசுவில் நம்பிக்கை கொள்வதன் மூலம் நாம் இயேசுவிடமிருந்து விசுவாசத்தைப் பெறுகிறோம்; நம்முடைய விசுவாசமும் வளருகிறது. (எபி 12:1,2).
12. நாம் எவற்றையெல்லாம் விரும்புகிறோமோ அவற்றையெல்லாம் தேவன் செய்வார் என்று நம்புவதல்ல விசுவாசம்; கெத்செமனேயில் பிதாவின் விருப்பதை இயேசு தேடினாரே அதைப் போன்றதே விசுவாசம். (மத் 26:39).
13. நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச்

செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். (1யோவா 5:14).

அன்பான தேவனில் நிலையான நம்பிக்கை அல்லது நிலையான விசுவாசம் கொண்டிருப்பதே கிறிஸ்தவ வாழ்க்கையாகும். அந்த அன்பான தேவன் தம்முடைய பிள்ளைகளை முடிவுமட்டும் நன்மையான வழியிலே எப்போதும் நடத்துகிறவராயிருக்கிறார்.

**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். எபிரெயர் 11:6.**

**துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். எபிரெயர் 10:22.**

**ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். எபிரெயர் 11:1,2.**

# ௬. கோபம், மனக்கசப்பு போன்றவற்றைக் கட்டுப்படுத்துதல்

1. நீங்கள் கோபமாயிருக்கிறீர்கள் என்பதை ஒத்துக்கொள்ளுங்கள். தேவனிடம் நேர்மையாயிருங்கள். உங்களுடைய உண்மையான உணர்வுகளை அவரிடமிருந்து மறைப்பதற்கு முயற்சிக்கவேண்டாம். (எபி 4:13; எபே 4:26).
2. நீங்கள் ஏன் கோபமாயிருக்கிறீர்கள் என்பதைக் கண்டுபிடியுங்கள். காயீனிடம் தேவன், 'நீ ஏன் எரிச்சலாய் (கோபமாய்) இருக்கிறாய்?' என்று கேட்டார். (ஆதி 4:6)
3. உங்களுடைய உணர்ச்சிவேகம் உங்களைக் கட்டுப்படுத்த விடாதீர்கள். (நீதி 16:32; பிர 7:9; நீதி14:29).
4. உங்களுடைய கோபத்தைத் தேவனிடம் கொடுத்துவிடுங்கள். கோபமான வார்த்தைகள் மற்றவர்களில் பாதிப்பை உண்டுபண்ணும் என்பதை நினைவுகொள்ளுங்கள். (நீதி 15:1; சங் 37:7,8).
5. உங்களுக்குத் துரோகம் செய்த எவரையும் மன்னியுங்கள். நீங்கள் தேவனுக்கு விரோதமாகச் செய்தவற்றைத் தேவன் உங்களுக்கு மன்னித்திருக்கிறார். மற்றவர்கள் உங்களுக்கு எதிராகச் செய்தவற்றை நீங்கள் மன்னிக்கும்படி அவர் உங்களுக்கு மன்னிப்பைத் தரும்படிக் கேளுங்கள். (எபே 4:32; லூக் 11:4; கொலோ 3:13).
6. நீங்கள்கோபப்பட்டதற்காகமுதலில்உங்களைமன்னித்துக்கொள்ளுங்கள். (1யோவா 1:9).
7. சீக்கிரமாக உங்கள் கோபத்தை ஆற்றிவிடுங்கள். அதைச் சிறுகச்சிறுகத் திரட்டவேண்டாம். யாரிடமாவது நீங்கள் மன்னிப்புக்கேட்கவேண்டியதிருந்தால் கேளுங்கள். (எபே 4:26).

**மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்;**
**கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.**
**நீதிமொழிகள் 15:1.**

**கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவனுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். எபேசியர் 4:26.**

# 7. சோதனைகளைச் சந்தித்தல்

1. நமக்குவரும் அனைத்துச் சோதனைகளையும் உண்டாக்கினவன் சாத்தானே. (யாக் 1:12-15; யோவா 8:44).
2. நீங்கள் தாங்கக்கூடிய அளவுக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்பட தேவன் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். அனுமதிக்கும்போது, தாங்குவதற்கான பெலனை அவரே தருவார். (1கொரி 10:13).
3. நமக்கு வருகிற எல்லாச் சோதனைகளையும், அதற்கு மேலான சோதனைகளையும் இயேசு எதிர்கொண்டார்; அவற்றை மேற்கொள்ளவும் செய்தார். (எபி 4:15,16).
4. இயேசுவின் வல்லமை மூலம் உங்களுக்கு வந்த சோதனையை மேற்கொள்ள முடியும். (1யோவா 5:4; ரோமர் 8:5-15; 1கொரி 1:27-30).
5. சோதனையை மேற்கொண்டு தொடர்ந்து வெற்றியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமா? சோதனைக்குக் காரணமாக இருக்கும் காரியங்கள், பழக்க வழக்கங்கள், சந்தோஷங்கள், இடங்கள் ஆகியவற்றைத் தவிர்ப்பது மிகவும் அவசியமானது. (யாக் 4:7,8; பிலி 4:7,8).

**மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். 1கொரிந்தியர் 10:13.**

**ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். யாக்கோபு 4:7.**

# 8. தாழ்வுமனப்பான்மை உள்ளவர்களுக்கு உதவுதல்

1. அன்பான சிருஷ்டிகர் உங்களை உருவாக்கினார். உங்கள் வாழ்க்கையை நீங்கள் அவரிடம் கொடுக்கும்பொழுது, அவருடைய குடும்பத்தில் அவருடைய சுவிகாரப்பிள்ளைகளாக மாறுகிறீர்கள். (எபே 3:10,19; யோவா 1:12).
2. நீங்கள் தனித்தன்மையுள்ளவர்கள். இப்பிரபஞ்சத்தில் உங்களைபோல் மற்றொருவர் இல்லை. உங்களை மாதிரி எவருமே இல்லை. நீங்கள் தேவனுக்கு விசேஷமானவர்கள். (ஏசா 43:1,4, 7, 21; 13:12; யாத் 33:12).
3. இயேசு தம்முடைய ஜீவனை உங்களுக்குத் தந்தார். நீங்கள் அவருக்கு முக்கியம். முக்கியம் இல்லையென்றால், உங்களுக்காக தம் ஜீவனை விட்டிருக்கமாட்டார். அவருடைய பார்வையில் நீங்கள் மிகவும் சிறந்தவர்களாய் இருக்கிறீர்கள். (கலா 2:20).
4. உங்களுடைய உடல் ஊனங்கள், போதாமை, குறைபாடுகள் அவருடைய அன்பைத் தடைசெய்துவிடுவதில்லை. எல்லாக் காரியங்களுமே முடிவில் உங்களுடைய நன்மைக்கானதாகவே இருக்கும். (ரோமர் 8:28; 31-37).
5. தேவன் உங்கள் வாழ்க்கைக்காக ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். (சங் 37:23; எரே 1:5).
6. அவருடைய கரங்களில் நீங்கள் உங்களுடைய வாழ்க்கையைக் கொடுக்கிறபோது அவர் உங்களை உண்மையான ஆற்றல் மிக்கவர்களாக ஆக்குவதற்கு வல்லவராயிருக்கிறார். (நீதி 3:5,6; சங் 1:1-3).

**கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். கலாத்தியர் 2:20.**

**அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ரோமர் 8:28.**

# ௯. பயத்தை எதிர்கொள்ளல்

1. பயத்தினின்று நீங்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறீர்கள்; அவருடைய அன்பில் நம்பிக்கையாயிருங்கள். (1யோவா 4:18,19; சங் 56:3; நீதி 3:23-26).
2. பயஉணர்ச்சியைத் தருவது சாத்தான் வேலை; தேவன் பயத்திலிருந்து உங்களை விடுவிக்கிறார். (2தீமோ 1:7; சங் 27:1).
3. கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார்; உனக்கு இளைப்பாறுதல் தருவார். (சங் 55:22; மத் 11:26-28).
4. அவருடைய சமுகம் பயத்தைத் துரத்துகிறது. (ஏசா 41:10; சங் 61:2)
5. உங்கள் நம்பிக்கை தேவன்மேல் இருக்குமானால், 'மனிதன் என்னைக் குறித்து என்ன சொல்லுவான்? எனக்கு என்ன செய்வான்?' என்று பயப்படத் தேவையில்லை. (சங் 56:11).
6. பாதிக்கின்ற எல்லா சூழ்நிலைகளையும் அவர் கட்டுப்படுத்துகிறவர்; எனவே அவரில் நீங்கள் தைரியமாக அவைகளை எதிர்கொள்ளலாம். (சங் 46:1,2; 91:1-5).

**அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம். 1யோவான் 4:18,19.**

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். மத்தேயு 11:26-28.**

# ١٥. தனிமையைக் கையாளுதல்

1. யாக்கோபு தனிமையில் வாடியபோது, தேவன் அவரிடம் வந்தார்; அவருக்கு நம்பிக்கை தந்தார். (ஆதி 28:15).
2. எலியா அதைரியமடைந்தபோது, இருட்டுக் குகை ஒன்றில் அவர் தங்கினார். அங்கே தேவன் எலியாவுடன் பேசி அவருக்கு நம்பிக்கையை ஏற்படுத்தினார். (1இரா 19:9, 11-15).
3. தம்முடைய பிள்ளைகளை ஒருபோதும் தான் கைவிடுவதில்லையென்று தேவன் வாக்குப்பண்ணியுள்ளார். (எபி 13:5).
4. மனிதர்களால் இயேசு வெறுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, தனிமையாய்ச் சிலுவையில் இறக்கவேண்டியாயிற்று; ஆகையால், உங்களுடைய தனிமையின் வேதனை அவருக்கு நன்றாகத் தெரியும். (ஏசா 53:3,4; 63:3,9).
5. நீங்கள் இயேசுவிடம் வரும்போது, அவர் தம் பிரசன்னத்தின் மகிமையால் உங்கள் இதயத்தை நிரப்புகிறார். உங்களைத் தம்முடைய குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் சேர்த்துக்கொள்கிறார். (2கொரி 6:16-18).
6. புருஷனால் கைவிடப்பட்டு அல்லது மரணத்தினால் கணவனை இழந்து ஒரு பெண் தனியே நிர்பந்தமான நிலையிலிருக்கும்போது, தேவன்தாமே அவளுடைய இதயத்தின் தேவைகளையெல்லாம் நிறைவேற்றித் தருவதாக நம்பிக்கையளித்திருக்கிறார். (ஏசா 54:4-8).
7. உங்கள் தனிமையிலிருந்து தப்பவேண்டுமா? மற்றவர்களை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள உங்கள் வாழ்க்கையைத் தத்தம்செய்யுங்கள். உங்களுக்கு நண்பர்கள் வேண்டுமென்றால் நீங்கள் யாருக்காவது ஒரு நண்பனாக வேண்டும். (நீதி 11:25;18:24).

**நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார். ஆதியாகமம் 28:15.**

**நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. எபிரெயர் 13:5.**

# 11. மனச்சோர்வை மேற்கொள்தல்

பல்வேறு வகைகளில் ஆயிரக்கணக்கானோருக்கு மனச்சோர்வு தொல்லையளிக்கிறது. அது மருத்துவ, மன இயல் ரீதியாக உதவி தேடும் அளவுக்குச் சில சோர்வுகள் மிகவும் கடுமையானவையாக இருக்கிறது. ஆவிக்குரிய வல்லமை அவசியமானதாய்இருக்கிறது.வேதாகமநியதிகள்கீழேகொடுக்கப்பட்டுள்ளன. பிரச்சனை உள்ளோருக்கு உதவுவதில் அவை உங்களுக்குத் துணைபுரியும்.

**மனச்சோர்வு என்றால் என்ன?**

நிகழ்காலத்தில் எந்த மகிழ்ச்சியும் இல்லை; பிரச்சனைகளுக்கு மேல் பிரச்சனை. எதிர்காலத்தில் எந்த மாற்றமும் நடக்கப்போவதாகத் தெரிவில்லை. இவ்வாறு எந்த நம்பிக்கையும் இல்லாது இருக்கும்போது தோன்றும் உணர்வே மனச்சோர்வு ஆகும்.

நீங்கள் மட்டும் இப்படி சோர்வுடையவர்களாக இருக்கவில்லை. விசுவாசத்தில் வல்லவர்களாக விளங்கிய வேதாகம பக்தர்கள்கூட இவ்வாறு சோர்வடைந்து இருந்திருக்கிறார்கள்.

1. உதாரணமாக தாவீதின் சோர்வைப் பாருங்கள். (சங் 6:6,7; 40:12; 88) சோர்வுற்ற சமயங்களில் அதை மேற்கொள்ளக்கூடிய கீழ்க் காணும் நியதிகளைத் தாவீது கண்டுகொண்டார்.
   அ. சோர்வு நேரங்களில் தேவன் நம்மைக் கைவிடுவதில்லை. (சங் 16:8; 139:7-17)
   ஆ. நம்பிக்கை அல்லது விசுவாசமானது துன்ப நேரங்களிலும் நாம் மகிழ்ச்சியாயிருக்க நமக்கு உதவுகிறது. (சங் 5:11; 28:7,8)
   இ. தம்மண்டை நம்மை நெருக்கமாக இழுத்துக்கொள்ள துன்பங்கள், தொல்லைகளைத் தேவன் பயன்படுத்துகிறார்.
   ஈ. துயரநேரங்களில் என் வாழ்க்கையைத் தேவன் தமது கையில் வைத்திருக்கிறார். (சங் 118:6,8,14,17)
2. சோர்வுற்ற நேரங்களில் துதிசெய்தலும், நன்றிசொல்லுதலும் சோர்விலிருந்து விடுபடுவதிற்கான வழியாகும். (சங் 118:1; 113:3; 71:1-3,8,24; 59:16)
3. சோர்வுறும் நேரங்களில் நாம் அவரண்டை செல்வதைத் தேவன் விரும்புகிறார். நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிப்பதில் அவர் மகிழ்ச்சியடைகிறார். (சங் 61:2; 60:4; 56:3,8,11)
4. அறிக்கையிடாத பாவம் குற்ற உணர்வுக்கும் சோர்வுக்கும் நம்மை வழிநடத்தக்கூடும். சில குறிப்பிட்ட பாவங்களான நீங்கள் குற்ற உணர்வுள்ளவர்களாய் இருந்தால், உங்கள் குற்ற உணர்வைச் சொல்லுங்கள்; (சங் 38:17,18) உங்கள் பாவங்களை அறிக்கையிடுங்கள். (1யோ 1:9)
5. 51 ஆம் சங்கீதத்தின் ஜெபத்தை ஜெபியுங்கள். தேவன் உங்களை மன்னிக்கிறார் என்று நம்புங்கள். 'தேவன் என்னை நேசிக்கிறார், என்னை அவருடைய சொந்தப்பிள்ளையாக ஏற்றுக்கொள்ளுகிறார்' எனும் எண்ணங்களால்

உங்கள் சிந்தையை நிரப்புங்கள். (1தீமோ 2:3-6; 1பேதுரு 3:9; பிர 1:3-7)

6. சரீரப்பிரகாரமான காரியங்களினாலும் சில நேரங்களில் சோர்வு மனதில் தோன்றுகிறது. கர்மேல் பர்வதத்திலே பாகால் தீர்க்கதரிசிகளை மேற்கொண்ட எலியா மனச்சோர்வினாலே சாக விரும்பினார். (இந்த எலியா மரணத்தைக் காணாமலேயே மறுரூபமானவர் என்பதை நினைவுகொள்ளுங்கள்.) களைப்பு, பசி, யேசபேலின் பயமுறுத்தும் மிரட்டல் போன்றவற்றால் எலியாவுக்குச் சோர்வு ஏற்பட்டது. 1இரா 19:1-4. சோர்வுற்றிருந்த எலியாவுக்குத் தேவன் தந்தது என்ன? 1இரா 19:5-13.

இரவு நேரத்தில் நல்ல தூக்கம் தந்தார்.
சூடான நல்ல உணவு தந்தார்.
உற்சாகமூட்டும் வார்த்தை தந்தார்.

7. ரோமில் பவுல் சிறையிலிருந்தபோது, அவர் மாற்றுமருந்தாகக் கீழ்க்காணும் கருத்துகளைக் கண்டறிந்தார்.

அ. தேவனுடைய இறையாண்மை பற்றிய உணர்வு. (பிலி 1:12).
ஆ. எல்லாக் காரியங்களிலும் கிறிஸ்துவையே மகிமைப்படுத்துவதற்கு ஆசை. (பிலி 1:20).
இ. துன்ப வேளையில் ஜெபித்தலும் நன்றிசொல்லுதலும். (பிலி 4:6).
ஈ. துன்ப வேளையில் மகிழ்ச்சியாயிருத்தல். (பிலி 4:4.
உ. தனக்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுக்க அவரால் முடியும்; தன்னுடைய பிரச்சனைகளைக் காட்டிலும் தேவன் பெரியவர் என்னும் உணர்வு. (பிலி 4:13,19).

**கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும். உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும்; உமது செவியை எனக்குச் சாய்த்து, என்னை இரட்சியும். நான் எப்பொழுதும் வந்தடையத்தக்கக் கன்மலையாயிரும்; என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர். சங் 71:1-3.**

**தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். 1பேதுரு 3:9.**

# 12. சிறு வயது வேதனைகளை நீக்குதல்

குழந்தைப் பருவத்தில் தங்களுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட வேதனைகளைக் குறித்த கசப்பான எண்ணங்களை அநேகர் மனதில் வைத்திருக்கிறார்கள். அவை நீங்கிச் சுகம்பெற, இவர்கள் ஆவியானவரை அனுமதிக்கவேண்டும். அதற்கு இந்தப் பாடம் உதவுகிறது.

1. குழந்தைக்கேற்றவைகளை ஒழித்திடவேண்டும். (1கொரி 13:11).
2. கடந்தகாலங்களின் காரியங்களை மறந்துவிடுமாறு பவுல் ஆலோசனை அளிக்கிறார். (பிலி 3:13).
3. நாம் நம்மிடமும் மற்றவர்களிடமும் நேர்மையாய் இருந்தால், கடந்தகாலத்தை நம்மால் மறக்கமுடியும். (பிலி 4:25).
4. நாம் பிறக்குமுன்னரே தேவன் நம்மை அறிந்துள்ளார். நமக்கென்று ஒரு திட்டத்தை அவர் வைத்திருக்கிறார். (எரே 31:5).
5. தேவன் இறையாண்மையுள்ளவர்; நாம் அவருடைய செய்கை. நம்முடைய வாழ்விற்கான அவருடைய திட்டத்தை ஒருவராலும் கெடுத்துப்போட முடியாது. (எபே 2:10).
6. எல்லாக் காரியத்திற்கும் தேவன் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். அவருக்குச் சித்தமானபோது, அக்காரியங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்படும். (பிர 3:1,11).
7. நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களை அவர் குணமாக்குகிறார். சாம்பலாகும் வாழ்க்கையை அழகாக்குகிறார். (ஏசா 61:1-3).
8. நம்மை வருத்தப்படுத்துகிறவர்களை நாம் மன்னிக்கமுடியும். ஏனென்றால், நாம் தேவனை வருத்தப்படுத்தியபோதிலும் கிறிஸ்து நம்மை மன்னித்திருக்கிறார். (எபே 4:32).
9. தம்மைச் சிலுவையிலறைந்தவர்களை இயேசு மன்னித்ததுபோல, நாமும் நம்மை வேதனைப்படுத்தியவர்களை மன்னிக்கவேண்டும். (கொலோ 3:13).
10. பழிவாங்குதல் நம்மை அழிக்கக்கூடியது. தீமையை நன்மையினால் வெல்லுவோம்; நமக்குச் சுகம் கிடைக்கும். (ரோம 12:19-21).
11. மற்றவர்கள் நமக்குத் தீமைசெய்யலாம். ஆனால், தேவன் நன்மையாக முடியப்பண்ணுவார். (ஆதி 50:20).

**ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். பிலிப்பியர் 3:13,14.**

# 13. புகைப்பிடிக்கும் பழக்கத்திலிருந்து விடுதலைபெற உதவும் ஏழு படிகள்

1. புகைப்பது உங்கள் தேவனுக்கும் உங்கள் சரீரத்துக்கும் விரோதமான பாவம் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

   'உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆரா தனை' (ரோமர் 12:1).

   'உங்கள் சரீரத்தினாலே தேவனை மகிமைப்படுத்துங்கள். நீங்கள் உங்களுடையவர்கள் அல்லர். நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட் டிருக்கிறீர்கள்' (1கொரி 6:19,20).

2. உங்கள் பெலவீனத்தை நீங்களாக வெல்லமுடியாதென ஒத்துக்கொள்ளுங் கள். உதிரப்போக்கினால் துன்பப்பட்டுக்கொண்டிருந்த பெண்ணைப் போன்று நீங்களும் அநேக வருடங்களாகப் பிறருடைய உதவியை நாடி இருந்திருக்கலாம்; அல்லது 38 வருடங்களாகப் பெதஸ்தா குளத்தண்டை யிலே படுத்துக்கிடந்த மனிதனைப் போன்று நீங்களும் புகைப்பழக்கத்தி னின்று விடுபட மிகுந்த ஆசையுடையவர்களாக இருக்கலாம். உங்கள் பெலவீனத்தை அறிக்கையிடுங்கள். 'என்னாலேயல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' என்று இயேசு சொன்னாரே.

3. நீங்கள் பெலவீனராய் இருந்தாலும் அவர் வல்லமையுள்ளவர். அதை விசு வாசியுங்கள். உங்களால் முடியாது. ஆனால், அவரால் முடியும். நம்முடைய சித்தத்தை அவருடைய பலத்த சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்தால், பிரபஞ்சத் தின் எல்லா வல்லமையும் நமக்கு உதவியாகக் கிடைக்கும். பிலி 4:13; 1யோவான் 5:14,15.

4. உங்களையும் புகையிலையையும் இயேசுவிடம் கொடுத்துவிடுங்கள். யோசுவா 24:15; 2கொரி 6:2.

5. இப்போதே வெற்றி உங்களுடையது என்பதை நம்பி, புகைத்தல்மேல் தேவன் தந்த வெற்றிக்காக அவருக்கு நன்றி சொல்லுங்கள். 1கொரி 15:57; மத் 7:7; 1யோவான் 5:4. உங்கள் உடலின் செல்களிலுள்ள நிகோடீனுடைய செயல் பாட்டால் புகைக்கவேண்டும் எனும் ஆசை உண்டாகலாம். ஆனால், நீங் கள் புகைக்கவேண் டிய அவசியமில்லை. புகைக்காதிருக்க நீங்கள் தெரிவு செய்துகொள்ளுங்கள். இயேசுவின்மேல் உள்ள விசுவாசத்தால் உங்க ளுக்கு வெற்றி கிடைக்கும்.

6. உங்களிடம் உள்ள புகையிலையை அழித்துவிடுங்கள். அருகில் புகை யிலை எதையும் வைத்திராதீர்கள். தேவனுக்குக் கீழ்ப்படிந்து இருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். யாக் 4:7,8.

7. இப்போதே வெற்றி உங்களுடையது என்பதை நம்புங்கள். அந்த வெற் றியை உறுதிப்படுத்த தேவனுக்கு நன்றி சொல்லுங்கள். உங்கள் உடலி

லுள்ள நிகோடீனை வெளியேற்றுவதற்காகப் பின்வரும் காரியங்களைச் செய்யுங்கள்.

- புகைக்கும் ஆசை ஏற்படும்போது ஆழமாகச் சுவாசியுங்கள். ஆசை நீங்கும்வரை சுவாசித்துக்கொண்டே இருங்கள்.
- அடுத்த ஐந்து நாட்களுக்கு தினமும் 10-12 குவளை தண்ணீர் குடியுங்கள்.
- தூங்கச்செல்லும் முன் வெதுவெதுப்பான நீரில் குளியுங்கள். (சூடான நீரல்ல, வெதுவெதுப்பானது)
- ஒவ்வோர் இரவிலும் எட்டு மணி நேரம் தூங்குங்கள்.
- காஃபியும் மதுபானமும் குடிக்காதீர்கள்.
- தினமும் இரண்டு தடவை 30 நிமிடம் வேகமாக நடக்க வேண்டும்.

புகையிலையின் வல்லமையைவிட தேவனுடைய வல்லமை பெரிது என்று சொல்லி தேவனைத் துதியுங்கள். 1யோவான் 4:4.

**சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. ரோமர் 12:1.**

**உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். 1கொரிந்தியர் 6:19,20.**

**தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். யாக்கோபு 4:7.**

# 14. ஓய்வுநாள் வேலைப் பிரச்சினைகள்

1. ஓய்வுநாள் முக்கியத்துவத்தை அந்த விசுவாசி உணரத்தகுந்த விதத்தில் கீழ்க் கண்ட வசனங்களைப் பயன்படுத்துங்கள். ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12; லூக்கா 4:16: அப் 13:42-44; ஏசாயா 66:22,23.
2. மனிதனுடைய சரீரத்தேவைகளைச் சந்திப்பதில் தேவனுக்கு அக்கறை உண்டு என்பதை விளக்குங்கள். மத் 6:33; பிலி 4:19; சங் 37:23-27.
3. இதைப்பற்றி தீர்மானம் செய்யும்போது இரண்டு முக்கியமான காரியங் களைக் கவனிக்கவேண்டும்.
    - என்னுடைய எஜமான் யார்? யாருக்கு நான் கீழ்ப்படிவேன்? ரோமர் 6:16; அப் 5:29.
    - தேவன் வாக்களித்ததை நிறைவேற்றுவார் எனும் நம்பிக்கை எனக்கு உண்டா? மாற்கு 11:23,24.
4. தன் முதலாளியுடன் ஓய்வுநாள் விடுமுறை குறித்துப் பேசும்போது, முதலாளி யைத் தான் மதிப்பதைத் தெளிவுபடுத்தவேண்டும். அதன்பிறகு, வேதாக மத்தின்படி சனிக்கிழமை ஓய்வுநாள் என்பதைச் சமீபத்தில்தான் அறிந்து கொண்டதாகவும், அதற்குக் கீழ்ப்படிய விரும்புவதாகவும், அதற்குப் பதி லாக தினமும் சற்று அதிக நேரம் அல்லது, ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்வதாகவும் மரியாதையுடன் எடுத்துச்சொல்லவேண்டும்.
5. செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபைப்போதகரிடமிருந்து ஒரு வேண்டுகோள் கடிதமும் கொடுக்கலாம். அதில் போதகர் நம் சபைப் பற்றியும் ஓய்வுநாள் ஆசரிப்பைப் பற்றியும் பணிவுடன் விளக்கம் சொல்லலாம்.
6. இந்த எல்லாக் காரியங்களிலும் ஜெபம் மிகவும் முக்கியம். முதலாளியிடம் சென்று பேசக்கூடிய நேரத்தில் மற்றவர்களும் பேசுகிறவரும் ஜெபத்தில் இருக்கவேண்டும். முதலாளியின் மனதில் தயவுள்ள எண்ணத்தைத் தேவனே உருவாக்குவார்.
7. ஒருவேளை வேலை போய்விடுமானால், தேவன் அவர்களைக் கனப்படுத்தி, அவர்கள் தேவைகளைச் சந்திப்பார் என்பதை விசுவாசிக்குத் தெளிவு படுத்தவேண்டும். ஏசாயா 56:2; 58:13,14.

**மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.**

**அப்போஸ்தலர் 5:29.**

**என் பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கு.**

**ஏசாயா 58:13.**

## 15. ஓய்வுநாள் மாற்றம்பற்றிய வரலாற்றுச் சான்றுகள்

1. ‘பண்டிகைகளை ஏற்படுத்தும் அதிகாரம் சபைக்கு இருக்கிறதா?’ எனும் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, ஸ்டீஃபன் கீனன் பின்வரும் பதிலைக் கூறுகிறார். ‘இக்கால மதத்தலைவர்கள் ஒரு காரியத்தை ஒத்துக்கொள்கிறார்கள். வாரத்தின் ஏழாம் நாளாகிய சனிக்கிழமையை ஓய்வுநாளாக ஆசரிப்பதற்குப்பதில் வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியது கத்தோலிக்கச் சபைதான். இப்படிப்பட்ட மாற்றத்தை வேதாகமம் ஏற்படுத்தவில்லை. சபைக்குப் பண்டிகைகளை ஏற்படுத்தும் அதிகாரம் இல்லாவிட்டால், இந்த மாற்றத்தை மதத் தலைவர்கள் ஒத்துக்கொண்டிருப்பார்களா?’ - *Stephen Keenan, A Doctrinal Catechism, p. 174.*

2. ‘ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல்வரை வேதாகமத்தை வாசித்துப் பாருங்கள். ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தத்தை ஆதரித்து ஒரு வசனம்கூட கண்டுபிடிக்க முடியாது. வேதாகமத்தின்படி சனிக்கிழமையைப் பரிசுத்தமாக ஆசரிக்கவேண்டும். ஆனால், அதை நாம் செய்வது இல்லை’ - *Cardinal Gibbons, Faith of Our Fathers, p. 111, 112.*

3. ‘இயேசுகிறிஸ்து தனக்குக் கொடுத்த அதிகாரத்தினாலே கத்தோலிக்கச் சபையானது ஓய்வுநாளின் இளைப்பாறுதலை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியுள்ளது. இந்த நாள் நம்முடைய கர்த்தரின் உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாக உள்ளது. எனவே, ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கும்போது, புரொட்டஸ்டன்ட் சபையினர் ரோமன் கத்தோலிக்கச் சபையின் அதிகாரத்திற்குத் தங்கள் மரியாதையைத் தெரிவிக்கிறார்கள்’ - *Monsignor Segur, Plain Talk About the protestanism of Today, p. 225.*

4. ‘அவர்கள் (ரோமன் கத்தோலிக்கச் சபை) ஓய்வுநாளின் ஓய்வைக் கர்த்தருடைய நாளில் ஆசரிப்பதற்குப் பத்துக்கற்பனையைச் சட்டமாகக் காட்டுகிறார்கள். ஆனால், இது அவர்களுடைய பேச்சுதானேயன்றி வேறு அல்ல. அவ்வாறு பத்துக்கற் பனையின் கட்டளைகளில் ஒன்றை மாற்றுவதற்குச் சபைக்கு அதிகாரம் இருக்குமானால், அந்த அதிகாரம் வானளாவியதாக இருக்கவேண்டும்’ - *Philip Schaff, The Creeds of Christendo. vol. 3, p. 64.*

5. லவோதிக்கேயா ஆலோசனைச் சங்கத்தில் சபையானது ஓய்வுநாளின் பரிசுத்தத்தைச் சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்று கிழமைக்கு மாற்றியது என்று ரோமன் கத்தோலிக்கச் சபை கூறு கிறது.

| | |
|---|---|
| கேள்வி | : ஓய்வுநாள் எது? |
| பதில் | : சனிக்கிழமையே ஓய்வுநாள். |
| கேள்வி | : பிறகு ஏன் நாம் சனிக்கிழமையை ஆசரிக்காமல் ஞாயிற்றுக் கிழமையை ஆசரிக்கிறோம்? |
| பதில் | : கத்தோலிக்கச் சபையானது கி.பி. 336 ஆம் ஆண்டில் நடந்த லவோதிக்கேயா ஆலோசனைச் சங்கத்தில் சனிக்கிழமை |

யின் பரிசுத்தத்தை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியது. அத னால், நாம் சனிக் கிழமைக்குப் பதிலாக ஞாயிற்றுக்கிழ மையை ஆசரிக்கிறோம்... - *Rev. Peter Geiermann, C. SS. R., The Convert's Catechism of Catholic Doctrine, p. 50, 2nd edition, 1910.*

**'இயேசு கிறிஸ்து தனக்குக் கொடுத்த அதிகாரத்தினாலே கத்தோலிக்கச் சபையானது ஓய்வுநாளின் இளைப்பாறுதலை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியுள்ளது. இந்த நாள் நம்முடைய கர்த்தரின் உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாக உள்ளது. எனவே, ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கும்போது, புரொட் டஸ்டன்ட் சபையினர் ரோமன் கத்தோலிக்கச் சபையின் அதிகாரத்திற்குத் தங்கள் மரியாதையைத் தெரிவிக்கிறார்கள்' -** *Monsignor Segur, Plain Talk About the protestanism of Today, p. 225.*

**'அவர்கள் (ரோமன் கத்தோலிக்கச் சபை) ஓய்வுநாளின் ஓய்வைக் கர்த்தருடைய நாளில் ஆசரிப்பதற்குப் பத்துக்கற்பனையைச் சட்டமாகக் காட்டுகிறார்கள். ஆனால், இது அவர்களுடைய பேச்சுதானேயன்றி வேறு அல்ல. அவ்வாறு பத்துக்கற் பனையின் கட்டளைகளில் ஒன்றை மாற்றுவதற்குச் சபைக்கு அதிகாரம் இருக்குமானால், அந்த அதிகாரம் வானளாவியதாக இருக்கவேண்டும்' -** *Philip Schaff, The Creeds of Christendo. vol. 3, p. 64.*

அவருடைய கற்பனைகளை நாம்
கைக்கொள்ளுகிறவர்களானால், அவரை
அறிந்திருக்கிறோமென்பதை அதினால்
அறிவோம். அவரை
அறிந்திருக்கிறேனென்று சொல்லியும்,
அவருடைய கற்பனைகளைக்
கைக்கொள்ளாதவன்
பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள்
சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக்
கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு
மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம்
அவருக்குள் இருக்கிறோமென்பதை
அதினாலே அறிந்திருக்கிறோம்.
1யோவான் 2:3-5.

# சபைகள், சபை அமைப்புகள், மற்ற மதங்கள்பற்றி அறிந்துகொள்தல்

**இவற்றின் ஆரம்பம்,**

**சில முக்கிய உபதேசங்கள்,**

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்,**

**இவற்றின் தவறான உபதேசங்கள்,**

**இவர்களை அணுகும் முறைகள்.**

ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும்
கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே
தவறினால் எல்லாவற்றிலும்
குற்றவாளியாயிருப்பான்.
யாக்கோபு 2:10.

# 1. பாப்திஸ்து சபை

சீர்திருத்தக் காலத்தில் வேத ஆராய்ச்சியாளர்கள் சிலர் முழுக்கு ஞானஸ்நானம் பற்றி வேதஉண்மைகளைக் கண்டுபிடித்தார்கள். தெளிப்பு ஞானஸ்நானமானது வேதாகமத்திற்கு ஒத்தது அல்ல என்று அதை ஒதுக்கினார்கள். வேதாகமத்தை வார்த்தையின்படி விளக்கம் சொல்லவேண்டுமென்று நம்பினார்கள். இயேசுவின் கிருபையினாலேயே இரட்சிப்பு என்பதை நம்பினார்கள். இவ்வாறு சீர்திருத்தக் காலத்தில் தோன்றிய சபை இது.

இவர்களுக்கு வேதமே வழிகாட்டி. சிலுவையே விசுவாசத்தின் மையம். முழுக்கு ஞானஸ்நானமே உள்ளான விசுவாசத்தின் வெளிப்படையான அடையாளம். இதன் மூலம் மார்டின் லூத்தரையும் தாண்டி, சத்தியத்தில் வளர்ச்சி பெற்றவர்களாய் இருந்தார்கள்.

1611 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதல் பாப்திஸ்து சபையை ஜான் ஸ்மித் என்பவர் ஏற்படுத்தினார். யார் வேண்டுமானாலும் இரட்சிக்கப்படலாம் என்பதை இவர்கள் நம்பினார்கள். முன்குறிக் கப்பட்ட சிலருக்கு மாத்திரமே இரட்சிப்பு எனும் கால்வினுடைய கொள்கையை மறுத்தார்கள். 1644 ஆம் ஆண்டிற்குள் 50 பாப்திஸ்து சபைகள் இங்கிலாந்தில் உருவாயின.

மசாக்குசெட்ஸ் வளைகுடா குடியிருப்பிலிருந்து ரோது தீவு தேசத்தை உருவாக்கச் சென்ற ரோஜர் வில்லியம்ஸ் என்பவரால் அமெரிக்காவில் பாப்திஸ்து சபை நிறுவப்பட்டது. சபை வேறு, அரசாங்கம் வேறு என்று ரோஜர் வில்லியம்ஸ் நம்பியதால் அவர் நிறுவிய குடியிருப்பில் தங்கள் மனச்சாட்சியின்படி எந்த மதத்தை வேண்டுமானாலும் குடிமக்கள் பின்பற்றிக் கொள்ளலாம்.

### எல்லாக் காலங்களிலும் பாப்திஸ்து மக்கள்

1. மத உரிமையையும்
2. முழுக்கு ஞானஸ்நானத்தையும் வலியுறுத்திவந்திருக்கிறார்கள்.

பாப்திஸ்து சபைகளில் ஒரு சிறு பிரிவினர் ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரித்து வருகிறார்கள்.

### செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்

1 நம் விசுவாசத்திற்கும் செயலுக்கும் வழிகாட்டி வேதாகமம் மாத்திரமே. (வேதாகமத்தின் ஒவ்வொரு வார்த்தையும் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது என்று பாப்திஸ்துகளில் சிலர் மட்டும் தவறாக நினைக்கிறார்கள்.)

2. கிருபையால் மட்டுமே இரட்சிப்பு.
3. தேவத்துவம்.
4. இயேசுவின் இரண்டாம் வருகை.
5. முழுக்கு ஞானஸ்நானம்.

6. சபை வேறு, அரசாங்கம் வேறு.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

**1. இரகசிய வருகை:**

'உபத்திரவத்திற்குச் (வாதைக்குச்) சற்று முன்பாக, கிறிஸ்து பூமிக்கு வந்து சபையை எடுத்துக்கொள்வார்; இரட்சிக்கப்படாதவர்கள் பூமியிலிருந்து உபத்திரவங்களை அனுபவிப்பார்கள்' எனும் நம்பிக்கை.

(1 தெச 4:16,17; 2தெச 1:7-9; மத் 13:30; லூக்கா 17:26-37; மத் 24:27; சங் 50:3; வெளி 1:7)

**2.ஆத்துமாவின் அழியாமை:**

"மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா' என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்து இருக்கக்கூடியது; மரணத்தின் போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது" எனும் நம்பிக்கை.

(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்படவில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

**3. நித்திய வாதை:**

'மனந்திரும்பாதவர்களை நரகத்தில் போட்டு, நித்திய காலமாகத் தேவன் வாதிப்பார்' எனும் நம்பிக்கை.

(மல்கியா 4:1-3; சங் 37:10,11,20,38; யூதா 7; 2பேதுரு 2:6; வெளி 20:9; எபி 12:29)

**4. நீங்காத இரட்சிப்பு:**

'ஒருவர் கிறிஸ்துவிடம் ஒருமுறை வந்துவிட்டாரென்றால், தன் இரட்சிப்பை இழக்கவே இழக்கமாட்டார்' எனும் நம்பிக்கை.

(1கொரி 15:1,2; 2பேதுரு 2:20-22; 1கொரி 9:27 (இங்கே 'ஆகாதவன்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையே கிரேக்க வேதாகமத்தின் எரேமியா 6:30 இல் 'தள்ளுபடியான' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) எபி 4:4-7; வெளி 3:5; பிலி 4:3 ஐயும் பார்க்கவும். நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது ஜீவபுத்தகத்தில் நம் பெயர் எழுதப்படுகிறது. அதிலிருந்து பெயர் நீக்கப் படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக வேதாகமம் கூறுவதால், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒருவர் அவரை விட்டுவிலகிவிட வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

**5. ஞாயிறு பரிசுத்தம்:**

'இயேசுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்த நாளைத் தொழுகை நாளாகப் பரிசுத்தம் பண்ணவேண்டும்' எனும் கொள்கை.

(ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12-20; லூக்கா 4:16; மத் 24:20; அப் 13:42-44; வெளி 1:10; மத்தேயு 12:8; லூக்கா 6:5; ஏசாயா 66:22,23)

**6. கிறிஸ்துவில் பிரமாணம் ஒழிந்துபோனது:**

(மத்தேயு 5:17,18; யோவான் 14:15; ரோமர் 6:13,14; 3:28-31; சங் 40:8; எபிரெயர் 8:10; 1யோவான் 2:3-6; யாக்கோபு 2:10-17)

**இவர்களை அணுகும் முறைகள்**

பொதுவான கருத்துகளைப் பற்றி முதலில் பேசுங்கள். உடனடியாக ஓய்வு நாளைப் பற்றி பேசாதீர்கள். இயேசுவைப் பற்றிப் பேசுங்கள். கிருபையால்தான் இரட்சிப்பு என்பதை வலியுறுத்துங்கள். சிலுவையில் தேவன் செய்த மீட்பின் செயலை விசுவாசத்தின் மூலம் ஏற்றுக்கொள்வதால் நீதிமான்களாகிறோம் எனும் உண்மையின் முக்கியத்துவத்தை வற்புறுத்துங்கள். அன்பினால் எப்போதுமே கீழ்ப்படிதலுக்கு வழிநடத்தப்படுவோம் என்பதை விளக்குங்கள்.

(எபே 2:8-10; யாக் 1:10-17; ரோமர் 3:15-31; 6:14,15; யோவான் 14:15.)

என்ன காரணத்தைக் கொண்டும் வாதாடக்கூடாது. வாதத்தை வென்றுவிடலாம்; ஆனால், நண்பனை இழந்துவிடுவோம். உறவை ஏற்படுத்துங்கள். இருவருமே இயேசுவின்மேல் அன்புகொண்டுள்ளதால், அதன் அடிப்படையில் நட்பை வளருங்கள். அவரோடு சேர்ந்து அவருக்காக ஜெபியுங்கள். இயேசுவோடு உங்களுக்குள்ள சொந்த அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில் இயேசு செய்து வருகிற நன்மைகளுக்காக அவரோடு சேர்ந்து காத்தரைத் துதியுங்கள். இரண்டு உள்ளங்களிலும் அன்பு நிலைபெற்ற பிறகு சரியான காலத்தில் ஆவியானவரின் வழிநடத்துதலைப் பெற்று, செவந்த்-டே அட்வெண்டிஸ்ட் சபையின் சிறப்பு உபதேசங்களைக் கற்றுக்கொடுங்கள்.

**கீழ்க்காணும் படிகளில் செல்லுங்கள்:**

1. இயேசு உங்களுக்காகச் செய்த நன்மைகளைச் சாட்சியாகப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
2. அர்த்தமுள்ள பக்தி வாழ்க்கையில் இயேசுவை அறிந்துகொள்ளுவதின் முக்கியத்துவம் பற்றிய கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளுங்கள்.
3. கிறிஸ்துவை மையமாகக் கொண்ட பிரசங்க ஒலிநாடா அல்லது புத்தகங்களை (கடவுளிடத்திற்கு வழி, யுகங்களின் வாஞ்சை) அவருக்குக் கொடுங்கள்.
4. அவரை உங்கள் வீட்டிற்கு அழைத்து, விருந்து கொடுங்கள்.
5. சரியான நேரத்தில் வேதபாடங்களை அவருக்குக் கொடுங்கள்.

**நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். எபேசியர் 2:10.**

# 2. வேதாகமச் சபைகள் (அமைப்பு சாராதவை)

வேதாகமத்தைக் கவனிக்கவேண்டும் எனும் எண்ணத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் அமெரிக்காவில் தோன்றிய இயக்கமே அமைப்பு சாராத வேதாகமச் சபைகள் ஆகும். இவை கடந்த 50 ஆண்டு காலமாக பெருகி வருகின்றன. உபதேசங்களில் முக்கியமான சபைகள் வேதாகமத்தைவிட்டு விலகிச் செல்வதை உணர்ந்து, புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்திற்குத் திரும்பி வரவேண்டும் எனும் ஆவல் அவர்களிடம் அதிகமாக உள்ளது. சபைப்போதகர்கள் திறமையானவர்களாய் இருப்பதால் உள்ளூர்ச் சபை ஒவ்வொன்றும் பலமுள்ளவைகளாக விளங்குகின்றன. அவர்களுக்குச் சபை அமைப்பு எதுவும் இல்லை. அவர்களுடைய உபதேசங்களில் சபைக்குச் சபை சிறிய வேறுபாடு இருக்கலாம். ஆனால், பொதுவாக கீழ்க்காணும் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவும் இருக்காது.

1. வேதாகமத்தை எழுத்தின்படியே அர்த்தம் காணவேண்டும்.
2. கிருபையினாலேயே இரட்சிக்கப்படுகிறோம்.
3. தீர்க்கதரிசனங்களுக்கு விளக்கம் கூறும்போது, பிற்காலவியல் நியதியைப் பின்பற்றுகிறார்கள்.
4. ஆத்துமா அழியாதது.
5. மரித்தோரிலிருந்து இயேசு ஞாயிற்றுக்கிழமை உயிர்த்ததால், அந்த நாளைக் கர்த்தருடைய நாளாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.
6. உற்சாகமான பாடல்களும் ஆர்வமூட்டும் வேதாகமப் பிரசங்கங்களும் அன்பான ஐக்கியமும் நிறைந்த கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஆராதனை.
7. நீங்காத இரட்சிப்புக் கொள்கையில் நம்பிக்கை.
8. சிலுவையில் நியாயப்பிரமாணம் ஒழிந்துபோய்விட்டது.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. வேதாகமத்தை முக்கியப்படுத்துதல்.
2. திரித்துவம்-தேவத்துவம்.
3. கிறிஸ்து-மையப் பிரசங்கம்.
4. கிருபையினால் மாத்திரமே இரட்சிப்பு.
5. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நம்பிக்கை.
6. முக்கிய சபைகளில் வழிவிலகல் காணப்படுகிறது. அதனால், விசுவாசிகள் புதிய ஏற்பாட்டு விசுவாசத்திற்குத் திரும்பவேண்டும்.

7. முக்கிய சபைகளைவிட்டு வெளியேவர விருப்பம்.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

**1. இரகசிய வருகை:**

'உபத்திரவத்திற்குச்(வாதைக்குச்) சற்றுமுன்பாக, கிறிஸ்து பூமிக்கு வந்து சபையை எடுத்துக்கொள்வார்; இரட்சிக்கப்படாதவர்கள் பூமியிலிருந்து உபத்திரவங்களை அனுபவிப்பார்கள்' எனும் நம்பிக்கை.

(1 தெச 4:16,17; 2தெச 1:7-9; மத் 13:30; லூக்கா 17:26-37; மத் 24:27; சங் 50:3; வெளி 1:7)

**2. ஆத்துமாவின் அழியாமை:**

"மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா' என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்து இருக்கக்கூடியது; மரணத்தின்போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது" எனும் நம்பிக்கை.

(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது அழியாத ஆத்துமா. என்று அழைக்கப்படவில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

**3. நீங்காத இரட்சிப்பு:**

"ஒருவர் கிறிஸ்துவிடம் ஒருமுறை வந்துவிட்டாரென்றால், தன் இரட்சிப்பை இழக்கவே இழக்கமாட்டார்" எனும் நம்பிக்கை. (1கொரி 15:1,2; 2பேதுரு 2:20-22; 1கொரி 9:27 (இங்கே 'ஆகாதவன்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையே கிரேக்க வேதாகமத்தின் எரேமியா 6:30 இல் 'தள்ளுபடியான' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) எபி 4:4-7; வெளி 3:5; பிலி 4:3 ஐயும் பார்க்கவும். நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது ஜீவபுத்தகத்தில் நம் பெயர் எழுதப்படுகிறது. அதிலிருந்து பெயர் நீக்கப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக வேதாகமம் கூறுவதால், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட ஒருவர் அவரை விட்டுவிலகிவிட வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

**4. ஞாயிறு பரிசுத்தம்:**

'இயேசுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்த நாளைத் தொழுகை நாளாகப் பரிசுத்தம் பண்ணவேண்டும்' எனும் கொள்கை.

(ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12-20; லூக்கா 4:16; மத் 24:20; அப் 13:42-44; வெளி 1:10; மத்தேயு 12:8; லூக்கா 6:5; ஏசாயா 66:22,23)

**5. கிறிஸ்துவில் பிரமாணம் ஒழிந்துபோனது:**

(மத்தேயு 5:17,18; யோவான் 14:15; ரோமர் 6:13,14; 3:28-31; சங் 40:8; எபிரெயர் 8:10; 1யோவான் 2:3-6; யாக்கோபு 2:10-17)

**இவர்களை அணுகும் முறைகள்**

1. கிறிஸ்துவின்மேல் உள்ள நம்பிக்கையையும் வேதாகமமே தேவனுடைய

வார்த்தை எனும் நம்பிக்கையையும் அடிப்படையாக வைத்து, அன்பான ஓர் உறவை ஏற்படுத்துங்கள்.

2. கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே நீங்கள் இரட்சிக்கப்பட்ட விதத்தைச் சாட்சியாகப் பகிர்ந்துகொள்ளுங்கள்.
3. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அளவுகோல் வேதாகமம் மாத்திரமே என்பதை வலியுறுத்துங்கள்.
4. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் விதத்தைக் குறித்துக் கலந்து ஆலோசியுங்கள். இரகசிய வருகை என்பது வேதாகமத்திற்கு ஒத்தது அல்ல என்பதை விளக்கிக் கூறுங்கள். மற்ற வேத உபதேசங்களைப் பிற்பாடு ஆராய்வதற்கு இது உதவும்.
5. தானியேல் 2, மத்தேயு 24 ஆகியவற்றை ஆரம்பத்திலேயே சொல்லிக் கொடுத்து விடுங்கள்.
6. வெளி 14:6-12; வெளி 17; வெளி 18 ஆகிய பகுதிகளை அடிப்படையாக வைத்து ஏன் பல சபைகள் உள்ளன என்பதைக் குறித்து ஆலோசிப்பது பயன் தரும்.

**அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமை யுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென். 1தீமோத்தேயு 6:15,16.**

**நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். ரோமர் 6:13.**

# 3. பௌத்தர்கள்

சித்தார்த்தர் என்ற பெயரையுடைய ஒரு இளவரசனே புத்தர் என்று அழைக்கப்பட்டார். பௌத்த மார்க்கத்தின் ஸ்தாபகர் இவரே. புத்தர் என்றால் புத்தியடைந்தவர் என்று அர்த்தம். அதாவது, மனதில் வெளிச்சம் பெற்றவர் என்று அர்த்தம். கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவர் இந்தியாவில் வாழ்ந்தார். ஒரு சமயத் தில் உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் பௌத்தர்களாக இருந்தார்கள். ஸ்ரீலங்கா, கிழக்கு ஆசிய நாடுகள், தென் கிழக்கு ஆசிய நாடுகள், சீனா ஆகிய பகுதிகளில் பௌத்தமே முக்கிய மதம் ஆகும். 'உலகத்தின் பிரச்சனைகளுக்கு சுயநலமே காரணம்' என்று பௌத்தமார்க்கம் போதிக்கிறது. இதைப் போக்குவதற்கு 'எண்வகை வழிகள்' உதவிசெய்யும். அவையாவன:

1. நல்ல நம்பிக்கை
2. நல்ல சிந்தனை
3. நல்ல செயல்
4. நல்ல சொல்
5. நல்ல வாழ்க்கை
6. நல்ல தியானம்
7. நல்ல முயற்சி
8. நல்ல ஈடுபாடு

வாழ்க்கையின் இரகசியம் அன்பே. அன்பினால்தான் பகை ஒழியும். எதிரிகளிடமும் அன்பு காட்டுவதே வாழ்க்கையில் முக்கிய மானது. நிர்வாணம் என்று கூறப்படும் சமாதானமும் அன்புமயமான நிலையை அடைவதே வாழ்க்கையின் இலட்சியம். இந்த அன்பு கிடைக்கும் இடத்தை அவர்கள் அறியவில்லை. பாவ மனிதனின் நிலையையும் இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே கிடைக்கும் மீட்பையும் அவர்கள் உணரவில்லை. தேவனை ஒரு நபராக அவர்கள் நினைப்பது இல்லை. இயேசுவைப் பக்தியுள்ள மனிதராக மாத்திரமே பார்க்கிறார்கள். நற்கிரியைகளால் நீதியைச் சம்பாதித்து, தன் தனித்தன்மையை இழந்து, அன்பான சமாதானத்திற்குள் ஐக்கியமாகி விடுவதே இரட்சிப்பு என்று எண்ணுகிறார்கள்.

**இவர்களை அணுகும் முறைகள்**

1 இயேசுவின் மூலம் உங்களுக்குக் கிடைத்த மகிழ்ச்சி, சமாதானம், அன்பு ஆகியவற்றை அவர்களிடம் கூறுங்கள்.

2. கீழ்க்காணும் கேள்விகளைக் கேட்பது பயன் தரும். அன்பு எங்கிருந்து வருகிறது? நல்லது செய்ய ஆசைப்படும் நம்மிடத்தில் தீமை எங்கிருந்து வந்தது? நல்ல மனிதர்கள் பொய்சொல்வார்களா? இயேசு நல்ல மனிதர் என்று ஏற்றுக் கொள்கிறீர்களே, அவர் தன்னைத் தேவன் என்று அழைப்பது பற்றி

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நல்லது என்று நாம் நினைக்கும் காரியங்களை நம்மால் செய்யமுடியாமல் போவது ஏன்? வாழ்க்கையில் ஏதோ ஒன்றை இழந்திருக்கிறோம் என்பதுபோன்ற உணர்வு இருப்பதற்குக் காரணம் என்ன?

3. அன்பை இலட்சியமாகக் கொண்டிருப்பது நல்லது என்று பாராட்டுங்கள். தீமையின் தோற்றம் குறித்தும் இரட்சிப்பின் திட்டம் குறித்தும் தீமையை ஒழித்து, நன்மையைப் பலப்படுத்தும் வாய்ப்பு இயேசுவின் மூலம் உண்டு என்பதையும் படியுங்கள்.

4. வேதாகமத்திலுள்ள தானி 2 போன்ற தீர்க்கதரிசனங்களை விளக்கி, வேதாகமத்தின்மேல் நம்பிக்கை உண்டாக்குங்கள். கிறிஸ்துவின் தெய்வீகம், இரண்டாம் வருகை போன்றவை பற்றிய தீர்க்கதரிசனங்களை பௌத்தர்கள் ஆவலுடன் கேட்கிறார்கள்.

**சில வரையறைகள்**

| | |
|---|---|
| 1. கர்மா | ஒரு தனி மனிதன் செய்யும் நீதியான அல்லது கெட்ட செயல்கள். |
| 2. மறுபிறவி | ஒரு மனிதன் தான் செய்த நன்மை அல்லது தீமைகளுக்கேற்ப நல்ல நிலை அல்லது கெட்ட நிலையில் மீண்டும் பிறக்கிறான் எனும் நம்பிக்கை. |
| 3. நிர்வாணம் | மறுபடியும் மறுபடியும் பிறக்கிற சுழற்சியிலிருந்து விடுதலை பெற்று, சமாதான நிலையில் ஐக்கியமாகி விடுதல். |

**இயேசுவின் மூலம் உங்களுக்குக் கிடைத்த மகிழ்ச்சி, சமாதானம், அன்பு ஆகியவற்றை அவர்களிடம் கூறுங்கள்.**

**அன்பை இலட்சியமாகக் கொண்டிருப்பது நல்லது என்று பாராட்டுங்கள். தீமையின் தோற்றம் குறித்தும் இரட்சிப்பின் திட்டம் குறித்தும் தீமையை ஒழித்து, நன்மையைப் பலப்படுத்தும் வாய்ப்பு இயேசுவின் மூலம் உண்டு என்பதையும் படியுங்கள். வேதாகமத்திலுள்ள தானி 2 போன்ற தீர்க்கதரிசனங்களை விளக்கி, வேதாகமத்தின்மேல் நம்பிக்கை உண்டாக்குங்கள். கிறிஸ்துவின் தெய்வீகம், இரண்டாம் வருகை போன்றவை பற்றிய தீர்க்கதரிசனங்களை பௌத்தர் கள் ஆவலுடன் கேட்கிறார்கள்.**

# 4. கத்தோலிக்கர்கள்

பேதுருவே முதல் போப்பாண்டவர் என்றும், புதிய ஏற்பாட்டுக் ரோமன் கத்தோலிக்கச் சபை தோன்றியது என்றும் இச்சபை கூறிக்கொள்கிறது. 'இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்' என்றும், 'பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத்வேன்' என்றும் இயேசு பேதுருவிடம் சொன்னதைத் தவறாகப் புரிந்துகொண்டு, 'பரலோகத்தின் தெய்வீக அதிகாரம் முதல் போப்பாண்டவராகிய பேதுருவுக்குக் கொடுக்கப்பட்டது' என்றும், 'வேதாமத்தின் அதிகாரத்தைவிட திருச்சபையின் அதிகாரம் மேலானது' என்றும் கூறிக்கொண்டிருக்கிறார்கள். சத்தியத்தை அறியவேண்டுமானால், வேதாகமத்திற்குத் திருச்சபையும் போதகர்களும் கொடுக்கும் விளக்கத்தையும் பாரம்பரியத்தையும் இணைத்துப் பார்க்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆலோசனைச் சங்கங்ளின் தீர்மானங்கள், போப்பாண்டவரின் கட்டளைகள் போன்றவற்றை அடிப்படையாக வைத்துச் சத்தியத்தைக் கண்டறியவேண்டும்.

உலக மக்கள் தொகையில் 18.5 சதவிகிதத்தினர் கத்தோலிக்கர்கள். உலக மக்கள் தொகையில் 32 சதவிகிதம்தான் கிறிஸ்தவர்கள். இதை வைத்துப் பார்க்கும்போது, கிறிஸ்தவர்களின் தனிப்பெரும் பிரிவு ரோமன்கத்தோலிக்கச் சபைதான். இவர்களில் பலர் சமாதானத்தைப் பெறவும் இயேசு மாத்திரமே தரக்கூடிய விடுதலையைப் பெறவும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். வேதாகமத்தின் சத்தியத்தைப் புரிந்துகொள்ள ஆயிரக்கணக்கானோர் ஆசைப்படுகிறார்கள். எல்லா மதமக்களிலும் கத்தோலிக்க மக்களே தேவனுடைய சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறார்கள்.

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. தேவத்துவம்.
2. கன்னிப்பிறப்பு. (பாவமில்லா கன்னி எனும் நம்பிக்கை தவறு)
3. தேவனுக்குக் கீழ்ப்படிவதின் அவசியம்.
4. வேதாகமம் ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்டது.
5. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.
6. ஜெபத்தின் முக்கியத்துவம்.

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

**1. போப் மரபுரிமை:**

'இயேசு பேதுருவுக்கு அதிகாரம் கொடுத்தார். அந்த அதிகாரம் ஒவ்வொரு போப்புவுக்கும் மாறிவருகிறது' எனும் கொள்கை.
(எபே 1:22; 4:15; 1கொரி 10:4; உபா 32:3,4; சங் 62:1,3; 1பேதுரு 2:7)

**2. சடங்குகள்:**

'ஞானஸ்நானம், திடப்படுத்துதல், பாவஅறிக்கை, திருப்பலி, திருமணம், சபைப் பணி, எண்ணெய் பூசுதல் ஆகிய சடங்குகள் மூலமாக தேவன் தமது கிருபையை மக்களுக்குக் கொடுக்கிறார்' எனும் நம்பிக்கை.

இவ்வுலகத்திற்குத் தேவனுடைய கிருபை வரும் வழி இயேசுவே. எபே 2:5 ரோமர் 6:14,15; 3:25–31)

**3. உத்தரிக்கும் ஸ்தலம்:**

'சிலர் பரலோகம் செல்லும் அளவுக்கு நல்லவர்களாக இருக்கமாட்டார்கள். அதேசமயத்தில் நரகம் செல்லும் அளவுக்குக் கெட்டவர்களாகவும் இருக்க மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களைச் சுத்தமாக்கும் இடைப்பட்ட இடம் ஒன்று இருக்கிறது' எனும் நம்பிக்கை. அந்த இடத்தை உத்தரிக்கும் ஸ்தலம் என்கிறார்கள். அழியாத ஆத்துமா, கிரியையால் இரட்சிப்பு எனும் தவறான உபதேசங்களின் அடிப்படையில் இந்த நம்பிக்கை அமைந்துள்ளது.

(சங் 6:5; 115:17; பிர 9:5; யோவான் 11:11-14; எபி 4:15; எபே 2:8; ரோமர் 3:25,26)

**4. வேதாகமத்தைவிட பாரம்பரியம் பெரியது:**

'சத்தியத்தைச் சரியாக அறிந்துகொள்ளவேண்டுமானால், வேதாகமத்திற்குச் சபை கொடுக்கும் விளக்கத்தையும் ஆலோசனைச் சங்கங்களின் தீர்மானங்களையும் இணைத்துப் பார்க்கவேண்டும்' எனும் நம்பிக்கை.

யோவான் 17:17; 2தீமோ 3:14; யோவான் 5:39; 2தீமோ 2:15; யோவான் 16:7-13)

**5. பாவயில்லாக் கன்னி மரியாள்:**

'மரியாள் கருவில் உருவாகியபோது, பரிசுத்த ஆவியானவரால் பாவ அல்லாமல் உருவாக்கப்பட்டாள். எனவே, இயேசுவானவரும் பாவம் இல்லாமல் இருந்தார்' எனும் நம்பிக்கை.

ரோமர் 3:23; 3:9-12; ஏசாயா 64:6; எரே 17:9)

**5. பாவ அறிக்கை:**

'தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராக போதகர்கள் இருக்கிறார்கள்' எனும் நம்பிக்கை.

(1 தீமோ 2:5; எபி 4:14-16; 1யோவான் 1:9)

**7. அற்புதங்கள், தரிசனங்கள், அடையாளங்கள்:**

'அற்புதங்களும் அடையாளங்களும் கொள்கையை உறுதிப்படுத்துகின்றன' எனும் நம்பிக்கை. ஆனால், சாத்தானும் அற்புதங்கள் செய்வதால், அற்புதங்கள் போதா; அந்தக் கொள்கையை வேதாகமம் ஆதரிக்கவேண் டும் என்பதே சரியானது.

(வெளி 16:13,14; 19:20; மத் 7:21-23; 24:24; உபா 13:1-3; ஏசாயா 8:20; லூக்கா 16:31)

**8.ஆத்துமாவின் அழியாமை:**

''மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா' என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்து இருக்கக்கூடியது; மரணத்தின்போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது'' எனும் நம்பிக்கை.

(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதா

கமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்படவில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

**9. ஞாயிறு பரிசுத்தம்:**

'இயேசுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்த நாளைத் தொழுகைநாளாகப் பரிசுத்தம் பண்ணவேண்டும்' எனும் கொள்கை.

(ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12-20; லூக்கா 4:16; மத் 24:20 அப் 13:42-44; வெளி 1:10; மத்தேயு 12:8; லூக்கா 6:5; 66:22,23)

**10. மரித்தோருக்காக ஜெபித்தல்:**

'உத்தரிக்கும் ஸ்தலத்தில் சுத்திகரிக்கப்படும் மக்களுக்காக நாம் ஜெபித்தால், தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு, அவர்களுடைய நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவார்' எனும் நம்பிக்கை.

(பிர 9:5; சங் 115:17; 6:5; 146:3,4; யோவான் 11:11-14; எசேக் 14:14,20; சங் 49:7,8; 1தீமோ 2:6)

**11. குழந்தை ஞானஸ்நானம்:**

'ஆதாம் செய்த பாவத்திற்காக குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்' எனும் நம்பிக்கை.

(மாற்கு 16:16; அப் 2:38-42; மத் 28:18-20)

### இவர்களை அணுகும் முறைகள்

அன்பான நட்புறவோடு வெளிப்படையாக வேதாகமத்திலிருந்து பேசுதல் பலன் தரும்.

1. அநேகர் வேதாகமத்தை வாசித்ததோ, அதன் உபதேசங்களை ஆராய்ந்ததோ இல்லாவிட்டாலும் வேதாகமத்தை மிகவும் மதிக்கிறவர்களாக இருப்பார்கள். இப்போது வேதாகமத்தை ஆராயக்கூடிய கத்தோலிக்கரின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டு வருகிறது.
2. கிரியையால் இரட்சிப்பு எனும் எண்ணம் உள்ளத்தில் இருப்பதால், மனதிற்குள் ஆன்மிகப் போராட்டங்கள் அவர்களுக்கு இருக்கும். கிறிஸ்துவில் கிடைக்கும் இரட்சிப்பின் நிச்சயம் அவர்களுக்குத் தேவை. 1யோவான் 5:11-17.
3. ஆழமான வேதச்சத்தியங்களை அறிந்துகொள்ளும் ஆசை அவர்களுக்கு உண்டு. முக்கியமாக தீர்க்கதரிசனங்களை ஆர்வத்துடன் கவனிப்பார்கள். தானி 2, மத் 24, கிறிஸ்துவின் வாழ்வைப்பற்றிய தீர்க்கதரிசனங்கள் போன்றவற்றை ஆர்வத்தோடு கவனிப்பார்கள்.
4. வேதாகமத்திற்கு இருக்கும் அதிகாரத்தை முதலில் வலியுறுத்தவேண்டும். அதன்பின் தீர்க்கதரிசனங்களையும் நாம் இரட்சிக்கப்படும் விதத்தையும் கலந்துரையாடவேண்டும். நியாயப்பிரமாணம், ஓய்வுநாள், ஓய்வுநாள் மாற்றம் போன்றவற்றை குறைந்தபட்சம் பத்துப் பாடங்களாவது படித்து முடித்த பிறகு சொல்லித்தருதல் வேண்டும்.
5. ஓய்வுநாளை அறிமுகப்படுத்தும்போது, கத்தோலிக்கச் சபை ஒத்துக்கொள்கிற பத்துக்கற்பனையின் மையப்பகுதியில் ஓய்வுநாள் கற்பனை இருக்

கிறது என்று சொல்லவேண்டும்.

6. எல்லா உபதேசங்களுக்கும் ஒழுக்கத் தீர்மானங்களுக்கும் அடித்தளம் வேதாகமமே, சபை அல்ல எனும் கருத்தைக் கத்தோலிக்க நண்பர்களுக்கு வலியுறுத்தவேண்டும்.

7. அவர்களுக்காக உற்சாகமும் கருத்தாழமும் உள்ள ஜெபங்களை ஜெபித்தால், அவர்களுக்கு அது மிகவும் பிடிக்கும்.

8. கத்தோலிக்கர்கள் பொதுவாக வேதாகமத்தின்மேல் ஆர்வமுடையவர்களாகவே இருக்கிறார்கள். சத்தியத்தை அறியும்போது, அவர்கள் உள்ளம் கொழுந்துவிட்டு எரிகிறது. தேவ சித்தத்தை அறிய ஆசைப்படுகிறார்கள். அன்பாகவும் அறிவுக்கேற்றபிரகாரமாகவும் சத்தியத்தைச் சொன்னால் ஆயிரக்கணக் கானோர் அதை ஏற்றுக்கொள்வார்கள்.

**தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்.**
**குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.**
**உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்.**
**நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.**
**நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.**
**1யோவான் 5:11-15.**

# 5. கிறிஸ்டியன் சைன்டிஸ்ட்ஸ்

19 ஆம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியில் மேரி பேக்கர் எடி எனும் அம்மையார் கண்ட தரிசனங்களின் அடிப்படையில் போஸ்டனிலுள்ள மசாக்குசெட்ஸ் எனும் ஊரில் தோன்றியதே கிறிஸ்டியன் சைன்டிஸ்ட்ஸ் எனும் சபையாகும். லௌகீக வல்லமைகளை ஆன்மிக வல்லமையால் கட்டுப்படுத்தலாம் என்பதே இவர்களின் முக்கிய நம்பிக்கை. வேதாகமத்தை எழுத்தின் பிரகாரம் அர்த்தம் பார்க்கக்கூடாது என்றும், அடையாளமாகவே அர்த்தம் பார்க்கவேண்டும் என்றும் நம்புகிறார்கள். பிசாசு கிடையாது, தீமை என்பது மனிதனின் கற்பனையில் தோன்றும் ஒரு காரியமே. நோய், துன்பம், வலி, மரணம் போன்றவை வெறும் மாயத்தோற்றங்களே. 1875 ஆம் ஆண்டில் சைன்ஸ் அன் ஹெல்த் எனும் புத்தகத்தை மேரி பேக்கர் எடி பிரசுரித்தார். தேவன் நல்லவரும் வல்லவரும் நித்தியமானவருமாய் இருப்பதால் தீமை என்பது அவருடைய குணத்திற்கு உகந்தது அல்ல. ஆதியாகமம் 1 இல் உலகப் படைப்பானது ஆன்மிகத் தன்மை உடையதாயும் பூரணமாயும் காட்டப்பட்டுள்ளது என்றும், ஆதியாகமம் 2 இல் உலகப் பொருளின் படைப்பான அடையாள பூர்வமாகக் காட்டப்பட்டுள்ளது என்றும் இவர்கள் நம்புகிறார்கள். மனிதனைப் பற்றிய தவறான எண்ணத்தால் தீமையான விளைவுகள் தோன்றுகின்றன என்றும் நம்புகிறார்கள். சபையில் அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்கள் கிடையாது. கிறிஸ்டியன் சைன்ஸ் மானிட்டர் எனும் பத்திரிக்கையை வெளியிடுகிறார்கள்.

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. தேவன் நித்தியமானவர், அன்புள்ளவர், எல்லாம் அறிந்தவர்.
2. நம்முடைய உடலை நம்முடைய மனது பாதிக்கிறது.
3. தீர்க்கதரிசன வரத்தின் மூலமாக தேவன் இப்போதும் தமது திருச்சபையை வழிநடத்துகிறார்.

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

**1. வேதாகமம் முழுவதும் உருவகக் கதை:**

'வேதாகம வார்த்தைகளை எழுத்தின்பிரகாரமாக அர்த்தம்பார்த்தல் கூடாது' எனும் நம்பிக்கை.
(2தீமோ 3:16; 2பேதுரு 1:21; யோவான் 17:17; வெளி 21:5; யோவான் 5:39)

**2. பிசாசு கிடையாது:**

'பிசாசு என்பது கற்பனையான ஒரு ஜீவன்தான்' எனும் நம்பிக்கை.
(எசேக் 28:12-15; ஏசாயா 14:12-14; வெளி 12:7-9; மத் 4:1-6; 1பேதுரு 5:8; எபே 6:10-12)

**3. ஆத்துமாவின் அழியாமை:**

''மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா' என்று ஒன்று இருக்கிறது; அது அழி

யாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்தும் இருக்கக்கூடியது; மரணத்தின் போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது'' எனும் நம்பிக்கை.

(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்படவில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

**இவர்களை அணுகும் முறைகள்**

ஆக்கப்பூர்வமான சிந்தனை, முழுமையான மனநிலை, உற்சாகம், பிறர் நலம், நன்றி உணர்வு போன்ற காரியங்களை இவர்கள் வலியுறுத்துவதால், கல்வி கற்ற பணக்காரர்கள் பலர் இச்சபையில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். சபை ஆராதனையில் வேதாகம வாசிப்பு, விசுவாசிகளின் சாட்சி, மேரி பேக்கர் எடியின் எழுத்துகளிலிருந்து உபதேசம் ஆகியவை செய்யப்படும். இவர்களை விருந்துக்கு அழைத்து, நட்புறவை ஏற்படுத்துங்கள். யுகங்களின் வாஞ்சை போன்ற புத்தகங்கள் நட்புறவை வளர்ப்பதற்கு ஏதுவானவை. பின்வரும் செயல்பாடுகள் அவர்களைச் சந்திக்க உதவக்கூடியவை.

1. தீர்க்கதரிசனங்கள், தொல்பொருள் ஆராய்ச்சிகள் மூலமாக வேதாகமத்தின்மேல் நம்பிக்கை உண்டாக்குங்கள்.
2. பாவத்தின் சம்பளம் மரணம் என்பதைக் காண்பித்து, மாபெரும் போராட்டத்தின் சட்டப்பிரகாரமான செயல்பாடுகளை விவாதியுங்கள். ரோமர் 6:23.
3. பாவம் என்றால் என்ன என்பதைத் தெளிவாக விளக்குங்கள். 1யோவா 3:4.
4. இரட்சிப்பின் திட்டத்தையும் இயேசு மரிக்கவேண்டியதின் அவசியத்தையும் விரைவாகச் சொல்லிக்கொடுக்கவேண்டும்.

இவர்கள் மிகவும் மரியாதை உள்ளவர்கள். அவர்களோடு நேரம் செலவிடுவது நமக்கு மகிழ்ச்சியையே தரும். இரட்சிப்பின் திட்டத்தையும் கிறிஸ்து தரும் பாவநிவாரணத்தின் அர்த்தத்தையும் அறிந்துகொள்ளவேண்டியதே இவர்களுடைய முக்கிய தேவையாகும். முக்கியமாக இரட்சிப்பின் திட்டத்தால் தனி மனிதனுக்கு என்ன நன்மை இருக்கிறது? என்பதைத் தெளிவாகச் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

**வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. 2தீமோ 3:16,17.**

# 6. கிறிஸ்துவின் சபைகள்

1840 ஆம் ஆண்டிற்குப் பிறகு அலெக்சாண்டர் கேம்பெல் என்பவரால் கிறிஸ்துவின் சபைகள் தோற்றுவிக்கப்பட்டன. மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சித்தாந்தங்கள், ஒழுங்கமைப்புகளில் குறைகண்டதால் இவர்கள் பிரிந்தார்கள். 1900 ஆம் ஆண்டில் இசைக்கருவிகளின் பயன்பாடு, கிறிஸ்தவ ஊழிய சங்கம் அமைத்தல் ஆகியவை பற்றிய பிரச்சனைகளில் கருத்து வேறுபாடு தோன்றியது. 1906 ஆம் ஆண்டில் சர்ச்சஸ் ஆஃப் க்றைஸ்ட் எனும் பெயர் சூட்டப்பட்டது. இந்தச் சபையில் கிட்டத்தட்ட 27 லட்சம் பேர் இருக்கிறார்கள். உள்ளூர்ச் சபை ஒவ்வொன்றும் சுதந்தரமாகச் செயல்படக் கூடியவை. இந்தச் சபையின் முக்கிய உபதேசங்களாவன.

1. வேதாகமம் ஆவியானவரின் ஏவுதலால் எழுதப்பட்டது. ஆனாலும், பழைய ஏற்பாட்டைவிட புதிய ஏற்பாடு சற்று மேலானது. தொழுகை முறை, ஒழுங்கமைப்பு, உபதேசம், கட்டுப்பாடு, சபை நிர்வாகம் ஆகிய அனைத்தும் புதிய ஏற்பாட்டிலிருந்துமாத்திரமே வரவேண்டும்.
2. நாம் புதிய உடன்படிக்கையின் காலத்தில் இருக்கிறோம். எனவே, பழைய ஏற்பாட்டுச் சட்டங்கள் அனைத்தும் ஒழிந்துபோயின. (ஓய்வுநாள் கட்டளை, உடல்நல விதிகள் போன்றவை)
3. ஆத்துமா அழி யாதது. நித்திய வாதை உண்டு.
4. ஞாயிறு பரிசுத்தமானது. இதற்கும் பழைய உடன்படிக்கையின் ஓய்வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. புது உடன்படிக்கையின்படி இது கர்த்தருடைய நாள்.
5. ஒவ்வொரு ஆராதனையிலும் நற்கருணை கொடுக்கப்படல் வேண்டும்.
6. கிறிஸ்துவின் சபை என்னும் பெயர் மாத்திரமே வேதாகமத்தின்படி ஒரு சபைக்குச் சரியான பெயராக இருக்க முடியும். ரோமர் 16:16; கொலோ 1:24; எபே 5:27.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. உபதேசத்தின் ஆதாரம் வேதாகமமே.
2. மனிதரின் இரட்சகர் கிறிஸ்துமாத்திரமே.
3. பகிரங்கமாகக் கிறிஸ்து வருவார்.
4. முழுக்கு ஞானஸ்நானம்.
5. ஒவ்வொரு விசுவாசியின் வாழ்க்கைப் பாணியே சாட்சியிடுதல்.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

**1. பழைய ஏற்பாட்டைவிட புதிய ஏற்பாடு மேலானது.**

‘எல்லா உபதேசங்களுக்கும் ஆதாரம் புதிய ஏற்பாட்டில் இருந்து மாத்திரமே கொடுக்கவேண்டும்’ எனும் நம்பிக்கை.
(2தீமோ 3:16,17; 2பேதுரு 1:21; 1பேதுரு 1:9-11; லூக்கா 24:27,44)

**2. ஞாயிறு பரிசுத்தம்:**

‘இயேசுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்த நாளைத் தொழுகைநாளாகப் பரிசுத்தம்பண்ண வேண்டும்’ எனும் கொள்கை.
(ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12-20; லூக்கா 4:16; மத் 24:20; அப் 13:42-44; வெளி 1:10; மத்தேயு 12:8; லூக்கா 6:5; ஏசாயா 66:22,23)

**3. ஆத்துமாவின் அழியாமை:**

“மனிதனின் சரீரத்துக்குள் ‘ஆத்துமா’ என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்தும் இருக்கக்கூடியது; மரணத்தின்போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது” எனும் நம்பிக்கை.
(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது ‘அழியாத ஆத்துமா’ என்று அழைக்கப்பட வில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

**4. நித்திய வாதை:**

‘மனந்திரும்பாதவர்களை நரகத்தில் போட்டு நித்திய காலமாகத் தேவன் வாதிப்பார்’ எனும் நம்பிக்கை.
(மல்கியா 4:1-3; சங் 37:10,11,20,38; யூதா 7; 2பேதுரு 2:6; வெளி 20:9; எபி 12:29)

**5. கிறிஸ்துவின் சபை என்னும் பெயர்.**

இந்தப் பெயர் புதிய ஏற்பாட்டிலுள்ள பெயராகும். இது மாத்திரமே ஆவியினால் ஏவப்பட்ட பெயராகும்.
(மத் 7:21-27; 1யோவான் 2:3,4; வெளி 14:12; யோவான் 14:15; 15:14)

**6. தேவபிரமாணத்தைப் புதிய உடன்படிக்கை நீக்கிவிட்டது.**

(எபி 8:10; யோவான் 14:15; யாக் 2:10-12; 1யோவான் 2:3,4; வெளி 14:12)

**7. திருச்சபைக் காலத்தில் நாம் வாழ்கிறோம்.**

இந்தக் காலத்தில் பவுலுடைய நிருபங்கள்மூலமாக நமக்குத் தேவையான ஆலோசனைகளைத் தேவன் தந்திருக்கிறார்.
(யோவான் 5:34:2தீமோ 3:16,17; எரே 15:16; யோவான் 6:63; லூக்கா 24:27, 44). இயேசுவும் அவருடைய வார்த்தைகளுமே ஒரு கிறிஸ்தவனுக்கு முன்மாதிரி. (மத் 7:21-27; ஏசாயா 8:20; சங் 119:105).

### இவர்களை அணுகும் முறைகள்

1. முதலில் நட்பை வளர்த்துக்கொள்ளுங்கள். புது உடன்படிக்கைபற்றியும் சபையின் பெயர்பற்றியும் அதிகம் வாதாடுவார்கள். வாதுசெய்வதைத் தவிர்ப்பது நல்லது.
2. உங்கள் சொந்தச் சாட்சியைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

3. கடவுளிடத்திற்கு வழி எனும் புத்தகத்தை அவர்களுக்குக் கொடுங்கள். மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.
4. நட்பு வளர்ந்தபின் தானியேல்-வெளிப்படுத்தல் தீர்க்கதரிசனங்களை நடத்துங்கள். வேதாகமத்தின் ஆழமான சத்தியங்களை யோசிக்க அது உதவி செய்யும்.
5. கண்டுகொண்டேன் வேதபாடங்கள் மூலம் ஒவ்வொரு வாரமும் அவர்களைச் சந்தியுங்கள். அதற்குப் பிறகு நடக்கும் தொடர் கூட்டத்திற்குத் தவறாமல் அழைப்புக் கொடுங்கள்.

**இன்னுங் கொஞ்சநேரந்தான், அப்போது துன்மார்க்கன் இரான்; அவன் ஸ்தானத்தை உற்று விசாரித்தாயானால் அவன் இல்லை. சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்து, மிகுந்த சமாதானத்தினால் மனமகிழ்ச்சியாயிருப்பார்கள். சங்கீதம் 37:10,11.**

**அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். எபிரெயர் 8:10.**

**வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை. ஏசாயா 8:20.**

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. சங்கீதம் 119:105.**

# 7. எபிஸ்கோப்பல் சபை

1534 ஆம் ஆண்டு அரசியல் காரணங்களுக்காக எட்டாம் ஹென்றி எனும் ஆங்கிலேய அரசர் ரோமன் கத்தோலிக்கச் சபையிலிருந்து இங்கிலாந்து சபையைப் பிரித்து, ஆங்கிலிக்கன் சபையைத் தோற்றுவித்தார். அதிலிருந்து தோன்றியதே எபிஸ்கோப்பல் சபை. கத்தோலிக்கச் சபையிலுள்ள போதகர்கள், பிஷப்கள், ஆர்ச் பிஷப்கள் எனும் நிர்வாக அமைப்போடு அச்சபையின் ஆராதனை முறைமையையும் பின்பற்றுகிறார்கள். வேதாகமத்தின் ஆலோசனைகள் கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையானவை என்று நம்புகிறார்கள். ஆனால், வேதாகமச் சித்தாந்தங்களைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை. கடுமையான விதிமுறைகள் எதுவும் இல்லை. பாரம்பரியத்தை வைத்தே வேதவசனங்களை விளக்குகிறார்கள். எதையும் சகித்துக்கொள்வார்கள். கிறிஸ்தவச் சபைகள் ஒன்றுசேரவேண்டும் என்பதில் ஆர்வமுள்ளவர்கள். அமெரிக்காவில் 25 லட்சம் விசுவாசிகள் உள்ளனர். 1549 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட பொது ஜெபப் புத்தகமே இவர்கள் நம்புகிற மூலக்கோட்பாடுகளுக்கு அடிப்படை. குழந்தை ஞானஸ்நானம், ஆத்துமா அழியாமை, ஞாயிறு ஆசரிப்பு போன்ற கத்தோலிக்க நம்பிக்கைகளை விட்டுவிடவில்லை. கலாச்சார அடிப்படையில் வேதாகமத்திற்கு விளக்கம் சொல்லுவார்கள். கன்னிப்பிறப்பு, கிறிஸ்துவின் தெய்வீகம், அற்புதங்கள், கிறிஸ்துவின் பகிரங்க வருகை, தேவதூதர்கள் போன்றவற்றைச் சிலர் சந்தேகிக்கிறார்கள்.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. தேவத்துவம் - சமமான, அன்பான, நித்தியமான, சர்வ வல்லமையுள்ள பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எனும் மூன்று வெவ்வேறு நபர்கள் தேவத்துவத்தில் உள்ளனர்.
2. தேவனுடைய தன்மை - தேவன் அன்புள்ளவர்.
3. சத்தியமே வெல்லும் - இறுதியில் தேவனுடைய நோக்கங்களே வெற்றி பெறும்.
4. ஜெபம் - ஜெபத்தைக் கேட்டு, பதிலளிக்கும் தேவன் நம் தேவன்.
5. சமுதாய நற்பணிகள் - இதன்மூலம் ஏழைகளுக்கும் துன்பப்படுபவர்களுக்கும் உதவி செய்வதே கிறிஸ்தவ அன்பு.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

**1. வேதாகமமானது கலாச்சார அடிப்படையில் ஆனது:**

'வேதாகமத்தைக் கலாச்சார அடிப்படையில் விளக்கம் காணவேண்டி இருப்பதால், அதை அடிப்படையாக வைத்து மூலக்கோட்பாடுகளை உருவாக்க இயலாது'.

(2தீமோ 3:16,17; யோவான் 17:17; 2பேதுரு 1:21; 1தீமோ 2:15; யோவான் 7:17)

**2. ஞாயிறு பரிசுத்தம்:**

'இயேசுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்த நாளைத் தொழுகைநாளாகப் பரிசுத்தம் பண்ணவேண்டும்' எனும் கொள்கை.

(ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12-20; லூக்கா 4:16; மத் 24:20; அப் 13:42-44; வெளி 1:10; மத்தேயு 12:8; லூக்கா 6:5; ஏசாயா 66:22,23)

**3. ஆத்துமாவின் அழியாமை:**

'மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா. என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்தும் இருக்கக்கூடியது; மரணத்தின் போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது' எனும் நம்பிக்கை.

(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்படவில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

**4. குழந்தை ஞானஸ்நானம்:**

'ஆதாம் செய்த பாவத்திற்காக குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்' எனும் நம்பிக்கை.

(மாற்கு 16:16; அப் 2:38-42; மத் 28:18-20)

**5. சன்மார்க்க வாழ்க்கையால் இரட்சிக்கப்படுகிறோம்:**

(ரோமர் 3:10; எரேமியா 17:9; ஏசாயா 64:6; 2கொரி 5:21; கலா 3:13; ரோமர் 3:23-28; 5:18). கிறிஸ்துவுடைய பலியின் இனிமைகுறித்துத் தெளிவாகக் கற்றுக்கொடுங்கள்.

### இவர்களை அணுகும் முறைகள்

இவர்கள் நட்புப் பாராட்டும் அன்பான மக்கள். உங்களுடைய சொந்தச் சாட்சியை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளுங்கள். இயேசு உங்களுக்கு எப்படிப்பட்டவர் என்று விவரியுங்கள். வெறுமனே உபதேசங்களைச் சொல்லுவது பயன்தராது. இயேசுவின் அன்புமாத்திரமே உள்ளங்களை உருக்கக்கூடியது. உங்களுடைய சாட்சியின்மூலமாக ஆர்வம் வளரும்போது, ஆவியின் ஏவுதலால் வேதாகமம் எழுதப்பட்டது என்பதைச் சொல்லிக்கொடுங்கள். வேதாகமத்தைப்பற்றிய அவர்களுடைய நம்பிக்கை சரியில்லாததாக இருப்பதால் இது அவசியமாக உள்ளது. இதைத் தொடர்ந்து தானியேல் 2, மத்தேயு 24, கிறிஸ்து வருகையின் விதம் ஆகியவற்றைச் சொல்லிக்கொடுங்கள். ஆவியானவர் அவர்கள் உள்ளத்தைத் தொடுவார். அவர்கள் தங்கள் ஆன்மிகத்தூக்கத்திலிருந்து எழும்பி, கிறிஸ்துவுக்குள் புது வாழ்வைப் பெறுவார்கள்.

**ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. ரோமர் 5:18.**

# 8. இந்துக்கள்

சிந்து நதியின் தேசம் எனும் பொருள் தரும் இந்துஸ்தான் எனும் பாரசீக வார்த்தையிலிருந்து பிறந்ததே இந்து எனும் வார்த்தை. இந்துஸ்தான் எனும் வார்த்தையால் இந்தியா முழுவதையும் சுட்டிக்காட்டுகின்றனர். இந்துக்களை நான்கு வருணங்களாகப் பிரிக்கிறார்கள். அவையாவன: பிராமணர்கள், சத்திரியர்கள், வைஷியர்கள், சூத்திரர்கள். இவை எதையும் சேராதவர்களைத் தீண்டத் தகாதவர்கள் என்பார்கள். சாதிகளுக்கிடையே சண்டை நிகழ்வது சாதாரணம். பிராமணர்கள் தங்களை உயர்ந்தவர்களாக எண்ணிக்கொள்கிறார்கள்.

**இந்துக்களின் பொதுவான நம்பிக்கை**

1. கடவுள் எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கிறார். இந்த நம்பிக்கையால் பல கடவுள் வழிபாடு இவர்கள் மத்தியில் இருக்கிறது.
2. நற்கிரியைகளினால் சுத்தமடைந்து, முக்தியடையலாம்.
3. மறுபிறவி உண்டு. கர்மா எனப்படும் பூரண நிலையை அடையும்வரை மீண்டும் மீண்டும் பிறக்கவேண்டி இருக்கும்.
4. இயேசு ஒரு நல்ல மனிதர்; ஞானமடைந்த ஒரு குரு.
5. வேதாகமத்தின் உபதேசத்தைவிட பகவத்கீதை போன்ற இந்திய வேத நூல்கள் சிறப்பானவை.
6. நமக்குள் இருக்கும் கடவுளை வளர்த்துப் பூரணமாக்குவதே வாழ்க்கையின் நோக்கம்.

**இவர்களை அணுகும் முறைகள்**

கிறிஸ்தவத்திற்கும் இந்து மார்க்கத்திற்கும் பொதுத்தன்மைகள் குறைவு. இந்துக்களை மனமாற்ற எடுக்கப்படும் முயற்சிகள் முழு வெற்றி அடையவில்லை. அவர்கள் வேதாகமத்தை ஏற்றுக்கொள்ளாததால், நட்பை வளர்க்கவும் தத்துவ ரீதியில் பேசவும் மாத்திரமே முடியும். எனவே, கீழ்க்கண்ட முறைகளைக் கடைப்பிடித்துப் பார்க்கும்படி ஆலோசனை கூறுகிறோம்.

1. தனிப்பட்ட நட்பை வளர்த்துக்கொள்ளுங்கள். அவர்களுக்குப் பிடித்தமான உணவைச் சமைத்து விருந்துக்கு அழையுங்கள்.
2. நன்மை - தீமை பற்றி கலந்துரையாடுங்கள். 'தீமை எங்கிருந்து வந்தது? ஏன் வந்தது?' என்று யோசிக்கச் சொல்லுங்கள்.
3. இயேசுகிறிஸ்து உங்களுக்கு எப்படி நல்லவராக இருக்கிறார்? என்பதைச் சாட்சியாக அவருக்குச் சொல்லுங்கள்.
4. நற்கிரியைகளினால் முக்தியடைவது எனும் கொள்கையிலுள்ள பிரச்சனைகளை விளக்குங்கள்.
5. இரட்சிப்பின் திட்டத்தை விளக்கமாக அவருக்குச் சொல்லுங்கள்.
6. வேதாகமமானது தேவனால் தரப்பட்ட புத்தகம் என்பதற்கான ஆதாரங்

களை விளக்குங்கள்.

7. மறுபிறவி என்பது பின்வரும் காரணங்களின்நிமித்தம் தவறானது என்பதைச் சொல்லிக்கொடுங்கள்.

அ. நற்கிரியைகள்மூலம் அல்ல, இயேசுவின்மூலமே இரட்சிப்பு கிடைக்கிறது. (எபே 2:8-10; 2கொரி 5:21)

ஆ. மனிதனுடைய இயல்பு தீமை நிறைந்தது. நாம் கடவுள்கள் அல்ல. (எரே 17:9; ஏசாயா 54:6)

இ மரணத்திற்குப்பிறகு இரட்சிக்கப்பட வேறு வாய்ப்புக் கிடையாது. (எபி 9:27,28; 2கொரி 6:2)

ஈ. ஆத்துமா அழியக்கூடியது. (பிர 9:5; சங் 115:17; யோவான் 11:11-14)

இந்துக்கள் பொதுவாகக் கிறிஸ்தவர்களை ஏற்றுக்கொள்கிறார்கள். கிறிஸ்தவ மக்களோடு தொடர்புடைய இந்துக்கள் அந்தக் கிறிஸ்தவர்களோடு இணக்கமான அன்புடையவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவ நாடுகளில் வாழ்கிற இந்துக்கள் எளிதில் இயேசுவை ஏற்றுக்கொள்கிறார்கள். இந்தியாவில் வாழ்கிற இந்துக்களை இரட்சிப்புக்குள் கொண்டுவருவது கடினமாகவே இருக்கிறது. நற்செய்தியானது ஒரு கலாச்சாரத்திற்குள் உட்பட்டது அல்ல, மனிதர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்குள் ஊடுருவிச் செல்லக்கூடியது. கடினமான பாரங்கள், குற்றமுள்ள மனச்சாட்சி ஆகியவற்றிலிருந்து விடுதலை கிடைக்குமானால். அதை ஏற்றுக்கொள்வதற்கு எல்லா மனிதர்களுமே ஆர்வத்தோடுதான் இருக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பின் நிச்சயம் கிடைக்கிறது. எனவே, உங்கள் சொந்தச் சாட்சிகளை இந்து நண்பர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். அப்பொழுது ஆவியானவர் அவர்களில் செயல்படுவதைக் காணமுடியும்.

**அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். எபிரெயர 9:27,28.**

# 9. இஸ்லாம் (முஸ்லிம்கள்)

உலக மதங்களில் வேகமாக வளருகிற மதம் முகமதிய மதம். எண்பது கோடி பேர் இந்த உலகில் முகமதியர்களாக இருக்கிறார்கள். ஏழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் முகமது நபியால் இம்மதம் தோற்றுவிக்கப்பட்டது. வேதாகமம் கூறுகிற அல்லா எனப்படும் கடவுளையே முகமதியர்கள் வணங்குகிறார்கள். அவருக்கு முழுவதும் கீழ்ப்படியவேண்டும் என்று முகமதிய மார்க்கம் வலியுறுத்துகிறது. இஸ்லாம் என்றால் சரணடைதல் என்று பொருள். வேறு எதையும் வணங்காமல் ஒரே தேவனைமட்டுமே பணிந்துகொள்ளவேண்டும். சலாம் எனும் அரபு வார்த்தையின் பொருள் சமாதானம் என்பதாகும். ஐந்து மதக் கடமைகளை முகமதியர்கள் செய்யவேண்டும்.

1. 'அல்லாவைத் தவிர வேறு கடவுள் இல்லை. அவரால் அனுப் பப்பட்டவர் முகமது' எனும் ஷஹாடாவை, அதாவது சாட்சியைச் சொல்லவேண்டும்.
2. சூரியோதயம், மதியம், பிற்பகல், சூரிய மறைவு, இரவு ஆகிய ஐந்து நேரங்களிலும் முகமது பிறந்த மெக்காவைநோக்கி சலாத், அதாவது, ஜெபம் செய்யவேண்டும்.
3. ஷகாத், அதாவது தர்மம் செய்தல் முக்கியமானது. இல்லாவிட்டால், முகமதிய அரசாங்கங்கள் போடும் வரியைச் செலுத்தவேண்டும்.
4. ரம்ஜான் மாதத்தில் நோன்பு இருக்கவேண்டும்.
5. வாழ்க்கையில் ஒரு முறையாவது ஹஜ், அதாவது மெக்காவிற்குயாத்திரை செல்லவேண்டும்.

குர்ஆன் என்பது அவர்களுடைய வேதபுத்தகம். தேவனிடமிருந்து கொடுக்கப்பட்ட வார்த்தைகள் அப்படியே அதில் இருப்பதாக இஸ்லாமியர் எண்ணுகிறார்கள். ஆபிரகாமுடைய மகனாகிய இஸ்மவேலின் சந்ததி தாங்கள் என்று எண்ணுகிறார்கள். இவர்கள் கருத்துப்படி ஈசாக்கை அல்ல, இஸ்மவேலையே ஆபிரகாம் பலியிடக் கொண்டுசென்றார். ஆபிரகாம், மோசே, யோவான் ஸ்நானகன் ஆகியோரைப்போன்று இயேசுவும் ஒரு தீர்க்கதரிசியே என்று நம்புகிறார்கள். 'யூதமார்க்கமானது தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்யவில்லை. கிறிஸ்தவமானது கறைப்பட்டுப் போய்விட்டது. எனவே, தேவன் முகமது எனும் தீர்க்கதரிசியை எழுப்பி, வழிவிலகிப்போன மார்க்கங்களைச் சீர்திருத்த முயன்றார்' என்று முகமதியர் நம்புகிறார்கள்.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. ஒரே தேவன் உண்டு. அவர் நல்லவர், வல்லவர், எல்லாம் அறிந்தவர்.
2. கடைசி நியாயத்தீர்ப்பு உண்டு. மனிதர்கள் தாங்கள் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் கணக்குக் கொடுக்கவேண்டும்.
3. மரித்து அடக்கம்பண்ணப்பட்டு இருப்பவர்கள் மேசியா வரும்போது, உயிர்த்தெழுவார்கள்.

4. ஏழைகளுக்கு உதவுவது முக்கியமானது.
5. ஜெபத்திற்கு முக்கியம் கொடுக்கப்படுகிறது.
6. மதுபானம், சூதாட்டம், பன்றி இறைச்சி ஆகியவை விலக்கப்படவேண்டும்.
7. தேவனுக்குக் கீழ்ப்படிவது முக்கியமானது.
8. நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும் மாபெரும் போராட்டத்தை முகமதியர் நம்புகிறார்கள்.

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

1. இயேசு நித்திய தேவகுமாரன் அல்ல; தீர்க்கதரிசியே:

   (யோவான் 8:58 ஐ யாத் 3:14 உடன் ஒப்பிடுக: எபி 1:6-8; மீகா 5:2; ஏசாயா 9:6)

2. வேதாகமத்தை நம்பமுடியாது:

   வேதாகமத்தில் மனிதர்கள் பிரதி எடுக்கும்போது செய்த தவறுகள் நிறைந்துள்ளன. எனவே, அதை நம்பமுடியாது.

   (2தீமோ 3:16; 2பேதுரு 1:21; சங் 12:6,7; மத் 24:35; சங் 119:105)

3. இஸ்லாமின் ஐந்து மதக்கடமைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாக இரட்சிப்பைப் பெறலாம்:

   (ரோமர் 3:23; ஏசாயா 59:1,2; ரோமர் 6:23; எபே 2:8; எபி 2:8,9 2கொரி 5:21; கலா 3:13)

4. வேதாகமத்தைவிட முகமதுவின் வெளிப்பாடுகள் மேலானவை: அவற்றில் இரட்சிப்பின் மார்க்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

   (யோவான் 17:17; 14:6; அப் 4:12: ஏசாயா 45:22)

**இவர்களை அணுகும் முறைகள்**

1. பொதுவானநம்பிக்கைகளின்அடிப்படையில்நட்புறவைஉண்டாக்குங்கள்.
2. வீட்டிற்கு அழைத்து விருந்து வையுங்கள்.
3. கிறிஸ்தவத்தில் வழிவிலகல் இருக்கிறது என்பதை ஒத்துக்கொண்டு, சீர்திருத்தம் தேவை என்பதைக் கூறுங்கள்.
4. தீர்க்கதரிசனங்களைச் சொல்லிக்கொடுங்கள். வேதாகமத்தின் மேல் நம்பிக்கை வரும்.
5. தகப்பனே குடும்பத் தலைவன் என்பதில் உறுதியான நம்பிக்கை உடையவர்கள். அதை வலியுறுத்திப் பேசுங்கள்.
6. முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், தீர்க்கதரிசிகளும் இராஜாக்களும் போன்ற புத்தகங்களை வாசிக்கக்கொடுங்கள்.
7. தகுந்த நேரத்தில் உங்கள் சாட்சிகளைப் பகிர்ந்துகொள்ளுங்கள். அப்போது இரட்சிப்பின் திட்டத்தை விளக்கிக்கூறுங்கள். இயேசு தன்னைத் தேவகுமாரன் என்று அழைத்ததைக் கூறி, ‘ஒன்று அவர் தேவனாயிருக்க

வேண்டும்; அல்லது பொய்யராக இருக்க வேண்டும்' என்று கூறுங்கள். அவர் ஒரு நல்ல தீர்க்கதரிசிமட்டுமே என்று குர்ஆன் கூறுகிறது. அப்படி யிருக்க வழியில்லை.

பாரம்பரியம், பலமான குடும்ப உறவுகள், சமுதாய கட்டுகள் இருப்பதால் முகமதியர்களைக் கிறிஸ்தவத்திற்குக் கொண்டுவருவது மிகவும் கடினமாக இருக்கிறது. பொறுமையாக, கொஞ்சம் கொஞ்சமாக சத்தியத்தைச் சொல்லிக் கொடுங்கள். நட்புறவு வளர்ந்தபின் இயேசுவைப்பற்றிச் சொல்லுங்கள்.

**இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. ஏசாயா 59:1,2.**

**பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். ரோமர் 6:23.**

**கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. எபேசியர் 2:8.**

**நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். 2கொரிந்தியர் 5:21.**

# 10. யெகோவாவின் சாட்சிகள்

1840 களில் இருந்த மில்லர் இயக்கத்திலிருந்து யெகோவாவின் சாட்சிகள் தோன்றினார்கள். இதைத் தோற்றுவித்தவர் சால்ஸ் டேஸ் ரஸ்ஸல் (1852-1916) என்பவர். ஒரே தேவனாகிய யெகோவாவுக்கு முற்றிலும் கீழ்ப்படிய வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். இல்லந்தோறும் செய்தி அறிவிப்பது இவர்கள் பாணி. அர்மகெதோன் யத்தத்தில் தேவனுடைய இராஜ்யம் நிறுவப்படும். பூமியில் கிறிஸ்து ஆயிரவருடம் அரசாளுவார். அச்சமயத்தில் உயிர்த்தெழுதலும் நியாயவிசாரணையும் நடைபெறும். திரித்துவம் என்பது அஞ்ஞானமார்க்க உபதேசம் என்று இவர்கள் அதை ஒதுக்கிவிடுகிறார்கள். இயேசு தேவன் அல்ல, தேவனால் முதன்முதலில் படைக்கப்பட்ட தேவகுமாரன். பரிசுத்த ஆவி ஒரு நபரல்லர், அது தேவனுடைய வல்லமையே.

ஏராளமான புத்தகங்களைப் பிரசுரிக்கிறார்கள். காவற்கோபுரம் எனும் அவர்களுடைய பத்திரிக்கை இலட்சக்கணக்கில் அச்சிடப்படுகிறது. ரஸ்ஸல் மரித்தபிறகு ஜோசப் எஃப் ரூதர்போர்டு என்பவர் தலைவர் ஆனார். அதன் பிறகு, ஊழியத்தில் புது யுக்திகள் கையாளப்படுகின்றன.

ஒவ்வொரு விசுவாசியும் மாதத்திற்குக் குறைந்த பட்சம் பத்து மணி நேரம் இல்லந்தோறும் ஊழியம் செய்யவேண்டும். எல்லா விசுவாசிகளும் ஆசாரியர் என்பதால், ஞானஸ்நானமே அதற்குரிய அபிஷேகம் என்று நம்புகிறார்கள்.

பிறந்தநாள், கிறிஸ்துமஸ், ஈஸ்டர் போன்றவற்றை கொண்டாடுவதில்லை.

இரத்ததானம் செய்ய மாட்டார்கள். தேசக்கொடிக்கு வணக்கம் செலுத்த மாட்டார்கள். தேச உறுதிமொழி எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அவ்வாறு செய்வது தேவன்மேல் வைக்கும் பற்றுக்கு உகந்தது அல்ல என்பது இவர்கள் நம்பிக்கை. சம்பளம் வாங்கும் ஊழியக்காரர்கள் இல்லை என்று சொல்லிக் கொண்டாலும், சபைகளை மேற்பார்வையிடச் செல்லும் கண்காணிப்பாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள்.

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. எல்லா விசுவாசிகளும் ஆசாரியர்கள். எனவே, எல்லோரும் சாட்சியிட வேண்டும்.
2. மனிதர்களுக்கு ஆத்துமா என்று ஒன்று இல்லை. மரணம் என்பது ஒரு தூக்கமே.
3. துன்மார்க்கர் சாம்பலாய்ப்போவார்கள். இலட்சக்கணக்கான ஆண்டுகளாக அவர்கள் நரகத்தில் வேதனைப்பட்டுக்கொண்டே இருக்கப்போவது இல்லை.
4. முழுக்கு ஞானஸ்நானம்.
5. காலத்தின் அடையாளங்கள். உலகில் நடக்கிற காரியங்கள் மூலமாக உலக முடிவு சமீபம் என்பதை அறிந்துகொள்கிறோம்.

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

1. **தேவத்துவத்தில் யெகோவா எனும் ஒரே ஒரு நபர் மட்டுமே**

'பிதாவிலிருந்து புறப்பட்டவர் இயேசு. அவர் பிதாவைவிடக் கீழானவர்' எனும் தவறான உபதேசத்தால், இக்கொள்கை உருவாகியிருக்கிறது.

அ. இயேசு முழு தேவனாக இருக்கவேண்டும். அல்லது, தேவனாக இருக்கவே முடியாது. ஏசாயா 43:10.

ஆ. யெகோவா யார்?

| **யெகோவா** | **இயேசு** |
|---|---|
| மகிமை (ஏசாயா 42:8) | மகிமை (மத் 16:27) |
| சிருஷ்டிகர் (ஏசாயா 40:28) | சிருஷ்டிகர் (எபே 3:9) |
| மீட்பர் (ஏசாயா 33:22) | மீட்பர் (அப் 4:2) |
| நியாயாதிபதி (ஏசா 33:22) | நியாயாதிபதி (யோவா 5:22) |
| இராஜா (ஏசாயா 33:22) | இராஜா (வெளி 19:11-16) |
| கன்மலை (உபா 33:3,4) | கன்மலை (1கொரி 10:4) |
| ஆதியும் அந்தமும் (ஏசா 41:4) | ஆதியும் அந்தமும் (வெளி 1:8-11) |

இ. ஏலோகிம் ஆகிய யெகோவா

மேலே உள்ள வசனங்களைப் பார்க்கும்போது, பழைய ஏற்பாட்டில் யெகோவாவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்கள் புதிய ஏற்பாட்டில் இயேசுவுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கமுடிகிறது. யெகோவா என்பது தேவத்துவத்தின் குடும்பப் பெயர் என்று சொல்லலாம்; சில சமயங்களில் பிதாவிற்கும் சில சமயங்களில் குமாரனுக்கும் பயன்படுத்தப்படுகின்ற உபா 6:4 இல் 'நம்முடைய தேவனாகிய கர்த்தர்' என்று கூறப்பட்டுள்ளது. இதில் கர்த்தர் என்பது 'யெகோவா' எனும் வார்த்தை. இது ஒருமையாக உள்ளது. தேவன் என்பது 'ஏலோகிம்' எனும் வார்த்தை. இது பன்மையாக உள்ளது. அதாவது, ஏலோகிம் என்பதைத் தேவர்கள் என்று மொழிபெயர்க்க வேண்டும். ஒருநாள் என்பது ஒன்றாக இருந்தாலும், அதில் இரவு-பகல் என்று இரண்டு இருக்கிறது அல்லவா? கணவன்-மனைவி என்று இரண்டு பேர் இருந்தாலும், ஒரே மாம்சம் என்று சொல்கிறோம் அல்லவா. அதுபோலவே, பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்று மூவர் இருந்தாலும், அவர்கள் சேர்ந்து யெகோவா என்று ஒன்றாக உள்ளார்கள்.

ஈ. இயேசு யார்?

1. தீர்க்கதரிசியின் சாட்சி. (ஏசாயா 9:6)
2. தூதர்களின் சாட்சி. (மத் 1:21)
3. தோமாவின் சாட்சி. (யோவான் 20:26-28)
4. யூதர்களின் சாட்சி. (லூக்கா 5:21; யோவான் 10:33)
5. இயேசுவின் சாட்சி. (யோவான் 8:58,59; யாத் 3:14)
6. பிதாவின் சாட்சி. (எபி 1:7-9)

உ. இயேசு முதற்பிறந்தவர். (சேஷ்டபுத்திரன்)

1. மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர் என்று இயேசு அழைக்கப்பட்டார்.

மரித்தோரிலிருந்து முதலில் உயிரோடு எழுப்பப்பட்டவர் இயேசு தானா? இல்லையே. (லூக்கா 7:11-15; 8:41,42,49-55; யோவான் 11:38-44)

2. இதிலிருந்து என்ன தெரிகிறது? மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர் என்றால் முதலில் உயிரோடு எழுப்பப்பட்டவர் என்று அர்த்தம் அல்ல, மரணத்தின்மேல் ஒரு விசேஷ வல்லமையுடன் இவர் எழுப்பப்பட்டிருப்பதை நாம் புரிந்துகொள்ளமுடிகிறது.
3. ஈசாயின் கடைசி மகன் தாவீது. ஆனால், அவரை முதற்பிறந்தவன் என்று வேதம் கூறுகிறது. சங் 89:20,27.
4. 'புரோட்டோடோக்கோஸ்' எனும் கிரேக்க வார்த்தையின் பொருள் 'காலத்தால் முதற்பிறந்தவர்' என்பது அல்ல, முக்கியத்துவத்தில் முதற்பிறந்தவர் என்பதாகும். அதாவது, ஆதி இஸ்ரவேலில் முதற்பிள்ளைதான் தகப்பனுடைய பிரதிநிதி. அதுபோல, பிதாவின் பிரதிநிதியாக இயேசு இந்தப் பூமிக்கு வந்ததால், முதற்பிறந்தவர் என்று அழைக்கப்படுகிறார். யோவான் 14:9. முதற்பிள்ளைக்குரிய உரிமைகளும் சலுகைகளும் அதிகாரங்களும் அவருக்கு உண்டு.

ஊ. இயேசு ஒரே பேறானவர்

யோவான் 3:16 இல் 'மோனோஜெனஸ்' எனும் வார்த்தை ஒரேபேறான என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதன் பொருள் தனித்தன்மையுள்ளவர் என்பதாகும். அதாவது, பல வகை ஜீவன்களில் இயேசு ஒரு வகை. அந்த வகையில் அவர்மட்டுமே உண்டு. மனிதராய் மாறிய தேவன் எனும் வகையில் இயேசுவைத் தவிர வேறு எவரும் இல்லை.

எ. தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதி

1. வெளி 3:14 இல் ஆதி என்பதற்கு ஆர்க்கி எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பொருள் துவங்கினவர் என்றும் சொல்லலாம்.
2. சகலமும் இயேசுவால் படைக்கப்பட்டது. யோவான் 1:3; கொலோ 1:16,17; எபி 11:3

### 2. நியாயப்பிரமாணம் கிறிஸ்துவில் ஒழிந்துபோயிற்று

(மத் 5:17,18; யோவான் 14:15; ரோமர் 6:13,14; 3:28-31; சங் 40:8; எபி 8:10; 1யோவான் 2:3-6; யாக் 2:10-17)

### 3. கிறிஸ்துவின் பிரசன்னமானது 1914 இல் அவருடைய ஆன்மிக இரண்டாம் வருகையில் வெளிப்பட்டது.

*பரௌசியா* எனும் இரண்டாம் வருகையானது நம் கண்கள் காணமுடியாத அவருடைய பிரசன்னத்தில் இருக்கிறது என்று யெகோவாவின் சாட்சிகள் நம்புகிறார்கள்.

*குறிப்பு*: எபிரெயர் 11 ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோர்கள் 1914 க்குப் பிறகு உயிருடன் எழும்புவார்கள் என்று ரூதர் ஃபோர்ட் தலைமையில் யெகோவாவின் சாட்சிகள் பிரசங்கித்தார்கள். 1925 ஆம் ஆண்டில் இது நடக்கும் என்று வருடமும் குறிப்பிட்டார்கள். 'இப்போது உயிருடன் இருக்கும் இலட்சக்கணக்கானோர் சாக மாட்டார்கள்' எனும் தலைப்பில் ஒரு புத்தகம் வெளியிட்டார்கள். யெகோவாவின் சாட்சிகள் அவ்வப்போது இதுபோன்று அர்மகெதோன் யுத்தத்திற்கு நாள்குறித்துக் கொண்டேதான் வருகிறார்கள். அப்போது அவருடைய மகி

மையான வருகை இருக்கும் என்று கூறுகிறார்கள். 1975 வரை அர்மகெதோன் யுத்தம் 1975 இல் நடக்கும் என்று சொல்லிவந்தார்கள். 1968 ஆம் ஆண்டு அக்டோபர் 8 இல் அவர்கள் பத்திரிக்கையில் வந்த வரைபடத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. பரௌசியாவின் பொருள்: பரௌசியா என்பது ஒரு கிரேக்க வார்த்தை. ஒரு நபருடைய வருகை அல்லது பிரசன்னத்தை இந்த வார்த்தை குறிக்கும். எங்கும் காணமுடியாத பிரசன்னம் எனும் அர்த்தத்தில் இந்த வார்த்தை வேதாகமத்தில் வரவில்லை. மத் 24:3.

அ. 1கொரி 16:17. இவ்வசனத்தில் பரௌசியா எனும் வார்த்தை வருகிறது. 'ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயுக்கு என்பவர்கள் வந்ததற்காக' என்பதில் 'வந்ததற்காக' எனும் வார்த்தையானது பெரௌசியா என்று இருக்கிறது. இங்கே அவர்கள் வந்தது நடந்த ஒரு நிகழ்ச்சி. கண்ணால் காணக்கூடிய ஒன்று.

ஆ. 2பேதுரு 1:16. இதில் இயேசுவின் முதலாம் வருகையில் நடந்த சம்பவம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவும் கண்ணால் காணக்கூடிய நிகழ்ச்சிதான்.

இ. லூக்கா 24:36-43, 51. உயிர்த்தெழுந்த மகிமையான உடலுடன் இயேசு பரமேறினார். அதேபோல அவர் திரும்பவும் வருவார்.

**4. இயேசு எவ்வாறு வருவார்?**

(மத் 24:27; 1தெச 4:16,17; சங் 50:3; வெளி 1:7; மத் 24:30; 16:27,28; 13:24,30)

இயேசு கிறிஸ்து வரும்பொழுது நாம் வாழும் இந்த உலகம் அழிந்துபோகும். (2பேதுரு 3:10; 2தெச 1:7-9)

இயேசு வரும்போது உயிர்த்தெழுதல் நடக்கும். (1கொரி 15:51-54)

**5. படைப்பின் நாட்கள் ஒவ்வொன்றும் 7000 வருடங்கள்.**

அ. ஒருநாள் என்பதற்கான எபிரெய வார்த்தை யாம் என்பது ஆகும். முதலாவது, இரண்டாவது போன்ற வார்த்தைகளுக்கு அடுத்து யாம் வரும்போது அது 24 மணி நேரத்தைத்தான் குறிக்கும்.

ஆ. சங் 33:6,9; எபி 11:3 ஆகிய வசனங்கள் சிருஷ்டிப்பானது உடனடி நிகழ்ச்சி என்பதைக் காட்டுகின்றன.

இ. சிருஷ்டிப்பின் நாள் ஒவ்வொன்றும் இரவு பகல் என்று பிரிக்கப்பட்டுள்ளது. அந்த நாள் 7000 வருட காலம் என்றால் இரவு 3500 வருடமும் பகல் 3500 வருடமும் இருந்திருக்க வேண்டும். 3500 வருடம் இரவாக இருந்தால் தாவரங்கள் அனைத்தும் செத்துப் போய் இருக்கும்.

ஈ. அந்த நாள் 24 மணி நேரம்தான் என்பதைப் பத்துக் கற்பனை தெளிவாகக் காட்டுகிறது. யாத் 20:11.

**இவர்களை அணுகும் முறைகள்**

1. ஒவ்வொரு கருத்தும் வேதாகமத்திலிருந்து வரவேண்டும் என்பதை உறுதிப்படுத்துங்கள். யோவான் 17:17.
2. ஒரு நாளில் ஒரு தலைப்பில் மட்டுமே பேசவேண்டும்.
3. தங்கள் கருத்தை 30 நிமிடங்களில் சொல்லி முடிக்கும்படி நேரம் கொடுங்கள்.
4. கேள்விகள் கேட்டபிறகு 30 நிமிடங்கள் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். இதன்மூலம் தலைப்பு விட்டு, தலைப்பு தாவாமல் படிப்பதற்கு உதவியாக

இருக்கும்.

5. திரித்துவம்பற்றி பேச ஆரம்பிக்காதீர்கள். இயேசு யார், இரண்டாம் வருகை, சிருஷ்டிப்பு போன்ற தலைப்புகளில் துவங்குங்கள்.
6. இயேசுவை அறிவதால் வரும் சமாதானத்தைப்பற்றி வலியுறுத்துங்கள். யெகோவாவின் சாட்சிகள் கிரியைக்காரர்கள். ஆதலால், நற்செய்தியே சரியான பதிலாக இருக்கும்.

**நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். ஏசாயா 9:6.**

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16.**

**அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. கொலொசெயர் 1:16.17.**

# 11. யூதர்கள்

யூதர்களின் தலைநகராகிய எருசலேமுக்காக இயேசு கண்ணீர்விட்டார். லூக்கா 19:41. பழைய ஏற்பாட்டில் யூதர்களுக்கான ஆசீர்வாதங்களையும் சாபங்களையும் பார்க்கிறோம். உபா 28. கீழ்ப்படிதலால் அவர்களுக்கு நன்மை விளைந்ததையும், மீறுதலால் தீமை விளைந்ததையும் வேதாகமம் முழுவதும், பார்க்கிறோம். கீழ்ப்படியாமையினால் உபத்திரவத்தை வரவழைத்துக்கொண்டார்கள். உலகெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள். 2000 ஆண்டுகளுக்குமுன் தமக்குச் சொந்தமான அவர்களை மீட்க இயேசு வந்தார். அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. மேசியாவைப் புறக்கணித்ததால், அவர்களுடைய அக்கிரமத்தின் அளவு நிரம்பியது. கிறிஸ்தவச் சபையைத் தமது புதிய இஸ்ரவேலாக தேவன் விரும்பினார். உலகத்திற்கு அவர் அன்பின் நற்செய்தியை அறிவிக்கும் ஆசாரியக் கூட்டமாக சபை தோன்றியது. தானி 9:23-27; மத் 23:37,38. ஒரு தேசமாக இஸ்ரவேலர் தள்ளிவிடப்பட்டாலும் அவர்களில் அநேகர் தேவனுடைய கடைசிக்காலச் செய்தியை ஏற்றுக்கொள்வார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. ரோமர் 11:23,24. தேவனுடைய கண்களில் சபையே ஆன்மிக இஸ்ரவேல். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்கள் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின்படி யூதர்களாக இருக்கிறார்கள். கலா3:27-29. அநேக யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வார்கள் என்று எலன் ஒய்ட் கூறுகிறார்.

'யூதர்களிலிருந்து அநேகர் மனந்திரும்புவார்கள். அவர்கள் கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தவும், அவாந்தரவெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணவும் உதவிசெய்வார்கள்' - *Evangelism, p. 574.*

வெளி 18இல் வரும் தூதனுடைய பலத்த சத்தத்தினால் உலகம் இயேசுவின் நற்செய்தியைக் கேள்விப்படும்போது, பெந்தெகோஸ்தே தினத்தில் நடந்தது போல ஆயிரக்கணக்கான யூதர்கள் ஒரே நாளில் மனந்திரும்புவார்கள். நம் அருகில் உள்ள யூத நண்பர்களிடம் அன்போடு பழகவேண்டிய காலம் இது.

**யூத வரலாற்றில் சில முக்கிய தகவல்கள்**

1. ஆபிரகாம் - தேவமக்களின் ஆன்மிக தகப்பனாகத் தேவனால் அழைக்கப்பட்டார். ஆதி 12:1-9. (கி.மு.2000)
2. எகிப்திய அடிமைத்தனம். யாத் 12:40; கலா 3:17. (கி.மு.1875 முதல் கி.மு. 1445 வரை = 430 ஆண்டுகள்)
3. மோசே - எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலரை வெளியே அழைத்து வந்தவர். (கி.மு. 15 ஆம் நூற்றாண்டு)
4. தாவீது - இஸ்ரவேலருடைய மகிமையான காலம். ஆலயம் கட்டுவதற்கான ஏற்பாடுகளை இவர் செய்தார். சாலொமோன் ஆலயத்தைக் கட்டினார். (கி.மு. 1000)
5. நேபுகாத்நேச்சார் - எருசலேமைத் தாக்கினவர். தானியேல் போன்ற அநேக எபிரெய வாலிபர்களைச் சிறைப்பிடித்துச் சென்றார். (கி.மு.605)
6. கோரேஸ் - பாபிலோனைப் பிடித்து, அங்கிருந்து இஸ்ரவேலரை விடுதலை செய்தவர். (கி.மு. 538)

7. பாபிலோனியச் சிறையிருப்பு - தானி 9:1,2; 2நாளா 36:21. (கி.மு. 605 முதல் 535 வரை)
8. எருசலேமின் அழிவு - தீத்துராயன் அதைச் செய்தார். கி.பி. 70.

**இன்றைய யூதர்**

1. சமயம் சாரா யூதர்கள்: நாத்தீகக் கொள்கையை உடையவர்கள். இவர்கள் பிறப்பினால் யூதர்கள். ஆனால், மதத்தில் பற்று இல்லாதவர்கள்.
2. புதுமைவாத யூதர்கள்: ஓய்வுநாள் ஆசரிப்பு, பண்டிகைகள் போன்றவற்றில் அவ்வளவு கண்டிப்பாக நடக்காதவர்கள். யூத உடல்நல விதிகளைக் கைக் கொள்ளமாட்டார்கள்.
3. மிதவாத யூதர்கள்: தற்காலச் சமுதாயத்திற்கு ஏற்றமுறையில் யூத பாரம் பரியங்களையும் கட்டளைகளையும் ஓரளவு கண்டிப்புடன் கைக்கொள் பவர்கள்.
4. பழமைவாத யூதர்கள்: வெகு கண்டிப்பானவர்கள். உடல்நல உணவு விதி கள், உடை, ஓய்வுநாள் ஆசரிப்பு, பண்டிகைகள் ஆகியவற்றை எந்தக் குறை யும் இல்லாமல் கடைப்பிடிக்க வேண்டும் எனும் கொள்கை உடையவர்கள்.

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. உடல்நல வாழ்க்கைமுறை.
2. மரணத்தைப் பற்றிய அறிவு.
3. பழைய ஏற்பாட்டு வேதப்பகுதிகளை மதித்தல்.
4. ஏழாம்நாள் ஓய்வுநாள்.
5. மேசியா வருவார் எனும் நம்பிக்கை.

**இவர்களை அணுகும் முறைகள்**

1 நல்லநட்புறவை உண்டாக்குங்கள். யூதக்கலாச்சாரத்தையும் வரலாற்றையும் புகழ்ந்து பேசுங்கள். எபிரெய தீர்க்கதரிசிகள் அனைவரும் தேவனால் வழி நடத்தப்பட்டவர்கள் எனும் உங்கள் நம்பிக்கையை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
2. எல்லா மக்களையும் உருவாக்கினவர் தேவனே என்பதையும், யூதர்களைப் போல கிறிஸ்தவர்களும் ஆபிரகாமின் சந்ததியே என்பதையும் பகிர்ந்து கொள்ளுங்கள்.
3. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள உடல்நல விதிகளை நாம் கைக் கொள்கிறோம் என்பதையும், ஏழாம்நாளை ஓய்வு நாளாக ஆசரிக்கிறோம் என்பதையும் கூறி, செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையானது ஆன்மிக இஸ்ரவேலர் என்று வெளிப்படையாகக் கூறுங்கள்.
4. ஆரம்ப நாட்களில் இருவரும் நம்பும் பொதுவான கருத்துகளைமாத்திரமே பேசுங்கள். அவர்கள் நன்றாக புத்தகம் வாசிக்கிற வர்கள். முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும், தீர்க்கதரிசிகளும் இராஜாக்களும் போன்ற புத்தகங்களை வாசிக்கக்கொடுங்கள்.

5. உடல்நல வகுப்புகள் நடத்தி, அந்த வகுப்புகளுக்கு வரும்படி அவர்களுக்கு அழைப்பு கொடுங்கள். தப்பெண்ணங்களைத் தகர்ப்பதற்கு இது போன்ற முகாம்கள் உதவிசெய்யும்.

6. மத சம்பந்தமான காரியங்களை உங்கள் யூத நண்பர்களுடன் விவாதிக்கும் போது, கீழ்க்காணும் கேள்விகளைக் கேளுங்கள்:

அ. வேதாகமக்காலங்களில் இஸ்ரவேல் தேசம் வளமாக இருந்த நாட்கள் உண்டு. அப்படிப்பட்ட வளத்திற்குக் காரணம் என்ன? எகிப்திய அடிமைத்தனம், பாபிலோனியச் சிறையிருப்பு, எருசலேமின் அழிவு போன்ற காரியங்களை ஏன் தேவன் அனுமதித்தார்?

ஆ. ஏசாயா 53 ஆம் அதிகாரத்தில் ஏசாயா தீர்க்கதரிசி யாரைக் குறித்து பேசுகிறார்? இந்தப் பகுதியை உங்கள் யூத நண்பரோடு சேர்ந்து நீங்கள் வாசியுங்கள்.

இ. மேசியாவைக்குறித்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை வாசித்து ஆராயுங்கள். (தானி 9:23-27; மீகா 5:2; ஏசாயா 9:6; 7;14; சங் 22; ஆதி 49:10).

ஈ. இயேசு உங்களுக்குத் தந்த சமாதானம், மன்னிப்பு, குற்றமனப்பான்மையிலிருந்து விடுதலை, இரட்சிப்பின் நிச்சயம் ஆகிய காரியங்களைச் சாட்சியாக அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உ. தானியேல் தீர்க்கதரிசன புத்தகத்தின் தீர்க்கதரிசனங்களை உங்களோடு சேர்ந்து படிக்குமாறு அவர்களுக்கு அழைப்பு கொடுங்கள்.

யூதருடன் பேசும்போது, பல கிறிஸ்தவர்கள் திணறுகிறார்கள். மேலே சொல்லப்பட்டுள்ளபடி பேசும்போது, உங்கள் முயற்சி பலனுள்ளதாய் இருக்கும்.

**நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். ஏசாயா 9:6.**

**அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல. தானியேல் 9:26.**

# 12. லூதரன் சபை

16 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கச் சபையிலிருந்து லூதரன் சபை தோன்றியது. மார்டின் லூதருடைய வல்லமையான பிரசங்கங்களும் அவருக்கு ஆதரவு அளித்த ஜெர்மன் பிரபுக்களின் அதிகாரமும் சேர்ந்து ரோம அதிகாரத்தை விட்டுப் பிரிவதற்கு மக்களுக்குத் தைரியம் கிடைத்தது. பாரம்பரியத்தைக் காட்டிலும் வேதாகமமே முக்கியம் என்று லூதர் நம்பினார். கிறிஸ்துவின் கிருபையினால் மாத்திரமே இரட்சிப்பு, சகல விசுவாசிகளும் ஆசாரியர்கள், தேவனுடைய இலவச ஈவாகிய இரட்சிப்பு இல்லாவிட்டால் அனைவருமே அழிந்துபோகக்கூடியவர்கள்தான் எனும் உண்மைகளை லூதர் வலியுறுத்தினார். கிறிஸ்துவானவருடைய வருகையின் நோக்கமே நம்முடைய இரட்சிப்புதான் என்பதை அவர் உணர்ந்தார். மனிதர்கள் இரட்சிப்பைத் தாங்களாகச் சம்பாதித்துக்கொள்ள முடியாது. அவர் மொழிபெயர்த்த புதிய ஏற்பாடு 1522 இலும் பழைய ஏற்பாடு 1534 இலும் வெளியாயின. ஜெர்மனிமுழுவதும் அவை விற்கப்பட்டன. திருமணமாகாத சாமியாராக இருக்கவேண்டும் என்பதற்கு வேத ஆதாரம் இல்லை என்பதை உணர்ந்த அவர், முன்னாள் கன்னியாஸ்திரீ ஒருவரைத் திருமணம் செய்தார். நம்பிக்கைகளுக்கும் உபதேசத்துக்கும் வேதாகமத்தைமாத்திரமே சார்ந்திருக்கவேண்டும் என்பதை உறுதியாகத் தெரிவித்தார். ஆனால், காலம் செல்லச்செல்ல புதுமைவாதக் கொள்கைகள் லூதரன் சபையையும் ஆக்கிரமித்து விட்டன. சிலர் கன்னிப் பிறப்பை மறுதலிக்கிறார்கள். சிலர் ஏழு நாள் படைப்பை மறுதலிக்கிறார்கள். சிலர் உலகம்முழுவதும் வெள்ளத்தால் மூடப்பட்டது என்பதை நம்ப மறுக்கிறார்கள். இரண்டாம் வருகையை நம்பாதவர்களும் உண்டு. முற்காலத்தைப்போல இப்போது அவர்களுக்கு வேதாகம நம்பிக்கை இல்லை.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. தேவனுடைய வார்த்தையின் அதிகாரம்.
2. கிருபையினால் மட்டுமே இரட்சிப்பு.
3. நம் கண்கள் காண இயேசு வருவார்.
4. தேவத்துவம்.
5. தேவனுக்குக் கீழ்ப்படிதல்.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

1. **தெளிப்பு ஞானஸ்நானம்:**
   (மத் 28:19,20; மாற்கு 16:16; மத் 3:13-17; அப் 8:26-38; யோவான் 3:22; ரோமர் 6:1-8; கொலோ 2:12)

2. **ஆத்துமாவின் அழியாமை:**
   ‘‘மனிதனின் சரீரத்துக்குள் ‘ஆத்துமா’ என்று ஒன்று இருக்கிறது; அது அழி

யாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்தும் இருக்கக்கூடியது; மரணத்தின் போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது'' எனும் நம்பிக்கை.

(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்பட வில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

3. **ஞாயிறு பரிசுத்தம்:**

'இயேசுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்த நாளைத் தொழுகைநாளாகப் பரிசுத்தம்பண்ண வேண்டும்' எனும் கொள்கை.

(ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12-20; லூக்கா 4:16; மத் 24:20; அப் 13:42-44; வெளி 1:10; மத்தேயு 12:8; லூக்கா 6:5; ஏசாயா 66:22,23)

4. **சபை-அரசு உறவுகள்:**

சபையும் அரசும் இணைந்து செயல்படவேண்டும் என்று லூதர் நம்பினார். அரசாங்கம் நல்ல சட்டங்களை இயற்றுவதற்கு அவர்களைச் சபைமூலம் தேவன் தூண்டுவார் என்று லூதர் நம்பினார்.

5. **நற்கருணை:**

நற்கருணை அப்பத்தில் கிறிஸ்துவின் பிரசன்னம் இருக்கிறது என்று லூதரன் சபையினர் நம்புகிறார்கள். ஆனால், வேதாகமமோ பின்வருமாறு கூறுகிறது: கிறிஸ்துவின் மரணத்திற்கான அடையாளம்தான் திருவிருந்து. 1கொரி 11:23-28. 'நானே அப்பம்' என்று அவர் சொன்னதால் அவர் அப்பமாக இருக்கிறார் என்று சொல்லமுடியாது. அவர், 'நானே வெளிச்சம்', 'நானே நல்ல மேய்ப்பன்', 'நானே திராட்சைச் செடி', 'நான் கன்மலை.' என்றெல்லாம் சொல்லியிருக்கிறாரே. இவையெல்லாம் அவர் செய்யும் வேலையின் ஒரு பகுதியை விளக்குகிறது.

### இவர்களை அணுகும் முறைகள்

1. நெருங்கிய நட்புறவை உண்டாக்குங்கள். வேதாகமத்தின் அதிகாரத்தை வலியுறுத்துங்கள். கிறிஸ்துவின்மூலம் மாத்திரமே இரட்சிப்பு என்பதை உறுதிப்படுத்துங்கள்.
2. தீர்க்கதரிசனங்களைச் சொல்லிக்கொடுத்து, தேவனுடைய வார்த்தையில் அவர்களை நிலைப்படுத்துங்கள். தானி 2, மத்தேயு 24, கிறிஸ்துவின் தெய்வீகம்.
3. வாய்ப்பு கிடைத்தவுடன் ஒழுங்கு முறைப்படி வேதபாடங்களைப் படிக்கத் துவங்கிவிடுங்கள்.
4. லூதரன் விசுவாசிகளுக்கு இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றி திட்டமான அறிவு உண்டு. ஆனால், தீர்க்கதரிசனங்களை விரிவாகப் படித்திருக்கமாட்டார்கள்.
5. கீழ்ப்படிதல் என்பது தேவனுடைய அன்புக்கு நாம் தரும் பதில் என்பதை வலியுறுத்துங்கள். அவருடைய அன்பு நம்மை நெருக்கி ஏவுகிறது. 2கொரி

5:14. அவர் சொன்னதைச் செய்யும் படி அந்த அன்பு நம்மைத் தூண்டுகிறது. 'என்னிடத்தில் அன்பாயிருந்தால் என்னுடைய கற்பனைகளைக் கைக் கொள்ளுங்கள்' என்று அவர் சொன்னாரே. யோவான் 14:15. அன்பு இருந் தால் கீழ்ப்படிதல் இருக்கும். ரோமர் 13:10. அன்பானது தேவனுடைய கற் பனைகளுக்குக் கீழ்ப்படியும். வெளி 14:12.

6. லூதர் சொன்னதற்கு அதிகமான புதிய வெளிச்சத்தை இவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதுதான் பிரச்சனை. யோவான் 12:35. வெளிச்சம் வளர்ந்துகொண்டே வரும் என்பதை வலியுறுத்தவேண்டும். நீதி 4:18.

7. 'ஏன் இத்தனை சபைகள்?' எனும் பாடம் இவர்களுக்கு மிகவும் பயனுள்ள தாய் இருக்கும்.

**அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென். 1தீமோத்தேயு 6:15,16.**

**நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பதுபோல, உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது: மாதந்தோறும், ஓய்வுநாள்தோறும், மாம்சமான யாவரும் எனக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 66: 22,23.**

# 13. மெதடிஸ்ட் சபை

17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் லூதரன் சபைகள் மத்தியில் ஒருவிதமான சம்பிரதாயங்கள் பெருகிவிட்டன. எனவே, அவர்கள் மத்தியில் பக்தி மார்க்கங்கள் தோன்றின. அவை பின்வரும் காரியங்களை வலியுறுத்தின:

1. வேதத்தை மையமாகக் கொண்ட விசுவாசம்.
2. உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை.
3. பாடல்கள், சாட்சிகள் மூலம் விசுவாச ஆர்வத்தை வெளிப்படுத்துதல்.

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் ஜான் வெஸ்லி ஊழியத்திற்குப் படித்தார். அங்கே அவர் மதச்சங்கம் ஒன்றை நிறுவினார். அதை மற்ற மாணவர்கள் 'பரிசுத்த சங்கம்' என்று அழைத்தார்கள். அவருடைய பழக்கவழக்கங்கள் கட்டுப்பாடும்கண்டிப்பும்உள்ளவைகளாகவும்எப்போதும்ஒருவழிமுறையைப் பின்பற்றுவதாகவும் இருந்ததால், மற்றவர்கள் அவர்களை மெதடிஸ்ட் என்று அழைத்தார்கள். மே 24, 1738 இல் ஆல்டர்ஸ்கெய்ட் சிற்றாலயத்தில் ரோமருக்கு லூதர் எழுதிய நிருபத்தை ஒரு சபைசீடர் வாசித்தார். அதைக் கேட்ட ஜான் வெஸ்லி மனம் மாறினார். இங்கிலாந்து முழுவதும் மெதடிஸ்ட் சங்கங்களை ஏற்படுத்தினார். பரிசுத்தம், கிருபையில் வளருதல், கிறிஸ்தவ வாழ்க்கை வாழுதல் போன்றவற்றை இவர்கள் முக்கியப்படுத்தினார்கள். சம்பிரதாயங்களுக்குள் மூழ்கிக் கிடந்த மக்களுக்கு புத்துணர்ச்சி வந்தது. முன்னிருந்த பக்தி இப்போது இல்லை. கன்னிப் பிறப்பு, கிறிஸ்துவின் தெய்வீகம், சிருஷ்டிப்பு, ஜலப்பிரளயம், கிறிஸ்துவின் அற்புதங்கள், இரண்டாம் வருகை போன்றவற்றைப் பல மெதடிஸ்ட்கள் இப்போது நம்புவது இல்லை.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. தேவத்துவம். (திரித்துவம்)
2. கிருபையால் இரட்சிப்பு.
3. பரிசுத்தம், பரிசுத்தமாகுதல், கிருபையில் வளருதல் ஆகியவை பற்றிய முக்கியத்துவம்.
4. நித்தியமாய் எரியும் நரகம் இல்லை எனும் நம்பிக்கை.
5. திருவிருந்தைக் கொண்டாடுதல்.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

1. **சரீரப் பிரகாரமான இரண்டாம் வருகை இல்லை எனல்:**
   (1தெச 4:16,17; வெளி 1:7; மத் 16:17; மத் 24:27)

2. **ஆத்துமாவின் அழியாமை:**
   "மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா' என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்தும் இருக்கக்கூடியது; மரணத்

தின்போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது'' எனும் நம்பிக்கை.

(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்பட வில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

3. **ஞாயிறு பரிசுத்தம்:**
'இயேசுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்த நாளைத் தொழுகை நாளாகப் பரிசுத்தம் பண்ண வேண்டும்' எனும் கொள்கை.

(ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12-20; லூக்கா 4:16; மத் 24:20; அப் 13:42-44; வெளி 1:10; மத்தேயு 12:8; லூக்கா 6:5; ஏசாயா 66:22,23)

4. **குழந்தை ஞானஸ்நானம்:**
'ஆதாம் செய்த பாவத்திற்காக குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்' எனும் நம்பிக்கை.

(மாற்கு 16:16; அப் 2:38-42; மத் 28:18-20; அப் 8:26-38; கொலோ 2:12; ரோமர் 6:1-8)

5. **வேதாகமத்தின் அதிகாரத்தைப் பலர் ஏற்பதில்லை:**
வேதாகமத்தில் ஆவியானவருடைய பங்கு குறித்து மெதடிஸ்ட்கள் பலர் சந்தேகப்படுகிறார்கள். வேதாகமத்தில் தேவனுடைய வார்த்தை இருக்கிறது; ஆனால், வேதாகமம் முழுவதும் தேவனுடைய வார்த்தை இல்லை என்று நினைக்கிறார்கள். கலாச்சாரப் பின்னணியால் வேதாகமத்தை முழுவதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று எண்ணுகிறார்கள்.

(யோவான் 17:17; 2தீமோ 3:16,17; 2பேதுரு 1:20,21; மத் 4:4)

## இவர்களை அணுகும் முறைகள்

1. அட்வென்டிஸ்ட் சபையுடன் அவர்களுக்கு இருக்கும் ஒற்றுமைகளை வலியுறுத்துங்கள். எல்லோருக்கும் கிருபை இலவசமானது எனும் வெஸ்லியின் கொள்கையைப் பாராட்டுங்கள். சிலரைமாத்திரம் தெரிந்தெடுத்து இரட்சிக்கும் பழக்கம் ஆண்டவரிடம் இல்லை. கிறிஸ்தவ வளர்ச்சி, பரிசுத்தமாகுதல், வாழ்வில் பரிசுத்தம் ஆகியவைபற்றி வெஸ்லியின் கருத்து நியாயமானது என்று கூறுங்கள்.
2. மற்ற சபைகளைப்போல மெதடிஸ்ட் சபையும் தனது முற்கால நிலையை விட்டு வழுவிச்செல்கிறது என்பதை எடுத்துச் சொல்லுங்கள்.
3. வேதாகமத்தின் அதிகாரம்பற்றிய வேதபாடம், தானியேல் 2, மத்தேயு 24 ஆகியவை வேதாகமத்தின் உண்மையை அவர்களுக்குப் புரிய வைக்கும்.
4. முடிந்த அளவுக்குச் சீக்கிரமாக வாராந்தர வேதபாடங்களை நடத்த ஆரம்பித்து விடுங்கள்.

**குறிப்பு:** மெதடிஸ்ட் சபையின் ஒழுங்கமைப்பானது அட்வென்டிஸ்ட் சபையின் ஒழுங்கமைப்பு போன்றே உள்ளது. ஆரம்பக்கால அட்வென்டிஸ்ட் சபை

அங்கத்தினர்கள் பலர் அதற்குமுன் மெதடிஸ்ட் சபையில் இருந்தவர்கள். எனவே, வேதசித்தாந்தங்களை உணர்ந்துகொள்ளுவதிலும் சபை ஒழுங்கமைப்பிலும் அட்வென்ட் சபையானது மெதடிஸ்ட் சபையைப்போல இருக்கிறது. தேவனுடைய வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்துகொண்டே வரக்கூடியது என்பதற்கு இதுவும் ஆதார மாக உள்ளது.

**ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். 1தெசலோனிக்கேயர் 4:16,17.**

**இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென். வெளிப்படுத்தல் 1:7.**

**மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். மத்தேயு 24:27.**

# 14. மார்மன் சபை இயேசுகிறிஸ்துவின் பிற்காலப் பரிசுத்தவான்களின் சபை

இந்தச் சபையைத் தோற்றுவித்தவருடைய பெயர் ஜோசப் ஸ்மித் என்பதாகும். 1820 ஆம் ஆண்டில் தேவனையும் இயேசு கிறிஸ்துவையும் அவர் ஒரு தரிசனத்தில் பார்த்தாராம். எந்தச் சபையிலும் சேராமல் தனிச்சபை ஒன்றை நிறுவும்படி தேவன் சொன்னாராம். 1823 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மொரோனி எனும் தூதன் தரிசனத்தில் தோன்றி, அமெரிக்க ஆதிவாசிகளின் வரலாறு அடங்கிய புத்தகம் ஒன்று நியூயார்க் மாநிலத்தில் உள்ள பல்மைராவிலிருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ள குமோரா எனும் குன்றில் புதைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னானாம். 1827 வரை அதைப் பார்ப்பதற்கு அவர் அனுமதிக்கப்படவில்லை. அதன்பிறகு, அதன் தங்கப் பலகைகளில் உள்ளவற்றை அவர் மொழிபெயர்த்தாராம். அது தவிர அவர் கண்ட தரிசனங்களும் வெளிப்பாடுகளும் சேர்ந்து 'மார்மன் புத்தகம்' எழுதப்பட்டது. அது தவிர உபதேசமும் உடன்படிக்கைகளும் எனும் புத்தகத்தையும், விலையேறப்பெற்ற முத்து எனும் புத்தகத்தையும் அவர் எழுதியுள்ளார். மார்மன்கள் சுறுசுறுப்பானவர்கள், உழைப்பாளிகள், ஒழுக்கச் சீலர்கள். ஆனாலும், அவருடைய உபதேசங்கள் வேதாகமத்திற்கு ஒத்தவையாக இல்லை.

**மார்மன்களின் நம்பிக்கை**

1. வேதாகமம் சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் அது தேவனுடைய வார்த்தைதான். ஆனால், வேதாகமத்தைவிட மார்மன் புத்தகம் மேலானது. ஏனெனில், மார்மன் புத்தகத்திலுள்ள வார்த்தைகள் சுத்தமானவை.
2. மனிதர்கள் படைக்கப்படுவதற்கு முன்னர் அழியாத ஆத்துமாக்களாக தேவனோடு நித்தியகாலமாய் இருந்து வருகிறார்கள். அந்த ஆத்துமாக்களுக்குச் சரீரங்களைப் படைப்பதற்காகவே சிருஷ்டிப்பு நிகழ்ந்தது.
3. ஆதாம்-ஏவாள் பாவம் செய்தபோது, ஆண்டவர் மகிழ்ச்சி அடைந்தார். ஏனெனில், மனிதர்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்பும் வாய்ப்பு ஏற்பட்டது.
4. ஆவி உலகத்தில் இப்போதும் அழியாத ஆத்துமாக்கள் இருக்கின்றன. இயேசு அவைகளுக்கு நற்செய்தியைப் பிரசங்கித்து வருகிறார்.
5. மரித்தோருக்காக மார்மன் ஆலயங்களில் ஞானஸ்நானம் கொடுக்கிறார்கள்.
6. 'மரியாள், மார்த்தாள், இன்னொரு மரியாள் ஆகியோரை இயேசு திருமணம் செய்திருந்தார்' என்று நம்புகிறார்கள். பல தாரமணத்தை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.
7. திருமணமானது மார்மன் ஆலயத்தில் உறுதிசெய்யப்படவேண்டுமாம்.
8. நித்திய வாழ்வில் மூன்று பிரிவுகள் உள்ளன. உண்மையுள்ள மார்மன்களுக்குப் பரலோகமும், பக்தி குறைவான மார்மன்களுக்குப் பூலோகமும், அவர்களுக்கு வேலைக்காரர்களாக இருக்கப்போகிற மற்றவர்களுக்குத் தொலை

லோகமும் இருக்குமாம். இவர்கள் கருத்துப்படி எல்லோருக்கும் நித்திய வாழ்வு உண்டு. மார்மன்கள் அல்லாதவர்கள் வேலைக்காரர்களாக இருக்க வேண்டியிருக்கும்.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. தசமபாகம் கொடுத்தல்.
2. மதுபானம், புகையிலை போன்றவற்றை ஒதுக்கி, உடல்நலத்தில் அக்கறை காட்டுவார்கள்.
3. இக்காலச் சபையில் தீர்க்கதரிசன வரம் உண்டு.
4. முழுக்கு ஞானஸ்நானம்.
5. இன்றைய உலகச் சபைகள்தான் விழுந்துபோன பாபிலோன். அவர்கள் மனந்திரும்பி, புதிய ஏற்பாட்டு விசுவாசத்திற்கு வரவேண்டும்.

**செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

**1. வேதாகமம் தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது:**

(2தீமோ 3:15,16; யோவான் 17:17; 5:39; சங் 12:6; 2பேதுரு 1:21; மத் 4:4)

**2. மரித்தோருக்காக ஞானஸ்நானம்:**

1கொரி 15:29 ஐத் தவறாக விளங்கிக்கொண்டதால், இந்த நம்பிக்கையை உடையவர்களாய் இருக்கிறார்கள். கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை, பாவத்தை விட்டு மனந்திரும்புதல், இயேசுவின் உபதேசங்களை ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே புதிய ஏற்பாட்டு ஞானஸ்நானங்கள் கொடுக்கப்பட்டன.

(அப் 2:38-41; மாற்கு 16:16; மத் 28:19,20)

புதிய ஏற்பாட்டில் இரட்சிப்பானது அவரவர் தீர்மானத்தைச் சார்ந்தது. ஒருவர் இன்னொருவருக்காக அந்த வாய்ப்பை உண்டாக்கமுடியாது.

(வெளி 22:17; சங் 49:7)

1கொரி 15:29 இல் உயிர்த்தெழுதலுக்கு ஆதரவாகப் பவுல் பேசுகிறார். அதன்பின் ஒரு கேள்வி கேட்கிறார். ‘மரித்தோர் உயிர்த்தெழப்போவது இல்லையானால், நீங்கள் ஏன் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும்?’ என்று பவுல் கேட்கிறார். கிறிஸ்து வரும்போது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிருடன் எழுந்திருப்பார்கள். 1தெச 4:16,17. ‘மரித்தோருக்காக ஞானஸ்நானம் எடுத்தல்’ என்றால், ‘அவர்களுடைய பக்தியான வாழ்க்கையைப் பார்த்து, அவர்களைப்போல வாழ்ந்து, அவர்கள் உயிர்த்தெழும்போது, அவர்களைச் சந்திப்பதற்காக ஞானஸ்நானம் எடுத்தல்’ என்று பொருள்.

(எபி 11:39,40)

**3. ஞாயிறு தொழுகை:**

வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையானது கிரேக்க வேதாகமத்தில் எட்டு தடவை ஓய்வுநாள் என்று அழைக்கப்படுகிறது என்று மார்மன்கள் நம்புகிறார்கள். வாரம் என்பதற்கான கிரேக்க வார்த்தையைத் தவ

றாகப் புரிந்துகொள்வதால் இவ்வாறு நினைக்கிறார்கள். ஓய்வுநாள் என்பதற்கான கிரேக்க வார்த்தையிலிருந்துதான் வாரம் என்பதற்கான கிரேக்க வார்த்தையும் பிறந்துள்ளது. ஆனால், இரண்டும் வெவ்வேறு வார்த்தைகள்.

(ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:20; லூக்கா 4:16; மத் 24:20; அப் 13:42-44; லூக்கா 6:5; மத் 12:8; ஏசாயா 66:22,23)

**4. ஆத்துமாவின் அழியாமை:**

''மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா' என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்து இருக்கக்கூடியது; மரணத்தின் போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது'' எனும் நம்பிக்கை.

(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்பட வில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

**இவர்களை அணுகும் முறைகள்**

1. நட்புறவை வளர்த்துக்கொள்ளுங்கள்.
2. விருந்திற்கு வீட்டிற்கு அழையுங்கள்.
3. மார்மன்கள் குடும்ப உறவை மதிக்கிறவர்கள். அதனால், வேத பாடத்திற்குக் குடும்பம்முழுவதையும் கூப்பிடுங்கள்.
4. வேதாகமம் தேவ ஆவியினால் எழுதப்பட்டது என்பதை உறுதிபட நடத்துங்கள்.
5. இயேசுகிறிஸ்துவோடு உங்களுக்குள்ள உறவைச் சாட்சியாகக் கூறுங்கள்.
6. மூன்று முதல் ஐந்து வாரங்கள் படித்தபிறகு, 'மார்மன்களுடைய சுவிசேஷமும் வேதாகம சுவிசேஷமும் ஒன்றா?' என்று கேளுங்கள்.
7. உண்மையான கிறிஸ்துவைப் பின்பற்றும்படி அன்போடு அழைப்பு கொடுங்கள்.

**அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். மத்தேயு 4:4.**

# 15. நசரேன் சபை

இந்தச் சபையானது 1907 ஆம் ஆண்டில் சிக்காகோவில் ஏற்படுத்தப்பட்டது. இவர்களுக்கு எட்டு கல்லூரிகளும் இறையியல் கல்லூரி ஒன்றும் உள்ளன. ஊழியத்தில் மிகுந்த ஆர்வம் உள்ளவர்கள். பழமைவாதிகள்.

**இவர்களுடைய நம்பிக்கை:**

1. வேதாகமம் தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது.
2. கிறிஸ்து சரீரப்பிரகாரமாக இரண்டாம் முறை வருவார்.
3. கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தினால்மாத்திரமே இரட்சிக்கப் படுவோம்.
4. ஆத்துமா அழியாதது.
5. நித்திய வாதை.
6. ஞாயிறு பரிசுத்தம்.
7. மதுபானம், புகையிலையைத் தவிர்த்தல்.
8. உலகைவிட்டுப் பிரிந்து ஒழுக்கமான வாழ்க்கை வாழ்தல்.
9. முழுக்கு ஞானஸ்நானம்.

உயர்ந்த ஒழுக்கநியதிகளை உடையவர்கள். வேதாகமத்தைத் தேவனுடைய வார்த்தை என்று ஏற்றுக்கொள்கிறவர்கள். வாழ்க்கைக்கான ஒழுக்கங்கள் அதில்தான் உள்ளன. கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒழுக்கத்தரத்தை உயர்த்துவதற்காகவே தேவன் தங்கள் சபையைத் தோற்றுவித்தார் என்று நம்புகிறார்கள். தங்களைச் சீர்திருத்தவாதிகள் என்று அழைத்துக்கொள்கிறார்கள். உயர்ந்த ஒழுக்க நியதிகள் இருந்தாலும், இன்னமும் அவர்கள் உயரவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆத்துமா அழியாதது எனும் தவற்றையும், ஞாயிறு பரிசுத்தம் எனும் தவற்றையும் அவர்கள் விட்டுவிடவில்லை. நியாயப்பிரமாணம், ஓய்வுநாள், ஓய்வுநாள் மாற்றம், பாபிலோனின் விழுகை, பல சமயப் பிரிவுகள், அட்வெந்து சபையின் தீர்க்கதரிசனப் பின்னணி ஆகியவற்றை அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லிக்கொடுத்தல் வேண்டும். நம்முடைய தீர்க்கதரிசனச் செய்தியும் வெளி 10,12,14,17,18 ஆம் அதிகாரங்களுக்குக் கொடுக்கும் விளக்கமும் அவர்களை வெகுவாகக் கவரக்கூடியவை.

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. வேதாகமம் தேவனுடைய வார்த்தை.
2. திரித்துவம் அல்லது தேவத்துவம்.
3. கிறிஸ்துவின்மூலம் இரட்சிப்பு.
4. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.
5. பரிசுத்தமாகுதல்.

6. பக்தியான வாழ்க்கை.

**செவந்த்–டே அட்வெண்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

1. **ஞாயிறு பரிசுத்தம்:**

   'இயேசுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்த நாளைத் தொழுகை நாளாகப் பரிசுத்தம்பண்ண வேண்டும்' எனும் கொள்கை.

   (ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12-20; லூக்கா 4:16; மத் 24:20; அப் 13:42-44; வெளி 1:10; மத்தேயு 12:8; லூக்கா 6:5; ஏசாயா 66:22,23)

2. **ஆத்துமாவின் அழியாமை:**

   "மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா' என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது: உடலைவிட்டு வெளியேயும் தனித்து இருக்கக்கூடியது; மரணத்தின் போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது" எனும் நம்பிக்கை.

   (1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்படவில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

3. **நித்திய வாதை:**

   "மனந்திரும்பாதவர்களை நரகத்தில் போட்டு நித்திய காலமாகத் தேவன் வாதிப்பார்" எனும் நம்பிக்கை.

   (மல்கியா 4:1-3; சங் 37:10,11,20,38; யூதா 7; 2பேதுரு 2:6; வெளி 20:9; எபி 12:29)

**இவர்களை அணுகும் முறைகள்**

1. கிறிஸ்துவை மையமாகக் கொண்ட நட்புறவை வளர்த்துக்கொள்ளுங்கள்.
2. கிறிஸ்துமூலம் மட்டுமே இரட்சிப்பு என்பதை வலியுறுத்துங்கள்.
3. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை உறுதிப்படுத்துங்கள்.
4. ஒவ்வொரு உபதேசத்திற்கும் வேதஆதாரம் தேவை என்பதை வலியுறுத்துங்கள்.
5. சபைகளில் உள்ள வழிவிலகலைப் பற்றியும் அதைச் சரிபண்ணுவதற்கான தேவதிட்டம்பற்றியும் பேசுங்கள்.
6. தானியேல் வெளிப்படுத்தின விசேஷ விளக்கங்களை ஆர்வமுடன் கேட்பார்கள்.
7. வெளிப்படுத்தல் 14 இல் உள்ள மூத்தூதை ஒவ்வொரு கருத்தாகவிளக்குங்கள்.

# 16. பெந்தெகொஸ்தே சபை

பாரம்பரிய கத்தோலிக்கச் சபைகள் ஒரு பக்கம். வரலாற்றுப் புரட்டஸ்டண்ட் சபைகள் மறுபக்கம் என்றால், பெந்தெகொஸ்தே சபைகள் கிறிஸ்தவ மார்க்கத்தின் மூன்றாவது அணியாகும். உலகமெங்கும் இந்தச் சபையினர் விரைவாக வளர்ந்துவருகிறார்கள். ஆவியின் அபிஷேகம்பற்றியும், அதற்கு அடையாளமாக அந்நிய பாஷை பேசவேண்டும் என்பதையும், தெய்வீக சுகத்தையும் வலியுறுத்திப் பேசுவார்கள். 20 ஆம் நூற்றாண்டில் பெந்தெகொஸ்தே சபை வெகுவேகமாக வளர்ந்தது. இக்காலக் கிறிஸ்தவத்தில் இது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஆகும். உலகமெங்கும் இருந்தாலும் அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் இவர்கள் அதிகமாக உள்ளனர். உலகப்பிரகாரமான மக்கள் நிறைந்த ஐரோப்பாவிலும் இவர்கள் பெருகிவருகிறார்கள். முக்கியப் பெரும் சபைகளில் சம்பிரதாயங்கள் பெருகிவரும் இக்காலத்தில் இவர்களுடைய உற்சாகமும் மகிழ்ச்சியும் ஆயிரக்கணக்கானோரைக் கவர்ந்து இழுக்கின்றன. சில சமயங்களில் சாட்சிகளும் அந்நியபாஷைகளும் சுகமாக்குதலும் ஒழுங்கு எதுவும் இல்லாமல் நடைபெற்றுவிடுவதும் உண்டு.

### செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்

1. உபதேசத்திற்கும் செயலுக்கும் ஆதாரமாக வேதாகமம்மாத்திரமே இருக்க வேண்டும்.
2. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே இரட்சிப்பு.
3. இயேசு சீக்கிரம் வருவார்.
4. முழுக்கு ஞானஸ்நானம்.
5. திருவிருந்து ஆராதனை. (சில சபைகளில் கால்கழுவும் ஆராதனையும் உண்டு.)
6. கன்னிப்பிறப்பு.
7. ஆவியானவரின் வரங்கள் திருச்சபையிலே இக்காலத்திலும் வெளிப்படும்.

### செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்

1. **இரகசிய வருகை:**

   ‘‘உபத்திரவத்திற்குச்(வாதைக்குச்) சற்று முன்பாக, கிறிஸ்து பூமிக்கு வந்து சபையை எடுத்துக்கொள்வார்; இரட்சிக்கப்படாதவர்கள் பூமியிலிருந்து உபத்திரவங்களை அனுபவிப்பார்கள்’’ எனும் நம்பிக்கை.

   (1தெச 4:16,17; 2தெச 1:7-9; மத் 13:30; லூக்கா 17:26-37; மத் 24:27; சங் 50:3; வெளி 1:7)

2. **ஆத்துமாவின் அழியாமை:**

''மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா' என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்து இருக்கக்கூடியது; மரணத்தின் போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது'' எனும் நம்பிக்கை.

(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்படவில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

3. **நீங்காத இரட்சிப்பு:**

''ஒருவர் கிறிஸ்துவிடம் ஒருமுறை வந்துவிட்டாரென்றால், தன் இரட்சிப்பை இழக்கவே இழக்கமாட்டார்'' எனும் நம்பிக்கை.

(1கொரி 15:1,2; 2பேதுரு 2:20-22; 1கொரி 9:27 (இங்கே 'ஆகாதவன்' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையே கிரேக்க வேதாகமத்தின் எரேமியா 6:30 இல் 'தள்ளுபடியான' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) எபி 4:4-7; வெளி 3:5; பிலி 4:3 ஐயும் பார்க்கவும். நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது ஜீவபுத்தகத்தில் நம் பெயர் எழுதப்படுகிறது. அதிலிருந்து பெயர் நீக்கப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக வேதாகமம் கூறுவதால், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒருவர் அவரை விட்டுவிலகிவிட வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

4. **நித்திய வாதை:**

''மனந்திரும்பாதவர்களை நரகத்தில் போட்டு நித்திய காலமாகத் தேவன் வாதிப்பார்'' எனும் நம்பிக்கை.

(மல் 4:1-3; சங் 37:10,11,20,38: யூதா 7; 2பேதுரு 2:6; வெளி 20:9; எபி 12:29)

5. **ஞாயிறு பரிசுத்தம்:**

''இயேசுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்த நாளைத் தொழுகை நாளாகப் பரிசுத்தம் பண்ண வேண்டும்'' எனும் கொள்கை.

(ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12-20; லூக்கா 4:16; மத் 24:20; அப் 13:42-44; வெளி 1:10; மத்தேயு 12:8; லூக்கா 6:5; ஏசாயா 66:22,23)

6. **அந்நியபாஷையில் பேசுதல்:**

ஆவியானவரின் அபிஷேகம் பெற்றதற்கு அடையாளம் அந்நியபாஷை பேசுதலே என்று நம்புகிறார்கள். பேசுகிறவருக்கும் இது புரியாதாம். தேவனுக்கு மாத்திரம்தான் புரியுமாம். அந்நியபாஷை பேசாவிட்டால், ஆவியின் அபிஷேகம் பெறவில்லை என்று நம்புகிறார்கள்.

அ. வேதாகமம் கூறுகிற உண்மையான அந்நியபாஷை வரத்தை நம்புவதாகச் சொல்லுங்கள்.

ஆ. யாருக்கு என்ன வரத்தைக் கொடுப்பது என்பதைத் தீர்மானிப்பவர் தேவனே. தேவன் தமது விருப்பப்படியே வரங்களைப் பகிர்ந்து அளிக்கிறார். இதை வலியுறுத்திச் சொல்லுங்கள். 1கொரி 12:11.

இ. எல்லோரும் அந்நியபாஷை வரத்தைப் பெறுவது இல்லை. சொல்லப் பட்டிருக்கிற அநேக வரங்களுள் அந்நியபாஷை வரமும் ஒன்று. சில வரங்கள் இதைவிட மேலானவை. 1கொரி 12:27-31.

ஈ. அந்நியபாஷையையும் தீர்க்கதரிசனத்தையும்விட தேவனுக்கு அன்பு முக்கியமானது. 1கொரி 13:1,2.

உ. ஆவியானவர் ஒருவரை நிறைத்தால், அவர் உள்ளத்தில் அன்பு காணப் படும்; இயேசுவுக்குச் சாட்சியாக இருக்க ஆசை வரும். அப் 1:6-8.

ஊ. சபையார் தங்களுக்குப் பக்திவிருத்தி உண்டாக்கிக்கொள்வதற்கு அந்நியபாஷை கொடுக்கப்படவில்லை. இது அவிசுவாசிகளுக்கு அடையாளமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 1கொரி 14:22.

எ. நற்செய்தியைப் பிறருக்குச் சொல்ல மொழி ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகவே அந்நியபாஷை வரம் கொடுக்கப்பட்டது. எனவே, அந்நியபாஷை என்பது ஒரு உண்மையான மொழி.

ஏ. விளங்காத உளறல் அல்ல, விளங்கக்கூடிய பேச்சே முக்கியம் என்று 1கொரி 14 இல் பவுல் வாதாடுகிறார்.

ஐ. அந்நியபாஷை பேசவேண்டுமானால், பின்வரும் கட்டுப்பாடு களுடன் பேசவேண்டும் என்று பவுல் கூறுகிறார்.
   1. ஒரு நேரத்தில் ஒருவர்மட்டுமே பேசவேண்டும். 1கொரி 14:26,27.
   2. ஒரு ஆராதனையில் இரண்டு அல்லது மூன்று பேருக்குமேல் பேசக் கூடாது. 1கொரி 14:26,27.
   3. பேசப்படுவதை மொழிபெயர்க்க ஒரு ஆள் இருக்கவேண்டும். அதனால் சபை முழுவதும் பயனடைய முடியும். 1கொரி 14:28.

ஒ. தேவனுடைய சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தால், அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள முடியும். அப் 5:32; யோவான் 14:15,16.

**இவர்களை அணுகும் முறைகள்**

1. இயேசுவின்பால் உங்களுக்குள்ள அன்பை வெளிப்படையாகக் கூறுங் கள்.
2. இயேசுவோடு உங்களுக்குள்ள அனுபவத்தைச் சாட்சியாகக் கூறி, அதுவே உங்களுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தைத் தந்தது என்று சொல் லுங்கள். நம் விசுவாசத்திற்கு அடித்தளம் தேவனுடைய வார்த்தையே என்பதையும் சுட்டிக்காட்டுங்கள். யோவான் 17:17.
3. இந்த உணர்ச்சிகளை நாம் நம்பமுடியாது. சில சமயங்களில் உற்சாக மாக இருக்கும்; சிலசமயங்களில் சோர்வாக இருக்கும். இந்த உணர்ச்சி களைச் சாத்தான் தன் கட்டுக்குள் வைத்து நம்மை ஏமாற்றமுடியும்.
4. மெய்யான அற்புதங்களைப்போல சாத்தானும் அற்புதங்களைச் செய்ய முடியும். அவற்றால் அவன் நம்மை ஏமாற்றிவிடுவான். மத் 24:24; வெளி 16:13,14.
5. இயேசுவின் நாமத்தால் அற்புதங்களைச் செய்ததாகக் கூறும் சிலரிடம் இயேசு, 'நான் உங்களை அறியேன்' என்று சொல்வாராம். மத் 7:21-23.
6. விசுவாசம் உறுதியானதாக இருக்கவேண்டுமானால், அது தேவனு டைய வார்த்தையைச் சார்ந்திருக்கவேண்டும். மத் 7:24.
7. தேவனுடைய வார்த்தையை அறிந்து, அந்தச் சத்தியத்தின்படி நடப் பதே நமக்குப் பாதுகாப்பு. ஏசாயா 8:20.

8. நமக்கு விடுதலை தருவது சத்தியமே. யோவான் 8:32.
9. ஆவியானவர்மூலமாகவே வேதாகமம் எழுதப்பட்டது. 2பேதுரு 1:21.
10. இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வதே ஆவியானவரால் நிரப்பப்பட்டு இருத்தல் ஆகும். யோவான் 6:63.
11. அற்புதங்களில் எல்லாம் பெரிய அற்புதம் மனமாறுதலே. யோவான் 3:2-7.
12. வேதாகமத்தை ஒதுக்கிவிட்டு, அற்புதங்களை மட்டும் எதிர்பார்ப்பது இயேசுவுக்குப் பிடிக்காத காரியம். லூக்கா 16:27-31.
13. வேதாகமம் சொல்லுகிறபடி சத்தியத்தை ஏற்றுக்கொள்வதே நாம் மோசம்போகாதபடி நம்மைக் காப்பாற்றும். 2தெச 2:9-12.

**ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். மத்தேயு 7:24.**

**வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை. ஏசாயா 8:20.**

**சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். யோவான் 8:32.**

**ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோவான் 6:63.**

# 17. ப்ரிஸ்பிட்டேரியன் சபை

சீர்திருத்தக்காலத்தில்ஜான்கேல்வினுடையஉபதேசத்தைஏற்றுக்கொண்டு, தோன்றிய சபைதான் ப்ரிஸ்பிட்டேரியன் சபை. தேவனுடைய இறையாண்மையைப்பற்றியும், விசுவாசத்தினால் நீதிமானாகுதல்பற்றியும் கேல்வினைக் குறித்த கொள்கையின் அடிப்படையில் முன்குறித்தல்பற்றி வித்தியாசமான ஒரு கருத்து கேல்வினுக்கு இருந்தது. சிலரை இரட்சிப்புக்கும் சிலரை அழிவுக்கும் ஆண்டவர் முன்குறித்திருக்கிறார் என்று நம்பினார். தேவனுடைய இறையாண்மையைப் பற்றிய இவருடைய கருத்தினிமித்தம், 'சபை வேறு, அரசு வேறு' எனும் கொள்கையில் அவர் தெளிவாக இருந்தார். எல்லா மக்களையும் பொறுமையுடன் சகித்துக்கொள்ள வேண்டும் எனும் கொள்கை அவரிடம் இருந்தது.

இவருடைய நிர்வாகத்தில் உள்ளூர்ச் சபைகளுக்கு அதிக அதிகாரம் இருந்தது. அவை தனித்து இயங்கலாம். போதகர்களை ஊழியத்திற்கு அமர்த்துவதும் அபிஷேகம்பண்ணுவதும் நிர்வாகக்குழுவின் வேலை. அந்த நிர்வாகக் குழுவில் உள்ளவர்களைப் 'ப்ரிஸ்பிட்டர்ஸ்' என்று அழைப்பார்கள். ப்ரிஸ்பிட்டேரியன் சபையில் உயர்மட்ட அதிகாரம் ஜென்ரல் அசெம்ப்ளி ஆகும். அதில் போதகர்களும் சபைப் பிரதிநிதிகளும் இருப்பார்கள்.

1649 ஆம் ஆண்டின் வெஸ்ட்மின்ஸ்டர் அறிக்கையின் அடிப்படையில் அவருடைய நம்பிக்கைகள் உள்ளன. கிறிஸ்துவின் மூலமாக உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கிக்கொண்டதால் உண்டான அன்பு, சமாதானம் ஆகியவற்றை வலியுறுத்தும் மற்றொரு அறிக்கை 1967 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வேதாகமத்தின் மேல் முன்பு இருந்த நம்பிக்கை இப்போது குறைந்துள்ளதுபோல் காணப்படுகிறது.

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்**

1. தேவத்துவம் அல்லது திரித்துவம்.
2. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நித்திய வாழ்வு.
3. கன்னிப்பிறப்பு.
4. வேதாகமம் ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. (சில ப்ரிஸ்பிட்டேரியன் போதகர்கள் இதனைச் சந்தேகப்படுகிறார்கள்)
5. பரலோகம்.
6. கிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான இரண்டாம் வருகை. (சிலர் பிற்காலவியல் கொள்கையால் குழம்பிப்போய் இருக்கிறார்கள்.)

**செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்**

1. **முன்குறித்தல்:**
   தேவன் சிலரை இரட்சிப்புக்கும் சிலரை அழிவுக்கும் முன்குறித்திருக்கிறார் என்று நம்புகிறார்கள். தேவனுடைய நியாயம், அன்பு, மனிதனுடைய

தேர்ந்தெடுக்கும் உரிமை ஆகியவற்றை இக்கொள்கை மறுக்கிறது. (1தீமோ 2:3-5; 2பேதுரு 3:9; வெளி 22:17) ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தேவன் ஒரு திட்டத்தை முன்குறித்திருக்கிறார் என்பது உண்மைதான். எல்லா மனிதர்களையும் இரட்சிக்கவேண்டும் என்பதே தேவனுடைய ஆசை. ஆனால், அந்தத் திட்டத்தை ஏற்பதும் ஏற்காததும் மனிதனுடைய கையில் இருக்கிறது.

2. **ஞாயிறு பரிசுத்தம்:**
   ''இயேசுவானவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தெழுந்ததால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அந்த நாளைத் தொழுகை நாளாகப் பரிசுத்தம்பண்ண வேண்டும்'' எனும் கொள்கை.
   (ஆதி 2:1-3; யாத் 20:8-11; எசேக் 20:12-20; லூக்கா 4:16; மத் 24:20; அப் 13:42-44; வெளி 1:10; மத்தேயு 12:8; லூக்கா 6:5; ஏசாயா 66:22,23)

3. **ஆத்துமாவின் அழியாமை:**
   ''மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா' என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்து இருக்கக்கூடியது; மரணத்தின்போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது'' எனும் நம்பிக்கை.
   (1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115:17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்படவில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

4. **வேதாகமம் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டது:**
   வேதாகமத்தில் ஆவியானவருடைய பங்கு குறித்து ப்ரிஸ்பிட்டேரியன் சிலருக்குத் தெளிவான கருத்து இல்லை. பின்வரும் வசனங்கள் அவர்களுக்கு வேதாகமத்தின் அதிகாரத்தை விளக்கக்கூடியவையாக அமையும்.
   (2தீமோ 3:16; 2பேதுரு 1:21; ஏசாயா 34:16; சங் 119:105; யோவான் 17:17; 2சாமு 7:28; நீதி 12:6,7)

5. **கிறிஸ்துவில் பிரமாணம் ஒழிந்துபோனது:**
   (மத்தேயு 5:17,18; யோவான் 14:15; ரோமர் 6:13,14; 3:28-31; சங் 40:8; எபிரெயர் 8:10; 1யோவான் 2:3-6; யாக்கோபு 2:10-17)

**இவர்களை அணுகும் முறைகள்**

1. கனிவோடும் அக்கறையோடும் உண்மையான கிறிஸ்தவ அன்பைக் காட்டுங்கள்.
2. தேவனுடைய அன்பைக் குறித்த புத்தகங்களை வாசிக்கக் கொடுங்கள்.
3. இரண்டாம் வருகைக்கான அடையாளங்கள் பற்றிய புத்தகங்களையும் கொடுங்கள்.
4. கீழ்க்காணும் கேள்விகளைக் கேளுங்கள்:
   அ. மத்திய கிழக்குப் பிரச்சனையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
   ஆ. உலகத்தில் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிற நிகழ்ச்சிகளின் போக்கு குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

இ. தேவன் அன்புள்ள தேவனாக இருந்தால், ஏன் அப்பாவி மக்கள் பலர் துன்பப்பட அனுமதிக்கிறார்.

ஈ. உலகத்தின் எதிர்காலம் குறித்து எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?

உ. நித்திய வாழ்வைப்பற்றிய நிச்சயம் உங்களுக்கு உண்டா? இன்று மரித்தால் கிறிஸ்துவோடு இருக்கும் நித்திய வாழ்வைப் பெற முடியும் என்று நம்புகிறீர்களா?

5. நம்முடைய ஆழமான கேள்விகளுக்கான பதிலை வேதாகமத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். நம் உள்ளத்தின் தேவைகளையும் வேதாகமம் சந்திக்கக்கூடியதே.

6. வேதாகமத்தின் தீர்க்கதரிசனங்களைப் படித்து, இன்றைய பிரச்சனைகளுக்கான தீர்வைக் கண்டுபிடிப்பதற்கு உதவக்கூடிய வேதபாடங்களைப் படிக்க வரும்படி அழைப்புகொடுங்கள்.

**நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்தேயு 5:17,18.**

**நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. ரோமர் 6:13,14.**

# 18. ரேடியோ சர்ச் ஆஃப் காட்

## ஹெர்பட் டபிள்யூ ஆம்ஸ்ட்ராங் என்பவரின் சபை

சர்ச் ஆஃப் காட் எனும் பெயரை ஏராளமான கிறிஸ்தவச் சபைகள் தங்களுக்குப் பயன்படுத்துகின்றன. கத்தோலிக்கச் சபையிலிருந்து பிரிந்து வந்த சபைகள் முழுவதுமாகத் தவறுகளிலிருந்து வெளியே வரவில்லை என்றும், அந்தத் தவறுகளையும் விட்டுவிட்டு தேவனால் அமைக்கப்பட்ட சபை என்று அந்தச் சபைகள் ஒவ்வொன்றும் தங்களை அழைத்துக்கொண்டதால், அந்தச் சபைகள் தங்களைச் 'சர்ச் ஆஃப் காட்' (தேவசபை) என்று அழைத்துக்கொண்டன. புதிய ஏற்பாட்டிலுள்ள அற்புதங்கள், அந்நியபாஷை, ஆவியின் அபிஷேகம் போன்றவற்றை இவர்கள் முக்கியப்படுத்துவார்கள். 19ஆம் நூற்றாண்டின் அட்வென்ட் இயக்கத்திலிருந்து 'சர்ச் ஆஃப் காட் செவந்த்-டே' எனும் சபை தோன்றியது. 1860-63ஆண்டுகளில் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை ஒழுங்கமைக்கப்பட்ட போது, சர்ச் ஆஃப் காட் செவந்த்-டே சபை அந்தப் பெயரை விட்டுவிட்டு, வெறுமனே சர்ச் ஆஃப் காட் என்று தன்னை அழைத்துக்கொண்டது. 1930 ஆம் ஆண்டில், ஹெர்பட் டபிள்யூ ஆம்ஸ்ட்ராங் அந்தச்சபையை விட்டு வெளியேறி ரேடியோ சர்ச் ஆஃப் காட் எனும் சபையை நிறுவினார். இந்தச் சபையின் பத்திரிக்கையாகிய 'ப்ளெய்ன் ட்ரூத்' உலகமெங்கும் அனுப்பப்பட்டு வருகிறது. அம்பாஸிடர் காலேஜ் என்பது இவர்களுடைய கல்லூரி.

### செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்

1. வேதாகமம் ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டது.
2. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.
3. மரித்தோர் நிலை.
4. வேதாகமத்தின் உடல்நல விதிகளைக் கைக்கொள்ளுதல்.
5. ஏழாம்நாள் ஓய்வுநாள்.
6. தசமபாகக் கொள்கை.

### செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்

1. **ஆயிர வருட அரசாட்சி:**

   ஏழு வாதைகளால் ஜனங்களை அடக்கி, கிறிஸ்து தமது ராஜ்யத்தைப் பூமியில் நிறுவுவார். அதன்பின் 1000 ஆண்டுகள் பூமியில் ஆளுவார். (வெளி 19:11-21; 20:1-10; யோவான் 5:28-29; எரே 4:23-26; 25-33 வெளிப்படுத்தல் 20:1 இல் அபுசோஸ் எனும் கிரேக்க வார்த்தையானது பாதாளம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதே வார்த்தையானது ஆதி 1:1,2 இலும் எரே 4:23 இலும் ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்த பூமிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வாதைகள் ஊற்றப்படும் நேரம் எது என்பதைக்

கண்டுபிடிக்க வெளி 15:1,8; 16:12-21 ஐ வாசிக்கவும்.)

2. **யூதப் பண்டிகைகள்:**
பஸ்கா, புளிப்பில்லாத அப்பப்பண்டிகை, முதற்பலன்கள் ஆகிய பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். நிசான் மாதம் 14 ஆம் தேதி பஸ்கா கொண்டாடும்போது, கால்கழுவும் ஆராதனையையும் நடத்துவார்கள். (கொலோ 2:14-17; 1கொரி 5:7,8; கலா 4:1-11; 3:26-29) பண்டிகைகள் 10 எல்லாம்கிறிஸ்துவில்நிறைவேறிவிட்டதைஇந்தவசனங்கள்காட்டுகின்றன.

3. **புதன்கிழமை சிலுவையில் அறையப்படல்:**
இயேசுவானவர் புதன்கிழமை சிலுவையில் அறையப்பட்டார் என்று நம்புகிறார்கள். 'யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரன் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்' (மத் 12:40) என்று வசனம் கூறுவதால், 72 மணி நேரம் அவர் கல்லறையில் இருந்திருக்கவேண்டும் என்று வாதாடுகிறார்கள்.

அ. தமது உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசும்போது, மூன்று விதமான சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறார்.
   1. மூன்று நாளைக்குள்ளே (மத் 26:61; 27:40; மாற்கு 14:58).
   2. மூன்று நாளைக்குப்பின் (மத் 27:63; 12:40)
   3. மூன்றாம் நாளில் (மத் 16:21; 17:23; 20:19; 27:64; மாற்கு 9:31; 10:34: லூக்கா 9:22; 18:33; 24:7,21,46)

   'மூன்று நாளைக்குள்ளே' என்பதையும், 'மூன்று நாளுக்குப் பின்' என்பதையும், 'மூன்றாம் நாளில்' என்பதுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், 72 மணி நேரம் என்பது அர்த்தமில்லாமல் போகிறது.

ஆ. அக்காலத்தில் ஒரு நாளைக் கணக்கிடும்போது, ஒரு நாளின் ஒரு பகுதியைக்கூட ஒருநாள் என்று அழைத்துவிடுவார்கள். உதாரணமாக, வெள்ளிக்கிழமை முடிவில் ஒரு மணி நேரமும் அதைத்தொடர்ந்து சனிக்கிழமை ஆரம்பத்தில் ஒரு மணி நேரமும் ஒரு செயல் நடந்திருந்தால், அந்தச் செயல் இரண்டு நாட்கள் நடந்தது என்று சொல்லிவிடுவார்கள். வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பல மூன்றுநாள் சம்பவங்கள் 72 மணி நேரம் எடுக்கவில்லை என்பதைக் கீழ்க்கண்ட வசனங்களை வாசித்துக் கண்டுபிடியுங்கள்.
(ஆதி 42:17-19; 1இரா 12:5,12; 2நாளா 10:,12)

இ. இயேசு ஆயத்தநாளில் (வெள்ளிக்கிழமையில்) சிலுவையில் அறையப்பட்டு, முதல்நாளில் (ஞாயிற்றுக்கிழமை) உயிர்த்தெழுந்தார் என்பதே தெளிவான வேதாகம விளக்கம்.
(மாற்கு 16:9; லூக்கா 24:1,13,21,46; 23:52-24:21)

**இவர்களை அணுகும் முறைகள்**

1. நெருங்கிய நட்பை வளர்த்துக்கொள்ளுங்கள்.
2. இயேசு கிறிஸ்துவோடு உங்களுக்குள்ள தொடர்பைக் குறித்த சாட்சியை அவர்களுக்குச் சொல்லுங்கள். இந்தச் சபையைச் சேர்ந்த பலர் கிரியைக்காரர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையில் செய்யவேண்டிய காரியங்களைக் குறித்துப் பேசுங்கள். இயேசுவில் அவர்களுக்கு இருக்கும்

இரட்சிப்பின் நிச்சயம் அவர்களுக்குத் தேவையாக இருக்கிறது. (1யோவான் 5:11,12; யோவான் 1:12; ரோமர் 3:25-31; 6:14,15; எபே 2:8)

3. முத்தூதின் முக்கியத்துவம் குறித்துப் பேசுங்கள். அநேகர் வேதாகமத்தை நன்கு கற்றவர்கள். எனவே, வெளிப்படுத்தின விசேஷத்தின் ஆழமான சத்தியங்களைக் கற்றுக்கொள்வதற்கு ஆர்வம் காட்டுவார்கள்.

4. ஆயிரவருட அரசாட்சி, யூதருடைய பண்டிகை, புதன்கிழமை சிலுவையில் அறையப்படுதல் போன்ற கருத்துகளைப் பேசும்போது, கிறிஸ்தவ அன்புடன் நடந்துகொள்ளுங்கள்.

5. நமது அடிப்படை உபதேசங்களை விளக்கும் புத்தகம் ஏதாவது இவர்களுக்குக் கொடுத்தால் பயனுடையதாய் இருக்கும்.

**அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். யோவான் 1:12.**

**கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. எபேசியர் 2:8.**

**அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். யோவான் 1:12.**

# 19. மதச்சார்பற்றவர்கள்

உலகப் பொருட்கள்மேல் ஆர்வமுடையவர்களாகச் செயல்படுகிறவர்கள் மதச்சார்பற்றவர்களாக இருக்கிறார்கள். தேவன்மேலும் மதத்தின்மேலும் ஆன்மிகக்காரியங்கள்மேலும் அக்கறையில்லாதவர்கள் மதச்சார்பற்றவர்களாக இருக்கிறார்கள். பணம், உலகப் பொருட்கள், மதுபானம், விளையாட்டு போன்றவையே அவர்களுக்கு முக்கியமானவையாக இருக்கும். இந்த உலகத்தில் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதே இவர்களுடைய நோக்கமாக இருக்கும். இவர்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. **அறிவாளிகள்:**
   தத்துவ ரீதியில் யோசிக்கக்கூடிய இவர்கள் மதப்புத்தகங்களில் குறைபாடுகள் இருப்பதாக யோசித்து, தேவன் இருக்கிறாரா எனும் கேள்வியை எழுப்பக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

2. **தொழிலாளிகள்:**
   நாள் முழுவதும் உடலால் உழைக்கிறவர்கள் நேரம் கிடைக்கும்போது, சற்று இளைப்பாறவே விரும்புகிறார்கள். தொலைக்காட்சி பார்ப்பது போன்ற பொழுதுபோக்குகளில் நேரத்தைச் செலவிடும் இவர்களுக்கு ஆன்மிகக் காரியங்களைப்பற்றி யோசிக்க நேரம் இல்லை.

3. **பின்வாங்கிப் போனவர்கள்:**
   சமூகப்பணிகளில் இவர்களுக்கு அக்கறை இருக்கும். ஆனால், ஆன்மிகக் காரியங்களில் அக்கறை இல்லை. இக்காலத் தேவைகளைக் குறித்து மதங்கள் கவலைப்படுவது இல்லை என்று இவர்கள் கவலைப்படுகிறவர்கள். ஏழ்மை, இனப்பகை, சண்டை, சமூகநீதி ஆகியவை குறித்து யோசிப்பார்கள். கிறிஸ்தவத்தின் ஒழுக்க நியதிகள் இவர்களுக்குப் பிடித்தமானவை. ஆனால், கிறிஸ்தவத்தின் கிறிஸ்துவைப் பற்றி கவலைப்படமாட்டார்கள்.

4. **உலகவாதிகள்:**
   அழகான வீடு, அதிகச் சம்பளம் தரும் வேலை, நவீன கார், உற்சாகமான சுற்றுலா போன்றவையே இவர்களுக்கு முக்கிய மானவை. இவர்களுடைய ஆசை எல்லாம் சொத்து சேர்ப்பதிலேயே இருக்கும்.

### இவர்களை அணுகும் முறைகள்

அன்புக்கு அடிமையாகாதவர்கள் எவரும் இல்லை. மெய்யான நட்பானது தப்பெண்ணங்களை அகற்றும். வாதாடி அவர்களை வெல்லமுடியாது. ஒவ்வொரு மனிதனுக்கும் சில முக்கியத் தேவைகள் உண்டு. அந்தத் தேவைகளைப் பெறுவதற்கு அவர்கள் பிறர் உதவியை நாடுவார்கள். அவர்களுடைய தேவை பின்வருமாறு இருக்கலாம்: புகைத்தலை நிறுத்துதல், கொழுப்பு குறைவான உணவு போன்ற உடல்நலத் தேவைகளாக இருக்கலாம். மகிழ்ச்சியான குடும்பம், திருப்தியான வேலை, நண்பர்களின் தேவை, மன அமைதி, குற்ற உணர்ச்சியிலிருந்து விடுதலை போன்ற தேவைகளாக இருக்கலாம். உங்கள் நண்பருக்கு

என்ன தேவை இருக்கிறது என்பதைக் கண்டுபிடியுங்கள். அவற்றைச் சந்தியுங் கள். தப்பெண்ணத் தடைகளெல்லாம் நொறுங்கிப்போவதைப் பார்க்கலாம். இயேசு உங்களுக்கு எந்தவிதத்தில் போதுமானவராக இருக்கிறாரென்பதை அறிவிக்கும் வாய்ப்புக்காகக் காத்திருங்கள்.

**மூன்று அணுகுமுறைகள்**

1. அன்போடு, எளிமையாக இரட்சிப்பின் திட்டத்தைப் பகிர்ந்துகொள்ளுங் கள்.

   அ. தேவன் குறைவில்லாத உலகை உண்டாக்கினார். ஆதி 1:28.
   ஆ. பாவத்தால் தோட்டத்தை ஆதாம்-ஏவாள் இழந்தனர். ஆதி 3:1-5.
   இ. தேவனிடமிருந்து பாவம் நம்மைப் பிரிக்கிறது. ஏசா 59:1,2.
   ஈ. பாவத்தின் சம்பளம் மரணம். ரோமர் 6:23.
   உ. நாம் எல்லோரும் பாவம் செய்திருப்பதால், நித்திய மரணம் நமக்குரியது. ரோமர் 3:23; 5:18.
   ஊ. இயேசுவின்மூலம் நித்திய வாழ்வாகிய ஈவைப் பெறலாம். யோவான் 3:16; எபே 2:8; 2கொரி 5:21.

2. வேதாகமம் உண்மையானது என்பதைக் காட்டுவதற்கு வேதாகமத் தீர்க்கதரிசனங்களைச் சொல்லிக்கொடுங்கள்.

   அ. தானி 2 - பாபிலோன், மேதிய-பெர்சியா, கிரேக்கம், ரோம், ரோமின் பிரிவுகள், இயேசுவின் வருகை.
   ஆ. இயேசுவின் பிறந்த இடம் - பெத்லகேம். மீகா 5:2.
   இ. பிறப்பதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்னரேயே பெயரிடப்பட்ட கோரேஸ். ஏசாயா 44:28; 45:1,2.
   ஈ. தீரு அழிவைப்பற்றிய தீர்க்கதரிசனம். எசேக் 26:1-4, 19-21.
   உ. எகிப்தின் அழிவு. எசேக் 29:1-9.

3. பரிணாமம் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை அல்ல, அது வெறும் யூகம் தான் என்பதை வலியுறுத்தவேண்டும். பரிணாமம் உண்மை என்றால், மூன்று அறிவியல் விதிகள் தவறானவையாக இருக்கவேண்டும்.

   அ. ஓர் உயிரிலிருந்துதான் இன்னோர் உயிர் உருவாகும் என்பது விஞ்ஞான உண்மை. ஆனால், பரிணாமமோ சரியான சூழ்நிலை இருந்தால் உயிரில்லாப் பொருட்களிலிருந்து உயிருள்ளவை தோன்றும் என்று சொல்கிறது.
   ஆ. இனம் தன் இனத்தை உருவாக்கும் என்று அறிவியல் சொல்கிறது. ஆனால், பரிணாமமோ இப்போது இருக்கிற இனங்களுக்கு இடையில் அவற்றை இணைக்கும் இணைப்பான உயிர்கள் இருந்தன என்று சொல்கிறது. ஆனாலும், இதுவரை அப்படிப்பட்ட இணைப்பு உயிர்கள் எவையும் கண்டுபிடிக்கப்படவில்லை.
   இ. பொருட்களை நாம் அப்படியே விட்டுவிட்டால் அவை அழிந்து கொண்டே போகும் என்று இயல்பியல் கூறுகிறது. (வெப்பவியலின் இரண்டாம் விதி). ஆனால், பரிணாமமோ உயிர்கள் வளர்ந்து கொண்டே வருவதாகக் கூறுகிறது.

   வாழ்க்கையின் கேள்விகளுக்கு வேதாகமம்மாத்திரமே பதில் தரமுடியும்.

   நான் எங்கே இருந்து வந்தேன்? ஏன் இங்கே இருக்கிறேன்? என் எதிர்

காலம் என்ன?

கிறிஸ்து நம்மை உண்டாக்கினார் என்று வேதாகமம் சொல்கிறது. அவர் நம்மை வழிநடத்திச் செல்வார் என்றும், நம் எதிர்காலம் அவர் கையில் என்றும் வேதாகமம் கூறுகிறது. தேவன் இல்லையேல் நம்பிக்கை எதுவும் இல்லை என்று உங்கள் நண்பருக்குக் காட்டுங்கள்.

**. இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. ஏசாயா 59:1,2.**

**பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். ரோமர் 6:23.**

**ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. ரோமர் 5:18.**

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். யோவான் 3:16.**

# 20. முன்னாள் செவந்த்-டே அட்வென்டிஸ்ட்கள்

சபையைவிட்டு வெளியேறுகிறவர்களில் பெரும்பான்மையோர் உபதேசங்களின் நிமித்தம் வெளியேறவில்லை என்று ஆராய்ச்சி கூறுகிறது. கீழே உள்ள நான்கு காரணங்களில் ஏதாவது ஒன்றினிமித்தமே சபையிலிருந்து வெளியேறுகிறார்கள்.

1. சபை விசுவாசி யாராவது ஒருவர் அல்லது போதகரோடு சச்சரவு.
2. தங்களுடைய தேவைகளைத் தீர்ப்பதற்கு சபை எந்த விதத்திலும் பயனுடையதாய் இருக்காது எனும் எண்ணம்.
3. சபையின் ஒழுக்க நியதிகளுக்கேற்ப தன்னால் வாழ முடியாது எனும் சோர்வு.
4. பக்தியான வாழ்க்கையும் வேத ஆராய்ச்சியும் இல்லாததால், ஆன்மிகக் காரியங்களில் ஆர்வக்குறைவு.

யாராவது ஒரு நபர் வெளிப்படையான காரணம் ஏதுமின்றி தொடர்ந்து ஆலயத்திற்கு வராமல் இருந்தால், அங்கே ஆன்மிகப் பிரச்சனை ஏதோ இருக்கிறது என்று அர்த்தம். உடனே சென்று அவர்களைச் சந்தித்து, அவர்கள் பிரச்சனையைக் குறித்துப் பேசாவிட்டால், சபைவிலகல் நிச்சயம். வழிவிலகலை நிறுத்துவதற்குள்ள ஒரே வழி அன்பான அக்கறையே.

**சபையில் ஒருவருக்கு ஆர்வம் குறைந்து வருகிறது என்பதைக் கண்டுபிடிப்பதற்கான அடையாளங்கள்**

1. ஆலயத்திற்கு எப்போதாவது ஒருமுறை வருதல்.
2. ஜெபக்கூட்டங்களுக்கு வராதிருத்தல்.
3. சபையைக் குறைகூறும் போக்கு.
4. ஆன்மிக உற்சாகக் குறைவு.
5. பழைய பழக்கவழக்கங்களுக்குத் திரும்புதல். (புகைத்தல், குடித்தல் போன்றவை)
6. ஓய்வுநாள் ஆசரிப்பில் அக்கறையின்மை.
7. சபை அங்கத்தினர்களுடைய வீட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாமற் போகுதல்.

**இவர்களை அணுகும் முறைகள்**

1. இவர்களுக்கு வேத உபதேசங்கள் தேவையில்லை. இப்போதுள்ள வாழ்க்கை பாணியை குறைகூறுதல் கூடாது. அவர்களிடம் தவறான வாழ்க்கை முறைகள் இருக்குமானால், அதிர்ச்சியடைந்து விடாதீர்கள். அவர்கள் ஏற்கனவே மனச்சாட்சியில் வேதனைப் பட்டுக்கொண்டிருப்பார்கள். நீங்களும் குறைகூறி அதை அதிகப்படுத்தாதீர்கள்.

2. அன்பையும் அக்கறையையும் ஏற்றுக்கொள்ளும் தன்மையையும் காட்டுங்கள்.

3. பொதுவான கேள்விகளைக் கேட்டு, நட்பை உண்டாக்குங்கள்.

அ. இந்த இடத்தில் பல வருடங்களாக வசிக்கிறீர்களா?

ஆ. உங்களுக்குத் திருமணமாகிவிட்டதா? எத்தனை குழந்தைகள் இருக்கிறார்கள்?

இ. நீங்கள் வேலைசெய்யும் இடம் வீட்டுக்கு அருகிலா, தூரத்திலா? என்ன வேலை செய்கிறீர்கள்?

இவ்வாறு பேசுவது நட்புணர்வை உண்டாக்கும். அவர்மேல் உண்மையான அக்கறையுடன் பேசுங்கள்.

4. அதன்பிறகு ஆன்மிகக் காரியங்களைக் குறித்த கேள்விகளைக் கேளுங்கள்.

அ. செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஆலயத்திற்கு நீங்கள் ஒழுங்காகச் செல்வீர்கள் என்று கேள்விப்பட்டேன். எவ்வளவு காலத்திற்குமுன் ஆலயம் சென்றுவந்தீர்கள்?

ஆ. பல வருடங்களாக அங்கத்தினர்களாக இருந்தீர்களா?

இ. நீங்கள் ஆலயம் செல்லாததற்குக் காரணம் என்ன என்பதை நான் அறிந்துகொள்ளலாமா? நான் அதை அறிந்துகொள்ள உண்மையிலேயே விரும்புகிறேன். (அவர் சபையைவிட்டு வெளியேறியதற்கு நாம் பார்த்த நான்கு காரணங்களில் ஏதாவது ஒன்று காரணமாக இருக்கலாம்.)

ஈ. அக்கறையோடு கவனியுங்கள். கேள்வி கேட்காதீர்கள். அவரையோ சபையையோ குறைசொல்லாதீர்கள் 'உங்கள் கஷ்டம் புரிகிறது' என்று சொல்லுங்கள்.

உ. அக்கறையோடு அவர் சொல்லும் காரணங்களை அறிந்து கொண்ட பின்பு, இயேசு உங்களுக்கு எவ்விதம் போதுமானவராக இருக்கிறார் என்பதை அவருடன் பகிர்ந்துகொள்ளுங்கள். அவருடைய அற்புதமான மன்னிப்பு, நம் வாழ்க்கையை மாற்றும் வல்லமை போன்றவை பற்றிப் பேசுங்கள். மீகா 7:18,19; எபி 8:12; 1யோவான் 1:9 போன்ற வசனங்களைப் பயன்படுத்துங்கள். இயேசு சீக்கிரம் வரப்போவதால், மனவேதனையுடன் வெளியேறிய தம்முடைய பிள்ளைகளைத் தேவன் மீண்டும் சபைக்கு வருமாறு அழைக்கிறார் என்று சொல்லுங்கள். அவரோடு சேர்ந்து ஜெபியுங்கள். அடுத்த வாரமும் சந்திக்க விரும்புவதாகச் சொல்லுங்கள். முதலிலேயே ஆலயத்திற்கு வரும்படி குறிப்பிடாதீர்கள். ஒருமுறை 'முடியாது' என்று சொல்லிவிட்டால், அடுத்த முறை அதே பதிலைச் சொல்வது எளிதாக இருக்கும்.

ஊ. நீங்கள் சொன்னபிரகாரம் அடுத்த வாரமும் தவறாது சென்று விடுங்கள். துளிர்க்கும் விசுவாசத்தைக் கொய்து விடாதீர்கள். இரண்டாவது முறை பார்க்கச்சென்ற சமயத்திலும் அவர்களுடைய வேதனைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ளும்படி அனுமதியுங்கள். வேதாகம வாக்குறுதிகளை எடுத்துக்காட்டுங்கள். சங் 32:8; 40:1,2; சங் 32:1,2. அவரை உங்கள் வீட்டிற்குக் கூப்பிட்டு விருந்துகொடுங்கள். ஜெபத்திற்கு ஆண்டவர் பதில்கொடுக்க விரும்புகிறார் என்பதைச் சுட்டிக்

காட்டும் புத்தகம் ஒன்றைப் பரிசளியுங்கள்.

எ. மூன்றாவது சந்திப்பில் சபையின் நிகழ்ச்சி ஏதாவது ஒன்றுக்கு அழைப்புக்கொடுங்கள். அது விருந்து நிகழ்ச்சியாகவோ நற்செய்திக் கூட்டமாகவோ இருக்கட்டும். ஓய்வுநாள் பகல் ஆராதனைக்கு வருமாறு பின்னர் அழைத்துக்கொள்ளலாம். நீங்கள் வந்து அழைத்துச் செல்வதாகச் சொல்லுங்கள். அவர்களுக்குத் தனியாக வர வெட்கமாக இருக்கலாம்.

ஏ. சபை நிகழ்ச்சிக்கு அவர் வந்தபோது, சபை மக்கள் அவரைப் பற்றிச் சொன்ன நல்வார்த்தைகளை அவரிடம் சொல்லுங்கள். அவர் திரும்பி வந்ததுகுறித்து அவருடைய முன்னாள் நண்பர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதை அவர் புரிந்துகொள்ளட்டும். அவரை அறிந்த விசுவாசிகள் இந்த வாரத்தில் அவரைத் தொடர்புகொண்டு, அவர் சபை நிகழ்ச்சிக்கு வந்ததினிமித்தம் தாங்கள் மகிழ்ச்சியடைந்ததாகச் சொல்லும்படி அவரிடம் கூறுங்கள். அவரை ஆலய ஆராதனைக்குக் கூப்பிடுங்கள். அட்வென்ட் சத்தியமானது அவருக்குப் பிடித்தமானதாகவே இருக்கும. அவர் அற்புதமான வேலையைச் செய்ய முடியும். அவர் விரும்புகிற அன்பையும் அக்கறையையும் அவருக்குக் கொடுத்தால் அவர் சபையில் நிலைத்திருப்பார்.

**தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபைசெய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார்.. அவர் திரும்ப நம்மேல் இரங்குவார்; நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார். மீகா 7:18,19.**

**ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். எபிரெயர் 8:12.**

# 21. செவந்த்–டே பாப்திஸ்ட்

செவந்த்-டே பாப்திஸ்ட் சபையுடன் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபைக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. ரேச்சல் ஓக்ஸ் ப்ரெஸ்டன் எனும் செவந்த்-டே பாப்திஸ்ட் அங்கத்தினர் மூலமாகத்தான் அட்வென்டிஸ்ட்கள் முதலாவதாக ஏழாம்நாள் ஓய்வுநாளைப் பற்றி தெரிந்துகொண்டார்கள். அதை நன்கு ஆராய்ந்த ஜோசப் பேட்ஸ் அதை ஏற்றுக்கொண்டு, அட்வென்டிஸ்ட்கள் மத்தியில் இந்தச் சத்தியத்தைப் பரப்பினார். அதுவரை அட்வென்டிஸ்ட்கள் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கிறவர்களாகவே இருந்தார்கள். சீர்திருத்தக்காலத்திலேயே பாப்திஸ்ட் மக்கள் ஐரோப்பாவில் ஏழாம் நாளை ஓய்வுநாளாக ஆசரித்து வந்தார்கள். நிர்வாகத் தலைமையை இவர்கள் ஜென்ரல் கான்ஃபரன்ஸ் என்று அழைக்கிறார்கள். ஆனாலும், உள்ளூர்ச் சபைகளுக்கு அதிகாரம் அதிகம் உண்டு. உபதேசத்திலும் செயல்களிலும் அவர்கள் தாங்களே தீர்மானம் செய்துகொள்ளலாம்.

செவந்த்-டே பாப்திஸ்ட் சபைக்கும் செவந்த்-டே அட்வென் டிஸ்ட் சபைக்கும் உள்ள ஒரு முக்கிய வேறுபாடு செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையின் தீர்க்கதரிசன அழைப்பு ஆகும். வெளி 12:17 இல் உள்ள மீதமானவர்கள் தாங்களே என்று செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை நினைக்கிறது. வெளி 14:6-12 இல் உள்ள செய்தியை அறிவிக்கவேண்டிய கடமையும் இருக்கிறது. இதினிமித்தம் உலகளாவிய சபையாக செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபை வளர்ந்துள்ளது.

## செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகக்கூடிய பொது உபதேசங்கள்

1. வேதாகமம் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டது.
2. திரித்துவம் அல்லது தேத்துவத்துவம்
3. கன்னிப்பிறப்பு.
4. இயேசுகிறிஸ்துவின்மூலமாய் இரட்சிப்பு.
5. ஏழாம்நாள் ஓய்வுநாள்.
6. முழுக்கு ஞானஸ்நானம்.
7. கிறிஸ்துவின் சரீரப்பிரகாரமான இரண்டாம் வருகை.
8. மதச்சுதந்திரமும் கருத்துச்சுதந்தரமும் முக்கியப்படுத்தப்படும்.

## செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையின் உபதேசங்களுடன் ஒத்துப்போகாத தவறான உபதேசங்கள்

1. **நீங்காத இரட்சிப்பு:**

   ‘ஒருவர் கிறிஸ்துவிடம் ஒருமுறை வந்துவிட்டாரென்றால், தன் இரட்சிப்பை இழக்கவே இழக்கமாட்டார்’ எனும் நம்பிக்கை.

   (1கொரி 15:1,2; 2பேதுரு 2:20-22; 1கொரி 9:27 (இங்கே ‘ஆகாதவன்’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையே கிரேக்க வேதாகமத்தின் எரே

மியா 6:30 இல் 'தள்ளுபடியான' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.) எபி 4:4-7; வெளி 3:5; பிலி 4:3 ஐயும் பார்க்கவும். நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போது ஜீவபுத்தகத்தில் நம் பெயர் எழுதப்படுகிறது. அதிலிருந்து பெயர் நீக்கப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதாக வேதாகமம் கூறுவதால், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒருவர் அவரை விட்டுவிலகிவிட வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

2. **ஆத்துமாவின் அழியாமை:**

"மனிதனின் சரீரத்துக்குள் 'ஆத்துமா' என்று ஒன்று இருக்கிறது; அது அழியாதது; உடலைவிட்டு வெளியேயும் தனித்து இருக்கக்கூடியது; மரணத்தின்போது அது உடலைவிட்டு வெளியேறி, பரலோகத்துக்கோ நரகத்துக்கோ செல்கிறது" எனும் நம்பிக்கை.

(1தீமோ 6:15,16; ஆதி 2:7; பிர 12:7; யோபு 27:3; சங் 146:4; 6:5; 115;17; யோவான் 11:11-14) கவனியுங்கள்: ஆத்துமா எனும் வார்த்தை சுமார் 1600 தடவை வேதாகமத்தில் வருகிறது. எந்த இடத்திலும் அது 'அழியாத ஆத்துமா' என்று அழைக்கப்படவில்லை. மரணத்தை 53 தடவை தூக்கம் என்று வேதாகமம் அழைக்கிறது.

3. **நித்திய வாதை:**

'மனந்திரும்பாதவர்களை நரகத்தில் போட்டு, நித்திய காலமாகத் தேவன் வாதிப்பார்' எனும் நம்பிக்கை.

(மல்கியா 4:1-3; சங் 37:10,11,20,38; யூதா 7; 2பேதுரு 2:6; வெளி 20:9; எபி 12:29)

4. **இரகசிய வருகை:**

'உபத்திரவத்திற்குச் (வாதைக்குச்) சற்று முன்பாக, கிறிஸ்து பூமிக்கு வந்து சபையை எடுத்துக்கொள்வார்; இரட்சிக்கப்படாதவர்கள் பூமியிலிருந்து உபத்திரவங்களை அனுபவிப்பார்கள்' எனும் நம்பிக்கை.

(1 தெச 4:16,17; 2தெச 1:7-9; மத் 13:30; லூக்கா 17:26-37; மத் 24:27; சங் 50:3; வெளி 1:7)

### இவர்களை அணுகும் முறைகள்

1. பொதுவான கருத்துகளைக் குறித்து பேசுங்கள். இயேசு கிறிஸ்துவின்மேல் உங்களுக்குள்ள விசுவாசத்தை உறுதிபடக் கூறுங்கள். கிருபையினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்பதை வலியுறுத்துங்கள்.
2. 'வெளி 14:6-12 இல் உள்ள செய்தியை அவர்கள் புரிந்திருக்கிறார்களா?' என்பதை விசாரியுங்கள். நோவாவின் காலத்தில் நோவா ஒரு விசேஷித்த செய்தியைச் சொன்னதுபோல, இந்தக் கடைசிக் காலத்தில் வெளி 14 இல் உள்ள செய்தியை உலகத்திற்கு அறிவிக்கும் பணி கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, அதைச் சற்று ஆராய்ந்து பார்க்கும்படி சொல்லவேண்டும்.
3. தானியேல் வெளிப்படுத்தின விசேஷ தீர்க்கதரிசனங்களை நடத்தினால் அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கவனிப்பார்கள். தானியேல் 2 அவர்களுடைய ஆர்வத்தை மிகவும் தூண்டும்.
4. எலன் ஜி ஒய்ட் புத்தகங்களில் வெளியான தீர்க்கதரிசன வரத்தை செவந்த்

-டே பாப்திஸ்ட்கள் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். எனவே, கடைசிக்காலத்தில் தீர்க்கதரிசன வரம் வெளிப்படும் என்பதைப் பின்வரும் வசனங்களின் அடிப்படையில் எடுத்துச் சொல்லுங்கள். எபே 4:8, 11-15; 1கொரி 1:6-8; வெளி 12:17; 19:10. மேலும், உண்மையான தீர்க்கதரிசியைக் கண்டுபிடிப்பதற்குரிய சோதனைகளைப் பின்வரும் வசனங்களின் அடிப்படையில் எடுத்துச் சொல்லுங்கள். உபா 13:1-4; ஏசாயா 8:20; தானி 10:17; எரே 28:9; மத் 7:15.

**மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். எபேசியர் 4:11-13.**

**அவர் மூலமாய் உங்களுக்கு அளிக்கப்பட்ட தேவகிருபைக்காக, நான் உங்களைக்குறித்து எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார். 1கொரிந்தியர் 1:6-8.**

# 22. பரிந்துபேசும் ஜெபத்தின் வல்லமை

ஆத்தும ஆதாயம் செய்வதில் நீங்கள் வல்லவர்களாக வேண்டும் என்பதற்காகவே பல நியதிகள் இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட் டுள்ளன. நாம் பேசுவதினால் மாத்திரம் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவது இல்லை. பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய வாழ்க்கையில் கிரியை செய்து வருகிறார். ஆவியானவர் அவர்களை வழி நடத்தாவிட்டால், நம்முடைய பேச்சுகளால் பயன் இருக்காது.

இயேசு கிறிஸ்துவின் ஆத்தும ஆதாய வல்லமையை மாற்கு புத்தகத்தில் பின்வருமாறு வாசிக்கிறோம்: 'அவர் வேதபாரகரைப் போலப் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக்குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்' மாற்கு 1:22. இந்த வல்லமையின் இரகசியத்தை 35 ஆம் வசனத்தில் பார்க்கிறோம். 'அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய், அங்கே ஜெபம்பண்ணினார்' மாற்கு 1:35.

இயேசு நாதருடைய வல்லமையின் இரகசியம் அவருடைய ஜெபத்தில் இருந்தது. நீங்கள் ஆத்துமா ஆதாயம் செய்ய விரும்புகிறீர்களா? நீங்கள் முழங்காலில் நின்று, ஒவ்வொரு தனிநபருக்காகவும் ஆண்டவரிடம் கெஞ்சினால் பரலோகத்தின் வல்லமை உங்கள்மூலம் செயல்படும். மற்றவர்களுக்காக ஜெபிக்கும்போது, அவர்களைத் தொடும் ஞானத்தை அவர் நமக்குத் தருவார். யாக் 1:5. அவர்களுடைய இதயக்கதவுகளைத் திறப்பதற்கான சாவிகளை நம் கையில் கொடுப்பார்.

நன்மைக்கும் தீமைக்கும் இடையில் ஒரு மாபெரும் போராட்டம் நடந்து வருகிறது. மனிதர்களுடைய தீர்மானிக்கும் உரிமையைத் தேவன் மதிக்கிறார். ஒவ்வொருவருக்கும் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைத் தருகிறார். தூதர்கள் மூலமாகவும் ஆவியானவர் மூலமாகவும் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மூலமாகவும் மனிதருடைய சுதந்திரத்தில் தலையிடாமல் அவர்களைத் தன் பக்கம் இழுப்பதற்குத் தேவன் முயன்று வருகிறார்.

குறிப்பிட்ட நபர்களை நம் ஜெபத்தில் வைத்து நாம் ஜெபிக்கும்போது, அவரை இரட்சிப்புக்குள் நடத்துவதற்கு நம்மை ஒப்படைக்கிறோம். அவரை இரட்சிப்பதற்கு அவர் ஏற்கனவே முயன்றுகொண்டுதான் இருக்கிறார். நாம் தீர்மானம் செய்து, தேவன் கையில் நம்மைக் கொடுப்பதால், இனி அந்த ஆத்துமாவை இரட்சிப்பதற்கு நம்மையும் ஒரு கருவியாக தேவன் பயன்படுத்த முடியும். நம்மூலம் ஆவியானவர் செயல்படுவார். அவருடைய வல்லமையை எடுத்துச்செல்லும் ஒரு குழாயாக நாம் மாறிவிடுகிறோம். தாகமுள்ள ஆத்துமாக்களுக்கு ஜீவத்தண்ணீர் நம் மூலமாகப் பாய்கிறது. 'நாம் கேட்காவிட்டால், சில காரியங்களைத் தேவன் செய்யமுடியாது. விசுவாசத்தோடு நாம் கேட்கும்போது, அப்படிப்பட்ட காரியங்களைத் தேவன் செய்கிறார்' *- Great Controversy, p. 525.*

நீங்களும் பரிந்துபேசுகிறவர்களாக மாறுவதற்கு இப்பகுதி உதவிசெய்

யும். இடதுபக்கத்தில் நீங்கள் யாருக்காக ஜெபிக்கிறீர்களோ அவருடைய பெயரை எழுதுங்கள். வலதுபக்கத்தில் தேவன் தரும் பதிலை எழுதுங்கள். இவ்வாறு பல நபர்களுக்காக அல்லது, பல காரியங்களுக்காக ஜெபியுங்கள். மத் 7:7; மாற்கு 11:24; 1யோவான் 5:16 ஆகிய வசனங்களை வாசித்து உங்கள் விசுவாசத்தைப் பலப்படுத்திக் கொள்ளுங்கள்.

## ஜெபக்குறிப்பேடு

| ஜெப வேண்டுகோள் | தேவனுடைய பதில் |
|---|---|





## உயிருள்ள ஓய்வுநாட் பள்ளி செய்பவை

**1** வேத ஆராய்ச்சி



**2** ஜெபம்



**3** ஐக்கியம்



**4** ஊழியப் பணி



# 4 எளிய படிகள்

## 1. ஜெபியுங்கள்



## 2. பழகுங்கள்



## 3. அழையுங்கள்



## 4. ஆராயுங்கள்



# 1. ஜெபியுங்கள்

## ஏன் ஜெபிக்கவேண்டும்?

**கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. சங்கீதம் 34:15.**

**அவன் என்னைநோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன். சங்கீதம் 91:15.**

**அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார். சங்கீதம் 99:6.**

**தம்மைநோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மைநோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், கர்த்தர் சமீபமாயிருக்கிறார். சங்கீதம் 145:18.**

**அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன். ஏசாயா 65:24.**

**என்னைநோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவுகொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். எரேமியா 33:3.**

**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன். சங்கீதம் 32:8.**

**எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன். சங்கீதம் 57:2.**

**இயேசு எச்சரித்தார்: ''நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னை அல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.'' யோவான் 15:5.**

> **''தேவனோடு ஐக்கியத்தில் இருப்பதின் நடைமுறை விளைவுகளை விட நம் பணியில் அதிகம் தேவைப்படுவது வேறு எதுவுமில்லை. வேறு எதுவும் கொடுக்க முடியாத வல்லமையை இது ஊழியருக்குக் கொடுக்கும். இந்த வல்லமை தனக்குக் கிடைக்காமல் அவர் இருக்கவே கூடாது.''**

# 2. பழகுங்கள்

## ஏன் பழகவேண்டும்?

**நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம்; ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன். நீதிமொழிகள் 11:30**

ஆத்துமாவை ஆதாயம் செய்பவர்களால் மக்களைத் தவிர்க்கமுடியாது. மக்களோடு பழகவேண்டும். அவர்கள்தாம் முதல்முயற்சியை எடுக்க வேண்டும். நாம் சாட்சிபகர்வதில் அதிக பெலவீனம் காணப்படுவதற்கு நாம் அதிகளவில் சோம்பேறிகளாக இருப்பதே காரணம்.

நாம் மனுஷர்களைப் பிடிக்கிறவர்களாக இருக்கவேண்டும்.

மீன்பிடிக்கச் சென்றால்தான் மீன் கிடைக்கும். ஆத்துமாக்களை ஆதாயம்செய்ய விரும்பினால் மக்களோடு பழகவேண்டும். தொலைந்து போனைரைக் கண்டுபிடிக்க அவர்களைத் தேடவேண்டும். நாம் தாம் முதல் முயற்சியை எடுக்கவேண்டும்.

ஆத்துமாக்கள் நம்மிடம் வருவதற்கு நாம் காத்திருக்கக்கூடாது; அவர்கள் இருக்கிற இடத்திற்கு நாம் தேடிச்செல்லவேண்டும். சுவிசேஷத்தைக் கொண்டு செல்லாவிட்டால் அதைத் தெரிந்தகொள்ளாமல் போகிற ஏராளமானவர்கள் இருக்கிறார்கள்.

## இயேசு கிறிஸ்துவின் ஆசை என்ன?

**இயேசு கரையில் வந்து, அநேக ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். மாற்கு 6:34.**

**அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களைநோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் (அறுவடையின் எஜமான்) தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். மத்தேயு 9:36-38.**

# 3. அழையுங்கள்

**ஏன் அழைக்கவேண்டும்?**

- **வளருகிற சபைகள் பிறருடைய ஆவிக்குரிய ஆர்வங்களைக் கண்டுபிடித்து, உருவாக்குவதில் நேரத்தையும், ஆற்றலையும், வளங்களையும் செலவிடுகின்றன. கிடைக்கிற சந்தர்ப்பங்களில் எல்லாம் நாம் கொடுக்கவும், கேட்கவும், அழைக்கவும் வேண்டும்.**
- **சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். 2கொரிந்தியர் 9:6.**
- **விதைக்கப்படுகிற விதைகளின் எண்ணிக்கைதான் அறுவடை யின் அளவைத் தீர்மானிக்கிறது.**

**வேத ஆராய்ச்சிகளை நடத்தும் வழிகள்:**

- ☞ குடும்பத்தினர், நண்பர்கள், அக்கம்பக்கத்தினரை தனிப்பட்ட விதத்தில் அழையுங்கள்.
- ☞ சபைக்குப் புதிதாக வருகிற ஒவ்வொருவரிடமும், ''எங்கள் வேத ஆராய்ச்சி குழுபற்றிக் கேள்விப்பட்டீர்களா?'' என்று கேட்டு, வேத ஆராய்ச்சி வகுப்பு நடத்துங்கள்.
- ☞ வேதஆராய்ச்சிகுறித்து வீடுவீடாக அழைப்பு கொடுங்கள்.
- ☞ சத்தியம் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு புத்தகத்தையும் விளக்குங்கள்.
- ☞ ஆர்வம் உள்ளவர்களை அஞ்சல், மின்னஞ்சல்மூலம் அழையுங்கள்.
- ☞ ஆன்லைன், சமூக ஊடகம்மூலம் வேதபாடம் நடத்துங்கள்.
- ☞ பரபரப்பான தெருக்களிலும், பாதையோரங்களிலும் அழைப்பு கொடுங்கள்.

**வேத வகுப்புக்குக் கூப்பிடுவதற்கான 3 வழிகள்**

1. **காலையில் கூப்பிடுங்கள்.**
2. **மதியம் கூப்பிடுங்கள்.**
3. **மாலையில் கூப்பிடுங்கள்.**

## கூப்பிட்டால் போதும்!

# 4. ஆராயுங்கள்

**ஏன் ஆராயவேண்டும்?**

**வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் (இயேசுவைக்) குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. யோவான் 5:39**

**வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிர யோஜனம் உள்ளவைகளாயிருக்கிறது. 2தீமோத்தேயு 3:16,17.**

**கர்த்தருடைய புஸ்தகத்திலேதேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். ஏசாயா 34:16**

**அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளது மான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக் கப்பட்டிருக்கிறீர்களே. 2கொரிந்தியர் 9:6.**

**சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படும். மத் 24:14.**

**சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவேண்டும். மாற்கு 13:10.**

**சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். மாற்கு 16:15.**

**மனந்திரும்புதல் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டியது. லூக்கா 24:47.**

**சகல ஜாதிகளுக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷம். வெளி 14:6.**

**சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித் தார்கள். அப்போஸ்தலர் 8:4.**

**தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகள் எல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. ரோமர் 15:4.**

வேத ஆராய்ச்சிகள் நடத்தவேண்டும் என்பது பரலோகத்திலிருந்து பிறந்த கருத்து. *கிறிஸ்தவ சேவை, பக். 141.*

# செய்திதான் இன்றும் நம் ஊழியம்

## விளம்பரத்தாளில் இருக்கவேண்டிய தகவல்கள்

தேதி

இடம்

பதிவு செய்ய அழைப்பு

உங்கள் கைப்பேசி எண்

உங்கள் மின்னஞ்சல் முகவரி

பிரசங்கத் தலைப்புகள் (பின்வருவன போன்று)

1. நான் தேவனை நம்பலாம்
2. நாம் வேதாகமத்தை நம்பலாம்
3. உங்கள் வாழ்க்கைக்கான தேவ திட்டம்
4. மகிழ்ச்சி தரும் எதிர்காலத்திற்கான வழி
5. வாழ்க்கையில் இரண்டாம் வாய்ப்பு
6. உங்கள் எதிர்காலம்பற்றிய தீர்க்கதரிசனங்கள்
7. உங்களுக்காக இயேசு வரும்போது
8. பரலோகத்தில் உங்கள் வீடு
9. இயேசு எவ்வளவு சீக்கிரம் வருவார்?

சிறு குழுவாகவோ கருத்தரங்காகவோ வேத ஆராய்ச்சியில் 2 வாரங்கள் (10 இரவுகள்) செலவிடுங்கள்

தனிநபர் அல்லது குழுவாக 4–6 வாரங்கள் தொடர் வேத ஆராய்ச்சிகள், சந்திப்பு, ஞானஸ்நான ஆயத்தம் போன்றவற்றில் செலவிடுங்கள்.

இதே சுழற்சியை வருடத்திற்கு இருமுறை பின்பற்றுங்கள்.

# இதை எவ்வாறு செய்யவேண்டும்?

2–3 வாரங்களுக்கு, ஒவ்வொரு நாளும் பல மணி நேரங்கள், பரபரப்பான பாதையோரங்கள், தெருக்கள், பூங்காக்கள் போன்றவற்றில் வேத ஆராய்ச்சிக்கு வரும்படி அழைப்பு கொடுங்கள்.

## கருத்து உதவி பெறலாம்:

1. அச்சு வடிவிலான அழைப்புக்கு
2. சமூக ஊடக அழைப்புக்கு
3. வேத ஆராய்ச்சி வழிகாட்டிகளுக்கு
4. பிற பொருத்தமான ஆதாரங்களுக்கு

## வலைபோடுதல்

**அவர் போதகம்பண்ணி முடித்தபின்பு சீமோனைநோக்கி: ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்றார். அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்து போகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்றப் படவிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படிக்குச் சைகைகாட்டினார்கள்; அவர்கள் வந்து, இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள். சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது இயேசு சீமோனைநோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். லூக்கா 5:4-10.**

**உலகம் முழுவதிலும் ஆண்களும் பெண்களும் ஆவலோடு பரலோக வாழ்வைத் தேடுகிறார்கள். வெளிச்சத்தையும் கிருபையையும், பரிசுத்த ஆவியையும் வேண்டி ஜெபத்தோடும் கண்ணீரோடும், வேண்டுதலோடும் ஆத்துமாக்கள் ஏங்குகிறார்கள். அநேகர் ராஜ்யத்தின் விளிம்பில் நின்று, ராஜ்யத்தில் சேர்க்கப்பட காத்திருக்கிறார்கள். அப்போஸ்தலர் நடபடிகள், பக்கம் 109.**